இந்த நூல் மூவருடக் காட்லாக்கு 145 (*e*), 163 (*d*) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இதற்கு 'அகத்தியர் பச்சைபதினாறு' 'அகத்தியர் பச்சை வெட்டுப்பதினாறு' 'அகத்தியர் வைத்யம் பதினாறு' என வாங்குப் பல பெயர்கள் இருக்கின்றனவாதலின் இந்நூலொன்றே ஆங்காங்குப் பல பெயர்களான் வெளிவந்திருக்கின்றதுபோலும். இதில் ஈளை, காசம், எலிகடி, பித்தரோகம், பாண்டு, குளிர்காய்ச்சல் முதலியனவாம் பல்வேறு நோய்களையு நீக்கற்குரிய மருந்துகளும் அததற்குரிய அநுபானவகைகளும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. இது, பதினாறு செய்யுட்களான அமையப்பெற்றிருக்கிறது. ஈற்றுச் செய்யுளில் ஓர் அடி காணப்பெறவில்லை. அது நீங்கலாக முற்றுமிருக்கிறது. அகத்தியர் இயற்றியதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

No. 1903. அகத்தியர் வைத்திய சூத்திரம் பதினாறு.
AKATTIYAR VAIDDIYA SŪTTIRAM PADINĀṞU.

Size, 11½ × 1¼ inches. Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 71 a of the MS. described under No. D. 1898.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் இந்நூலின் பதினாறு செய்யுட்களும் இருக்கின்றன. பிழைகள் உள. இதற்கு 'அகத்தியர் வைத்யம் பச்சை வெட்டுப் பதினாறு' என்ற மற்றொரு பெயரும் உண்டெனத் தெரிகின்றது.

No. 1904. அகத்தியர் வைத்திய சூத்திரம் முப்பத்தாறு.
AKATTIYAR VAIDDIYA SŪTTIRAM MUPPATTĀṞU.

Substance, palm-leaf. Size, 9 × 1 inches. Pages, 32. Lines, 5 on a page. Condition, injured. Appearance, old.

Begins on fol. 23 a of the MS. described under No. 1898.

Complete.

Same work as that described under R. Nos. 166 and 563(a) of the Tamil Triennial Catalogoue Vol. II and V.

(கு-பு.)—

இந்தநூல் மூவருடக் காட்லாக்கு 166, 563 (a) ஆகிய நம்பர்களில் வந்துள்ள நூலேயாகும்; இது, வைத்தியத்தையும் இரஸவாதத்தையுஞ் சார்ந்து பல அருமையான மருந்துகள் வைக்கும் முறையை முப்பத்தாறு செய்யுட்களால் உணர்த்துகின்றது; இயற்றியவர் அகத்தியனார் என்று குறிக்கப்பட்டுள்ளது; பிழைகள் மலிந்துள்ளனவாதலின் சுத்தமான பாடங்களையறிய இயலாமல் இருக்கின்றது. இப்பிரதியில் முற்றும் உள்ளது.

No. 1905. அகத்தியர் வைத்திய ரத்தினச்சுருக்கம் முந்நூற்றறுபது (நாடி நிதானம்.)
AKATTIYAR VAIDDIYA RATTINACCURUKKAM MUNNŪṞṞAṞUPADU (NĀḌI NIDĀNAM.)

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 58 a of the MS. described under D. No. 1675, Vol. IV.

Same work as that described under R. No. 941(a) of the Triennial Catalogue of Tamil MSS. Vol. VI.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக் 941 (a) நம்பர் பிரதிபோன்றுள்ளது. அதிலே வந்துள்ள 'நாடி நிதானம்' என்ற முதற்பாகமாகிய முப்பத்திரண்டு பாடல்களே இங்குள்ளன. இப்பாகம் அச்சிடப்பெற்றிருக்கிறது. இதன் பாயிர முதற்செய்யுளில் "வைத்தியந்தான் முந்நூற்றறுபது" என்றிருப்பதால் இவ்வைத்தியநூல் முந்நூற்றறுபது செய்யுட்களான் அமைந்ததென்று தெரிகிறது.

No. 1906. அனுபவ வைத்தியம் வசனம்.
ANUBHAVA VAIDDIYAM VACANAM.

Substance, palm-leaf. Size, 9 × 1¼ inches. Pages, 222. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Similar to the work described under R. No. 566 of the Triennial Catalogue of Tamil MSS., Vol. V.

Beginning:

வெள்ளை குட்டம், கபால குட்டம் :—மருள் கிழங்கு ஐம்பது அறுபது கொண்டுவந்து சிறுக நறுக்கி ஆமணக்கிலையில் கட்டிக் குப்பையிலே மூன்று நாள்வரை புதைத்துப் பின்னெடுத்துவைத்துக் குட்டம் பற்றின விடத்திலே வைத்துக் கட்டவும். இங்ஙனம் மூன்றுநாள் கட்டின பிறகுச் சிறுநீர் உலர வுலர விட்டுக்கட்டி அவிழ்த்துப் பார்க்கப் புழுக்கள் விழும். பின்பு, வெள்ளாட்டுப் புழுக்கை கொண்டுவந்து கறுக வறுத்து ஆமணக்கெண்ணெயில் குழப்பிப் பூசவும். தீரும்.

வெள்ளை யெருக்கம் வேர்ப்[புடை] பட்டையைத் தேங்காய்த்துருவ[ல்] லுங்கூட்டிக்கறுக வறுத்து அரைத்துப் பூசவும், தீரும்.

கபால குட்டத்துக்கு :—ஆலம்வேர், அழிஞ்சிப்பட்டை, குப்பைமேனி வேர், உள்ளி வசம்பு இவை எல்லாங் கூட்டி நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து இடவும்.

End:

சுழிகணத்துக்கு : மாந்த சுரத்துக்கு :—(குணம் :) வாய் வெந்து நாக்கு பூத்திருக்கும் இருமல் உண்டாம்; இரண்டு விலாவிலும் சுழி[ச்சு](த்து) இழுக்கும். நெஞ்சிற் கறட்டு என்று இழுக்கும். மருந்து :—குப்பைமேனி இலையை ந(சு)க்கி(ச் சாறெடுத்துப்) புகட்டவும். வாயிலெடுக்கும், நெஞ்சுக் கட்டு வாங்கும். கத்தி(ரிநா)யகனிலையை (நசு)க்கிப் பிழிஞ்சுக்கொண்டு, கம்பிப்பிசின், கருஞ்சீரகம் (இவை) பொடிபண்ணிப் போட்டுப் புகட்டவும். நெஞ்சில் கட்டு வாங்கும். மணத்தக்காளிச்சாறு படி. வ. (கால்), சீரகம் அரைத்து ஒருபாக்கத்தனை. எண்ணெய் படி. வ. (கால்), ஈர வெண்காயம் சாறு படி. வ. (கால்) இவைகளைக் கூட்டி எரித்துக் கொடுக்கவும். தீரும்.

(கு-பு.)—

இது வாதம், பித்தம், சிலேட்டுமம் இவையிற்றால் உண்டாகும் நோய்கள் பலவற்றின் தன்மைகளையும், அவையிற்றை நீக்கற்குரிய சிறந்த வைத்திய முறைகளையும் வசன நடையான் உணர்த்துகின்றது. இது சிறந்த வைத்தியர்களுடைய அனுபவத்தில் கண்டதை நுவலுவதால் இப்பெயர் பூண்டதென்க. நூல் இத்துணைத்தென்று தெரியாததனால் முற்றுப்பெறவில்லை யென்று தெரிகிறது.

No. 1907. இராமதேவர் அஷ்டாங்கபக்ஷிணி ஐம்பது.
IRĀMADĒVAR AṢṬĀṄGAPAKṢIṆI AIMPADU.

Pages, 20. Lines, 9 on a page.

Begins on fol. 372 a of the MS. described under D. No. 1908.

Complete.

Same work as that described under R. No. 201(b) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. II.

Said to be by Rāmadēvar.

Complete in 50 stanzas.

(கு-பு.)—

இந்த நூல் மூவருடக் காடலாக்கு 201 (b) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். ஐம்பது செய்யுட்களால் அமையப்பெற்றது. முற்றும் உள்ளது. இராம தேவர் என்னுஞ் சித்தர் இயற்றியதாக உள்ளது. இது, சிறிது யோக நெறியையும், சித்திபெறும் வகையையும், அஷ்டகர்மங்கட்குரிய கருககளை யும் இரஸவாதத்தையுங் கூறுகின்றது.

No. 1908. இராமதேவர் ஆயிரம்.
IRĀMADĒVAR ĀYIRAM.

Substance, palm-leaf. Size, 12⅝ × 1½ inches. Pages, 400. Lines, 8—10 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 1 (a) The other works herein are Irāmadēvar karukkidaisūttiram ainnūṟu 201 a, Irāmadēvar pūjāvidhi Śiva-yōgam irunūṟu 288 a, Irāmadēvar daṇḍakam 321 a, Irāmadēvar parañānakēsari vinōdam 339 a, Irāmadēvar vaidyam eṇpadu 357 a, Irāmadēvar aṣṭāṅga pakṣiṇi aimpadu 372 a, Irāmadēvar karumāna-sūttiram 382 a, Irāmadēvar jōtiḍam pattu 389 a, and 392 a.

A treatise in 1,000 stanzas dealing mainly with medicine and incidentally with Yōgam and Ñānam of the Siddhas. The preparations of various kinds of medicinal powders, oils, etc., are all described herein.

Beginning:

அண்ட மென்னுங் கேசரியாள் பாதங்காப்பு
அருள் பெருகும் பூரணத்தி னறிவேகாப்பு
குண்ட மென்னுங் குண்டலியாள் குறியேகாப்பு
குருவான பராபரத்தின் குணமே காப்பு
மண்டலங்கள் மூன்று மொன்ருய் நிறைந்துநின்ற
மகத்தான ரவிமதியின் சுடரே காப்பு
பிண்டமெனும் பொருளான வண்ட பிண்டம்
பேரண்டம் நிறைந்த கணபதி காப்பாமே. (க)

பதியான மதிநிறைந்த பூரணத்தி ஞலே
பக்குவமாய்த் திசைநாதங் கண்டு தேறிக்
கதியான மோக்ஷமென நின்றே னப்போ
கேசரத்திற் கேசரியாள் கிருபை கூர்ந்து
மதியான மதியமுத மீந்தா ளப்போ
வரிசையுட னுரிசையதாய் வணங்கப் பெற்றேன்
நதியான காலமென மனது கூர்ந்து
சங்கையுட னுபதேச மாலு வென்ருள், (உ)

ஆவென்றதிசை தீட்சை யதீதம் பெற்றேன்
அதின்பிறகு ஊவென்ற வருளைப் பெற்றேன்
கூவென்ற நாதமடா மவுனம் பெற்றேன்
கூர்மையுடன் மூன்றினுடை விவரம் பெற்றேன
சாவென்ற சொல்லகற்றுந் தன்மை பெற்றேன்
தயவான புலத்தியர்தன் னருள் தன்னாலே
மாவென்ற மவுனமதை மனதிற் கொண்டு
மகத்தான குருவினுடை வளங் கண்டேனே. (௫)

உருவான பொருளறிந் துண்மை பெற்றேன்
உண்மையுடன் வாராம தேவா வென்றாள்
கருவான கருகுருவு மெனக்கே யீந்தாள்
கைப்பாகம் முலறப்பாகங் கணக்கின் பாகந்
திருவான வுருப்பாகங் குருவின் பாகந்
செம்மையுடன் நன்றாகச் செப்பினாள் பார்
குருவான குருவருளா லாத்தா ளென்னைக்
கூப்பிட்டுக் காப்பிட்டுக் குறி சொன்னாளே. (௬)

கண்டேனே யாயிரத் தெட்டிதழில் நல்ல
கருணையுள்ள மதியமுதங் கருத்தாய்க் கொண்டு
சென்றேனே யண்டவரை சுற்றித் தானுந்
திரும்பினே னொருநொடியிற் றிரும்பி யந்த
வண்டர்பிரா னருளதனால் முடிவிற் கண்ட
வாயிரத் தெட்டிதழ்பெருக வடியேன் றானும்
விண்ட பொரு ளாயிரமாய்ப் பாடியந்த
விவரமதைக் கருகுருவாய் விளம்பி னேனே. (௭)

விளம்பினசொல் விராமனுடை வாக்கிய மென்று
விருதுபெற்ற சித்தரெல்லா மகிழ்ந்து போற்றி
நலம்பெறவே யவரவர்க ளெடுத்துப் பார்த்து
நன்மையுள்ள வாயிரத்தைப் பதனம் பண்ணி
வளம்பெறவே யிருந்தார்க ளப்போ தையா
மகத்தான புலத்தியர்தம் மகிமை யாலே
கிளம்பிமிக வப்பதியிற் சித்த ரோடே
கணிதமுடன் வாதாடி யிருந்தேன் பாரே. (௮)

அவையடக்கம் முற்றும்.

இருந்து கொண்டு வாதாடிக் கேள்விபேசி
யின்ப முடிவான [தொருஆ](தோ ரா)யிரத்தை
வருந்திமிக வாங்கி நல்லோர்க் கீந்தேனப்பா
வரிசையுள்ள வாயிரத்தின் வண்மை கேளு
அருந்தனமா மந்திரத்தி னதிக சித்து
மருமையுள்ள வழலைமுறை யான வாறுந்
தெரிந்து கொண்டு முப்பூவின் குருவினாறுந்
தெவிட்டாத காயாதி கற்ப வாறே. (௧)

வாறான வசியமுதல் லெட்டு வித்தை
மகத்தான திலதமொடு மையின் போக்கும்
கூறான செயநீரின் மெழுகின் போக்குங்
கூர்மையுள்ள செந்தூரச் சரக்கின் வைப்பும்
நேரான வேதையிலே யனந்தம் போக்கும்
திட்டைமுதல் சமாதியுடைக் கற்பப் போக்கும்
தேரான மனதோர்க்கு ஞானப் போக்குந்
திறமான திட்டைமுதல் சாற்றுகின்றேன்.

End :

பூசை பண்ணப் பூசைதனை யறிந்துகொண்டு
பூரணமாம் வாசிதனை மூலத் தேற்றி
நேசமுடன் ரேசகமாய்க் கும்பகத்தி லேகி
நினைவறப் பூரகத்திலே பூரித்தக் கால்
பாசமுள்ள மதிதேய்ந்து ரவி சோமனுகிப்
பகுந்தபடி யாதியில்நின் றெழுத்தைப் பார்த்தால்
வாசமுள்ள கர்ப்பூரந் தீபந் தீபம்
மயங்காத கிரிதீபஞ் சோதி சோதி. (கககூ)

சோதியென்ற வாயிரத்தை யெடுத்து மைந்தா
சுகமாக மடிமீதில் வைத்துக் கொண்டு
நீதமுடன் மவுனமதாய்ப் பார்த்து மந்த
நிலையறிந்து கருகுருவாய் நின்றோர்க் கெல்லாம்
வாதமுறும் ஞானமுறும் வசிய மாகும்
மகத்தான பூரணமும் பூரணமே யாகும்
நாதமுடன் நாதமதா யொடுங்குகின்ற
நாதாந்தச் சிவயோக பாத முற்றே. (கககக)

Colophon :

இராம தேவர் அருளிச்செய்த ஆயிரம் முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல் இராம தேவர் என்னும் சித்தரால் இயற்றப்பெற்று ஒரு சிறிது யோகம், ஞானம், இரஸவாதம் முதலியவைகளை உணர்த்துவதோடு பெரிதும் வைத்தியத்தையே முக்கியமாகக் கூறுகின்றது. இதிலே பல பற்பவகை, சூர்ணவகை, மெழுகுவகை, தைலவகை, பல செந்தூரவகை, அஞ்சன வகை என்றவிவைகளும், பலவித லேகியங்களும், வசியம், மோகனம், ஸ்தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம், வித்துவேஷணம், மாரணம், பேதனம் என்ற அஷ்டகர்மங்களும் இன்னும் இவைபோன்ற பல விஷயங்களும் விளக்கப்பட்டுள்ளன. ஆயிரஞ் செய்யுட்களான் அமைந்துள்ளது. கருசாஸ்திரத்தைச் சார்ந்ததாகும். முற்றும் உள்ளது.

No. 1909. இராமதேவர் கருக்கிடை சூத்திரம் ஐந்நூறு.
IRĀMADĒVAR KARUKKIḌAI SŪTTIRAM AINNŪṚU.

Ps , 174. Lines, 9 on a page.

Begins on fol. 201-a of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 931 of the Triennial Catalogue of Tamil MSS. Vol. VI.

(கு-பு.)—

இந்நூல் இராம தேவர் என்னும் சித்தர் பெரியாரால் இயற்றப்பெற்றதாகும்; இது இரஸவாதம், அஷ்டகர்மம், யோகம், ஞானம், வைத்யம் என்ற விஷயங்களை நுவல்வதென்று இந்நூன் முகத்து இரண்டாஞ் செய்யுளால் அறியக்கிடக்கிறது. ஐந்நூற்று இருபத்து மூன்று செய்யுட்களால் முற்றுப் பெற்றுள்ளது; இது மூவருடக் காடலாக்கில் 931-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும்.

No. 1910. இராமதேவர் கருமான சூத்திரம் முப்பது.
IRĀMADĒVAR KARUMĀNA SŪTTIRAM MUPPADU.

Pages, 13. Lines, 8 on a page.

Begins on fol. 382-a of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 275(h) of the Triennial Catalogue of Tamil MSS, Vol. II.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக் 275 (h) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. பெரும்பாலும் இரஸவாதத்தைக் கூறுகின்றது. முப்பது செய்யுள்களால் அமைந்தது. முப்பது செய்யுட்களும் இந்தப் பிரதியில் உள்ளன. இது சித்தர்களுக்கு இன்றியமையாதது என்று இதன் இரண்டாஞ் செய்யுள் வற்புறுத்துகின்றது.

No. 1911. இராமதேவர் சோதிடம் பத்து.
IRĀMADĒVAR ŚŌDĪḌAM PATTU.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 389 of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 266(d) of the Triennial Catalogue of Tamil MSS. Vol. II.

(கு-பு.)—

இந்தநூல் மூவருடக் காடலாக்கு 266 (d) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. பத்துச் செய்யுளும் இதில் இருக்கின்றன. இராம தேவர் இயற்றியது.

No. 1912. இராமதேவர் சோதிடம் பதினாறு.
IRĀMADĒVAR ŚŌDIḌAM PADINAṞU.

Pages, 9. Lines, 6 on a page.

Begins on fol. 392-a of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 266(f) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. II.

(த-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 266 (f) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இதில் பதினாறு செய்யுட்களும் இருக்கின்றன.

No. 1913. இராமதேவர் தண்டகம் நூறு.
IRĀMADĒVAR DAṆḌAKAM NŪṞU.

Pages, 36. Lines, 9 on a page.

Begins on fol. 321-a of the MS, described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 947(c) of the Trienria Catalogue of Tamil MSS., Vol. VI.

(த-பு.)—

இந்த நூல் இராம தேவர் என்னுஞ் சித்தரால் இயற்றப்பெற்றது. இது மூவருடக் காடலாக்கு 947 (c) நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். நூறு பாடல்களால் அமைந்திருக்கிறது. முற்றும் உள்ளது.

No. 1914. இராமதேவர் பரஞான கேசரிவிநோதம் நூறு.
IRĀMADĒVAR PARAÑĀNA KĒSARIVINŌDAM NŪṞU.

Pages, 36. Lines, 9 on a page.

Begins on fol. 339-a of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 947(b) of the Triennial Catalogue of Tamil MSS, Vol. VI.

(த-பு.)—

இது மூவருடக் காடலாக்கு 947 (b) நம்பர் பிரதியில் வந்ததே. இராம தேவர் என்னும் சித்தர் பெரியாரால் இயற்றப்பெற்றது, நூறு செய்யுட் களான் முற்றுப்பெற்றது.

No. 1915. இராமதேவர் பூசாவிதி சிவயோகம் இருநூறு.
IRĀMADĒVAR PŪJĀVIDHI ŚIVAYŌGAM IRUNŪṞU.

Pages, 66. Lines, 9 on a page.

Begins on fol. 288-a of the MS., described under No. 1908.

Complete.

ame work as that described under R. No. 947(a) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. VI.

(கு-பு.)—

இந்த நூல் மூலருடக் காடலாக்கு 947 (a) நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இராம தேவர் என்னும் சித்தரால் இயற்றப்பெற்றது. இதில் இருநூறு செய்யுட்களும் இருக்கின்றன. மிகவும் அருமையான நூல். சித்தராக ஆதற்குரிய நெறிகள் பலவற்றைச் செவ்விதாக விளக்குகின்றது.

No. 1916. இராமதேவர் வைத்திய சூத்திரம் எண்பத்தொன்று.
IRĀMADĒVAR VAIDDIYASŪTTIRAM EṆPATTONṞU.

Pages, 30. Lines, 9 on a page.

Begins on fol. 357-a of the MS., described under No. 1908.

Complete.

Same work as that described under R. No. 197(h) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. II.

(கு-பு.)—

இந்த நூல் மூலருடக் காடலாக்கு 197 (h) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இது வைத்தியத்தைச் சார்ந்து கல்லுச்சுண்ணம், நாகக்கட்டு, துருசுச்சுண்ணம், பாஷாணக்கட்டு முதலியவற்றைச் செய்யுநெறி இவ்வகைத்தென விளக்குகின்றது. இராம தேவர் எனும் சித்தர் பெரியாரால் இயற்றப் பெற்றது. முற்றும் இருக்கிறது.

No. 1917. இலிங்க மெழுகுவகை (வசனம்).
ILIṄGA MEḺUKUVAKAI (PROSE).

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 152-a of the MS., described under No. 1918.

Seems to be incomplete.

Deals with alchemy. The name of the author is not known.

Beginning:

இலிங்க மெழுகு பண்ணும்படி :—சின்னசட்டியில் மணலிட்டு அடுப்பேற்றித் தீபம்போல் எரியவிட்டு அதன்மேல் அப்பிரகதகடுவைத்து அதின்மேல்

லிங்கம் வைத்து ஆடு தீண்டாப்பாளையான செடிகொண்டுவந்த அதனுடைய ரசம் அப்பிரகதகட்டில் விழாமல் லிங்கத்துக்குப் படும்படியாய் [அந்தரஸம் விட்டு] ஏழு சாமம் சுருக்குக்கொடுத்து மறுபடி சோற்றுக்கற்றாழை ரஸம் எடுத்து ஒரு கோட்டராவில் விட்டுக்கொண்டு அதில் பற்படுக்காரம் போட்டு வெயிலில் வைக்க இறுகிப்போகும். அதின் பிறகு கொடிக்கள்ளிப் பாலில் சாற்றில் உருக்கிச் செம்பைப் பத்துவிசை சாய்த்து வெள்ளைப் பாஷாணத்தைக் கள்ளிச்சாறு [ஞ](நா)லுபடியில் தொலாந்தரமாகக் கட்டி . . . . எரித்து எடுத்து செம்பில் கொடுத்துத் தாயும் பிள்ளையுஞ் சேர்க்க . . . . வேறு:—

End:

ஆடாதொடைச் சாற்றில் [ஞ](நா)கத்தை உருக்கிப் பத்துவிசை சாய்த்து மறுபடி மான்செவிக் கள்ளிப்பால் ஒரு குகையில் விட்டு உருக்கின நாகத்தை அந்தப் பாலுக்குள்ளிட்டு அந்த இலையரைத்து . . . . . . குகைமேல் கவசங்கொடுத்து, உலர்த்திக[கொள்ளி] (கோழி)ப்புடமிடக் கட்டும். அந்தக் கட்டைச் செம்பு 2, வெள்ளி 2, பொன் 1 ஆகச் சேர்த்து உருக்குகையில் கட்டு ஒன்று கொடுக்க, ஆறுமாற்றாகும் என்று சொன்னார்: அறியவும். குருவே துணை:

(கு-பு.)—

இந்நூல் ரஸவாத விஷயமானது. இந்தப் பிரதியில் நான்கு பக்கங்களே உள்ளனவாதலின் முற்றுப்பெறவில்லையென்று தெரிகிறது. இது வசன நடையால் அமைந்துள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இரஸவாதஞ் செய்கின்றார்க்கு மிகவும் உபயோகமாகும்.

No. 1918. உரோமர் கற்ப முறை இருபது.
URŌMAR KAṞPA MUṞAI IRUPADU.

Substance, palm-leaf. Size, 9½ × 1⅝ inches. Pages, 13. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 145 *a*. The other works herein are Viśvāmitravākkiyam or Vaidyakkaḻañjiyam 1 *a*. Ilingameḻukuvakai 152 *a*, Irutuśāstram 154 *a*.

Complete.

Same work as that described under No. R. 280. (x) of the Tamil Triennial Catalogue, Vol. II.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 280 x-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் முற்றும் இருக்கிறது. உரோம ருஷியார் இயற்றியது; வைத்தியத்தைச் சார்ந்ததாகும்.

No. 1919. கருவூரார் வைத்தியம்.

KARUVŪRĀR VAIDDIYAM.

Substance, palm-leaf. Size, 8¼ × 1⅛ inches. Pages 82. Lines 6—7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Contains 72 stanzas only.

Same work as that described under No. R. 936 *b* of the Triennial Catalogue Vol. VI, Part II.

The work is also called Karuvūrār Noṇḍināṭakam and Karuvūrār Irasavādam Munnūṟu.

Beginning:

கருவூரார் வாக்கியம் நொண்டி நாடகம்.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக் 936 b நம்பர் பிரதியில் வந்துள்ளதே; இது இரஸவாதம், காயசித்திக்குரியகல்பவகை, யோக விஷயம் ஆகிய இவைகளை விளக்குகின்றது. இப்பிரதியில் (எ௨) எழுபத்திரண்டு பாடல்களே இருக்கின்றன. பாடபேதங்களும், அங்கங்கே காணப்பெறுகின்றன. இந்நூலுக்குக் 'கருவூரார் நொண்டி நாடகம்' 'கருவூரார் இரஸவாதம் முந்நூறு.' என்பனவாய்ப் பல பெயர்கள் உண்டெனத் தெரிகிறது. சிறிது சிதைந்துள்ளது. பிழைகள் பொதிந்திருக்கின்றன. இதில் முந்நூறு வருஷம் வரையில் காயம் நிலைத்திருக்குமதற்குரிய கல்பவகையொன்று கூறப்பெற்றுள்ளது.

No. 1920. குருநாடி.

GURUNĀḌI.

Substance, palm-leaf. Size, 11 × 1½ inches. Pages, 36. Lines 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Incomplete.

A treatise dealing with the diseases caused by the preponderance of one or other of the three Humours, viz., Vāta, Pitta and Ślēṣma in the human body and with the preparation of medicines for curing these diseases. The name of the author is not known.

Beginning:

சீர்பெறு முனிவர் வே[சுரந](தந்)
    தெளிந்தபின் னுலகத்தோர்கள்
பேர்பெறுங் கருவி லுற்ற
    பிணிபல வுணர்ந்து தேர்ந்து

ஊர் பலநாடிக் கெல்லாம்
　　உயர்பெறு நாடிமூன்றில்
சேர் குருநாடி நேர்மை
　　செயலுடன் கூறலுற்றும். (க)

கூறுவார் வேதநாதன் குருநாடிநேர்மை யெல்லாம்
வீறுசெய்யடைவில் வாதபித்தசி லேட்டும மூன்றும்
வாறுகண்டறியும் வண்மை வழுவாத நாடியொன்று
பேறுகொண் டெழுந்த நேர்மை பிறித்துடனுரைக்கலாமே. (உ)

ஓரொரு வுயிரைச் சார்ந்து உடலிடை நரம்புபற்றி
எரெழுபத்தீராயிரம் நாடியே யிசைந்த பின்னும்
கார்சொறி மேகம்போலக் கதித்திடும் வியாதிக்கெல்லாம்
பேர்குருவாக வந்த நாடியின் புகழைச் சொல்வாம். (ங)

*　　*　　*　　*

*　　*　　*　　*

நணுகுவதோர் பிணிகள் வந்தவகைதானேது
　　நாடியிசைந்திருந்தவிசம் நடுத்தானேது
அணுகியிருந்தெழுந்து வரும்வகைதானேது
　　ஆகவொரு முடிப்பிருந்த தலந்தானேது
பணதியொடு வேரிருந்த பதந்தானேது
　　பார்வை குருடானபின் பிருள்தானேது
தனியுடனே பொருளிதெனக் குறித்துச் சொல்வீர்
　　சண்டாள பிணிகள் வந்ததலத்தைக் கூறே. (ரு)

End:

கூட்டிவகைக் கொருகழஞ்சாய்ப் பொடியுடனே சேர்த்துக்
குருகநெய்யுந்தேனுஞ் சீனிவிட்டு நன்றாய்க் குழைத்து
நீட்டு வெருகடியெடுத்தரிதார பற்பம்
திறையாய்ப் பணவெடைசேர்த்து நித்தமிருநேரம்

தாட்டிகமாய் மண்டலங்கால் கொண்டுவந்தாயானால்
சயங்கள் சளப்படுத்து விஷநீர்கள் சண்டாளசயந்தான்
ஓட்டிவிடுந்தலையிடிப்பு மொ[ரு](ற்றை)த் தலையிடியும்
உற்றசய மெட்டு மோடிப்போகும் பற்பபொடியில். (௱௧)

(கு-பு.)—

இந்த நூல் வைத்திய விஷயமானது. இது வாத பித்த சிலேஷ்மம எனனும் மூன்று நாடிகளின் மாறுபாட்டால் வியாதிகள் பல உண்டாகின்றன வென்றும் அவற்றைப் போக்கும் மருந்துவகைகள் இன்னவென்றுங்கூறுவது. தொண்ணூற்றைந்து முதல் நூற்றைந்து வரையிலான பதினொரு பாடல்கள் இல்லை. பிழைகள் பல பொதிந்துள்ளன. நூலாசிரியர் இன்னார் எனத் தெரியவில்லை.

No. 1921. கொங்கணர் கலைஞ்ஞான சூத்திரம் இருநூறு.
KOṄKAṆAR KALAIÑÑĀNASŪTTIRAM IRUNŪṞU.

Pages, 59. Lines, 8 and 9 on a page.

Begins on fol. 4 *a* of the MS. described under No. D. 1877.

Complete.

Same work as that described under No. R. 18 of the Tamil Triennial Catalogue Vol. I, wherein see for the beginning.

End:

தானென்ற கடைசியடா மூலமாதி
தன்கையிற் பொருளடக்கமாகச் சொன்னேன்
மானென்ற வாலைஎனக் களித்த பூதி
மாணுக மெட்டுவகை விஷங்கள் மீளத்
தானென்ற திருநீறே பிணியைத் தீர்க்குந்
தாயாதி பூதியடா வியாதி போச்சு
தானென்ற நீறுனக்குண்மை யுண்மை
சர்வாதி கலைஞ்ஞான சூத்திரம் முற்றே. (உா)
கொங்கணர் சகல கலைஞ்ஞான சூத்திரம் முற்றும்.

Colophon:

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 18–வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. அதில் முற்றும் இல்லையாதலின் இங்கு இறுதிச் செய்யுள் எழுதப்பெற்றது.

No. 1922. கொங்கணர் கற்பம் நூறு (துவாதசலேகியம்).
KOṄKAṆAR KAṞPAM NŪṞU (DUVĀDAŚALĒHIYAM)

Pages, 12. Lines, 7 on a page.

Begins on fol. 39 *a* of the MS. described under No. D. 1903.

Contains Stanzas 9 to 25 only.

A metrical work in 100 stanzas on medicine by Koṅgaṇamunivar. The portion contained in this manuscript deals with the preparation of 12 kinds of medicinal electuaries.

Beginning:

கொங்கணர் கற்பம் நூற்றிலே துவா
தசலேகியம் : கூ ஆம் பாட்டு முதல் உரு ஆம் பாட்டு வரையிலும்.

செய்யிலே சித்தரெல்லா மிப்படிச் செய்வார்
சிறப்பாக வெந்தனுடை பிள்ளைகள் தான் செய்வார்
மெய்யெனவே யிவளாலே சிவயோகத்தை
மேவுவார் பூரகமாயி ரேசித்தே தான்

செய்யோகமிதுவாச்சுக் கும்பித்தோங்கித்
தம்பனமாங் குளிகைகொண்டு தாயைப்போற்றிப்
பொய்யெனவே போகாமல் சோடசமாய்த் தீர்ந்து
பூட்டுவாய் மாத்திரைதா னேழாய்த்தானே. (௯)

தானான மாத்திரைதான் [பவறணை](பௌர்ண)மியைத் தொட்டு
சம்பு வுண்டே விடுமார்க்கம் அமாவாசைமட்டும்
வேனான மதிதேய்ந்தாற்போலே யுந்தன்
மெய்யுதித்த புரியட்டத்திடகலையும்போச்சு
தேனான மனத்தோடுமை பானத்தாலே
தேவியங்கே சுழிமுனையில் ஒளியாய் நின்றாள்
மானான பெண்மயக்கம் மாண்டதானால்
வாச்சுதடா கற்பத்தின் வரிசைகேளே. (௰)

வரிசையாய்ச் சொல்லுகிறேன் ஆதிதொட்டு
மகத்தான கற்பங்கள் கொள்ளவேண்டி
பரிசமாய் வாதபித்த சிலேட்டு மந்தான்
பேய்க்கூத்தாய்ப்பண்ணாமல் கூடேறாமல்
பரிசத்தே யுஷ்ணங்கள் பாய்ந்தேறாமல்
பண்பான லேகியமொன்று சொல்லுவேன்கேள்
உரிசிபெற செவ்விளநீர் படிதான் எட்டு
உத்தமனே கத்தாழஞ் சொறுதானே. (௰௧)

End :

அணுகவொட்டாவனுபோகப் பாசந்தன்னை
யப்பனே மனமெங்கும் பாயமாட்டா
அணுகொட்டா தென்னசொல்வேனு வாசைக்குள்
ஆச்சரிய மிலேகியத்தில் அருமைமெத்த
அணுகொட்டா தெமனு[னை](னை) வெட்டிச் சாடும்
அயக்காந்த செந்தூர லேகியத்தை கொள்ளே
அணுகொட்டா தொன்றையுந்தான் மனமொன்றுகும்
அப்பனே யயக்காந்தஞ் சொல்லக்கேளே. (௨௫)

(கு-பு.)—

இந்நூல் கொங்கண முனிவரால் இயற்றப்பெற்றது. பல அருமையான மருந்துகளை உணர்த்துகின்றது. இப்பிரதியில் இந்நூலின் ௯-வது பாடல் முதல் ௨௫-ம் பாடல் வரையுமே உள்ளனவாதலின் முற்றுப் பெறவில்லை. இந்நூலின் தலையங்கத்துக்காணும் வாக்கியத்தால் 'கொங்கணர் கற்பம் நூறு' என்ற நூலிலிருந்து எடுத்து ஒரு பகுதியை எழுதிவைத்ததெனத் தெரிகிறது. எழுத்துப் பிழை சொற்பிழைகள் இருக்கின்றன.

No. 1923. கொங்கணர் தண்டகம்.

KOṄKAṆAR DAṆḌAKAM.

Pages, 65. *Lines*, 6 on a page.

Begins on fol. 1 *a* of the MS. described under D. 1821.

Complete.

Same work as that described under R. No. 278 (c) of the Tamil Triennial Catalogue, Vol. II.

(த-பு.)—

இந்த நூல் தமிழ் மூவருடக் காடலாக்கின் 278 (c) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இது சித்தர் நூலைச் சார்ந்து யோகம் ஞானம் வைத்யம் அஷ்டகர்மம் முதலியவற்றை விளக்குவதென்று தோற்றுகிறது. இப்பிரதியில் முற்றும் உள்ளது. மற்ற நூல்களிற்காணாத நாகங்கொண்டு இயற்றுவதோர் அருமையான ஜாலவித்தை காணப்பட்டுள்ளது.

No. 1924. கொங்கணர் முப்பூ தீட்சை நாற்பது.

KOṄKAṆAR MUPPŪDĪKṢAI NĀṞPADU.

Pages, 24. Lines, 5 on a page. Condition, much injured. Appearance, very old.

Begins on fol. 1 *a*. of the MS. described under No. D. 1878.

This is the original of the work described under No. R. 299 (*a*) of the Tamil Triennial Catalogue, Vol. II.

Contains 25 stanzas.

End:

இரவியிலே யுறைந்தவுப்பு நல்லுப்பொன்று
நாடியதோர் கற்பூர மொன்று கூட்டிச்
சிவியிலே யிருந்ததொரு குருவு மொன்று
திறமாக நால் மருந்து கழஞ்சியேழும்
புவியிலே யிருக்குதே பரணிநாள் பரபுருடன்

. . . .
. . . .
. . . .

(த-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 299 (a) நம்பர் பிரதிக்கு மூலப்பிரதியாகும். முதல் இருபத்தைந்து செய்யுட்களே இருக்கின்றன. ஏடுகள் மிகச் சிதைந்தும் முறிந்தும் உள்ளன. படித்தற்கு முடியவில்லை. இது இரஸவாதம் வைத்யம் இவைகளுக்குரிய மருந்துகளுடைய முறையைத் தெரிவிப்பதென விளங்குகின்றது. பிழைகள் உள

No. 1925. கொடுங்கோடாசூரி.
KODUṄKŌṬĀŚŪRI.

Pages, 8. Lines, 8 on a page.

Begins on fol. 179 a of the MS. described under No. 250, Vol. I, Part II.

This forms a portion of a work on magic in 6 Kāṇḍas by Akattiyar, and describes the method of preparing a magical pill called Koḍuṅ kōṭāśūri, the manner of using it, its properties, the diseases likely to be cured by it etc.

Beginning:

நானேதான் கோடாசூரி கூட்டக்கேளு
    தாளகமுஞ் சூதம் வசுவாசி தந்தனம் ?
தேனென்ற சீனக்காரம் பச்சைநாபி
    தேவதாரம் இரும்பு கோஷ்டம் கடுகுலிங்கம்
மானே தான் கடுகுரோகிணி சித்திர மூலம்
    மகத்தான குரோசாணி கஞ்சாவே [ரிந்துப்பு]
நானேதான் பொரித்து முந்திரிகை யோடும்
    நலமான பச்சைகற்பூரங்கூட்டே. [௧௬௧]

* * *

போடவே கொடுங்கோடாசூரியினுண்டை
    புண்ணுன கண்டமாலைக்குப் பூச
ஆடவே பசுவெண்ணெய் கலந்து மாத்தி
    அரிதான [புன] [பிள]வைப் புண்ணுனதற்குக்
கூடவே யெந்தெந்தப் புரைகளுக்குங்
    குழைத்திடுவாய் ஆவின்வெண்ணெய் கூறக்கேளு
நாடவே யைந்துடைய ரைந்து நீரால்
    நடக்கையிலே யுள்ளங்கான் மீதிற் பூசே (௧௭௧)
பூசினால் முக்காத முடனே யோடிப்
    போய் மீண்டு முக்காதம் வரவுஞ் செய்வாய்
ஆசுவாய் பரித்த கட்டிற் குளிகையாக்கு
    யபிஷேகம் பூசை முடி தேவியார்க்கு
வாசிகலை யுள்ளடங்கும் வசியமாகும்
    வாதமுதல் ஞானசித்தி வழங்குமப்பா
தேசிகனார் சுப்பிரமணிய குருவெனக்குச்
    செப்பிய கோடாசூரி உரைத்தேன் முற்றே. (௧௮௰)

(கு-பு.)—

இச்சிறுநூல், அகத்தியனார் இயற்றிய சாலம் ஆறுகாண்டத்தில் அடங்கிய 'கொடுங்கோடாசூரி' என்னும் ஓர் அருமை வாய்ந்த குளிகை யியற்று முறையைக் கூறும் சிறு பகுதியென இதன் தலையங்க வாக்கியத்தான் அறியக் கிடக்கிறது. இப்பகுதியில் அக்குளிகை யியற்றும் வகையும், அதை யுபயோ

கிக்கும் முறையும், நீரும் வியாதிகளும் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன. 169-ஆவது செய்யுள் முதல் 180-ஆவது செய்யுள்வரை இப்பகுதியெனத் தெரிகிறது. (௰உ) (12) செய்யுட்கள் உள.

No. 1926. சட்டை முனிஞானம் நூறு.
ŚAṬṬAI MUNIÑĀNAM NŪṞU.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 70 a of the MS. described under No. 1490.

Contains 10 stanzas only.

This is the original of the work described under No. 334 (h) of the Triennial Catalogue of Tamil MSS. Vol. III

(கு-பு.)—

இந்தநூல் மூவருடக் காடலாக்கு 334 (h) நம்பர் பிரதியில் வந்த நூலுக்கு மூலப்பிரதியாகும். இதற்குப் பூரணமான பிரதி டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1841-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளது.

No. 1927. சட்டை முனி நிகண்டு ஆயிரத்திரு நூறு.
ŚAṬṬAI MUNINIGHAṆṬU ĀYIRATTIRUNŪṞU.

Pages, 220. Lines, 8 on a page.

Begins on fol 1 a of the MS. described under No. 1880.

Complete.

Same work as that described under R. No. 151(*b*) of the Tamil Triennial Catalogue Vol. II. wherein see for the beginning.

By Śaṭṭaimuni.

End :

செட்பினென் நீற்றுமுறை வரிசையாகச்
    செல்லாத கிழங்குக்குக் கிருவனமுஞ் சொன்னேன்
ஒப்பினேன் சிலாசத்து முதல் சிங்கு சொன்னேன்
    உயர்ந்து நின்ற ஞானத்திறுண்மை சொன்னேன்
அப்பனே செயநீருந் திராவகமுஞ் சொன்னேன்
    அனைத்தனைத்தும் விடுவிக்கச் சாறணையுஞ் சொன்னேன
நம்பினேன் மூலிகையும் பிறப்புஞ் சொன்னேன்
    நலமாக வுறவினமும் நாட்டினேனே. (உஉக)
நாட்டினேன் [சி](ச)வசுரியும் வராகவித்தை
    நலமான வுப்போடு வுதகஞ் சொன்னேன்
்நட்டினேன் வாதத்தில் பூநாகஞ் சொன்னேன
    புகழான விருபத்துமஞ்சு மஞ்சும்

ஆட்டினேன் பலநூலில் இல்லை யில்லை
யாச்சரியம் நிகண்டினுடைத் (தொகை), [துறை] யைக்கேளு
நீட்டினேன் ஆயிரத் திருநூறுந் தான்
நேராக நிகண்டினுடைக் கடைதான் முற்றே (கூஉஈஉ0உ)

Colophon:

சட்டை முனியார் சுவாமி நிகண்டு ஆயிரத்திருநூறும் முற்றும்.
குருவேதுணை.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கில் 151 (b) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இது சித்தர் நூலாராய்ச்சியாளர்க்கு இன்றிமையாத தாகும். இது சித்தர் நூல்களில் வழங்கும் பொருள்கள் மூலிகைகள் முதலியவைகட்குப் பரியாயப் பெயர்களை உணர்த்துவதால் இப்பெயர் பூண்டதுபோலும்; ஆயினும் இதிலே புடம் வைக்கும்வகை முதலியனவும் கூறப்பட்டுள்ளன. முற்றும் இருக்கிறது. அப்பிரதியில் இறுதிப்பாகம் இல்லை யாதலால் ஈண்டு அவ்விறுதிப்பாகம் எழுதிக் காட்டப்பெற் றிருக்கிறது.

No. 1928. சதுஷ்கோண மாலை பத்து
CATUṢKŌṆA MĀLAI PATTU.

Pages, 6. Lines, 5 on a page.

Begins on fol. 19-*a* of the MS. described under No. D. 1846.

Complete in (11) stanzas.

A treatise in 10 stanzas in which the supplicant expresses his realisation of God Śiva through Yōga and states that those who realise Śiva in this manner will be free from re-births and attain salvation.

Beginning:

சதுஷ்கோண மாலை.

உற்றதலம் பெருந்துறை நாடென்னுந் தேச
முட்புகுந்து சங்குநதி தீர்த்தமாடி
நித்தவ [ண] (ள) நாடணுகி வைகுந்த மேவி
நெடியோனை யடிவணங்கி நினைவிலுலே
கத்தனைபு மந்தி சந்தி யுச்சி மூன்றுங்
காலமும் நீ பூசித்துக் கவலைதீரப்
பெற்றனையே நெஞ்சகமே யிந்தப் பேறு
பெற்றவர்க்குப் பிறவியு முண்டென்னலாமோ. (க)

நீடு கதிர் சந்திரனு மாடும் பொய்கை
நீர்தனிலே மூழ்கி மலர் கொய்தப்பாலே
ஆடு மலர்ப்பாதமுட னழகன்கோயில்
அ[ணி](ணு)கி யரன் திருமுடிமேல் அந்தப்பூவைச்

சூடி யிடம் வலமாக விழுந்தெழுந்து
தொழுது கரங்குவித்திறைஞ்சித் துயரந்தீர
வீடு பெற்றாய் நெஞ்சகமே யிந்தப்பேறு
விதித்தவர்க்குப் பிறவியு முண்டென்னலாமோ. (உ)

ஊறல் வந்துபாயு மடைதன்னில் மூழ்கி
யுச்சிமலை மீதேறி மடையிற் பூத்த
நாறு மலர்தனை யெட்டிப் பறித்துக்கொண்டு
நடுவீதி சென்று மணி மண்டபத்துள்
ஏறுமயிர்ப் பாலமதில் நின்றுகொண்டு
ஈசுவரன்மேல் அம்மலரை யெடுத்துச் சாத்திப்
பேறுபெற்றாய் நெஞ்சகமே யிந்தப்பேறு
பெற்றவர்க்குப் பிறவியு முண் டென்னலாமோ. (ங)

* * * * * *

* * * * * *

நாற்சதுர கூடத்து வாசற்சென்று
நல்ல நீர்க்கடலில் அனுட்டானஞ்செய்து
மேற்சதுரமான கொலுமண்டபத்துள்
மேவி மயிர்ப்பாலமதில் நின்றுகொண்டு
தீச்சுடருமானதொரு வாற்றைத்தாண்டிச்
சிவமிருந்த பெருவெளியைப் பார்த்துப் பார்த்துக
காட்சி பெற்றாய் நெஞ்சகமே யிந்தப்பேறு
கண்டவர்க்குப் பிறவியு முண் டென்னலாமோ. (சு)

சிறப்புடைய வைகுந்தம் பிரம்ம லோகந்
தேட்ரிய சிவலோக மகேசுவரலோகந்
திறப்பறிந்து சென்று சதாசிவனார் லோகந்
தேடிப் பராபரத்தின் அடிசேர்ந்து நாளு
திறப்பறிந்து மயிர்ப்பால மீதிலேறிச்
சொர்க்கலோகம் புகுந்து பராபரத்தைச் சார்ந்தால்
இறப்பு முண்டோ நெஞ்சகமே யிந்தப்பேறு
எய்தவர்க்குப் பிறவியு முண் டென்னலாமோ. (ய)

தேடரிய திருமேனி யயனுமாலுந்
தேடாத பழம்பொருளைப் பின்னுந்தேடித்
தேடியறிந்தாடியக்கால் சிவந்தபாதந்
தரிசித்துச் சதுட்கோணமாலைப் பார்த்து
பாடியிட்டாய் நெஞ்சகமே யிந்தப்பத்தும்
படித்தவர்கள் பழவினைகளொழிந்து மேலாய்ப்
பாடியிடச் சுயவறிவு பெறுவரிந்நூ[ல்ப்] (ற்)
பயனறிந்த மெஞ்ஞானத் தலைவராமே. (யக)

சதுஷ்கோண மாலை பத்தும் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், சித்தர்யோகநூல்களிற் பிரசித்திபெற்ற சதுஷ்கோண மான தோரிடத்தில் அமர்ந்துள்ள சிவபிரானை யோகமார்க்கத்தான் பிரத்யட்சீகரித்து அவ்வாநந்த மேலீட்டால் சித்தர் பெரியார் ஒருவர் தந்நெஞ்சை

மூன்னிலைப்படுத்தி விளித்து "நீ இப்பேறுபெற்றாய்: இனி யுனக்குப் பிறவி யில்லைகாண்' என்றுந் தேற்றும்முகத்தான், "யோகமார்க்கதிற் பயின் றார்க்கு மறுபிறவியில்லையாய் மற்று எல்லாவகை சித்தியும் உண்டாகும்' என்று உணர்த்து வித்த இம்மெஞ்ஞானத்தை யறிவுறுத்துவது ; பத்துப் பாடல்களால் அமைந்துள்ளது. இறுதிச்செய்யுளான 11-வது செய்யுளும் நூலாசிரியராலேயே இயற்றப்பெற்றதாய நூற்பயனுணர்த்துஞ் செய்யுளா கும் : நூலாசிரியர் சைவமதப்பற்றுடையவர் என்பது இதில் தெற்றென விளங்குகின்றது.

No. 1929. சதுஷ்கோணமாலைபத்து.
CATUṢKŌṆAMĀLAI PATTU.

Pages, 5. Lines, 7 on a page.

Begins on fol. 22-*a* of the MS. described under No. 1212.

Complete.

Same work as the above

(கு-பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதேயாகும் : இப்பிரதியில் இந்நூலின் பதினொரு பாடல்களும் இருக்கின்றன : சிற்சில பதங்களில் பாட்பேதங்கள் காணப்படுகின்றன. இறுதியில் ' ராமலிங்கசுவாமி கவிகள் பாதாரவிந்தமே கதி' என்று எழுதப்பெற்றிருக்கிறது. பின்னர்,

" கனவு கண்டேனே சுகாதீதக் காதல கொண்டேனே
கனவு கண்டேனே கனவு கண்டேனே - கஞ்சன்மால் காணுத
காலைதலை நீருங்கலந்த விடத்திலே
மனது செல்லவும் வாசியிலேறவும்
வன்னி நடுவணை தன்னிலே கூடவும்
கனவு கண்டேனே உ" என்ற ஒரு பாடலும் உள்ளது.

No. 1930. சதுஷ்கோணமாலைபத்து.
CATUṢKŌṆAMĀLAI PATTU.

Pages, 8. Lines, 9 on a page.

Begins on fol. 8-*a* of the MS. described under No. 1214.

Complete.

Same work as the above and with slight variations in the readings.

(கு-பு.)—

இதுவும் முன் பிரதியில் வந்துள்ளதேயாகும் ; இந்நூலின் பத்துப் பாடல்களும் இருக்கின்றன. இதில் ஆங்காங்குச் சில விடங்களில் பாடபேதங் காணப்படுகிறது. எழுத்துப் பிழையதிகம்.

No. 1931. சதுஷ்கோணமாலைபத்து.
CATUṢKŌṆAMĀLAI PATTU.

Size, 10¼ × 1 inches. Pages, 9. Lines, 6 on a page.

Begins on fol. 52-*a* of the MS. described under No. 131.

Complete.

Same work as the above. The heading 'Catuṣkōṇamālai Māṇikkavācakar. pāḍal', found in the manuscript leads to the inference that Māṇikkavācakar might have composed these stanzas.

(கு-பு.)—

இந்நூலும் முன் பிரதியில் வந்துள்ளதே. முற்றும் இருக்கிறது; இதன் தலையங்கத்திலே 'சதுஷ்கோணமாலை, மாணிக்கவாசகர் பாடல்' என்ற தொடர் மொழி காணபபடுகின்றது; ஆதலின், இப்பத்துப் பாடலையும் மாணிக்கவாசகரே இயற்றி யிருக்கலாமோவென ஊஹிக்க இடம் உள்ளது.

No. 1932. சுந்தரானந்தர் சூத்திரம் நூற்றுப்பத்து.
SUNDARĀNANDAR SŪTTŪRAM NŪṞṞUPPATTU.

Substance, palm-leaf. Size, 11¼ × 1¼ inches. Pages, 52. Lines, 7 on a page. Character, Tamil. Condition fair. Appearance old.

Begins on fol. 1-*a*. The other works herein are Sūtarvākkiyam 27 *a* (குழித்தைலமுறை), (93–100) Kuḻittailamuṟai, 51-*a*.

Complete.

A work in 10 stanzs by Sundarānandar dealing with medicine and alchemy.

Beginning:

சுந்தராநந்தர் அருளிச்செய்த சூத்திரம் நூற்றுப்பத்து :—

ஆதியந்த மிகநிறைந்த சட்டை நாதர்க்
கன்பான சேயனென்றே பிள்ளையாகிச்
சோதி யந்தத்துள்ளிருக்குஞ் சுடரைப் போற்றிச்
சுந்தரமென்றே பேருமிட்டார் எங்கள்
நாதாகத்தீசர் பிண்ணாகீசர் சட்ட
நாதரெனும் பதஞ்சலிகள் போற்றியேதான் ?
மேதினியி லன்புடனே வாதம் பார்த்தேன்
வெதாந்த சிற்பரையாள் பாதங்காப்பே

கார்ப்பதுக்குச் சித்தரிடஞ் சென்றோர்க் கெவ்வாங்
கருணைபெறுஞ் சத்தியுண்டாங்கலை யெல்லாந்தான்
கூர்ப்பறிந்து யோகவிதி யறிவானல்லால்
கோடானு கோடிவித்தை வாதஞ் செய்வான்
பேர்க்கையுடன் பூரணத்தை நோக்கஞ் செய்வான்
பிறவாத தீட்சை விதிகற்க வே[ணு](ண்டு)ம்
ஆர்ப்பனத்துக் கழிவில்லான் சித்தனுவான்
ஆகாசந்தனை யறிந்தோன் வாதியாமே, (க)

End:

இரண்டல்லோ சத்திசிவ மான கூறு
நாயகனுர் நாயகிக்குமொ[ளி](ழி)ந்தகூறு
இரண்டல்லோ நந்தீசர் சொன்னகூறு
நாதர்கள் எல்லோரும் அறிந்தகூறு
இரண்டல்லோ பொன்வெள்ளி நிலைத்ததப்பா
நாதவிடை வைத்து வித்தை யாடனும்
இரண்டல்லோ வேணுமப்பா பூரத்தாட்டு
ரஸவாதஞ் சவுக்காரத் தாட்டுத்தானே. (௭௧)

தானென்ற மூலமிதை யறியவேணும்
சத்திசிவ மிரண்டையுமே காணவேணும்
தானென்ற கும்பிடு கல்லறியவேணுந்
தருவான வண்டத்தைச் செய்யவேணுந்
தானென்ற கற்பமதை யுண்ணவேணுஞ்
சாத்திரத்தைப் பார்த்த[ர]க்காற் செய்யவேணும்
தானென்ற வென்றனுல் சாத்திரந்தா ?
னதில் நூற்றுப்பத்து முற்றே. (௭௰)

Colophon:

சுந்தரானந்தசுவாமி பாடல் முற்றும் :

(கு-பு.)—

இந்தநூல், வைத்தியம் இரஸவாதம் இவைகளைக் கூறுவது என்று தோற்றுகிறது ; சுந்தரானந்தர் இயற்றியதாகவுள்ளது : நூற்றுப்பத்துப் பாடல்கள் இருக்கின்றன. பிழைகள் அதிகம்.

No. 1933. சுந்தரானந்தர் தண்டகம்.
SUNDARĀNANDAR DAṆḌAKAM.

Substance, palm-leaf. Size, 13¾ × 1¼ inches. Pages, 11. Lines, 7-8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 1-*a*. The other works herein are Śalliyanūl 12. Ñānanūl, 27 *a*.

Contains 73 stanzas.

Same work as that described under R. No. 278-*e* of the Tamil Triennial Catalague, Vol. II.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 278 (e), நம்பர் பிரதியில் வந்துள்ளதே இதில் இடையே சில பாட பேதங்கள் காணப்படுகின்றன. அதிலே (38) பாடல்களே யுள்ளன: இதிலே (73) பாடல்கள் இருக்கின்றன. இது யோகம் ஞானம் இரஸவாதம் வைத்யம் அஷ்டகர்மம் இவைபோன்றவை களை விளக்குகின்றது. பிழைகள் இருக்கின்றன.

No. 1934. சூதர்வாக்கியம்.
SŪTAR VĀKKIYAM.

Pages, 48. Lines, 6, 7 on a page.

Begins on fol. 27-*a*. of the MS. described under D. No. 1932.

Complete in 104 stanzas.

A treatise dealing with the preparation of medicines and medicinal powders from certain metals after purifying and converting them into powders; from the note both in the beginning and end of the manuscript it is inferred that the author is Sūtar.

Beginning :

சூதாவாக்கியம்.

சொல்லுகிறேன் பொன்வெள்ளி யிரும்பு செம்பு
தோலாத நாகங் காரீயம் வெள்ளீயஞ்
சொல்லுகிற மித்திரத்தின் வகையைக்கேளு
கோமியமோர் காடியெண்ணெய் எருக்கம்பாலில்
நல்லதோர் ரசம் பழச்சாறு காணச்சாற்றில்
நலமாகப் பொன்முதலாய் நான்குந்தோய்க்க
வெல்லரிய வங்கமொடு மூன்றுந்தீயில்
வேகமுடனு ருக்கியதைச் சாய்க்கநன்றே. (௧)

சாய்த்திடுவாய் ஒவ்வொன்றிற் காய்ச்சி முக்கால்
தோய்க்கச் சாய்க்க வுள்ளதிறம் பேதித்துக்
காய்ப்பேறி வலிவேறிச் சப்தலோகம்
கன்மத்து நிசமான சுத்தியாகும்
வாய்ப்பான சிந்தூரமாம் பற்பமாகும்
வருப்பதற்காங் குழங்குளிக்காங் குருவுக்காகுந்
தீய்க்கிறுக்கு மௌடதங்களுக் கெல்லாமாகும்
செய்திடுவாய் சத்திமுத்தி முறையிதாமே. (௨)

End :

செய்திடு முன்புபோலத் தீர்க்கமாய் மண்ணுள்செய்து
பையவே முழங்கான்மட்டும் பாவிடுமெரு மேற்சட்டி
ஐயமில்லாமல் வைத்து அதிகச புடத்தைப்போடு
வெய்யவைங் கரனைப்போற்றி வேண்டியே யெடுத்துக்கொள்ளே.
(௱௩)

எடுத்தொரு பணத்துக்குத் தானிடு திரிகடுகத்தூளில்
அடுத்திரு பத்துநாளுண்ண வட்டகாசங்களீளை
தொடுத்த மந்தாரகாசஞ் சுவாசகாசங்கள் பாண்டு
விடுத்தோடுங் காதம்போகு மென முனி விளம்பினரே. (௱௪)

நந்தீசுவரர் வாக்கியப்படிக்குச் சூதர்வாக்கியம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல், வைத்திய விஷயமாய்ப் பல லோஹங்களை நீற்றிப் பற்பங்கள் ஆக்கும் வகையையும் பல் வகைச் செந்தூரங்களைச் செய்யும் முறையையும் அவைகளான் வியாதிகள் நீங்கு மாற்றையும் விளக்கிப்போருகிறது; நூற்று நான்கு செய்யுட்களால் அமைந்துள்ளது; முதலிலுங் கடையிலும் இந்நூலை இயற்றியவர் ஸூதர் எனக் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் முடிந்த பின்னர், தசவாயுக்களுடைய பெயர்கள் எழுதியுள்ள ஓரேடுள்ளது; அதன் பின்னர் பல்வேறு வியாதிகளைப் போக்கும் ஓர் அரிய குழித்தைலத்தினது முறையை யுணர்த்தும் (91—100) பாடல்கள் வரையிலான (8) பாடல்கள் 6 பக்கங்களில் எழுதப்பெற்றுள்ளன: இப்பாடல்கள் இன்னநூலைச் சார்ந்தனவெனத் தெளியவியலவில்லை.

No. 1935. சூரியாநந்தர் சூத்திரம்.
SŪRIYĀNANDAR SŪTTIRAM.

Page, 10. Lines, 7, 8 on a page.

Begins on fol. 3 *a.* of the MS. described under No. 1564.

A treatise on the practice of alchemy by one who has succeeded in Yōga. By Sūryānanda.

Complete in 25 stanzas.

Beginning:

சிவாயநம: சூரியநந்தர் அருளிச்செய்த சூத்திரம்:—
பூரணமாம் மதியணிந்து எழுகடலைவாரிப்
புகட்டுச்சடைக் குள்ளணிந்து வன்னிமழுவேந்திக்
காரணமாங் கரியுரித்துப் புலியுரித்துப் போர்த்துக்
காலதனை யாபரணமாக வினிதணிந்து
ஆரணமா நால்வேத முடிவினுக்கு மெட்டா
வாநந்த பெருவெளியதாகி யெங்குமாகி
நாரணமாம் போதமருள் தட்சிணாமூர்த்தி
நாதாந்தப் பதமலரை நான் சிரசிற்கொண்டேன். (க)

கொண்டிரு பத்தைந்ததனிற் காயசித்தி வாதங்
கூறுகவே யுரைப்பேன் நவகோடி சித்தர்
கண்டு சித்திசெய்யும் வழிகொண்டா(ர்கள்) கோடி
கவறுகப் பிரித்துரைத்தார் கருவதனிற்றேயா
பண்டுசெய்து காயசித்தி பண்ணும்போழ்து
பார்க்கிறதோர் கருசொல்வோன் மவுனஞான
மூண்டுஅந்தக் குண்டலிக்குள் நாசியினுற்பூரி
யொடுக்கமந்தக் கண்டமதிலாணு அங்கென்றானே. (உ)

* * * *

ஆமப்பா தினமேதான் ரசமுங் கெந்தி
யருணையைப் போல் தேகமு மாத்தாளப்பன்
காமப்பா வாத்தாள் தன்வாமம் திங்கள்
கைமுறையாய்ப் பூசை செய்வாய் கழ லுஞ்சட்டை
வேமப்பா நல்வினையுந் தீவினையு மெல்லாம்
வெந்துவிடுந் தணல்கண்ட விறகு போல
நாமப்பா வுள்ளமுறை சொன்னேஞ் சொன்னேம்
நம் பேருஞ் சூரியானந்த [மா][ன]மே. (௰௪)

End:

ஆமப்பா காயசித்திப் பண்ணித் தீர்ந்து
ஆடியல்லோ வாலை யினுல் மூலந் தன்னில்
ஓமப்பா மேல் நோக்கி மவுனத்தாடி
யொத்தசிவ விந்துவுண்டு வாதம் பார்த்துத்
தாமப்பா மணிதனக்குச் சாரணையைத் தீர்த்து
சாதகமா யறுவரையு மேறி யாட
வேப்பா . . . .
விரியாம லுரைத்துவிட்டேன் வித்திடு முற்றே. (உ௫)

Colophon:

1793-ம்௵ நவம்பர்மீ 7௳.
சூரியா நந்தர் சூத்திரம் (இருபத்தைந்து)
வேங்கடாசலம் எழுதி முடிந்தது.

(கு-பு.)—

இந்தநூல் யோக மார்க்கத்தால் சித்திபெற்று இரஸவாத முதலியனவற்றைச் செய்யும் வழியைக் கூறுவது. இருபத்தைந்து பாடல்களால் அமைந்துள்ளது; இப்பிரதியில் முழுமையும் உள்ளது. நூலாசிரியர் ‘சூரியாநந்தர்’ என்பது இந்நூல் பதினைராஞ் செய்யுளால் அறியக்கிடக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள்ளன. இவர் இருநூற்றைந்து பாடல்கொண்ட (மற்று ஒரு) நூலும் இயற்றியுள்ளார் என்றும் தெரிகிறது. அஃது இங்கில்லை.

No. 1936. ஞானக்குறள் (ஔவைக்குறள்).
ÑĀNAKKUṞAḶ (AUVAIKKUṞAḶ).

Substance, palm-leaf. Size, 10¼ × 1 inches. Pages, 46. Lines, 7 and 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Didactic stanzas dealing with the attainment of Salvation through Ñāna, which itself is the result of Yōga. The composition of the work is on the model of the Tirukkuṟaḷ of Tiruvaḷḷuvar, and is attributed to the gifted poetess Auvai.

Beginning :

ஞானக்குறள் (ஔவைக்குறள்).

வீட்டு நெறிப்பால் பிறப்புடைமை :—

ஆதியாய்நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன் (க)

பரமாகிச் சத்தியுடன் பஞ்சமாபூதந்
தரமாகித் தோனறும் பிறப்பு (உ)

ஓசைபரிசம் உருவஞ் சுவைநாற்றம்
ஆசைப் படுத்து மளறு. (ங)

தருமம் பொருள்காமம் வீடெனநான்கும்
உருவத்தா லாய பயன். (ச)

நிலமைந்து நீர்நான்கு நீடங்கிமூன்று
வளியிரண்டு மொன்றாகும் விண். (ரு)

*   *   *   *   *

*   *   *   *   *

End :

கற்கிலுங் கேட்கிலும் ஞானங்கருத்துற
நிற்கில் அப்பர மாவை நீ. (ஙாய)

ஞானக்குறள் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் திருவள்ளுவர் குறள்போன்று யோகவாயிலான் ஞானம் பெற்று வீட்டுநெறியைச் சாரும் வகையை உணர்த்துவது. ஞானவிஷயமாகும் ; இது, (1) பிறப்புடைமை, (2) பிறப்புடைமையின் பயன், (3) கல்வியுளுடம்பு (நிலையாமை), (4) நாடிதாரணை, (5) வாயுதாரணை, (6) அங்கிதாரணை, (7) அமுததாரணை, (8) அருளர்ச்சனை, (9) அருள் உள்ளுணர்தல், (10) பத்தியுடைமை, (11) அருட்பெறுதல், (12) நினைப்புறுதல், (13) தெளிந்துணர்வு காண்டல், (14) கலைஞ்ஞானம், (15) உருவின்றி நிற்றல், (16) சிந்தை காண்டல், (17) தூயவொளி காண்டல், (18) பிறப்பறுதல், (19) சதாசிவம், (20) நிராதாம், (21) தன்பால் அரணிலை - குருவழி, (22) அங்கியிற் பஞ்சு, (23) மெய்யகம், (24) கண்ணாடி, (25) திருவருட்பெற்ற பெருமை, (26) சிவயோகநிலை, (27) ஞானநிலை, (28) ஞானம் பிறியாமை, (29) மெய்நெறி, (30) துரியோதயதரிசனம், (31) பொன்ஞான தரிசனம் ஆய இச்சிறு பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் பப்பத்துக் குறளாய் அமைந்து (310) முந்நூற்றுப்பத்துக் குறள் கொண்டிருக்கின்றது இதற்கு 'ஔவைக் குறள்' என்றொரு பெயர் இருப்பதால் இதை ஔவையார் என்று பெயர் பூண்டார் ஒருவர் இயற்றியிருக்கலாமென்று தெரிகின்றதன்றி, கால முதலிய பிறகுறிப்புகள் ஒன்றும் தெற்றென விளங்கவில்லை. இந் நூலாசிரியர் சைவமதப்பற்றுடையார் ஆவர் : இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது ; இது முடிந்த பின்னர் வாசிட்டம், திருவருட்பா என்ற பெயர்களுடன் இரண்டு செய்யுளும், கணபதி விஷயமான பாடல் ஒன்றும் எழுதப்பெற்று இருக்கின்றன. பிழை யதிகமா யிருத்தலோடு ஏடுகள் மிகச் சிதைந்திருக்கின்றன.

No. 1937. ஞானக்குறள் (ஔவைக்குறள்).
ÑĀNAKKUṞAḶ (AUVAIKKUṞAḶ).

Pages, 62. Lines, 6 on a page.

Begins on fol. 121(a) of the MS. described under No. 1231.

Complete.

Same work as the above, and with variations in the readings. The author seems to be Auvai.

(கு-பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. ஆயினும் இது சில சில பாடபேதங்களுடனும், அதிகாரமாய சிறுபிரிவில் சில முன்பின்னாகவும் இருப்பதோடு ஈற்றில் நூலாசிரியரையும் இந்நூலின் செய்யுட்களுடைய எண்களையும் குறிக்கும் ஒரு குறளையுங்கொண்டிருக்கின்றது. முற்றும் இருக்கின்றதென்றே தெரிகிறது: இந்நூலைப் பலவிடங்களில் ஆராய்ந்த விடத்து இந்நூலாசிரியராம் ஔவையார் பரமசிவனையே தமக்கு வழிபடு கடவுளாகக் கொண்டாரெனத் தெற்றென விளங்குகிறது. ஏடுகள் சிறிது சிதைந்துள. பிழையதிகம்.

No. 1938. ஞானவெண்ணிலா.
ÑĀNAVEṆṆILĀ.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 93(a) of the MS. described under No. 1378.

A treatise of a philosophical nature. Each line of this work ends with the expression 'Veṇṇilāvē,' whereby it is clear that Ñāna is compared to the moonlight which is white.

Beginning:

ஐந்து குறிப் பறியும் வெண்ணிலாவே
சுழியாக் கையிற் சிக்கினேன் வெண்ணிலாவே
நெஞ்சில் நினை வறியாய் வெண்ணிலாவே
சுழி நேர்தலைக் காலறிவாய் வெண்ணிலாவே
விஞ்சு புகழ் படைத்தாய் வெண்ணிலாவே
உன்னை விரும்பி வருந்தினேன் வெண்ணிலாவே
கொஞ்சு கிளி மொழியாள் வெண்ணிலாவே
எங்கள் கோதைவல்லி தான்களித்த வெண்ணிலாவே.

* * * * *

End:

கல்வியென்றன் முன்னே வாராளோ வெண்ணிலாவே
[எ] (இ) க்கண் ணிலை யறிவாய் வெண்ணிலாவே
கண்ட விற்பன மிதாமல்லவோ வெண்ணிலாவே
விண்ணுகைப் போகலாமோ வெண்ணிலாவே

வல்லி வீட்டிலுன்னைத் தேடாளோ வெண்ணிலாவே
கண்ணுக்கு செவி மூக்கு வெண்ணிலாவே
வாய்கண்டு சொன்னவா றேது வெண்ணிலாவே
உன்னை மதியென் றிருந்தேன் வெண்ணிலாவே.

(கு-பு.)—

இந்த நூலின் பெயரே இது ஞானவிஷயம் என்று அறிவிக்கின்றது; இதில் ஒவ்வோர் அடியின் ஈற்றிலே 'வெண்ணிலாவே' என்ற சொல் பொருந்தி இருபது அடிகள் இருக்கின்றன வாதலின் இதற்கு இப்பெயர் காரணக்குறியோலுங் காணப்படுகிறது; இது ஞானத்தை வெண்ணிலா வென்று உருவகப்படுத்திக் கூறி ஞானம் பெறுவார் ஒருவர் அதை விளிப்பதாக அமைந்துள்ளது; இஃது, இராமலிங்கசுவாமிகள் இயற்றிய "திருவருட்பா" என்ற நூலில் இரண்டாந் திருமுறையில் உள்ள "வெண்ணிலா" என்ற சிறு பகுதியைப் போன்றது,

---

No. 1939. நாதாந்ததரிசனம்.
NĀDĀNTADARIŚANAM.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 35 (a) of the MS. described under No. 1036.

Complete.

Gives the mystic letters indicating the various deities presiding over the different parts of the human body.

Beginning:

<u>நாதாந்த தரிசனம்:—</u>

மூலமே மூன்றுவட்டம் முப்பொருண் முத்தியாகும்
சீலமே மூலபாதஞ் சிலம்பொலி திருக்கூத்தாகும்
ஆலயே யுண்டகண்டர் அருளது வகாரமாகும்
ஏலவே யுச்சிவட்டம் எல்லையா மூலமாமே. (௧)

அவ்வென்றும் ஐயுமென்றும் ஆனதோர் மூலபாதம்
உவ்வென்றுங் கிலியுமென்னு முறைந்திட வுபயபாதம்
மவ்வென்றுஞ் சவ்வதென்றும் மலரடி மதியமாகும்
ஒவ்வென்ற யோனிதானே யுலகெலா முதித்தொடுங்கும். (௨)

மூலமே வாலையாகும் முப்பொரு ளுதயமங்கே
சூலமா மிதயந்தானே திரிபுர சுந்தரித்தாய்
காலமா முச்சிவட்டங் காரணி புவனத்தாயார்
சீலமா மூன்றுகண்டந் திருமூல பாதமாமே. (௩)

End:

முக்கண்ட மூன்றுகோண மூலாதி பாதமாகிச்
சட்கண்ட மாறுகோணஞ் சத்தியுஞ் சிவமுமாகி
விற்கண்ட மூன்றுவட்டம் விண்ணுடன் மண்ணுமாகி
நற்கண்ட மூலபாதம் நாதாந்த சோதியாமே. (௮)

மூலமே நடுவுமுச்சி மூன்றுடன் மூன்றுவட்டம்
சாலவே யுச்சிமீதே சமைந்தது நாடிமூன்றாய்
ஞாலமே பெரியோரெல்லாம் நாடுவார் நாடிமூன்றை
யாலமே மூலபாத மடிநடு முடிமூன்றுமே. (௯)

நாதாந்த தர்சனம் முற்றும்:

ஸ்ரீ குருபாதமே நமக்குக் காப்பு.

(கு-பு.)—

இந்நூல் யோகவிஷயமாய் அச்சாத்திரத்தே வழங்கும் நாதாந்தச் சோதியைக் காணுமாற்றைக் கூறுமுகத்தான் இன்னின்ன பீசாட்சரங்கள் இன்னின்ன தேவதைகளுக் குரியனவென்றும், அவைகள் தாம் இந்த விந்த விடங்களில் உறைகின்றன வென்றும் விளக்குகிறது. ஒன்பது (௯) பாடல்களால் அமைந்துளது. முற்றுமுளது. இதை மூவருடக் காட்லாக் 979-ஆவது நம்பர் பிரதியில் எழுதிவைத்திருக்கிறது.

No. 1940. பதஞ்சலியார் பாடல்.
PATAÑCALIYĀR PĀḌAL.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 94(a) of the MS. described under No. 1378.

Complete.

A treatise on the Yōga and Ñāna of the Siddhars and on the successful practice of alchemy after attaining Yōga and Ñāna. This work is attributed to Patañjali.

Beginning:

பதஞ்சலியார் பாடல்:—

பரமெனும் பெருளேதோகாரண விபரமிருந்ததுதானே சூசன
பழுத விஷஞ்சொலி மாயாபிதையில்—உறவாகிப்
பழுதிநிறைந்தபின் வேதேப்யார்பொருள் கருவிலெழுந்தது போலவே
[வாய்வது
பரிசநுழைந்திடு பூதாகாயமும்—அதுதானே
கருவியதந்தமுள் ளாணுளாண வ மலமிதகந்தைகள் மேலாய்நால்
[வதை
கபடவலங் கிருதயோனி பேதமும்—எழுகூறாய்க்
கரையிலே யென்பது சீவான்மாவுகள் பசுசலனஞ்சுமே யாதியாகம
கலகமெனுந் திரையூடே மூழ்கின—கதியாகி
இரவிகள்சந்திரன் வாணுகாயமுமுகமுடி யஞ்சனனுதியைக்கையில்
இதசகசந் தனிலேனே புருவம்—இதுகாணும்
இகபரமிரண்டெனவே தானேதிய விருவகையுந் தனலாமோ?
[ஞானமு
மிதுவதுவென் றுணராதோர் மோனமும்—இனிதாகும்

சருவமலஞ்செயல் நாமேயாகிய குருவையுணர்ந்தவர் தாமேயோகி
[கள்
தனையுமறிந்தவர் பேசார் ஞானிகள்—தவியாரே
சருகுகிழங்குகள் பாலேகாய்கனி மூடுகெவருந்துவர் வீண்வாய்
[பேசியே
தடியின் முறண்டடிஞுலே சடைகளோ—முடிவார்கள்.
உருகுமறஞ்சனியாதே நாமொருகவனமிடும் படிதானே சாரணே

* * * * *

End:

காரஞ்சில சாரஞ்செய் நீரானது கட்டும்
வீரஞ்சில பூரங்களும் மெழுகும்பல விதமாய்ச்
சேருஞ்சில குருவும் பல [பொருள்] செந்தூரமுமுறவாம்
ஊறுஞ்சில தைலங்களும் உப்பாமென வுரையே. (௩௨)

ஆகும்பெரு வெளிமேலுட லாம்படிக்கே மனம்
போகும்படி திடமாகிய பொருள்சேர் ரசமணியும்?
தேகஞ்சிலநாள் நின்றிடவே செய்திடுந் திறமும்
யோகம்பெறு மவுனங்களும் உப்பாமென வுரையே. (௩௩)

முற்றும்; திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்த நூல், யோகம், ஞானம் என்னும் இவை வாயிலாகச் சித்திபெற்று இரஸவாதம் முதலியவற்றைச் செய்யுந்திறனுணர்த்துவதெனத் தோன்றுகின்றது; பிரதானமாய் இதில் யோக ஞானங்களே நுவலப்படுகின்றனவாதலின் சித்தர் நூல்களைச் சார்ந்ததாகும்: பதஞ்சலியார் இயற்றியதாகத் தெரிகிறது. இப்பிரதியில் "௩௩" செய்யுட்கள் இருக்கின்றன, முற்றும் உள்ளதென்றே தோற்றுகிறது இது, மூவருடக்காடலாக்கில 981. ஆவது நம்பர் பிரதிக்கு மாதிருகை பிரதியாகும்.

No. 1941. பலபாடல் (ஞானம்).
PALAPĀḌAL (ÑĀNAM.)

Pages, 6. Lines, 8 on a page.

Complete.

Begins on Fol. 112*a* of the MS. described under No. 1157.

Nine stanzas of a philosophical nature.

Beginning:

ஞானப்பாடல்கள்:—

திருச்சிற்றம்பலம்.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோவமான
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற

விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேனல்லேன்
[வேறு](வி)றப்பனமுமிகப் பெரிதும்பேசவல்லேன்
நிலம்போல் லேனிரப்பதை யியமாட்டேன்
என்செய் வானரேன் றினேன் ஏழையேனே. (க)

வையாநின்ற பாழுரில் மனைவாசலுந் தீப்பட்டெரியக்
கைகாலில்லா முடவனைப் போற் கலங்கா நின்றேன் கண்ணுதலே
மெய்தானுளதோ வேறுளதோ மெய்க்குமெய்க்குமெய்ப்பொருளே
ஐயா கண்டத்தம்பலவா வாநீவந்து தோன்றாயோ. (உ)

தடத்தில்நின்ற பருமரத்தைத் தா[ள] (மு) மிதிந்துக்கொம் பொடிந்து
தொடுத்த கொம்பே பற்றாகத் தூங்காநின்றேன் துணையில்லை
உடுத்தபுலித்தோ லுடன்றேன் று முமையாளுந்தன் வெண்ணகையும்
தொடுத்தவரவம் பலமுடையாய் நற்சோநீவந்து தோன்றாயோ. (ங)

End :

மூலத்தில்நின்ற குஞ்சரத்தை வாழ்த்தி முளரிநான் முகன்றன்னை முறையா
வேத்தி
ஞாலத்தை யுண்டமாலரியை வாழ்த்தி நலஞ்சிறந்த ருத்திரனைநயந்துபாடி ச
சீலத்தில் மயேசுவரனைத் தரிசித்தப்பால் சிறந்த சதாசிவன்றன்னைச்
[சிந்தை செய்து
கோலத்தில் நின்ற மாமகளை வாழ்த்திக் கும்பிட்டேன் என்பிறவி
[பின் விட்டேனே. (அ)

சந்திரரோ டாதித்தர் தயங்குமெல்லை தயவில்லாமுந்நான்கு வன்னியோடே
அந்திரமே யொருநான்கு க[ளி](ழி)ந்து போதுமதுக்குள்ளேயோ ரெட்டாய்
[நின்றான்றன்னை
மந்திரமாம் வாசிபென்னுமெழுத்தினாலே வான்பொருளைத் திருவரையைச்
[சிலையான்றன்னைக்
கொந்துலவுங் குழலாள்சேர் குன்றில்வேந்தைக் கும்பிட்டேன் என் பிறவி
[பின் விட்டேனே. (கூ)

திருச்சிற்றம்பலம், முற்றும்.

(கு-பு.)—

இந்த நூல், யோகநெறியில் நின்றார் ஒருவர் சித்திபெற்றுப் பரமசிவனைத் தரிசித்துத் தன்பிறவியை நீத்ததாகவுள்ளதைத் தெரிவிக்கின்றது. ஒன்பது செய்யுட்கள் இருக்கின்றன. முற்றுப்பெற்றதென்றே தோற்றுகிறது. ஞானத்தை விளக்குவது. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. சிலவிடத்து எழுத்துப்பிழையுள.

No. 1942. மெஞ்ஞானக் குறவஞ்சி.
MEÑÑĀNAKKUṞAVAÑCI.

Pages, 15. Lines, 6 on a page.

Complete.

Begins on Fol. 50-*a* of the MS. described under No. 1675.

A treatise dealing with Yōga and Ñāna of the Siddhars. The work is in the form of instructions on Yōga and Ñāna imparted by a wise woman of the Kuṛavar caste to a man of the same caste.

Beginning :

மெஞ்ஞானக் குறவஞ்சி.—

ஆதிக்கு முன்னே யனாதியு மென்னடி சிங்கி !—அது,
    அந்தக் கருக்குழி முந்தியிருளரை சிங்கா ! (௧)

ஆதியென்னுவதிற் சோதியுமென்னடி சிங்கி !—அது,
    சோதி யுதிரத்திற் சுக்கிலம் பாய்ந்தது சிங்கா ! (௨)

ஆதியாய்வந்த வரும் பொருளேதடி சிங்கி !—அது,
    சோதியிலாதி சொரூபமா யெழுந்தது சிங்கா ! (௩)

ஆதியனாதியுஞ் சோதியுமென்னடி சிங்கி ;—அது,
    ஆதி முதல் விந்து நாதவுதிரத்திற் சோதியுருவடா சிங்கா ! (௪)

சோதியிலாதி யுருவான தெப்படி சிங்கி ;—அது
    வேதமாம் முப்பொருளொன்றாய் முடிந்தது சிங்கா ! (௫)

End :

இரவும் பகலுமே யிருந்திட மெவ்விடம் சிங்கி !—அது,
    எறுமெட்டங்குலம் இருவிழி நடுநிலை சிங்கா ! (௫௭)

இரவும் பகலென்றென்னத்தைச் சொல்லலாம் சிங்கி !—அது,
    இரவுபகலிடம் பிங்கலைவாசியே சிங்கா ! (௫௮)

இடைபிங்கலையென்று என்னத்தைச் சொல்லலாம் சிங்கி ;—அது,
    இடைதான் சந்திரன் பிங்கலை சூரியன் சிங்கா ! (௫௯)

என்னத்தைச் சொல்லலாம் சந்திரன் சூரியன் சிங்கி !—அது, இடம்
    வலமாகவே யெழுந் [த] தோடு [முச்சுடர்] (மூச்சடா) சிங்கா! (௬௰)

சந்திரன் சூரியன் ஒன்றான தெவ்விடம் சிங்கி !—அது,
    சகல கலையும் பொருந்து நடுச்சுழி சிங்கா ! (௬௧)

என்னத்திலே பரம் எறியே [நின்ற] நின்றது சிங்கி !—அது,
    ஒன்றுக்குள் வாசிநடனம்புரவிதான் சிங்கா ! (௬௨)

என்னவிதமாயெடுத்துநின்றாடலாம் சிங்கி ,—அது !
    எற்றமும் மாற்றமும் இணங்கி நின்றாடிப்பார் சிங்கா ! (௬௩)

மாறிப்பிடிக்க மருந்தென்ன சொல்லடி சிங்கி !—அது,
    மாளாமல் மாண்டு மறந்து இருப்பது சிங்கா ! (௬௪)

உற்றவிசேஷம் மதித்துயர்ந்தார் சொன்னார் சிங்கி !—இது,
    புத்தியாய்ப் பீறு முகம்மது சொன்னது சிங்கா ! (௬௫)

மெஞ்ஞானக் குறவஞ்சி முற்றும்:—கடவுள் துணை :

(கு-பு.)—

இம் ‘ மெஞ்ஞானக் குறவஞ்சி ’ என்னும் நூல்தான் சித்தநூல்களைச் சார்ந்ததாய் யோக விஷயமான ஞானத்தை விளக்குகின்றது ; இது,

ஞானம் பெற்றவொருபெண், ஞானம்பெறுவான் விழைந்த ஒரு ஆண் மகனுக்குச் சித்தர்நூற்களில் நூதலப்படும் மறைபொருளை அறிவுறுத்துவதாக வமைந்துள்ளது. 'குறவஞ்சி' என்னும் பிரபந்தங்களில் ஓர் உறுப்பாய் வரும், ஒரு சிங்கன் சிங்கியைப் பார்த்து வினவ, அவள் விடையிறுத்தலுமாக உள்ள வப்பகுதியை இஃது ஒத்துள்ளதாதலின் இப்பெயர் பெறுவதாயிற்றுப்போலும். இதற்கான விலக்கணமும் மற்றைய உறுப்புக்களும் காணப்பெறவில்லை. இதன் ஆசிரியர் இறுதியில் 'முகம்மது சொன்னது' என்று இருத்தலால் பொதுவகையால் ஒரு துருஷ்கர் என்றன்றிச் சிறப்புப் பெயர் ஒன்றுந் தெரியவில்லை. முற்றும் உள்ளதென்றே தோற்றுகிறது.

No. 1943: மெஞ்ஞானச் சிங்கி.
MEÑÑĀNACCIṄGI

Pages, 6. Lines, 6 on a page.

Begins on Fol. 90*a* of the MS described under No. 1378.

Complete.

A treatise of a philosophical nature similar to the above.

Beginning :

கண்டுதொழுஞ் சிவாகாரமே தடிசிங்கி !
அது, கண்டு பர[ா]ப்பொ ருளொளி பெற்றிடுஞ் சிங்கா !
அஷ்டகர்மயோக மறிந்திடச் சொல்லடி சிங்கி !
அன்பான . . . டுப்படாத மாசியி னூடடா சிங்கா !
கற்பகவாசி கலந்திடமேகண்டு தொழுஞ் ?
சிவகாரண மேதடி சிங்கி !
அது, உண்டு பரப்பொரு ளொளி பெற்றிடுஞ் சிங்கா !
அஷ்டாங்க யோக மறிந்திடச் சொல்லடி சிங்கி !
அன்புளமட்டும் படாதமாசியி னூடடா சிங்கா !
கற்பகவாசி கலந்திடு மெவ்விடஞ் சிங்கி !
அது, வுற்பன முக்கோணத் துள்ளே முத்தல்லவோ சிங்கா!

* * * *

End :

சாத்திரம் பேசிய் தா[டா](ளா)ண்மை ? யேதடி சிங்கி !
சிவகோத்திர ஞானங் குறியாதிடமடா சிங்கா !
தானெனக்கெட்ட தலமினிச்சொல்லடி சிங்கி !
பொருள்தானல்ல வென்ற சத்தியங்கூறடா சிங்கா !
சோதியறு . . . கன சூ சங்க . . . ண வாழ்த்திச்
சிவனுதி யெழுந்த நமனையும் வெல்லு?வாஞ் சிங்கா !
கந்தன் முருகேசனைத்தேடி நான்பாட வருள்
கண்ட வுன்சவுபாக்கிய முந்தருவாறே.

நாமினி வாழ்த்திவனே நல்லது சிங்கி !
அரன்தாமினி வாழுமத்தலந்தனிலாகவா சிங்கா !
சந்திரர் சூரியர் எவ்விடம்வாழ்கிறார் சிங்கி !
அந்தத்தற்பர வீட்டினில் நாமினிவாழுவோம் சிங்கா !

ஞானச்சிங்கி முற்றிற்று.

(த-பு.)—

இந்த நூல் முன்வந்த நூலைப்போன்று ஞானநூல்களுடைய விஷயங்களைத் தெளிவிக்கின்றது. முற்றும் உள்ளது; இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. பிழைகள் இருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1944: மெய்ஞ்ஞான நிலயம். MEÑÑÂNA NILAYAM.

Pages, 7. Lines, 12 on a page.

Begins on Fol. 164*a* of the MS. described under No. 344.

Nine stanzas of a philosophical nature.

Complete.

Beginning:

மெய்ஞ்ஞான நிலயம் :—

நினைவொன்று நினையாமல் நிற்கிலகமென்பர்
 நிற்குமிடமெய்துவர் நிட்டையருளோடுந்
தனையென்று மறந்திருக்க வருள்வடிவானதுவே
 தட்டியெழுந்திருக்கு மின்பாநந்தன் மயமெய்துவாம் ?
பினையொன்றுமில்லை யந்த வின்பமெனும் நிலயம்
 பெற்றாரே பிறவாமை பெற்றார் மற்றதுவாம்
மனையென்று மகவென்றுஞ் சுற்றமென்றுமசுத்த
 வாதனை யாமாசையொழிமன்னொரு சொல்கொண்டே. (க)

நில்லாத யாக்கை நிலையென்றெனவே கண்டாய்
 நேயவருண் மெய்யென்று நிலைமையதாய் நிற்கக்
கல்லாயே படித்தாய் நீ கற்றதெல்லாம் மூடங்
 கற்றதெல்லா மூடமென்று கண்டனையுமன்று
சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத்தானே
 தொடர்ந்து பிடிமற்கடம்போல் தொட்டதுபற்றாய்நில்
எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண்டடி நீ
 இராப்பகலில்லாவிடமே யெமக்கிடமென்றறிந்தே. (௯)

End:

வரும் போமென்பனவுமின்றியென்று மொருபடித்தாய்
 வாஞதிதத்துவத்தை வளைந்திருந்தும் வெளியாய்
இரும்போ கல்லோ மரமோ வென்று நெஞ்சகங்கனன்மேல்
 இட்டமெழுகாயுருகி யின்பவெள்ளமாகுங்

கரும்போகண்டோ சீன்சருக்கரையோ தேனோ
கனியமுதோ வெனருசிக்குங்கருத்தமைந்தோருணர்வாம்
அரும்டோ நன்மணங்காட்டுங் காமரசங்கன்னி
யறிவாளோ வப்பக்குவர்க் கே[ரவ] யந்நிலைதான்
விளங்கும். (அ)

தானேயிவ்வுலகமெல்லாம் ஒருமுதலுமாகத்
தன்மையினாற் படைத்தழிக்குந் தலைமையவனை
கோனாக வொருமுதலுண்டென்னவுமைம்பூதங்
கூட்டியது செகமுடிவிற் குலவுமது ஞானம்
வானாகவம்முதலே நிற்குநம்மால் அறிய
வளப்பரிதாமெனமோனம் வைத்ததுவும் மனமே
யானாலும் மனஞ் செடமென்றழு ந்தாதே யுண்மை
யறிவித்த விடங்குருவாமதுவல்ல தொன்றிலையே. (௯)

மெய்ஞான நிலயம் முற்றும்.

(கு-பு.)—

இது சித்தர் நூல்களைச் சார்ந்து ஞான விஷயத்தையுணர்த்துவதென விளங்குகின்றது ; ஒன்பது பாடலால் அமைந்துளது. இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை. எழுதின முறையத்துணைச் சிறந்ததன்று ; பிழைகள் உள. நடை மாத்திரம் நன்றாய் உள்ளது.

No. 1945. தன்வந்தரி கலைஞ்ஞானம் ஐந்நூறு.

DHANVANTARI KALAIÑÑĀNAM AINNŪṞU.

Substance, palm-leaf. Size, 12¼ × 1½ inches. Pages, 256. Lines, 7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 48 a. The other work herein is Bhōganāyanār eḻunūṟu 1 a.

Complete.

Same work as that described under No. R. 191 (*a*) of the Tamil Triennial Catalogue Vol. II.

(கு-பு)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 191 a நம்பர் பிரதியில் வந்துள்ளதே; இது, யோகம் ஞானம் இரஸவாதம் அஷ்டகர்மம் ஜாலம் இவைகளையும், அவைகட்குஉரிய சில மந்திரசக்கிரங்களையும், வைத்திய விஷயமான பல மருந்துகளையும் தெளிவாகக்கூறிச் சித்தராதற்குரிய நெறியையும் நுவலுகின்றது. சித்த நூலாராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமானது. அச்சிட்டிருக்கலாமோ என்னவோ தெரிந்திற்றிலது. இப்பிரதியில் இந்நூலின் ஐந்நூறு பாடல்களும் இருக்கின்றன,

, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி ஆயிரத்தைந்நூறு.

DHANVANTIRI VAIDDIYA CINTĀMAṆI ĀYIRATTAINNŪṞU.

Pages, 74. Lines, 6 on a page.

Incomplete.

An extensive treatise on medicine in 1500 stanzas based on the substance of several Sanskrit works on medicine.

Contains only the first 100 stanzas and this portion is called 'Tattuvanilai':

Beginning :

தன்வந்திரி வைத்தியசிந்தாமணி ஆயிரத்தைநூறு;—
ஆனை முகன்றன்பாதம் முருகன்பாதம்
அத்தியுரித்திடைதரித்த வையர்பாதம்
வானை யுமையாள்பாதம் மாலின்பாதம்
வயிரவன்றன்பாதம் மகாலட்சுமிபாதம்
கானையும் நாதர்கள் இருஷிகள்பாதம்
கமலத்தில் வீற்றிருக்கும் வாணிபாதம்
கோனையை குறுமுனி தன்பாதம் போற்றிக்
கூறுகிறேன் ஆயுர்வேதத்தைத்தானே. (க)

தானைநால் வேதத்தொப்பாய் நின்ற
தாக்கான வாயுர்வேதத்தோடைந்தாந்
தேனை சிருஷ்டி குலத்துத்பவித்த
தேவனந் தன்வந்திரி சொன்ன நீதி
வானை வாகடத்தை மேதினிக்குள்
மருவியே யுரைத்திடவே வண்மையாக
வேனுக வைத்திய சிந்தாமணிக்குள்
விவரமெல்லாம் வெளியாக விளம்பிச்சொல்வாம். (உ)

சொல்லிடவே தேவிக்குச் சதாசிவன்றான் சொல்ல
சுருக்கியே தேவிதான் நந்திக்குச்சொல்ல
நல்லடைவே நந்தி தன்வந்திரிக்குச்சொல்ல
நலமான தன்வந்திரி யசுவினிக்குச்சொல்ல
அல்லிடவே யசுவினியார் தேவர்தாமும்
அகத்தியர்க்கு வுரைத்திடவே யவரனைத்தும்
புல்லிடவே புலத்தியர்க்கு உபதேசிக்கப்
புலத்தியரும் தேரனுக்குப் புகன்றிட்டாரே. (ஙு)

புகன்றிட்டார் தேரன் மாமுனிவன்றானும்
பூதலத்தில் யூகிமுனிக் குபதேசிக்க
உகந்திட்ட யூகியென்ற முனிவன்றானும்
உலகத்தோர் பிழைக்கவென்றுரைக்கலாக

வகுந்திட்ட வடமொழியைப் பிரித்துப்பார்த்து
 மகத்தான பெரியோரை வணங்கிக் கேட்டுத்
தொகுந்திட்ட சூத்திரத்தின் சூட்சமம்பார்த்துத்
 துறையெல்லாஞ் சோதித்துச் சொல்லிட்டாரே. (௪)

சொல்லியதோர் விபரத்தின் றூய்மை கேளும்
 சூட்சமாம் பஞ்சபூதி யையத்தின் கூறும்
தெல்லியதோர் தசநாடி சத்ததாதுந்
 திரிநாடி தசவாயு சுரபேதங்கள்
நல்லியதோர் சன்னியொடுகுன்மஞ்சூலை
 தாக்கான வாதமொடு பித்த சேத்துமம்
மெல்லியதோர் மேகநீரிழிவுகுட்டம்
 மிக்கான பாண்டுவொடு காமாலேகமே. (௫)

கேளு மகோதரங்கிராணி பௌத்திரமூலம்
 கெடியான வசிர்ணங்கள் விஷூசிவிக்கல்
கேளுமே பலபலவாம் வியாதிநாயம்
 விளங்குகின்ற சாத்திய மசாத்தியந்தான்
பாளுமே பணடிதன்றன் குணமுமுரோகி
 பக்குவமும் ரஸவாக்கம் மூலிவர்க்கம்
காளுமேகடைச்சரக்கின் குணங்கள்தானும்
 கஷாயமொடு சூரணங்கள் கலிக்கந்தானே. (௬)

கற்கமொடு வடகங்கள் ரசாயனங்கள்
 கடினமாமிலேகியங்கள் கிருதங்கள்தானும்
வர்க்கமொடு தைலங்கள் எண்ணெய்தானும்
 மாத்திரையும் பசுமங்கள் செந்தூரங்கள்
புற்பமாம் புடத்தைலத் திராவகங்கள்
 புகையோடு பொட்டணங்கள் பூச்சுநசியம்
அற்பமா மஞ்சனங்கள் கண்ஷேங்கள்
 ஆகமாம் விரேசனங்கள் அடைவுமாமே (௭)

End:

ஆமென்றதுடல் முந்நூறெழு பலமாகும்
 அதிகமாம் வழுக்கை நாற்பலமுமாகும்
தேமென்ற சிவுரித்தான் கண்களிரண்டும்
 சிறக்கவே நாலுகழஞ்சாகுங் கண்டாய்
நாமென்ற நாக்கு நாற்கழஞ்சதாகும்
 நற்கந்த மூக்கதுதான் முக்கழஞ்சு
காமென்ற கன்னஞ்சேர் நாற்கழஞ்சு
 கடிந்தெலும் பெலாநூற் றெருபத்தெண்பலமு மாமே.
(௧௧)

என்னவே யிறைச்சிபலம் நூற்றறுபத்தைந்து
 ஏற்றமாம் முப்பலந்தான் மூளையாகும்
பண்ணு தாமரை மொட் டைங்கழஞ்சு
 பார்க்கவே சலப்பையு முழந்தானீனம்

கன்னவே கருவிகள்தான் தொண்ணூற்றாறும்
கணக்காக வுடற்குறிப்புக் காயந்தானும்
தன்னவே தத்துவங்களெல்லாஞ் சொன்னேன்
சார்ந்த நாடியின்றன்மை சாற்றக்கேளே. (ஙா)

தத்துவநிலை முற்றும் :—வேலும்மயிலும்துணை.
குருவேதுணை :—சிவாயநம:.

(கு-பு.)—

இந்தநூல் சித்தர் நூல்களைச் சார்ந்து வைத்தியத்தை நுவல்வதென விளங்குகின்றது. இது வடமொழியிற் கூறிய வைத்தியநூல்களை யாதாரமாகக்கொண்டு இயற்றப் பெற்றதென்பது பாயிரத்தில் நன்குவிளங்கும்; (1,500) ஆயிரத்தைநூறு பாடல்களால் அமைந்ததென்று தெரிகிறது. இப்பிரதியில் முதலில் உள்ள ஒரு சிறிய பிரிவாகிய 'தத்துவநிலை' என்ற பாகம் மாத்திரம் இருக்கின்றது. இப்பாகத்திற்கு நூறுபாடல்களே போலும். இப்பாகத்தில் 'தத்துவநிலை, என்ற பெயர்க்கேற்ப ஞானிகளுக் குணரவேண்டும் உடற்கூற்றினையும்' அதற்குள்ளேயுள்ள பிசாட்சரங்களையும், கர்ப்பத்தில் கரு உத்பத்தியாகும் திறனையும், அது சனித்து நோயுறும்வகையையும், இன்னோரன்னபல வேறு விஷயங்களையும், வியாதிகளுடைய பெயர்களையும், அவைகட்குப் பரிஹாரமாகச் சொல்லப்புகும் மருந்துகளுடைய நாமாக்களையும், உடம்பு, எலும்பு, மூளை, கண், மூக்கு முதலிய பல உறுப்புக்களின் எடையினையும் தெளிவாகக் கூறுகின்றார் இந் நூலாசிரியர்; முதல் முதலில் இப்பூவுலகில் இம்மருத்துவநூல் முறைதான் பரமசிவனுரிடத்தினின்றும் உண்டாய்ப் பார்வதி, நந்தி, தன்வந்திரி, அசுவினிதேவதைகள், அகத்தியர், புலத்தியர், [தேரன்] (சூதர்) பூகிமுனிவர், ஆகிய இவர்கள் வரையிலுமாக முறையாக வந்த வரலாற்றையும் விளக்கி யிருக்கின்றார். இதை இயற்றியவர் இன்னார் எனப் புலப்படவில்லை; தன்வந்திரியார் மருத்துவமுறையைப் பின்பற்றிக் கூறுவதால் "தன்வந்திரி வைத்தியசிந்தாமணி (ஆயிரத்தைந்நூறு)" என இதற்குப் பெயர் வைத்தார்கள் போலும்.

No. 1947. தக்ஷிணமூர்த்தி ஜாலம் ஆறுகாண்டம் ஆயிரத் திருநூறு (சக்திஜாலம்).

DAKSIṆĀMŪRTTI JĀLAM ĀṞUKĀṆḌAM ĀYIRATTIRUNŪṞU (ŚAKTI JĀLAM).

Substance, palm-leaf. Size, $11\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. foll. 166. Pages, 332 Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R 259. This work appears to be known under the name of Śaktijālam also.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் கேட்லாக்கு 259 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இது முழுமையும் உள்ளது; இதற்குத் 'தட்சிணமூர்த்தி ஜாலம்

ஆறுகாண்டம்' 'சக்திஜாலம்' என வாங்குப் பலபெயர்கள் உண்டெனத் தெரிகிறது. ஆயிரத்திருநூறு செய்யுட்களான் அமைந்திருக்கிறது. முக்கியமாய்ச் சாலத்தையும் இடையிடையே வல்லாரைக்கல்பம், மந்திரம், முதலானவற்றையும் விளக்குகின்றது. எழுத்துப்பிழை சொற்பிழைகள் மிகுந்துள்ளன.

No. 1948. தக்ஷிணாமூர்த்தி ஜாலம் ஆறுகாண்டம் ஆயிரத்திரு நூறு.

DAKṢIṆĀMŪRTTI JĀLAM ĀṞUKĀṆḌAM ĀYIRATTIRUNŪṞU.

Substance, palm-leaf. Size, 13½ × 1½ inches. Pages, 212. Lines, 7 and 8 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Same work as the above.

Complete :

(கு-பு.)—

இந்த நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. ஆறு காண்டங்களாய் ஆயிரத்திருநூறு பாடல்களும் இருக்கின்றன. எழுத்துப்பிழை சொற்பிழைகள் மிகுந்துள்ளன.

No. 1949. தக்ஷிணாமூர்த்தி ஞானவடுக்குநிலை போதம்.

DAKṢIṆĀMŪRTTI ÑĀNAVAḌUKKUNILAI BŌDHAM.

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 10 (*a*) of the MS. described under No. D. 1675.

Complete :

Same work as that described under No. R. 949. This work is printed, but there are some stanzas in the manuscript which are not found in the printed edition.

(கு-பு)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 949 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும் : இஃது அச்சிடப்பெற்றுள்ளது. அச்சுப்பிரதியில் இல்லாத சில பாடல்கள் இங்கு இருக்கின்றன. இது முடிந்த பின்னர் 14 (b) ஏடு முதல் 18 (b) வரையிலும் இந்நூலில் உள்ள பாடல்களின் அரும்பதங்களுக்குப் பொருளுரையொன்று அடுக்குநிலை' (போத) விவரணம் என்ற பெயருடன் விளக்கப்பட்டுள்ளது. யோகம் ஞானம் இவையிற்றைக்கூறுவது. முற்றும் உள்ளது.

No. 1950. தக்ஷிணாமூர்த்தி வாக்கியம் பதினாறு.
DAKṢIṆĀMŪRTTI VĀKKIYAM PADINĀṞU.

Pages, 18. Lines, 6 on a page.

Begins on fol. 1 (*a*) of the MS. described under No. D. 1675.

Complete;

Deals with Alchemy, Yōga and Ñāna of the Siddhars. In the heading it is stated that the work is Dakṣiṇāmūrtti vākkiyam padināṟu, but there are actually 20 stanzas in the work.

Beginning ;—

தக்ஷிணாமூர்த்தியார் வாக்கியம் பதினாறு.

வாரான மதியமிர்தம் பீரிட்டோடி
வருமென்று சிறிதுசனம் மாண்டாரையோ
நீரேது நீர்குடிக்க வாயங்கேது
நினைவுகெட்ட தோஷிகளே நிறுத்திப்பார்க்க
கூரான சந்திரனில் நாலோ மிச்சம்
குடிக்கிறதும் பிடிக்கிறது மதுதானையா
சீரான மேல்வாசல் தமருக்குள்ளே
சிங்ஙுவையு நாலங் குலமுஞ் செலுத்துவாயே. (௧)

செலுத்துவது முண்ணாக்கி லண்ணாக்கையா
சென்றேறப் பிடரிவழித் தியானந்தோன்றும்
வலுத்ததடா நாலுமுனக் கமிர்தமாகும்
மௌனமென்ற நிர்விகற்ப வாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும் பனிரண்டி விருத்தியூது
சோடசமாம் சந்திரகலை தேய்ந்துபோச்சு
பலித்ததடா யோகசித்தி ஞானசித்தி
பருவமாய் நாடிவைத்துப் பழக்கம் பண்ணே. (௨)

* * * *

மூடாமல் சி[ரு](றி)து சனம் வேதாந்தங்கள்
முகப்பாடம் பண்ணியல்லோ பிரசங்கித்து
வீடேது உடலேது யோகமேது
வீண்பேச்சாய்ச் சொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறி மலையேறி நதிகளாடிக்
காய்கிழங்கு சருகருந்திக் காமத்தீயாற்
சூடேறி மாண்டார்கள் கோடாகோடி
சரூப முத்தி பெற்றவர்கள் சுருக்கந்தானே. (௩)

* * * *

End:

தாவுள்ளக் குழிதனிலே பீங்கானிட்டுச்
சருகுசுட்ட சுண்ணம்பதின் மேற்கொட்டிக்
காவலிட்டுக் குழிமூடி மூன்றுதிங்கள்
கடந்தெடுத்தால் விளைந்துநிற்குங் கற்பூரந்தானே

பூவெல்லாந் தானெடுத் தண்டநீரிற்
    பொடித்திட்டு ரவியில்வைக்க வுப்பேயாகும்
ஊவல்லோ ஆவுக்கு உயிருமாச்சு
    உத்திபண்ணிப் பார்க்கவும் கற்பூரவுப்பே. (௰௯)

உப்பல்லோ பிண்டத்திற் சேர்ந்தபோது
    உடலுயிரு மொன்றாகித் தண்ணீராச்சு
அப்பல்லோ முப்பூவுக்காணி யாச்சு
    அதைவிட்டாற் கிட்டாது வழலைமார்க்கம்
செப்பல்லோ பத்துக்குள் மூடலாச்சு
    தீட்சணமாய் இந்தநூற் றெளிவோரெம்ப
முப்பொருளு மொன்றாக நின்றசோதி
    மூலவட்டக் குருவாலே மொழிதான் முற்றே. (உ௰)
        தக்ஷிணாமூர்த்தி கிருபை யுண்டாகவும்.

(கு-பு.)—

இது சித்தர் நூலைச்சார்ந்து யோகம் ஞானம் இரஸவாதம் முதலிய வற்றை நுவல்கின்றது; தலையேட்டில் 'தட்சிணாமூர்த்திவாக்கியம் பதினாறு' என்றிருப்பினும் இருபது செய்யுட்கள் இருக்கின்றன. முற்றும் உள்ளது.

No. 1951. திருமூலதேவர் வாலை பஞ்சாக்ஷர விளக்கம் இருபது.

TIRUMŪLADĒVAR VĀLAI PAÑCĀKṢARA VIḶAKKAM IRUPADU.

Pages, 6. Lines, 6 on a page.

Begins on fol. 35 (*a*) of the MS. described under No. D. 1378.

Seems to be complete

A treatise on Mantra-śāstra explaining the Pañcākṣara relating to the Goddess Bālā, by whose due worship it is considered possible to become a Siddha.

Beginning :—

வாலை பஞ்சாக்ஷர விளக்கம் ; திருமூலதேவர் அருளியது ;—

ஆதிகடந்த வரும் பொருளும் மந்திரம்
    சோதி யுணர்ந்த வற்......ச மதாகப் ?
பாதி யுணர்ந்த பராபர மூலத்தில்
    வே(த)(ழ) முகமாம் விநாயகன் காப்பாம். (௧)

ஐயுங் கிலியும் அரன்வடிவாகும்
ஐயுங் கிலியும் ஆத்தாளுமப்பனும்
ஐயுங் கிலியும் ஆன பராபரம்
ஐயுங் கிலியும் அகண்டாதி ரூபமே

சவ்வும் பராபரை தன்வடி வாயிடும்
சவ்வும் பராபரை சகல வுருவமாம்
சவ்வும் பராபரை தானான யோகமாம்
சவ்வும் பராபரை சச்சிதா னந்தமே. (அ)

End:—

நகாரமாம் வாசியை நாட்டுநீர் மோகனம்
மகாரமாம் வாசியை வைத்திடு மூலத்தில்
ஒகாரமா மஞ்சையும் இயங்கிய வாசியும் ?
அகாரமாய்க் கட்ட வானந்த வடிவதே. (௰௧)

வடிவது வகாரம் வசிமநய வென
அடியது மூலம் அரனது ருத்திரன்
திருவடி தானவன் சேர்ந்து பயிரிட
உருவது வகாரம் உடல் சக்கிரமே. (௨௰)

சக்கிர வாலையைச் சார்ந்த அகாரம்
சக்கிர வாலையைச் சார்ந்த உகாரம்
சக்கிர விகாரந் தானமே பரைதான்
சக்கிர உகாரஞ் சாத்து வ[ளு](ம் நா)மே (௨௧)

நாமேநாம் பூசிக்க நயந்த கருமமாம்
நாமெனும் பூசிக்க நாதாந்தங் கண்டிடும்
நாமெனும் பூசிக்க நல்வாத மாயிடும்
நாமெனும் பூசிக்க நலங்கொண்டசித்தியே. (௨௨)

(கு-பு).—

இந்நூல் சித்தர் நூல்களைச் சார்ந்து மந்திர விஷயமானது: இதிற் சொல்லி யபடி வாலையைப் பூசித்து வழிபட்டால் சித்தர்களாக ஆவார்கள்போலும் ; இதில் வாலைக்குரிய பஞ்சாட்சரங்களையும், அவைபிற்றின் பொருள்களையும், ஐயும் கிலியும் கிரியும் என்றவைகளையும் விளக்கியிருப்பதால் இந்நூலுக்கு இப்பெயர் காரணக்குறியாக வமைந்திருக்கின்றது. முதல் எட்டில் 'திருமூல தேவர் அருளியது' என்றிருப்பதால் அவரே நூலாசிரியராவர். 34-வது எட்டில் வாலை புவனை திரிபுரை என்ற தேவதையின் தியானமாகிய பாடல் கள் மூன்று 'நவராத்திரி பூசைதன்னில் சிவகாமி நடுவணையிற் தரிசிப்பாயே' என்ற மகுடத்துடன் காணப்பெறுகின்றன. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. இருபத்திரண்டு பாடல் இருக்கின்றன. முற்றுப் பெற்றதென்றே தோற்று கிறது.

No. 1952. திருமூலர் வைத்தியம் (திருமந்திரம்).
TIRUMŪLAR VAIDDIYAM (TIRUMANTIRAM).

Substance, palm-leaf. Size, 14 × 1 inches. Pages, 19. Lines, 7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 126 (*a*). The other works herein are Vākaṭam 1–a, Akattiyattiraṭṭu Vākaṭam136 (*a*).

Complete in 112 stanzas.

This is a portion of " Tirumantiram," of Tirumūlar dealing with medicine.

Beginning:

திருமூல சுவாமிகள் அருளிச்செய்த திருமந்திரம்.

ஐந்நூற்றிரட்டில் ? வைத்திய நூற்றிரட்டு.

உன்னிய கர்ப்பக் குழியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த பிரிதிவி
வன்னியும் வாயு மாயுறுஞ் சுக்கிலம்
மன்னிச் சமனாய் வளர்க்கு முதகமே. (க)

உதக முதிர முறுங்கனல் வாயுவால்
சிதகுற வங்கங்கள் செய்து முடித்திடும்
பதகுறு ரோமமய காந்ததசைபத்தி
நிதகுறு வொன்பது வாசலு நீங்குமே. (உ)

End:

பொடியாக நோய்போகப் புகழ் சொன்ன றென்னந்தி
மடிவான சூத மகத்தான தங்கம்
பிடியான கெந்தகப் பேருன சத்தும்
குடியாய்ச் செந்தூரித்து க்குமட்டியே தின்றிடே (௱௰க)
தின்றிட நோய்கள் திசை கெட்டே யோடிடும்
பன்றிட வாயுவும் பக்கத்திற் சேராது
தன்றிட லோகர்க்குத் தானகச் செய்முறை
மன்றினிற் சித்தியா மகாவியாதி போகுமே. (௱௰உ)

முற்றும்.

Colophon:

திருமூலர் சுவாமியார் சொலலிய திருமந்திரம் ஐந்நூற்றிரட்டில்
வைத்தியம் நூற்றிரட்டு முற்றும்.

(கு-பு.)—

இது திருமூலநாயனர் இயற்றிய 'திருமந்திரம்' என்னும் நூலின் ஒரு பிரிவென்று தெரிகிறது. வைத்திய விஷயமானது. நூற்றுப்பன்னிரண்டு செய்யுட்களைப் பெற்றிருக்கிறது. இந்நூலின் முகத்திலும் இறுதியிலும் வைத்திய நூற்றிரட்டு என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் பிழைகள் பொதிந்துள்ளன. ஆகையின் திருத்தமான பாடங்களை உணர இயலவில்லை.

No. 1953. திருமூலர் வைத்தியம்.

TIRUMŪLAR VAIDDIYAM.

Substance, palm-leaf. Size, 16 $\frac{1}{8}$ × 1$\frac{1}{8}$ inches. Pages, 5. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1 (a) of the MS. described under No. D. 167. Incomplete.

Same work as the above.

(து-பு.)—

இது முன் பிரதி போன்றது. பதின்மூன்று செய்யுட்களே உளவாதலின் முற்றுப்பெறவில்லை.

No. 1954. திருமூலர் வைத்தியமுறை (வசனம்).
TIRUMŪLAR VAIDDIYAMUṚAI (VACANAM)

Substance, palm-leaf. Size, 11¾ × 1 inches. Pages, 124. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Deals with the description of various kinds of diseases and the method of preparing suitable medicines for curing those diseases. This work is written in prose, and is probably based on the work of Tirumūlar.

Beginning.

பீனிச விரணத்துக்கு எண்ணெய் :

அவிரியிலைச்சாறு, (ஞ) (நா)ய்வேளைச்சாறு, எருக்கம் பழுப்புச்சாறு, நல்லெண்ணெய் ஆக (விவைகளிலே) உழக்குக் கலந்து அடுப்பிலே (ற்றிக்) கொதிக்கச் (செய்தே) அதிலே இரஸசெந்தூரம், மயில்துத்தம், பால்துத்தம் (வகைக்கு) விராகன் எடை. (க) ஒன்று பொடி பண்ணிப்போட்டுப் பதத்திலே [யிருக்கச்சே] (இறக்கச்செய்தே) பசுவின்வெண்ணெய் எலிமிச்சங்காயளவு போட்டு இறக்கவும்;—மூக்கிலே நசியம் பண்ணவும்; கபாலச்சூலை பீனிசம் தீரும்.

பறங்கிச் சக்கைச் சூரணம்:—பறங்கிச்சக்கை வீசை (கொண்டு) கொட்டைப் பாக்குப்போலே சீவிக்கொண்டு அதையொரு குடுவையிலே போட்டுக்கொண்டு குடுவைக்குச் சீலைகட்டி . . . .
. . . .

End :

குளுமைக்குத் தலைநோவுக்கு நசியம்:

சுக்[கு] (கை) வெந்நீர்விட்டு உரைத்துப் பனவெட்டுக்கூட இழைத்துப் பஞ்சில் ஊட்டி நசியம் பண்ணவும், தலையிடிப்பு தீரும்.

. . . . சுரகவி :

சிறமேற் சிலேஷ்ம சுரஞ் செய்யும்
குணங்கள் தம்மை நீர்கேளீர்
சுரமே யுழலைகுளிர் வெதுப்பாஞ்
சுவாச முடனே முகங்கறுப்பாம்
அரோசிக மாகக்கண் வெளுக்கும்
அறவே தாகம் மிகப்போற்றும்
இரு[ம்ப](ம) லு மீளையுந் தலைவலியும்
இரண்டு நாசியில் நீர்விழுமே.

வியாதிக்கு விபூதிமந்திரம்—ஓம் இந்த (விபூதி), ஓம் வச்சிமல்லாயுதம், ஓம் இந்த விபூதி ஓம் காலாயுதம், ஓம் இந்த விபூதி மாலாயுதம், ஓம் இந்த விபூதி சூலாயுதம், ஓம் இந்த விபூதி [ஞு](நா)லாயுதம், ஓம் இந்த விபூதி என் கையிலுல் பூச ஓம் (நா)லாயுதம் பட்டாப்போலே இந்த விபூதி யிட்டவுடனே சகல நோய்களும் சர்வ தோஷங்களும்! [ஞு](நா)சம் நாசம் நாசனமாய்ப் போக சுவாகா: ஓம் (ஞு)(நா)ம், ஓம்:

(ந-பு.)—

இந் நூல் வைத்திய விஷயமாய்ப் பலவகை நோய்களையும், அவைகளை நீக்கற்குரிய மருந்துகள் சூரணம், இலேகியம், தைலம், கலிக்கம், நசியம் கஷாயங்கள், இன்னோரன்ன பலவற்றையும் வசன நடையால் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இதற்குத் 'திருமூலர் வைத்தியம்' எனப்பெயர் வைத்த தற்குக் காரணம், அச்சித்தர் பெரியார் கூறிய வைத்திய முறையைப் பின் பற்றி ஒருவர் வசனத்தால் இயற்றியதே போலும். இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை: நூல் முடிவிலுள்ள செய்யுள் இன்ன நூலைச் சார்ந்த தென்று விளங்கவில்லை: ஆங்காங்குப் பிழைகளிருப்பினும் செப்பஞ்செய்து எழுதுவித்துக்கொண்டால் மிகவும் உபயோகமாகும்: முற்றுமுள்ளதென்று தோன்றுகிறது: இறுதியில் ஓர் மந்திரம் உளது.

No. 1955. துவாதச லேகியம் (கொங்கணர் கற்பம் நூறு).

DUVĀDAŚA LĒHIYAM (KOṄGAṆAR KAṚPAM NŪṚU).

Pages, 12. Lines, 5 on a page.

Complete

Begins on fol. 39 (a) of the MS. described under No. D. 1898. Complete as found in stanzas 9 to 25 of a big work entitled Koṅgaṇarkaṛpam "nūṛu." Deals with the preparation of medicines for curing twelve kinds of diseases.

Beginning :

கொங்கணர் கற்பம் நூறிலே துவாதச லேகியம் . பாட்டு:

செய்கையிலே சித்தரெல்லாம் இப்படிச் செய்வார்
சிறப்பாக வென்னுடைய பிள்ளைகள்தான் செய்வார்
மெய்யெனவே யிவளாலே சிவயோகத்தை
மேவுவார் பூரகமாய் ரேசித்தே தான்
செய்யோக மிதுவாச்சுக் கும்பித் தோங்கித்
தம்பனமாங் குளிகைகொண்டு தாயைப்போற்றிப்
பொய்யெனவே போகாமல் சோடசமாய்த்தீர்ந்து

பூட்டுவாய் மாத்திரைதா னேழாய்த்தானே (சு)
வரிசையாய்ச் சொல்லுகிறேன் ஆதிதொட்டு
மகத்தான கற்பங்கள் கொள்ள வேண்டிப்
பரிசமாய்வாத பித்தசிலேட்டு மந்தான்
பேய்க்கூத்தாய்ப் பண்ணுமல் சூடேறுமல்
பரிசத்தே யுட்டிணங்கள் பாய்ந்தேறுமல்
பண்பான லேகியமொன்று சொல்வேன் கேளு
உரிசைபெறச் செவ்விளநீர் படிதானெட்டு
உத்தமனே கத்தாழஞ் சோறுதானே (௰௧)

* * * * *

மாட்டுவாய் துவாதச லேகியஞ்சொல்வேன்
மக்களே சீனிபலம் மூன்றுபத்து
நீட்டுவாய் பனைவெல்லம் பலந்தான்பத்து
செங்கருப்பம் வெல்லமது பலந்தான்பத்து
மூட்டுவாய் கரைத்தேதான் அயத்தாளிக்குள்
மோகமாய் வடிகட்டி யடுப்பிலேற்றி
நாட்டுவாய் குழம்பான பாகு சேரில்
நலமான வமிர்தசஞ் சேர்தானே (௰௪)

End:

அணுக வொட்டாவனுபோகப் பாகந்தன்னை
யப்பனே மனமெங்கும் பாயமாட்டா
தணுகவொட்டா தென்னசொல்வே னுவாசைக்குள்
ளாச்சரியம் லேகியத்தி லருமைமெத்த
வணுகவொட்டா தெமனை வெட்டிச்சாடும்
அயக்காந்த செந்தூரலேகியத்தைக் கொள்ள
வணுகவொட்டா தொன்றையுந்தான் மனமொன்றும்
அப்பனே யயக்காந்தஞ் சொல்லக்கேளே. (உரு)

(கு-பு.)

'துவாதசலேகியம்' என்னும் இச்சிறுபகுதி, 'கொங்கணர் இயற்றிய கற்பம் நூறு' என்ற நூலின் முதற்பகுதியென வறியகிடக்கிறது. (க) ஆம் பாடல் முதல். (உரு)ஆம்-பாடல் வரையிலும் இருக்கிறது. இது சித்தராதற் கிடையில் உண்டாகும் பல பிணிகளை நீக்கற்குரிய லேகியவகைகளை கூறுவதென விளங்குகிறது. இப்பாகத்திலுள்ள லேகியம் பனிரண்டு வகை பிணிகளைப் போக்குவதால் இப்பெயர் பெற்றதுபோலும். அந்தாதித்தொடையாக அமைந்துள்ளது.

No. 1956. நயன வைத்திய விதி.

NAYANA VAIDDIYA VIDHI.

Pages, 10. Lines, 8 on a page.

Begins on fol. 37 (a) of the MS. described under No. D.1979.

Similar to the work described under R. No. 413 of the Triennial Catalogue of Mss., Vol. IV Part 2.

Beginning:

நயனவிதி.

மாதுமை பாகன்சொன்ன மாமறை முதலை யாய்ந்து
தீதுகள் வாராதென்று திருவுளத் துணர்ந்தபோது
ஆதிமா முனிதான் சொன்னவாயுரு வெதத்துள்ளே
நாதனுர் தெரிந்துரைத்த நயனத்தின் விதியைச்சொல்வாம். (க)

இந்துவை யொத்தவண்ணம் இயலது நயனங்கண்டீர்
முந்திய வொளியினுள்ளே யுன்முகம் விளங்குமாகில்
அந்தர வொளியாய்நிற்கில் அதனில் நோயில்லையென்று
செந்திருவுமையாள்கேட்கச் சிவனிது அருளிச்செய்தார். (உ)

வெள்ளையிற் சிகப்பதன்றி விளங்குதற் படிகம்போன்று
தென்ளிய சோதிதன்னிற் றெளிதர வண்ணமாகும்
உள்ளொளி பெற்றதங்கே யுன்முகம் விளங்குமாகில்
ஒள்ளிய நயனமாகும் ஒப்பிது கண்டிடாயே. (ங)

உயர்ந்ததோர் நயனந்தன்னி லுறும்பல வியாதிகேளிர்
மயங்கிமெய் யிருளாயுற்று வருந்திடுந் தோஷத்தாலும்
வியந்திட மேவிநிற்கும் விரவிய மருந்துதானும்
தயங்கிடக் கிரிகைசெய்யுந் தானது செப்பலுற்றேன். (ச)

கண்ணது நோகவேண்டுங் காரணமே தோவென்னில்
நண்ணிய புனல்நீர்தன்னை நலமிகப் பருகையாலும்
எண்ணிய மயிரிலங்கம் பிசைந்தெண்ணெய் போகாத்தாலும்
பெண்ணிடை மருவ லாலும் பெருத்திடும் விழிக்குள் நோயே (ரு)

End:

மந்திரம்:

இந்திரன் தோட்டத்திற் பூவில்லை
சந்திரன் தோட்டத்திற் பூவில்லை
கண்ணி லெழுந்தபூவே நீ நீரில்
இறங்கி விழுந்துபோகச் சுவாகா. (ருஅ)

(கு-பு.)—

இந்த நூல், கண்வைத்தியத்தைச் சார்ந்து கண்ணில் உண்டாகும் வியாதிகளுக்குக் காரணத்தையும் அவைவயிற்றுக்குரிய பல்வேறு மருந்துகளையும் நன்கு (ருஅ) பாடல்களால் உணர்த்துகின்றது. செய்யுட்களில் பல வெழுத்துப்பிழைகள் உள. இப்பாடல்கள் இன்னநூலில் வந்துள்ளன வெனத்தெரியவில்லை. இறுதியில் வசனத்தான் கண்வியாதி தொண்ணூறுக்கு (கூ)ம் நீங்கும்வகை கூறப்பெற்றுள்ளது. இறுதியில் கண்ணிற் பூ நீங்கற்குரிய ஒரு மந்திரம் தமிழில் உள்ளது. ஏடுகள் மிகச்சிதைந்துள இங்கு (ருஅ) ஐம்பத்தெட்டு பாடல்கள் உளவாயினும் இந்நூல் எத்துணைப் பாடல் கொண்டது என்ற விவரம் ஒன்றுந்தெரியவில்லை.

No. 1957. பதார்த்த குண சிந்தாமணி.

PADĀRTTHA GUṆA CINTĀMAṆI.

Substance, palm-leaf. Size, 9 × 1¼ inches. Pages, 358. Lines, 6–10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are.—Vaidyanūl 130-a, Tailavahai (different kinds of medicated oils) 166-a.

Contains 780 stanzas.

A very useful treatise describing the medicinal properties of various substances. Although this work has been printed, there are some stanzas in this manuscript which are not found in the printed edition.

Beginning:

மண்ணின் குணம்; தண்ணீர் குணம்.

பூச விரணம் பொருமல் போம் போனமுதலோ
டாசையுள்ள பண்டமதி லுண்டாம்—நேசமதாய்த்
தின்டிறபாண்டு சிரங்குமிகத் தேன்மொழியே!
கொண்டறிந்து மண் குணத்தைக் கூறு (௧)

கோசமதுந்தந்தங் கழலாது மேகமுதல்
வீசுமனல் தணிக்கும் வீரியமாம்—வாசமாம்
உந்திவளர்குன்ம மொழிக்குங் குளிர்[ந்த]தண்ணீர்
தந்தகுணமின்னிடையிற் சாற்று (௨)

மேகக்கடுப்புமிகவுண்டாம் மெய்யெங்குந்
தாகந்தணவிழைப்பு சாந்தமாம்—போகத்தின்
புண்ணேயக்கும் பொல்லாது பூவையரேகாற்று
கண்ணேய்க்கு மாகாது காண் (௩)

End:

கொடிமுந்திரிக்காய குணம்

வாந்தியடக்கும் வாயினரோசிகமும் போம்
சாந்தமாய்ப் பித்தந்தணியுமே—போந்த
கடி[பிணி] (புளிப்)புத்துதவர்ப்பாற் கட்டுங்கழிச்சல்
கொடிமுந்திரிக்காயின் குணம் (௭௱௮௰௩)

கலைமான்கொம்புக் தூள்.

மார்பிற்பலன் கொடுக்கும் வாதபித்தசேத்துமத்தைச்
சீருடனேதான் தணிக்கும் திண்ணமாய்—வார்பூண்
முலைமானே நல்லுணவா மூப்பிளமையாக்குங்
கலைமானின் கொம்பின்றூள் (௭௱௮௰௪)

(ரு-பு.) —

பதார்த்தகுணசிந்தாமணி என்னும் இந்நூல் வைத்தியநூலைச் சார்ந்து உலகிலுள்ள பிருதவியப்பு தேயு வாயு ஆகாயம் முதலியவற்றின் குணங்களையும், அவற்றின்விகாரங்களாய காய் கனி கிழங்கு வேர் செடி கொடி விருட்

சம் முதலான தாவரப்பொருட்களுடைய குணங்களையும், பசு முதலான எல்லா வகைஜங்கமப் பிராணிகளுடைய குணங்களையும் விளக்கமாகக் கூறுகின்றது; இங்ஙனம் இது, எல்லாவகை பதார்த்தங்களுடைய குணகுணங்களைச் செவ்விதின் விளக்குவதால் இந்நூலுக்கு இக்குறி காரணக் குறியாய் அமைந்துள்ளது: இந்நூல், ஒரு குறிப்புரையுடன் அச்சிட்டிருப்பினும் அதில் இல்லாத பாடல்களும், பாட பேதங்களுங் காணப்பெறுவதால் மருத்துவநூலாராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமானது. 784 பாடல்களே இப்பிரதியில் இருக்கின்றன.

No. 1958. பதார்த்த குண சிந்தாமணி.

PADĀRTTHA GUṆA CINTĀMAṆI.

Pages, 30. Lines, 8 on a page.

Incomplete.

Begins on fol. 16a of the MS. described under No. D. 1870.

Similar to the above.

Some stanzas not found in the printed edition are found in this manuscript.

Beginning :

பதார்த்த குணசிந்தாமணி.

ஆனதோர் பதார்த்தவர்க்கம் அருந்தியபலவுக்கெல்லாம்
தேனுடனமிர்தம் போலத் தெளிவுடன் குணங்கள்சொல்ல
வானமும் புவியுமற்ற வத்துவைப் படைத்த சோதி
தாளை வரடியில்வீழ்ந்து சாற்றியகவிகள்தானே (௧)

காரரிசி மந்தங் கனக்கவுடல் பருக்கும்
பாரியவாய்வுடலிற் பாரிக்குஞ்—சீரியரே
காப்பானுமுண்டாகுங்காரிசை[மு] (க)யீர் கேளீர்
இரப்பார்க்குதவுமிது (௧)

பிசானவரிசி நல்லபலனுண்டாம் பின்னும்
அசன மருந்தவதுருசியாம்—பிசகாத
சம்பாவரிசி யெல்லாம் சாதம் நன்றுமிருக்கும்
உண்பார்க்குச் சம்பாவுகப்பு (௨)

கீழ்க்காய் நெல்லியின் குணம்வருமாறு:—

மெய்யும் விழியுமஞ்சளித்தால்
மிகுத்த மோகம் நீர்க்கடுப்பு
அய்யம்வயிறுதான் கடுத்தல்
அசத்தியுறக்கந்தனையகற்றும்
பொய்யேயல்ல கழிச்சல் தீர்க்கும்
போதச்சரீரம் புளகிதமாம்
மெய்சேர்விழியே கீழ்க்காயின்
நெல்லிவகுக்குங் குணங்களி[னு] (வை) [தானே] (௮௨)

End.

பஞ்சமூலம் : பத்திரிமூன்று.

சாதியைந்து செய்குணத்தைச்சாற்றக்கேள் தாழ்குழலே
வாதம் பலகடுப்பை மாற்றுவிக்கும்—ஓதங்கால்
நீர்த்தோஷம் கண்ணோய்கள் நீக்குஞ் சுரம்போம்
பாருமுட்டினங்களறும்பார் (௱௬௮)
பத்திரிகளின் மூன்றின் பயிலுங்குணங் கேளீர்
நித்தமலக்கடுப்பை நீக்கிவிடும்—சுத்தமாய்த்
தாகமறுக்குஞ் சாராதவாந்தி விக்கல்
கோகிலமேயிக்குணத்தைக் கூறு (௱௬௯)

சிவமயம்: முற்றும். சிவசுத்த கணபதி திருவடி சரணம்.

(கு-பு.)—

இந்நூல் முன்பிரதிபோன்று எல்லாப்பதார்த்தங்களுடைய நல்ல குணம் தீயகுணம் இவைகளைச் செவ்விதாக வுணர்த்துகின்றது. இயற்றியவர் இன்னாரெனத்துணிய வியலவில்லை. (௱௬௯) 169 பாடல்கள் இருக்கின்றன. இதிலும் அச்சுப்பிரதியில் இல்லாத பாடல்களேயுள்ளன.

No. 1959. போகநாயனார் எழுநூற்றறுபத்திரண்டு.

BHŌGANĀYANĀR ELUNŪṚṚAṚUPATTIRAṆḌU.

Substance, palm-leaf. Size $13\frac{3}{8} \times 1\frac{1}{2}$ inches. Pages, 200. Lines, 12 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under R. No. 278 (f) of the Tami Triennial Catalogue Vol. II.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 278 (f) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும்; இது இரஸவாத வைத்தியங்களைக் கூறுவதென விளங்குகின்றது; இதில் உப்புக்கட்டு, காரச்சுண்ணம், இந்துப்புச் சுண்ணம. பூரம் வெடியுப்புச்சயநீர், சவுக்காரச்சுண்ணம், உப்புச்செந்தூரம், உப்புமெழுகு, அண்டத்தைலமுறை, நாகக்கட்டு, நாகச்செந்தூரம், தங்கச்செந்தூரம் இன்னொரன்ன பலவகை மருந்துகளை இயற்றும்முறைகள் விளக்கப்பட்டுள்ளன. எழுநூற்றறுபத்திரண்டு பாடல்களும் இப்பிரதியில் உள்ளன எடுகள்பல சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் இருப்பதால் தெளிவான பாடங்கள் புலப்படவில்லை.

No. 1960. போகநாயனார் எழுநூற்று அறுபத்திரண்டு.

BHŌGANĀYANĀR ELUNŪṚṚU AṚUPATTIRAṆḌU.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 17. Lines, 7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றுள்ளது. இந்தப் பிரதியில் இந்நூலின் முதல் அறுபத்தேழு பாடல்களே உள்ளன. பிழையுடன் காணப்படுகின்றது.

No. 1961. போகநாயனர் எழுநூற்று அறுபத்திரண்டு.
BHŌGANĀYANĀR ELUNŪṚṚUAṚUPATTIRAṆḌU.

Pages, 94. Lines, 9 on a page.

Incomplete.

Begins on fol. 1a. of the Ms. described under No. D. 1945.

Same work as the above.

(கு-பு.)—

இதுவும் முன் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் பாடல்களில் முந்நூற்றைம்பதே உள்ளன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள்ளன. பிழையுள்ளது.

No. 1962. போகநாயனர் வழலைச்சூத்திர வெண்பா விருபது.
BHŌGANĀYANĀR VAḺALAICCŪTTIRA VEṆPĀ VIRUPADU.

Pages, 4. Lines, 8 on a page.

Complete.

Begins on fol. 1a. of the Ms. described under No. D. 1564.

Same work as that described under No. R. 197. (i) of the Tamil Triennial Catalogue. Vol. II.

(கு-பு.)—

இச் சிறு நூல் மூவருடக் காடலாக்கு 197 (i) நம்பரில் வந்துள்ள 'போகநாயனர் வெண்பா' என்றநூலே யாகும்; இந்நூலின் இருபது செய்யுட்களும் இப் பிரதியில் இருக்கின்றன. முதலில் "நரி விஷமுங் கந்தகமு நிர்மலமு மொன்முக்கிக், குழியுங் குணமுங் குறித்தே—சிறிய, புடம் போட்டெடுத்துப் பொருளாகக் கொண்டு, திடம்போட்டு விடாதே"? என்ற செய்யுள் ஒன்று அப் பிரதியில் இல்லாதது இருக்கின்றது. எழுத்துப் பிழைகள் உள. ஏடுகள் நுனியில் சிறிது ஒடிந்துள. இது பெரும்பாலும் இரசவாதத்தைச் சார்ந்ததென விளங்குகிறது.

No. 1963. போகர் வாலை பூசாவிதி பரிபூரணம்.
BHŌGAR VĀLAI PŪJĀVIDHI PARIPŪRAṆAM.

Pages, 35. Lines, 6 on a page.

Begins on fol. 19a. of the MS. described under No. D. 1676.—

Complete.

Same work as that described under R. No. 277. (e.) of the Tamil Triennial Catalogue Vol. II.

(த-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 277, (e.) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. நாற்பத்து நான்கு பாடல்களாலாகியது. முற்றும் உள்ளது. இப்பிரதி நன்று யிருக்கிறது. எழுத்துப் பிழை முதலியன இல்லாமல் இருக்கிறது.

No, 1964. போகர் வாலை பூசாவிதி பரிபூரணம்.

BHŌGAR VĀLAI PŪJĀVIDHI PARIPŪRAṆAM.

Pages, 44. Lines, 5 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. D, 1898.

Complete.

Same work as that described under No. 277 (e.) of the Tamil Triennial Catalogue of MSS. Vol. II.

(த-பு.)—

இதுவும் மூவருடக் காடலாக்கு 277. (e.) நம்பர் பிரதியில் வந்துள்ளதே யாகும். முற்றும் உள்ளது. இதில் எழுத்துப் பிழை முதலியன காணப்படு கின்றன.

No, 1965. மகா கோடா குளிகை.

MAHĀ KŌṬĀ KUḶIKAI.

Pages, 10. Lines, 8 on a page.

Begins on fol. 174 *a*. of the MS. described under No. D. 250. Vol. I.

Deals with the preparation of a medical pill called "Mahākōṭā kuḷikai," and with the method of administering it to patients suffering from different kinds of diseases.

Beginning:

சாதிலிங்க முக்கழஞ்சு சத்திரிநாபி முக்கழஞ்சு
மாதேகெந்த முக்கழஞ்சு மற்றுந்திப்பிலியைங்கழஞ்சு
போதநரி விஷமறுகழஞ்சும் பொன்னரிதாரமெழுகழஞ்சு
மேதசுக்கு மெண்கழஞ்சு மிளகுமொன்பதுதான் கழஞ்சே (க)

* * * *

மூலந்தனக்குக் குளிகையிடு மூதிர்ந்த நெல்லிக்காய்ச்சாற்றில்
சாலெரிகுன்ம முள்ளோர்க்குச் சர்க்கரைச்சீரகப் பொடியிலிடு
கோலவழி குன்மமுள்ளோர்க்குக் குளிகையிஞ்சிச் சாற்றிலிடு
ஆலவிஷ நீர்க் கோவைக்கு அவிறிச்சாற்றில் உண்டையிடு (...)

End:

கருது மருந்திட்டுள்ளோர்க்குக் கரந்தைச்சாற்றிற் குளிகையிடு
பொருது மரணக்கட்டுள்ளோர்க்குப் பூவரசிலைகருப்பட்டியிற்கொள்
அரிதாமேன் மூச்சுள்ளோர்க்கு ஆடாதோடை நொச்சியிலை
பரிதாம[பு](பி)ட்டுப் போலவிந்துப் பிழிந்தே யுண்டையிடத்தீரும்.
(உஉ)

செறியும் வாயு வுள்ளோர்க்குத் திப்பிலியி னுடன் மூலந்தான்
உரியவிரண்டு முக்கழஞ்சு உண்டைமூன்றுங் கூட்டியிடு
வெறியாம்போக மவுளியிலே வெற்றிலைச் சுருளிப்பாலை விதை
அரியகுளிகைதனைவைத்து அப்போகொடுக்கவே மோகிப்பன்
தெரியும்வா[னூ](னி)ல்யோகம்போநிக்தும்மகாகோடகுளிகையிதே?.
(உங)

மகாகோட குளிகை முற்றும்--சிவமயம்.

(கு-பு.)—

இந்நூல், வைத்தியத்தைச் சார்ந்து 'மகாகோட குளிகை' எனும் ஓர் அரிய பெரிய மாத்திரையைச் செய்யும் முறையை விளக்கி ஷை மாத்திரையை இன்ன வியாதிகளுக்கு இன்னன்ன அனுபானங்களில் கொடுத்தால் அந்நோய்கள் தீரும் என்று கூறிப்போருவது; இது, மிகவும் அருமையானதென்று தெரிகிறது. இருபத்து மூன்று பாடல்களால் அமைந்து முற்றுப் பெற்றுள்ளது. பிழைகள் உள. நூலாசிரியர் இன்னார் என்று விளங்கவில்லை: ஒரு நூலினது சிறு பகுதியாய் இருக்கலாம் என்று தோற்றுகிறது.

No. 1966. மச்சமுனி நிகண்டு.

MACCAMUNI NIGHAṆṬU.

Pages, 18. Lines, 9 on a page.

Begins on fol. 111 *a* of the Ms. described under No. D. 1880.

Complete in 100 stanzas.

A treatise dealing with medicine and alchemy; by Maccamuni The title given to this work is apparently due to the fact that in the course of this work the synonymous names of certain substances are given.

Beginning:

முப்பாமுக்கப்பால் முடிந்த முதலெந்நாளுந்
தப்பாமல் பூரத்ணத்தே சாருவாய்—எப்போதும்
வேகாச் சடலை முத்தி வேண்டுங்கோள் முக்கோணஞ்
சாகார் கணேசனருள்தான். (க)

பூரணத் தெய்வம் புகழ்பெற்ற தெய்வம்
காரணத் தெய்வங் கருத்தஞ்சு? பூதம்

வாரணத் தெய்வம் வழங்கு மாமூலத்தான்
தாரணைத் தொண்ணூற்றா றுஞ்சடலற்கே. (௨)
சடலத்தினுள்ளே தனித்த சிவனென்று
உடலுக்குறுதியா யோடுந்தசவாயு
இடலமாம்புரியட்டஞ் சீரணித்தே போகிற்
கடலே கதிகாண் பின்னென்றுங் காணேமே. (௩)

* * * *

நாதமாஞ் சத்தம் நல்ல புறவாயு
நாதமாஞ் சுண்ணம் நல்ல சிவமாகும்
நாதமாம் பூரணம் நந்தியாங்காரந்தான்
நாதமாமூலத்தெழுந்த நடனமே. (௰

End:

உரைத்திடு மந்திரம் மூலமவுனமாம்
உரைத்திடு நந்தி வாசியில் வாலையாம்
உரைத்திடக் கேளு வுறுகின்றதவ்வை
உரைத்திடப் பிராணன் பிரதிட்டை யோதிடே. (௱௪)

* * * *

ஓதிடவாலை யுள்ளஞ் செழுத்தையும்
[அ](ஆ)தியுமந்தமுமாம் நடுப்பூரணம்
சோதியில் நாதன் துரிய மிறந்திட
நீதியாயின்பம் நிலைத்திடு முத்தியே. (௱௫)

Colophon:

மச்சமுனியார் நிகண்டு நூறு முற்றும் :
குருவேதுணை : தேவிசகாயம்.

கு.பு.—

இந்நூல் சித்தர்நூல்களைச்சார்ந்து இரஸவாத வைத்திய விடயங்களை நுவல்வது. ஆங்காங்குச் சில பெயர்களுக்குப் பரியாயப்பெயரும் பொருளுங் கூறுவதால் நிகண்டெனப்பெயர் பெறுவதாயிற்றுப்போலும். நூறு செய்யுட்களால் அமையப்பெற்றது. முற்றுமிருக்கிறது. மச்சமுனிவர் இயற்றியதாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

No. 1967. மச்சமுனியார் பெருநூல் எண்ணூறு.

MACCAMUNIYĀR PERUNŪL EṆṆŪṞU.

Substance, palm-leaf. Size, $11\frac{5}{8} \times 1\frac{1}{2}$ inches. Pages, 284. Lines, 8—10 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete in 800 stanzas.

A treatise dealing with alchemy, with the eight magical arts or enchantments, and mostly with medicine.

Beginning:

ஹரி: ஓம் : நன்றாக. மச்சமுனியார் பெருநூல் எண்ணூறு.—

ஆதியந்த வேதவித்தாரத்தை யெந்தன்
ஆதி குரு வென்றபொருள் பிடிநாக்கீசர்
சோதிபர வெளியான சொரூபாநந்தம்
சச்சடாதார பீடம்துரியாதீதம்
ஓதும்பிரணவ சிரீங்காரபீட
முன்மனைக்கே வெகுநூலாகரத்தைப்
பாதிசார் சாரூப்ய விந்துநாதம்
பரபிரம்ம மூலகணேசன் காப்பாமே. (௧)

மூலரோடு பதினெண் பேர்பரநாதாக்கள்
மூத்திபெற்ற சப்தரிஷி தெட்சணமம்
ஞாலமிசை தெரிந்துரைத்தபாடல் தேர்ந்து
ஞானமொழி வாதவ [ளி](ழி) சகச்சாலங்கள்
தூலமது சூட்சுமமது மவுனபூசை
சூட்டிவைத்த வ[ள] (ழ) லை சவுக்காரப்போக்கு
பாலமது போட்டாப்போல் திரையைத்தாண்டிப்
பானுமதி பிடிப்பதற்கிவ்வேணி பாரே. (௨)

சீர்பெற்ற தகப்பனெங்கள் பிடிநாக்கீசர்
சிறந்ததிரு மூலரெங்கள் சிறியதந்தை
யார்பெற்ற போகருஷி யென்கண்ணுவி
யவர்பெற்ற கொங்கணரும் கருவூராரும்
பேர்பெற்ற ரஸவாதங் கைகண்டாரென்
பெருநூலெண்ணூறு மிது பிசகாமற்றான்
பார்பெற்ற கும்பமுனி பெருநூலும்பார்
பட்சம்வைத்தார் மச்சமுனி பதினெண்பேரே. (௩)

* * * *

பாரப்பா பொதிகைமுனி பெருநூலென்று
பாடினா ராயிரத்திருநூறாக
நேரப்பா யானுமிந்த வெண்ணூறு சொன்னேன்
நேத்திரம்போல் தோன்றுமடா வித்தையெல்லாம்
ஆரப்பா வவனியிலே கொடுக்கப் போறார்
ஆதியிலே விட்டகுறை யிருந்தாற்கிட்டும்
சீரப்பா பிசகாது இரண்டுநூலும்
தேர்ந்தவனே மகாசித்துச் செய்வான் பாரே. (௮)

மதந்தருக்கி மனந்திருகி யுபாயதந்திரம்
மச்சனென்பேர் அதற்குமுன்பு மறைக்குலத்திற்
பிறந்திருந்தேன் என்தேசம் மச்சதேசம்
பிரமனுக்குத் தொண்டுசெய்து பிறகுதானே

அரந்தழைக்க வோதிவைத்தார் வித்தையெல்லாம்
அவருடைய புண்ணியத்தால் வரையிலேறி
நிறைந்த சித்தராச்சிராமந்தன்னிற் சென்று
நிஷ்டையிலே யிருந்து குருநிலைகண்டோமே. (௮)

கண்டவுடன் பிடிநாக்கர் அமுதமூட்டிக்
கண்மணிபோல் வளர்த்தென்னைக் கருணைகூர்ந்து
அண்டரோடு முனிவர் சபைதன்னிற்கூட்டி
யாட்படுத்தி யுருவாக்கி வைத்தாரய்யர்
மண்டலத்தோர்க் கென்னூலைப் பாடச்சொன்னார்
மவுன குரு தீட்சையொன்று முன்னேயாடிக்
கொண்டபின்பு எண்ணூற்றெண்பதையும் பாடிக்
குறியறிய நிகண்டுமொன்றுகூறினேனே. (௯)

* * * *

வசிய மூலிகை வருமாறு :—

தானென்ற வசியமினிச் சொல்லக்கேளு
சகல[தற்கு](ருக்கு) மொருமனதாய்த்தனதாய்ப் பண்ணும்
மானென்ற வெள்ளிமதி திரண்டகன்னி
வத்திரத்திற் றாமரை நூல் வலையமிட்டு
ஊனென்ற கலசத்திற் சலமொண்டிட்டு
உதயாதி தொடங்குகையிற் சூரிவேரை
நானென்று பி[டி](டு)ங்கிவந்து கலசத்துள்ளே
நா[ளி](ழி) சலமளந்துவிட்டு வேரும்போடே. (௰௪)

போட்டவுடன் வெண்சீலை வேடுகட்டிப்
புகழாக வெண்சாவலுதிரமூட்டி
ஆட்டவுடன் அடுப்பின்மேற் கவுத்திவேட்டை
யடுப்பிலிட்டு முன்வலையம் விளக்கேற்றிக்கொ(ள்)
நீட்டவுடன் ஆவின் நெய்கொண்டெரித்து
நீர்வற்று மளவுகண்டு நினைவாய்வேட்டை
கூட்டவுடன் இறக்கி வேட்டையுற்றுப்பாரு
குருவருளா[ள்]ற்பூத்துப்போலாடைமீதே. (௰௫)

ஆடையென்ற புத்துமையை வ[ளி](ழி)த்துவாங்கி
அதனுடனே வாசமுள்ள புனுகுசவ்வாது
வாடையென்ற குங்குமப்பூவிட்டு ஆட்டி
மகிழ்ந்த கோரோசனையுங் கூடக்கூட்டிப்
பேடைமயிலாருடனே (யரசர் சர்ப்பம்)
பிறசாதியுள்ளவர்க்கும் பின்னேதுக்குங்
கூடையிலே காரியங்கள் கொள்ளும்போது
குறியானபிறை நுதலிற் றீட்டிப்பாரே. (௰௬)

பாரப்பா யிந்தமைக்குச் சாபமில்லை
　　பகையில்லை பேயில்லை பிசாசுமில்லை
ஆரப்பா திருஷ்டியில்லை யேவலில்லை
　　அஞ்ஞானங்களில்லை பில்லியில்லை
நேரப்பா சகலர்களும் வசியமாவார்
　　தின்னுடைய வதனமதிலிட்டுச் சென்றால்
காரப்பா வசிய மூலிகையைக் கேளு
　　கருக்குருவாய் அட்டகர்மஞ் செய்யத்தானே. (மஎ)

* * * *

End :

எணியன்ன வென்றந்தை பிடிநாக்கீசர்
　　ஈசரடி பணிந்தேத்தி நந்திகூறு
வாணிகலை தெரிந்துரைத்த திவை யெண்ணூறு
　　வழிலையறிந்தெடுத்துரைத்த மச்சன்பாடல்
காணிபிசகாதபடி கோடிமட்டுங்
　　கருத்துள் வைத்துப் பொருடெரிந்து கண்டுதேறி
ஆணியுரையாணி சித்தர்நூல்களெல்லாம்
　　மாட்டுவித்தேனருள் பூமிநாதவித்தே. (அா)

வித்தகத்தோன் பதத்தா[னே](ணே) வெளிவிடாதே
　　வேதாந்தமனோன்மணித்தாய் பாதத்தா[னே](ணே)
சித்தருக்காமிந்த வெண்ணூறும் பெருநூலப்பா
　　சிவஞானந்தங்குகின்ற பெரியோர்க்காகும்
மத்தொருத்தர் இந்நூலைப்பதனம்பண்ணி
　　வைத்தாலும் வாதம் முத்திவாய்க்கும் வாய்க்கும்
பத்தருக்கும்பாடிவைத்த சதமெட்டான
　　பதிவாகும் பெருநூல் ஞானமுற்றே. (அாக)

Colophon :

மச்சமுனியையர் பெருநூல் எண்ணூறும் முற்றும் : தேவிசகாயம்.

(கு.பு.)—

இந்நூல் வைத்தியம் இரஸவாதம் அஷ்டகர்மங்கள் ஜாலம் முதலிய பல வகை விஷயங்களையும் அறிவுறுத்துகின்றது. இதில் பல்வேறுவகை இலேகியங்களும், அஞ்சனங்களும், கண்ணின் வியாதி தொண்ணூற்றாறுக்கும் மருந்து வகைகளும், சிலவிஷசிகிச்சைகளும் செவ்வனே விளக்கப்பெற்றுள்ளன. நூலாசிரியர் மச்சமுனிவர் என்று தெரிகிறது. இப்பிரதியில் இந்நூலின் (800) எண்ணூறு பாடல்களும் உள்ளனவாதலின் முற்றுமுள்ளது. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன.

No. 1968. மச்சமுனி விவரணம்.

MACCAMUNI VIVARAṆAM.

Pages, 32. Lines, 6 on a page.

Begins on fol. 100-(a) of the MS. described under No. D. 1490. Contains 3 Kāṇḍas.

Same work as "Maccēndra ṅānkkalippā" described under No. 1804 of the Descriptive Catalogue of Tamil MSS. Vol. IV. This work is also known as Maccamuni Ñānam Mūnṟukāṇḍam vide, R. No. 280 (c) of the Tamil Triennial Catalogue Vol. II.

(கு - பு).—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1804-ஆம் நம்பரில் வந்துள்ள 'மச்சேந்திரர் ஞானக்கலிப்பா' என்றநூலேயாகும்; ஆயினும் பெயர்வேறாக இப்பிரதியில் காணப்படுகிறது. இருபது செய்யுட்கள் வரையிலும் ஒத்திருக்கின்றன. இப்பிரதியால் இந்நூலுக்குக் காண்டம் என்ற பிரிவினை யுணர்த்தும் விபாகம் ஒன்று உண்டெனத்தெரிகிறது. ஆகவே (1) தூல காண்டம், (2) சூட்சுமகாண்டம், (3) காரணகாண்டம் என்ற மூன்றில் அப்பிரதியில் 'சூட்சுமகாண்டம்' என்றும் பிரிவுவரையில் இருக்கிறது. இப்பிரதியிலோ 'காரணகாண்டம்' என்ற பகுதி அதிகமாக இருக்கின்றது. எழுத்துப் பிழை சொற்பிழைகள் மிகஉள. ஏடுகள் மிகவுஞ் சிதைவுற்றுச் சில முறிந்தும் இருக்கின்றன. இந்தக் காரணகாண்டத்தில் ஞானவிஷயமான பிரணவம் கேசரி முதலாயினவற்றை விளக்கியுணர்த்தலால் இதற்கு இவ் விவரணம் என்ற பெயர் அமைந்திருக்கின்றதுபோலும். இதற்கு "மச்சமுனி ஞானம் மூன்று காண்டம்" என்ற பெயரும் இருக்கிறது. இப்பெயரான் R. 280 C. (1) நம்பரில் ஒரு பிரதி வருணித்துக் கூறியிருக்கிறது.

No. 1969. ஔஷத விவரணம்.

AUṢADHA VIVARAṆAM.

Substance, palm-leaf. Size, 10 × 5⅝ inches Pages, 140. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance very old.

Incomplete.

Deals with the preparation of medicines for different kinds of diseases. Certain Mantras and Yantras (Mystic diagrams considered useful in the practice of medicine) are also to be found herein.

Beginning:

அம்புவிலக்கு.

ஊமைப்புற்றுமேல் சிறு பூளையைக் காப்புக்கட்டிக் குளிசமாடிக் கச்சையில் இருக்க அம்புசாயும். வெள்ளிமேல் . . . . கட்டி . .

செவ்வாய்க்கிழமை நாள் காப்புக்கட்டிக் குளிசமாடிக் கச்சைப்புரையில் இ(ரு)(று)த்தவும். அம்புசாயும். வெடிவிலக்கு:—விழியிக்கொழுந்து எழு கொழுந்து வாய்விடாக்கொழுந்து நாலேக்கச்சைப்புரையிலே போடவும். மூனைவாயிலே அடக்கிக்கொள்ளவும். வெடிசாயும். படைபண்ணச்செய்தே வாய்விடாமலிருக்கவும்: வாய்விட்டால்படும். * * * * * * * * *

காய்ச்சலுக்குக்கஷாயம்:—துளசிவேர் ஒருபிடி, வில்வம்வேர் ஒருபிடி கஞ்சாங்கோரை சமூலமும் ஒருபிடி, பேய்ப்புடல் சமூலமும் ஒருபிடி, பற் பாடகம் ஒருபிடி, சிறுகாஞ்சோறிவேர் ஒருபிடி, நெருஞ்சில்வேர் ஒருபிடி, விஷ்ணுகிராந்திவேர் ஒருபிடி, கடுகு ரோஹிணி இரண்டு விராகனெடை, திப்பிலி இரண்டு விராகன் எடை.

* * * * * * * *

சுரத்துக்கு மருந்து:—வட்டம், எறும்பட்டைப் பீநாறி இலை இரண்டுங் கொண்டு வந்து துவைத்துச் சட்டியில் வறுத்து இரண்டுபடி தண்ணீர் வார்த்துக் கடுகு, சுக்கு, பாக்கு, கூடத்தண்ணீரில்போட்டு ஒன்றரைபடி தண்ணீராகக் காய்ச்சி மிளகு, சுக்கு, கடுகு, இந்த மூன்றும் அரைத்து அந்தத் தண்ணீரில் கூட்டிக்கொடுக்கவும்: இதுக்குப்பத்தியம்: பாலும் சோறும்.

நீர்க்கோவைக்கு:— * * * * * * * * *

(கு-பு.)—

இந்நூலில் குழந்தைகட்கும் பெரியவர்கட்கும் உண்டாகும் மாந்தம் முதலிய பல்வகை வியாதிகளுக்குச் செய்யும் வைத்திய முறைகளும் சில மந்திரங்களும் யந்திரங்களும் எழுதப்பெற்று இருக்கின்றன. வைத்தியஞ் செய்கின்றூர்க்கு இது மிகவும் உபயோகமானதென்று தெரிகிறது. ஏடுகள் மிகவும் ஒடிந்தும் சிதைந்தும் இருக்கின்றன. படித்தற்கு மிகவுங்கஷ்டமா யிருக்கிறது. பிழைகளும் மலிந்திருக்கின்றன.

No. 1970. சுகபேதித் தைலம்.

SUKHABHĒDIT TAILAM.

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 183-a of the MS. described under No. 250. Complete.

Describes the preparation of a purgative oil.

Complete.

Beginning :

இரஸம் (விராகனெடை) 1 கெந்தகம் விராகனெடை 2 நேர்வாளம் விராகனெடை 3 வெட்பாலேயரிசி விராகனெடை 4 * * * ஆக இவை சேரக் கூட்டிக்கள் [illegible] விட்டு மூன்று நாள் நன்றாய் அரைத்

துக் கொட்டைத் தேங்காயிலிட்டு வெய்யிலிலே ஐந்து நாள் கிடக்கவிட்டு எடுக்கத்தைலம் வீழும்: * * * * * * * * *

End:

இந்த மருந்து (உபயோகிக்குமாறு):—மல்லிகைப் பூப்பந்துகட்டி அதில் கால்பணவெடை தைலம் தடவிப் பத்து தரம் முகர்ந்தால் பத்து தரங் கழியும்: * * * * * * * *
இதுவெகு சோதனைகண்டது. இராசாக்கள் மெச்சிய தைலமாகும்.

முற்றும்.

(கு-பு.)—

இது வைத்தியத்தைச்சார்ந்து இரஸம் கந்தகம் முதலான பதினொருவகை மருந்து சரக்குகளால் சுகமாகப் பேதியாவதற்குத் தயாரிக்கும் ஓர் அற்புத தைலமுறையை வசனத்தால் உணர்த்துகின்றது; முற்றும் உள்ளது: எழுத்துப் பிழையுள்ளது.

No. 1971. சுரோணிதக்கட்டுக்கு விளக்கெண்ணெய் வைப்பு முறை.

ŚURŌṆITAKKAṬṬUKKU VIḶAKKEṆṆEY VAIPPU MUṞAI

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 117-a of the MS. described under No. 1214. Complete.

On the preparation of a medicine for curing a certain kind of menstrual disorder.

Beginning:

சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், கிராம்பு, ஏலம், அதிமதுரம், இலவங் கப்பட்டை, கற்கடகச் சிங்கி, கடுகுரோகிணி தான்றிக்காய் * * *
* * * * * * * * * * * * *

End:

நேர்வாளம் கருசிலாங்கண்ணிப்பாலிலே அவித்துக்கொள்ளவும். புளித் தக்காடியில் சுத்திபண்ணிக்கொள்ளவும். எலுமிச்சம் பழத்தில் சுத்தி பண்ணிக்கொள்ளவும்.

(கு-பு.)—

இது மாதர்கட்குரிய வைத்தியமொன்றைக் கூறுவது. இரண்டேடுகளில் எழுதியுள்ளது. முற்றுமிருக்கிறது.

No. 1972. பாலவைத்தியம் முதலியன.

BĀLAVAIDDIYAM MUDALIYANA.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 446. Lines, 7 on page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Complete.

Deals with the preparation of certain medicines especially medicines for curing barrenness in women, for preserving the child in the womb, for preventing miscarriage and for curing certain diseases of elderly people.

Beginning :

. . . . . . ய் வேர் ஸ்நாநதினம் பாலு. . . . கொள்ளப் பிள்ளையுண்டாம். . . . . பாலுடன் கொள்ளப் பிள்ளையுண்டாம். மணத்தக்காளிச்சாறு . . . . மலடியானவள் ஸ்நாநதினம் கொள்ள ப் பிள்ளையுண்டாகும் . . . . நறுந்தாளியிலே எண்ணெயுடன் அரைத்து வெல்லங்கூட்டி. . . . . (அ)த்திமேற்புல்லூறியாவது அரசுமேல் புல்லூறியாவது பாலுடன் . . . . ப்ரிம்மிகிருதம்.—பிரிம்மியிலைச்சாறு சிவதை[ச்சாறு] (வேர்) விளங்கம் த்ரிபலம் கொன்றைவேர்ப்பட்டை. . . இந்து . . . . திப்பிலி மூலம் இ[து](வை) பிரம்மிச்சாற்றில் அரைத்துக்கரைத்து . . . . பிசாசுவிடும். பிள்ளையுண்டாகும் . . . . வஜ்ரக்ருதம் :—புத்ரஜீவிப்பட்டை . . . . சீந்தில் கண்டுபொரங்கி குறிஞ்சா சிறுகுறிஞ்சா கழற்கோடிவேர், சத்தி . . . . இடித்துக் கிஷாயமிட்டுத் தண்ணீர் விட்டான் சாறு கூட்டி பால் நெய். . . . . பழச்சாறுங கூட்டிக் கோமூத்திரம் கூட்டி அதிமதுரம் பஞ்சகோலம் மிளகு திரிபலம். . . . .

. . . .

வாதபித்த சிலேஷ்மங்கள் கர்ப்பாசயத்திலே ப்ரகோபித்துப் பூர்வஜந்மத்தில் செய்தபாபத்தினுலே, பிள்ளையுண்டானலும் நாலு மூன்று மாஸத்தில் விழுந்து போம். . .

மாஞ்சிஷ்டி அமுக்கிருவேர் பெருங்குமிழம்வேர் பேராமுட்டிவேர் புத்ரசீவிவேர்ப்பட்டை திரிபலம் இவை கஷாயமிட்டுத்தண்ணீர் விட்டான் சாறுங்கூட்டி மாஞ்சிட்டிகோஷ்டம் தேவதாரம் வசம்பு இரண்டு மஞ்சள் அதிமதுரம் கருஞ்சீரகம் கடுகுரோஹணி திருகுப்பாலை செம்மரத்தம்பூ விளாமிச்சம் முடிவாழம் திராக்ஷா கர்ச்சூரம் நெய்பால். . .
ஷம் யோனிதோஷம் பிள்ளைவிழுந்து போகிறதும் உடம்பெரிப்பும் பிரமேகம் கூச்சரம் அஸ்திஸ்ராவம் (பிள்ளை) வளர்ந்து செத்துப்போகிறது பிள்ளையுண்டானல் கைப்பிள்ளையிளைத்துச் செத்துப்போகிறதும் தீரும்.

* * * *

End :

சஞ்சீவிரஸம்: வாதசுரத்துக்கு:—நாவி க, சாதிலிங்கம் க, திப்பலி ௩, சுக்கு இவை எல்லாம் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துச் சிறுபயறு

பிரமாணம் உண்டைபண்ணி வெந்நீரில் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம்; விளாவிலைதண்ணீர்ற் காய்ச்சித்த[ளை](ழை) யெடுத்துப் போட்டு அதில் அரிசிபோட்டுக் கஞ்சி காய்ச்சிக்கொடுக்கவும். தேன் ஈ கடியாமல் கஞ்சாங் கோரைச்சாறு உடம்புக்குத்தடவிக்கொண்டு . . . .

. . . .

(கு-பு.)—

இந்தநூல், மலடிகளுக்குப் பிள்ளையுண்டாம் மருந்துமுறையையும் கருப்பத்திலே சிசுவைச் சரியாகக்காக்கும் விதத்தையும், பிறந்த சிசுக்கள் இறக்காமல் காக்குமாற்றையும், இன்னும் பெரியவர்கட்குண்டாம் பலவேறு நோய்களை நீக்கற்குரிய சிறந்த ஔஷதமுறையையும், சிலவற்றுக்கு இரட்சை யெழுதிக்கட்டுந்திறனையும், இன்னும் இன்னோரன்னபல விஷயங்களையும் எளியதமிழ்நடையில் வசனத்தான் அமைந்து விளக்குகின்றது. இது சிறந்த வைத்தியர் ஒருவர் தம்மனுபவத்திற் கையாண்ட முறையை எழுதி வைத்தது எனப்புலப்படுகிறது ; ஏடுகள் முழுமையும் சிலசெல்லரித்தும் முறிந்தும், சிதைந்துமுள்ளன : பிழைகளும் மலிந்துள்ளன. சிலவிடம் படிக்கவும் முடியவில்லை.

No. 1973. பாலசிகிச்சை (பாலவைத்தியம் முதலியன).

BĀLACIKICCAI (BĀLAVAIDDIYAM MUDALIYANA).

Substance, paper. Size, 13¼ × 8½ inches. Pages, 173. Lines, 23 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete.

Same work as the above ; it appears to have been copied from the previous manuscript.

(கு-பு.)—

இந்நூல் முன்பிரதியைப்பார்த்து எழுதிவைத்ததெனத் தெரிகின்றது ; ஆயினும் எழுதின முறையத்தனை நன்றாயில்லை ; பிழைகள் பெரிதிந்து கிடக்கின்றன ; அப்பிரதியில் முதலிலே இதுபொழுதுகாணப்பெறாத சில வாக்கியங்கள் இப்பிரதியிற் காணப்படுகின்றன : அவ்வாக்கியங்கள் அடங்கிய இரண்டொரு ஏடுகள் கிழிந்துவிட்டன போலும் ; அவைதவிர்த்து அதி லுள்ள பாகம் வரையிலும் இப்பிரதியிலும் இருக்கின்றது.

No. 1974. தைல முறைகள்.

TAILA MUṚAIKAḶ.

Pages, 19. Lines, 7 on a page.

Begins on fol. 166 a of the MS. described under No. D. 1957.

Incomplete.

Similar to the work described under No. R. 203 (*a*) of the Tamil Triennial Catalogue Vol. II. Deals with the preparation of various kinds of medicinal oils together with their curative properties.

Beginning:

சீரகத்தைலம்.

பாரப்பா சீரகமிரண்டுபடியே வாங்கிப்
 பதமாகத் தானிடித்துப் பதக்குத் தண்ணீர் போட்டுச
சேரப்பா வெட்டொன்றுய்ச் சிறுக்கக் காய்ச்சித்
 தெளிவாகக்கஷாயத்தி லெள்ளெண்ணெய்படி சரியாய்விட்டு
காரப்பா கார்நெல்லரிசி பலந்தானிரண்டு
 கஷாயம் விட்டரைத்ததனைவாங்கிக்கொண்டு
ஓரப்பா [யிள](மெழு) குபதமாகவாங்கி
 இயல்பாக மு[ளு](ழு)கிவரக் குணத்தைக்கேளு (க)

வில்வவேர்தயிலம்.

சாந்தமாய் வில்வவேர் தைலங்கேளு
 தானனவில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமாயிடித்ததனைப் பதக்கு நீரிற்
 பருவமாய்க்காய்ச்சி யெட்டொன்றுக்கி
மொந்ததயெண்ணெய்நாழிவிட்டுச் சந்தனமோ பலந்தான்
 புகழாகக் கிஷாயத்திலரைத்துப்போட்டு
வாய்ந்தவொரு மெழுகுபொல் வடித்துக்கொண்டு (உ)
 வாகாகிமுழுகிவர வளமைகேளே
வளமையுடன் முழுகிவரப் பித்தம்போகும்
 வரிசை[பிறமெய்புபு] (பெறமெய்யிலு)ள்ள வுஷ்ணம்போகும்
இளமைபெற வாக்குவிக்கும் மேகம் போகும்
 இருகண்ணுந்தெளிவுதரும் இரும்பல் தீரும்
 * * * *
 * * * *

End:

நிகழ்த்துகிறேன் மண்டையிடி சூலைவாதம்
 நிலைகெட்டபீனிசங்கள் போமெய்ப்பிளைப்பு
களஞ்சிரென சூலையொடு வந்த வாய்வு
 கால்கடுப்பும் நெஞ்செரிவு மெய்நோயெல்லாம்
தேகத்தில் நாடாமல் ஓடிப்போகும்
 செம்முள்ளியெண்ணெய்தனைச் செப்புவேனே.

(கு-பு.)—

ஒருநூலின் சிறுபாகமாகிய இது, பல்வேறு நோய்களையும் வேரோடொழித்தற்குரிய பலதைலங்கள் வைக்கும் முறையை நன்குதெரிவிப்பது. இதில் உள்ள தைலங்கள்.—(1) சீரகதைலம், (2) மேகதைலம், (3) வில்வவேர் தைலம், (4) வேங்கைப்பட்டைத்தைலம், (5) வேம்பின்தைலம், (6) கொடிவேலி வேர், தைலம் (7) நத்தைசூரித்தைலம், (8) கீழ்வாய் நெல்லித் தைலம், (9) சங்கவேர் தைலம், (10) அமுக்கிருத் தைலம், (11) செம்முள்ளித்தைலம் என்றிவைகளாகும்; இன்னநூலைச் சார்ந்ததென்றும் இத்துணைப்பாடல்கள் என்றும் ஆசிரியர் இன்னர் என்றும் சிறிதும் தெரியவில்லை. இப்பிரதியில் பாடல்களுடைய எண்கள் கூட எழுதப்பெறவில்லை. பிழையுள.

No. 1975. விசுவாமித்திர வாக்யம் : (வைத்தியக் களஞ்சியம்.)
VIŚUVĀMITTIRA VĀKYAM (VAIDDIYAKKAḺAÑJIYAM).

Pages, 288. Lines, 6 on a page.

Begins on fol. 1-*a*. of the MS. described under D. No. 1917.

Explains, in prose, the process of peparing certain medicinal oils, powders, electuaries, etc., and the diseases cured by them. This work is also called " Vaiddiyakkaḻanjiyam " and is probably based on a medical treatise attributed to the sage Viśvāmitra.

Complete.

Beginning:

ஹரி : ஓம் : விசுவாமித்திரஸ்வாமி வாக்கியம்.
சரக்கு வைப்பு நன்ருக :

சுத்தி பண்ணின செம்பரைப்பொடி பலம் ௰௫, துருசு பலம் ௫, வெங்காரம் பலம் ௩, சீனக்காரம் பலம் ௪, நவச்சாரம் பலம் ௨, இந்துப்புப் பலம் ௨, கல்லுப்பு பலம் ௨, சுத்த ரஸம் பலம் ௨, வெடியுப்புச் சுண்ணம் பலம் ௩ இவையெல்லாங்கூட்டிக் கலுவத்திலிட்டு மகாவன்னித் திராவகம் விட்டு நாலு சாமம் அரைத்து உலர்த்திக் காசிக்குப்பிக்கு மூன்று சீலை மண் செய்து அதில் அடைத்துக் குப்பியின் வாயை மூடி வாலுகேந்திரத்தில் பதினாறு சாமம் எரிக்க. ஆவாரம் விறகு கொண்டு நாலு சாமம் எரித்துச் சாங்க சீதளமானால் அதை யெடுத்துக் குப்பியைத் தட்டிப் பார்த்தால் தாம்பிரக் கட்டிபோலே உறைஞ்சு இருக்கும். நல்ல செம்புபோலே இருக்கும். தொழிலுக்காகும்.

* * * *
* * * *

End:

மூலத்துக்கு இலேகியம்.

கருஞ்சீரகம், நற்சீரகம், கோஷ்டம், கொடிவேலிப் பாளைப் பாலைப் பட்டை, சதகுப்பி, ஆனைத்திப்பிலி, இலவங்கம், நாகப்பூ இவைகட்கு வகைக்குப் பலம் இரண்டு கொண்டு இவைகளைச் சூரணித்து இதுக்குச் சமன் சிவதை வேர்ச் சூரணங் கூட்டிச் சர்க்கரைப் பலம் 20, தேன் படி கால் (வ) இவையெல்லாங்கூட்டியிழைத்து இலேகியமாக்கி வைத்து அந்திசந்தி வேளைக்கு வராகன் எடை விஹிதம் பத்து நாள் கொடுக்கவும். பன்னிரண்டு வகை மூலம், பித்தவாய்வு, அக்கினிமந்தம், அசீர்ணவாயு சுரங்கள் முதலியவை தீரும். இச்சாபத்தியம் : இதுவும், அந்நோய்க்கு மருந்தாகும் ; கருணைக்கிழங்கு பலம் 5, மேல் பூரணி சீவிக் கல்லுரலில் இடித்து நல்லவெல்லம் பலம் 5 கூடப்போட்டு இடித்து இலேகியமானபோது எடுத்து அந்தி சந்தி வேளைக்கு நெல்லிக்காயளவு பத்து நாட்கள்கொள்ள மூலந் தீர்ந்து மூலச்சூடு தணியும்.

(கு-பு.)—

இந்நூல் வைத்திய விஷயமானது. இதில் சரக்குவைப்பு முறைகளும், பலவகை இலேகியங்களும், தைலங்களும், பல சூரணங்களும் வசந நடை

யால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. நூன் முகத்தில் ' விசுவாமித்திர வாக்கியம் ' என்றும், ' வைத்தியக் களஞ்சியம் ' என்றுங் குறித்திருக்கிறபடி யால் இது விசுவாமித்திரரது வைத்தியத்தைத் தழுவி வசனத்தில் எழுதப் பெற்றதெனவும், இதற்கு வைத்தியக் களஞ்சியம், என மற்றொரு பெயரும் உண்டென்றும் விளங்குகிறது, முற்றுப் பெற்றதென்றே சொல்லலாம்.

No. 1977. வைத்திய நூல்.
VAIDDIYA NŪL.

Pages, 72. Lines, 8 on a page.

Begins on fol. 130-*a*. of the MS. described under D. No. 1957.

A work in verse on medicine similar to the one described above.

Complete.

Beginning :

வாகடமே மகாமுனிவர் (வகு)த்தபடியே பார்க்க
தேகமழியாது செப்பினேனே—யூகம்போல்
ஒன்று விட்டொன்றென்னறக் கேழேறி விட்டாலாகாது ?
சென்றறிந்து பார்த்தால் செயம். (க)

காசுக்கிச்சை வைத்துக் கண்டபடியே மறிந்
தாசைவைத்து செய்தக்காராகுமே—வேசையென
வந்ததை வசமாக்கி மடிப்பாகப் பாராமல்
சிந்தை வைத்துச் செய்தால் திறம். (உ)

திறமாகப் பண்டிதங்கள் செய்வதற்குப் புண்ணியமாம
பரமபத முண்டு பலனுண்டாம்—கிருப
ஆராகிலுஞ் செய்து அகத்தியமாய் நடத்து ?
குருவே துணை யுண்டாகவும் :

பூரிகாதைலம் :

பூரியா தைலந்தன்னைப் புவத்தியா சொல்லக்கேளு
வீரிய வில்வம்பட்டை விளம்பினேன் பலநாறப்பா
காரிய கண்டங்கத்திரி கறிமுள்ளி நொச்சியோடு
சீரிய வழுக்கிராவுஞ் சித்திர மூலங்கூட்டே. (க)

கூட்டு பாதிரிநன்னாரி கூவிளஞ் சிந்திநூதி
நாட்டுச்சாறணை ராமிச்சு நல்ல சிற்றாமணக்கும்
பூட்டு முப்புரமெரித்தான் புகழ்வேம்பு எருக்கிலோடு
நீட்டு சிற்றாமுட்டிவேர் நிலக்குமிழ் மூடக்கற்றானே. (உ)

End :

எ[க்கி](ற்றி)யதை மூன்று தீயை மூட்டி . . .
யெடுத்தாறி நாலானாள் எடுத்துக்கொண்டு
மாற்றியதில் நாபியொன்று திப்பிலியின்மூலம்
வகைக்கொன்று பலமொன்று மூன்றுபலைத் தூக்கி ?

சேற்றியே செந்தூரங் கலுவத்திட்டுத்
திறமான வெள்ளுள்ளி தைலத்தாட்டு
ஆற்றியே குன்றியெடை குளிகைசெய்து
அப்பனே யனுபானந்துளசிச் சாறே. (மரு)

* * * *

சாறுகொண்டு குளிகையிடச் சன்னிபோகும்
தளர்வாதஞ் சேத்துமமு முண்ணிமுட்சை
வீறுகொண்ட தழல்வாதம் மூகவாதசன்னி
மகோதரமும் பீலிகையும் அகவை வேர்ப்பு
வேறுகொண்ட மறைந்தோடும் பூபதியைக்கண்டால்
மேலான பூபதி[யு](யி) ன்விபரந்தானே. (ாமசு;
ற்றும் :

(க-பு.)—
இம்மருத்துவ நூல், அநேக மருந்துகள் வைக்கும் முறையை நன்றாக விளக்குவது. நூற்றுப்பதினாறு பாடல்களால் அமைந்துள்ளது. இதன் முகத்திலும் இறுதியிலும் இயற்றியவர் இன்னாரென்றுக் குறிக்கப்படாமல் இருப்பதால் இன்னாரெனத் தெரியவில்லை. இந்நூலின் பாடல்களும் இத்துணையனவெனத் தெரியவில்லை.

No. 1976. வைத்திய நூல்.
VAIDDIYANŪL.

Substance, palm-leaf. Size, 14½ × 1½ inches. Pages, 10. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Similar to the work described under R. No. 942 (*i*). The method of curing diseases is described herein. The name of the author is not given.

Beginning:

. . . .
. . . .

வந்திடுமெந்தமில் ? வாதம்நாலும் அடுத்திடும் பித்தமாறும்.
வந்திடுஞ் சிலேட்டுமம் பத்தும் அநாதியாய் வகுத்ததாமே. (க)

பையரவல் குன்மாதே பாருள்ளோர் க[ளி](ழி)ந்தநீரில்
கையிலே யெண்ணெய் வாங்கிக் க(ழி)ந்தநீர் தன்னிறத்தில்
மையுறமேனி யொத்து வட்டஞ் செய்திருக்குமாகில்
ஐயுறு நீரதாகும் அல்லதாய்ப் பித்தமாமே. (ம)

மூளையும் திணமும்போல முதிர்ந்த சுக்கிலமும்போல
நீளிய நரம்புபோல நீரிலே தோன்றுமாகில்
ஆளெறிவேலுங் கோலு[ங்] மனங்கனைக் காயுவீராய்
வாளையும் வென்றகண்ணாய் வாதமும் நான்கதாமே. (கக)

உதிரமுங் கடுப்புமுப்பு முவருடன் புளியுஞ்சாலச்
சதிரழிந்துடலம் நொந்து தலை சுழன்றிருக்குமாகில்
முதிரவே கிறுகிறுத்து மூர்ச்சிதமாகிப் பித்தம்
பொதுமகள் அன்புபோலப் போவதும் வருவதாமே. (கஉ)

ஈயங் காந்தமிங்குலிக மிவைதாம் நாற்கழஞ்சோரொன்று
சேய சட்டிதனை வைத்துச் சிவக்கக்காய்ச்சி யகைவறுத்துச்
செய்ய குளிகை யிருபத்தொன்றைச் சிறந்தமோர் வார்த்தரைத்து [தவப்
பையமோரில் இருண்டை பரிந்து குடிக்கவல்லீராய்
நையமுட்டுக் காவேரிநடுக்கக் கட்டு மிணையிதுவே. (ருய)

சமூலமோரி தழ்த்தாமரையுதாவுங் குளிர்தாமரை வித்தும்
ட . . . மூலம் நல்ல பிண்ணாக்குந் நத்தையிறைச் [துவரையொடு
வமூலமான விவையைந்தும் மடங்கவுலத்திப் பொடிசெய்து
மமூலவிதான யிதிற்சேர்த்து மோரிற் குடிக்கவல்லீராக்க ?
மமூலமான நீரிழிவு முடனேவற்று முண்மையிதே. (ருக)

(கு-பு.)—

இவ்வைத்திய நூல், வாதபித்த சிலேட்டுமங்களுடைய உட்பிரிவுகளேயும் அவையிற்றின் குணக்குறிகளேயும் அவற்றால் உண்டாம் பல்வேறு நோய்களேயும் அவைகளை நீக்கற் குரிய சில மருந்து முறைகளேயும் நன்கு செய்யுள் வகையால் விளக்கிப் போருகிறது. (1—9) ஆன பாடல்கள் இப்பிரதியில் இல்லை. அவை யெழுதின ஏடுகள் ஒழிந்து போயினபோலும்; இறுதியிலும் 51-ஆவது பாடல் வரையுமே எழுதியுள்ளது; முற்றுப்பெறவில்லை என்று தெரிகிறது. இந்நூலுக்கு இத்துணைச் செய்யுள் என்றும் இன்னுர் இயற்றினுர் என்பதும் ஒரு சிறிதும் புலப்படவில்லை. முதல் ஏடு நூனியில் முறிந்துபோயுள்ளது. பிழைகள் மலிந்திருக்கின்றன. மகடூஉ முன்னிலைத்தாய் அமைந்துள்ளது.

No. 1978. வைத்தியநூல் வசனம்.
VAIDYANŪL VACANAM.

Pages, 152. Lines, 6 on a page.

Incomplete.

Begins on fol. 169*a* of the MS., described under No. 534.

Gives in prose the method of preparing suitable medicines for curing various kinds of diseases.

Beginning:

வைத்திய நூல் :

தொப்பைய னருள் சிந்தூரக் [கு](க)ண்ட[னே] னைக்)
கப்பரைக் கையனைக் கபாலிதன் மைந்தனை
முப்பழத் தோடுதேன் அவல் சர்க்கயிரக் ?
கப்புவானைக் கை தொழாய் நெஞ்சமே. (ச)

மிளகரணைப்பட்டை, [ஆயில்](அகில்)பட்டை, பொரிவிளாப்பட்டை, பேராமூட்டிவேர், குட்டிப்[பெரா](பலா)ப்பட்டை, கொடிவேலி, காட்டு முருங்கைப் பட்டை, தூதுவளைவேர், உத்தாமணிவேர், பூனைக்காஞ்சோரிவேர், மூக்கா வாளை, நிலவேம்பு, வேப்பம்பட்டை, மூக்கத்தாரிவேர், முள்ளிச்சுண்டவேர், முள்ளு முருக்கம்பட்டை, விசிறிவேர், நீலிவேர், ஆதொண்டம்வேர், மாவிலங்கம்பட்டை, சிறுகளாவேர், புங்கம்வேர், சங்கங்குப்பி சமூலமும், தூதுவளை வேர், மூக்குரட்டைவேர், சத்திசார்வளைவேர், சிற்றாமணக்கம்வேர், இலுப்பப் பட்டை, வட்டகிலுகிலுப்பைவேர், ... வேர், வில்வப்பத்திரிவேர், முருக்கம்பட்டை, புலிதடக்கம்பட்டை, எருக்கம்பட்டை, சிறுநெருஞ்சில்வேர், கொட்டைக்கரந்தை, சிகப்பு கொண்டுவந்து உலர்த்தியிடித்துக்கொண்டு வஸ்த்திரகாயம் பண்ணிக் கந்தகவகை ? பண்ணின பொடி ? மூன்று பங்கு செலவு ஒரு பங்குமாய்க் கூட்டவும். தசாவர பலம் ஒன்று, திப்பிலி பலம் (க), ஓமம் (க), பலம் கஸ்தூரிமஞ்சள் (க), பலம் ஒன்று, கண்டு பெரங்கி பலம் (க), பறங்கிப்பட்டை பலம் (க), ஆக வகை எழுங்கூட்டித் தின்னவும். வெண்பனம் பட்டையைக்கொண்டுவந்து அரைத்து வெந்நீரிற் குடிக்கவும் . . . .

சகல சுரத்துக்கும் மருந்து.—கடுக்காய் வராகன் எடை, தானிக்காய் வராகனெடை, நெல்லிப்பருப்பு வராகனெடை, கடு(க)ம்மூன்று வராகனெடை, நாபி வராகனெடை, இரதம் வராகனெடை, கந்தகம் வராகனெடை, தாளகம் வராகனெடை, வெங்காரம் வராகனெடை, நேர்வாளம் இரண்டு வராகனெடை இவையெல்லாம் இஞ்சிச்சாற்றில் அரைத்துக் குன்றிமணிப் பிரமாணம் உண்டைபண்ணி நிழல் உலர்த்தலாய் உலர்த்திச் சகல காய்ச்சல்களுக்கும் சந்நிபாதத்துக்கும் இரண்டு (மாத்திரை) இஞ்சிச்சாற்றில் கொடுக்கவும். பத்தியம்—தினையரிசிக் கஞ்சி வார்க்கவும் இந்தப்படி ஏழுநாள் கொடுக்க தீரும்.

சன்னிக்குக் கலிக்கம் :—தானிக்காய்ப்பருப்பு, கடுக்காய்பருப்பு, சைந்தவ லவணம், பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி இவை சமம்கூட்டி கோவின் மூத்திரத்தில் அரைத்து உண்டைபண்ணி நிழல் உலர்த்தலாய் உலர்த்தி எலுமிச்சம்பழத்திலாவது முலைப்பாலிலாவது காடியிலாவது உரைத்துக் கண்ணிலிடச் சன்னி தீரும். சகல தோஷம் திரும். காய்ச்சல் விடும் . . . . . .

End:

, ... குளிகை மிளகுப்பிரமாணம் பண்ணி உலர்த்தி ஒரு குளிகை உரைத்துத் தொப்புளிற் தடவப் பேதியாம் ; சீதம் விழும் ; நிற்கவேண்டும் என்றால் சந்தனம் உரைத்துப் பூசவும்.

மருந்து.—ஆடுதின்னாப்பாளை மூன்று சேர் . . . ? நாழிப்புப்பு ஒரு குடுவையிலேயிட்டு அடுப்புமேலே மூன்றுநாள் இருக்கவிட்டுப் பிறகு எடுத்து இடித்துத் தெள்ளிக்கொண்டு மிகுந்த கப்பியையும் அப்படித்தானே தெள்ளிக்கொண்டு இத்தோடே இரண்டு வராகனெடை பெருங்காயம் பொடிசெய்து உ[ர](ற)வுபண்ணி இரண்டு வராகனெடை பொடியும் தண்ணீரில் கொப்பிளித்து விழுங்கவும். மேகச்சூலை, வாதச்சூலை, பக்கச்சூலைகள் [வழித்தில்லு] (வயிற்றில்) உள்ள வியாதிகள் எல்லாம் தீரும். அடுப்பில் மூன்று நாள் எரிக்கப் பஸ்மம் ஆம். அந்தக்கிரியை இந்தப் படிச் செய்யவும் ?

சங்கம்வேர் .. உ (பலம் இரண்டு) கட்டுக்கொடி பலம் இரண்டு வெள்ளைக் க[று](டு)கு பலம் இரண்டு. வெட்டிவேர் பலம் இரண்டு, கொத்துமல்லி . . . இவையெல்லாம் . . . .

* * * *

(கு-பு.)—

இவ்வைத்தியநூல் அனுபவ வைத்தியம் போன்று வசனத்தான் அமைந்து பல பிணிகளுடைய பெயர்களையும் அவைகளுக்குரிய ஔஷத முறைகளையும் எளிய நடையில் நன்கு விளக்குகின்றது. அதிக எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகிறது. இதனை எழுதிவைத்தவர் இன்னார் என்று விளங்கவில்லை. ஏடுகள் பல செல்லரிப்புண்டும் முறிந்தும் இருக்கின்றன.

No. 1979. வைத்திய ஸங்கிரகம். VAIDDIYASAṄGIRAHAM.

Substance, palm-leaf. Size, 16 × 1¼ inches. Pages, 103. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Begins on fol. 1*a*. The other work herein is Nayanavidhi or Kaṇvaidyam 37*a*.

Similar to the work described above. The antedotal medicines and Mantras for curing certain poisonous bites and the medicines for curing 96 kinds of eye-diseases are also described herein.

Beginning:

வைத்தியஸங்கிரஹம் வசனம்.

பாலக்கிரி[கை]யை.

பிள்ளைபிறந்த ௴ நாளி[ல்](லு.ம்), ௴ மாத[தை]யி](த்தி)லும், ௴ வருஷத்தி[யி]லும் அ(க)ம்படி யென்னும் பேய் அணையும். அதின்குணம்— நாய்கடிக்கும், வயிறுகழியும், வெதும்பும், குளிரும், கண்குதறிநோம், பல காலும் . . . விடும் கண்விழியாது, வயிறுகழியும். அதுக்குப்புலி—உளுத்தஞ்சோறும், தயிரும், (டு) உழக்கு அரிசி பொங்கி (டு) கறி, பிண்ணாக்கு இவைகள் புத்தகவிவிட்டு ஐயனார் காடு காள ? தோட்டத்திலே மாலை நேரம் வைக்கத்தீரும்; யந்திரம் கோ பலியிட்டுக் கட்டவும். யந்திரம்—

* * * *

கு[ழி](ளி)தோஷத்தின் குணம்.—பிள்ளை யிளைத்துப் போகும், வாந்திபண்ணும், உச்சிக் குழிவிழும், வயிறு தண்ணீராகக் கழியும், கண் வளையமிட்டு இருக்கும், உள் விழுந்திருக்கும். பிள்ளை மெத்தவும் இளைத்துப்போம். இது கு[ழி](ளி)தோஷத்தின் குணம் ஆகும். இதற்கு ப் பரிஹாரம்—முடக்கற்றான் வேர் பி[டி](டு)ங்கிக் குளிசமாடிக் கட்டவும். சங்கிலை, விடத்தேர்இலை, சிறுபுள்ளடியிலை, விளாவிலை, பலாவிலை இந்த ஐந்துவகை இலையுங் காடிவார்த்து

அரைத்துக். குளி தோஷமான பிள்ளையின் உடம்பிலே தங்கிட்டு வெந்நீர் வார்க்கவும். (பின்னர்) எருமைக்கொம்பைச் சீவிப் புகையிடவும். கோழி பலியிட்டுக் காட்டு மல்லிகை வேர் பிடுங்கிக் குளிசமாடிக் கட்டவும்.

*   *   *   *

பேய்நாய்கடிக்கு மருந்து.—விளி? விரை அரைத்துப் பழம் மோரில் குடிக்கவும். வேறு—முதலைப் பல்லும் நாயின் எலும்பும் உரைத்துக் கண்ணிவிட மேலே தலைவிட . . . .

*   *   *   *

பாம்பு விஷம் தீண்டினால் மருந்து.—பச்சைப்பாம்பு உலர்த்திப் பொடிசெய்து கூட கழற்சிவேருங் கூட்டி வைத்துக்கொண்டு பாம்பு விஷமானால் உள்ளே கொள்ள(வும்) மருந்து விழுந்தால் நாசியில் குழல்வைத்தூத மீளும். வேறு—எருக்கம்பாலில் பனைவெல்லம் குழைத்து விழுங்க மீளும். வேறு—பசுவின் நெய் காய்ச்சி மிளகு பொடிசெய்து போட்டுத் தூவிக்குடிக்க மாறும். வேறு—இலுப்பைப் புண்ணாக்குப் பொடிசெய்து பசுவின் நெய்யில் கொடுக்க மாறும் . . . .

*   *   *   *

End:

வெறிப்பைத்தியத்துக்கும் ஞானப்பைத்தியத்துக்கும் மருந்து.—கத்தாழஞ்சாறு (௪), நரிப்பயிற்றிலைச் சாறு, எருமையல்குற்சாறு (௨), தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு (௪), நிலப்பாகிரிச்சாறு (௨), கார்ப்பு (பு)ளிப்புத் தவிர்த்து முழுகவும்.

முசுமுசுக்கைச்சாறு (௨), பொன்னாங்காணிச்சாறு (௪), சிறுகீரைச்சாறு (௨), கீழாநெல்லிச்சாறு (௨), கழற்கோடி யிலைச்சாறு (௪), பிரமியிலைச்சாறு (௨), பர்ப்பாடகம் அரைத்தசாந்து நார்த்தங்காயளவு, ஓரிதழ்த் தாமரைச்சாறு (௨), குமிழம்பழச்சாறு (௨), பழம்பாசிச்சாறு (௨), வேரில்லாக்கொத்தான் சாறு (௨), முலைப்பால் படி (௧), வட்டத்திருத்திச்சாறு (௨) நெ . . . ம்பு நெருஞ்சிற்சாறு (௨) நறுந்தாளியிலைச்சாறு (௨), பாகிரியிலைச்சாறு (௨), நன்னாரி சமூலமாகவும் (௨), ஆவின்பால் (௫), கழுதைப்பால் (௨), எலுமிச்சம்பழச்சாறு (௨), தேத்தாங்கொட்டை யரைத்த சாந்து நாரத்தங்காய் அளவு, சாதிக்காய் (௩௰), ஏலம் உழக்கு . . கோரோசனை நாற்கழஞ்சு செண்பகப்பருப்பு (௨), கழஞ்சு, கிராம்பு (௪) நாற்கழஞ்சு தாணிக்காய் (௨௰), கல்நார் நாற்கழஞ்சு, கருங்குங்கிலியம் உழக்கு, சந்தனம் நாரத்தங்காயளவு, இவைகளிலே கடை மருந்துண்டானவையெல்லாம் பசுவின் பால் வார்த்தரைத்துக்கொள்ளவும். மற்றும் பச்சிலை மருந்துகள் உண்டானவை யெல்லாம் சமூலங்கொண்டுவந்து சாறுகொள்ளவும். சாறுகள் எல்லாம் (கஷாயமேற்றிப்)? பசுவின் நெய் குறுணிவிட்டுக் கடைச்சரக்குகள் எல்லாம் அரைத்துக் கரைத்து நெய் சிறுதீனை வா[ணா]லாமே.? [சாத்திரவேதி] (சகச்ர பேதி)யுங் கருஞ்சீரகமும், கருங்குங்கிலியமும் (நொருங்கப்) பொடிசெய்து வெருகிற மருந்துள்ளே தூவி மெழுகு பதத்தில் வடித்து நாள் மூன்றுக்கு ஒரு கரண்டி நெய் கொள்ளவும். சர்க்கரையும் நெய்யுங் கலந்து கொள்ளவும். நெய்கொண்ட நாலு நாழிகைக்கு மேல் ஒரு செங்காய் பனித்

தண்ணீர் குடிக்கவும். பத்தியம்—பொன்னாங்காணிச்சாறு, பூசனிக்காய், வெள்ளாட்டு உப்புக்கண்டம், சிறுகீரைச்சாறு, காடைக்குருவி கழுத்துங் கருவாடும், மீனும், ஆவின்பாலும், நெய்யும் ஆகும்.

(கு-பு.)—

இந்த வைத்தியக் கிரந்தம் வசனத்தால் அமைந்து பலபிணிகளுடைய பெயர் வகைகளையும், அவைகட்குரிய பல நன் மருந்துகளையும் பாம்புவிஷ மாதிய சில விஷங்களுக்குச் சிறந்த ஔஷதங்களையும், சில மந்திர யந்திரங் களையும், கண் வைத்தியத்திற்குரிய சில கலிக்கம் முதலியவைகளையும், இன் னும் நசியம் முதலான பல்வேறு மருந்துகளையும் விரிவாக உணர்த்துகின் றது. நடுவில் கண்ணோய் (கக) தொண்ணூற்றாறுக்கும் மருந்துகள் கூறப் பெற்றுள்ளன. அதன்சார்பாக ' நயனவிதி ' என்ற பெயரான் 37-வது ஏடு முதல் ஐந்தேடுகளில் (குஎ) பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. இன்னநூலைச் சார்ந்தன எனப் புலப்படவில்லை. பிழைகள் மிகுந்துள்ளன. ஏடுகளிற் பல தொடர்பில்லாமல் இடையிடையே இல்லாமல் இருக்கின்றன. ஆயினும் உள்ளவரையில் உபயோகமாகும்; அதிசிதிலம்.

No. 1980. மாட்டு வாகட சாஸ்திரம்.

MĀṬṬU VĀKAṬA ŚĀSTIRAM.

Pages 22. Lines, 25.

Begins on fol. 49-*a*. of the MS. described under No. 73.

Complete.

Describes the " mantras " and medicines for curing cattle diseases.

Beginning :

மாட்டு வைத்தியம்.

சிரகிரி மருவிய கரிமுகன் இருகழல்
பரவினர் கருதுதல் விரைவினில் வருமே. (க)

புல்லும் தண்ணீரும் ஓதிக்கொடுக்க மந்திரம் :—

ஆளுங் கணபதியே யடியே[ன்](ம்) தின்றன்னை
நாளு மலர்கொண்டு நாம் பணிவோம்
ஓம் மாதங்கி ஓம் பரமேசுவரி பார்வதி லக்ஷ்மி.

கொம்போடேவந்த கோமாரியதள் வெக்கை
சீதவெக்கை தோன்றும் எப்பேர்ப்பட்ட
வியாதிகளெல்லாம் நாவேறிய புல்லோடுந்
தண்ணீரோடும் போக போக சுவாகா. (உ)

மாட்டுக்குத் தேளேரிக்கு மந்திரமும் மருந்தும் :—

எண்ணெயும் எருக்கம்பாலுங்கலந்து சூரிய உதயத்துக்கு முன்னே இடது முன்னங்காலிலும், முழங்காலுக்கு மேலிலும் இடவேண்டும்; பின்பு இதை ஓதவேண்டும் :—

ஏகதன் வாழ்க, ஏகதனுசாரிவாழ்க, குரு, மூக்கைப் பற்றிய வெப்படையப்பன், நெஞ்சுபற்றிய விடையப்பன், ஏர்மாலைபற்றிய விடையப்பன், கார்வாயிற்பற்றியவிடையப்பன், சற்றே இடதுகாலில் பெயர்ந்திறங்கிப்போந்து முஞ்சுப்போகப் போக சுவாகா. இப்படி மந்திரித்தபின் சூட்டுக்கோலினுற் சூடவேண்டும்.

End :

புல் முதலியவைகளைத்தின்னுமலும் மேயாமலும் தண்ணீர் குடியாமலும் மயங்கித் தியங்கியிருக்குமாகில் மந்தமென்றுபெயர், மருந்து :—வாழைக்கட்டை (க), பச்சைமிளகாய் பலம் (5), பிரண்டை பலம் (க½), கருஞ்சீரகம்பலம் (க), ஓமம் பலம் (2), காயம் பலம் (வ) சேராங்கொட்டை பத்து, இவையெல்லாம் ஒன்ருய்அரைத்து மூன்று சிறு தேங்காய் ப்ரமாணம் உருண்டைசெய்து கொடுத்துச் சாமத்துக்குமேல் வைக்கோலும்தண்ணீருங் கொடுத்து மறுநாட் காலையில் பச்சையரிசியும் பச்சைப்பயறும் கலந்து கஞ்சி காய்ச்சி வார்க்க வேண்டும்.

வாய் காந்தியினுல் இரையெடாமன் மயங்குமானுல் பக்குவம் ;—அளிந்த வாழைப்பழம், நெய், சர்க்கரை இம்மூன்றையுங்கூட்டிப் பிசைந்து கொடுக்கச் சொஸ்த்தம் ஆகும் ; மாட்டு வைத்யம் முற்றும்.

(கு-பு.)—

மாட்டு வைத்தியத்தைச் சார்ந்து அவைகட்குறும் மாந்தம், கோமாரி வெக்கை, விஷகடி முதலிய பல்வேறுவகை நோய்கட்கு மருந்தையும் அத்தோடுடன் ஓதும் மந்திரத்தையும் விளக்குகின்றது ; இது அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை. முற்றும்உள்ளது, வசனத்தால் அமைந்துள்ளது. நடையில் பிழையுளது.

No. 1981. அஷ்ட கர்ம யோகம்.

AṢṬA KAṘMA YŌGAM.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 57 *a* of the MS. described under No. 250 ante.

Complete.

Deals with certain mystic letters which are considered useful in connection with the different ways of causing harm to one's enemies.

Beginning :

அரிந்த சடைச் சிவனுடைய வெழுத்தினுலே
பூட்டுகிறேன் அஷ்டகர்மம்புக [ள] (ல) க்கேளு
மரிந்து நின்று வசி மசி நீயென்று மோத
மாரணமாஞ்சக மனைத்து மகத்தான வித்தை
பரிந்து நின்ற நசி நசிநீ யென்று மோதப்
பார்க்கையிலே ரசஞ்சாகும் பாரு பாரு
விரிந்து நின்ற வசி வசி நீ யென்று மோத
மகத்தானமோகனமாம் வரிசை பாரே. (க)

வரிசையுடன் வங்கு சிங்கு வென்று சொல்ல
வளம்பெறு முச்சாடனமா மாட்டியமது
பரிசையுடன் வா வா வென்று வாங்கப்பா
வசியம் சகவசியம் பாரு பாரு
வரிசையுடன் சிவ சிவா வென்று வாங்க
விழுமினு சோமினு வேனுங் கோபம் ?
கிரிசையுடன் மாவாவா வென்று ஆட்டக்
கயிலையுள்ளோன் சகமேழுங்காணு மோகோ. (உ)

End :

உன்னிப்பார் அண்டாண்டந் தீயாய்க்காணும்
உன்னுடம்பு விளக் கொளியா மொன்று மில்லை
பேணிப்பார் சந்திரனுஞ் சூரியனு மாண்டார்
பேசாதே சுழிமுனையில் பேசிக்கூடு
ஆணிப்பார்மூன்று மொன்றாய் விதியொடுங்கும்
ஆகாகா நாலுக்குள் அடங்கும்பாரு
பேணிப்பார் பழுவாய்க்காணு மேறையிலே ?
தடத்தோடும் எழுத்தும் பாரே. (அ)

வெற்றி வேல் உற்றதுணை.

கு-பு.)—

இந்நூல், சித்தர் நூலைச்சார்ந்து யோகசித்தியாய்ச் செய்யும் உச்சாடனம் ஆகர்ஷணம் வித்வேஷணம் வசியம் தம்பனம் மோகனம் பேதனம் மாரணம் ஆகிய ஆபிசாரிக கர்மங்களுக்கு உரிய பீசாட்சர மந்திரங்களை நுவல்கின்றது. இயற்றியவர் இன்னாரென்றுவிளங்கவில்லை. எட்டுப்பாடல்களால் அமைந்துள்ளது. முற்றும் உள்ளது. எழுத்துப்பிழை மிகப்பொதிந்துள.

No. 1982. சித்தராரூடம் (நொண்டி).

SIDDHARĀRŪḌAM (NOṆḌI)

Substance, palm-leaf. Size, 11½ × 1 inches. Pages, 74. Lines, 7—8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete.

Same work as that described under No. 174 (b) of the Triennial Catalogue of Tamil MSS. Vol. II.

(கு-பு.)—

சித்தராரூடம் என்னும் இந்நூல், பலவகை நாகங்கள் இன்னும்பலவகை விஷசந்துக்கள் முதலியவற்றால் உண்டாகும் விஷங்களுக்குப் பல்வேறு மூலிகைகள் பச்சிலைகளிவைகளைக் கொண்டு மந்திர பூர்வகமாய் இயற்றும் வைத்திய முறையை உணர்த்துகின்றது: இயற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லை. இதில் பாம்புகளின் சாதிகளும் அவை உறையுமிடங்களும் விளக்கமாகக் கூறப் பெற்றுள்ளன. அடி முதலிய யாகு பாடு இன்றியே நெடுகே விருத்தம் என்று கூறித்தண்டாகாரமாய்ப் பலபிழைகளுடன் எழுதப்பெற்றிருக்கிறது. முற்றுமிருக்கிறது. மூவருடக்காட்லாக்கு 174 b நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும்.

No. 1983. சிவஜாலத்திரட்டு.

ŚIVAJĀLATTIRAṬṬU.

Substance, palm-leaf, Size, 12¼ × 1¼ inches. Pages, 90. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Gives details for the performance of various kinds of magic. Deals also with the "mantras" and medicines for curing different diseases and for counteracting witchcraft etc. It appears that the work is divided into 4 kāṇḍas and the portion contained in this MS. is the 4th kāṇḍa.

Beginning :

ஹரி : ஓம் : நன்றாக.

சிவஜாலத்திரட்டில் நாலாங் காண்டம் மாந்திரீக வித்தை.

மூன்றானே முப்பாழே யாதியந்தம்
    முடியான பொதிகை வரைக் கடிவாரத்தில்
தோன்றாத மூலிகையுந் தோன்றுந் தோன்றுஞ்
    சுருதி முடித்திட மதுதான் சோதிபாரு
வான்றாய வளர்ந்துநின்ற விருட்சமுண்டு
    மருந்துபல மூலிகைக ளனேக முண்டு
குன்றாளுங் கும்பசோரி மனோன்மணித் தாய்
    இருந்திந்த மாந்திரீகம் இயம்பினாளே. (கூாக)

நாளிலே யனுபோக வாசியாலே
    நாசன்மமான கனிவாழையாலே
பாழிலே பொன்சுழினையளி . . னாலே
    பதியிருந்தவண்ட சராசரங்களாகி
எழிலே விட்டகுறை நாதவிந்து
    இந்திர சாலங்களா யிந்திரியமாகிக்
கோளிலே யிலங்கு நவக்கிரகமாகிக்
    குவலயத்தோரிக் கருவைக் கொண்டவாறே. (கூாஉ)

கொண்டவனே விட்டதிரோதாயி காப்பு
    குமரி திருவாலை பரமேசுவரிதான் காப்பு
விண்டவனைப் பலியாத வேதங் காப்பு
    விநாயகனைக் கெணியாத ? மேலோர் காப்பு
கண்டவனை நெஞ்சில் வைத்த குருவே காப்பு
    காரணமும் பூரணமுமாய்க் காண்ட காப்பு
புண்டரீக மலருதித்த பிரமன் காப்பு
    புராதனமே கந்தன் குருபரன் காப்பாமே. (கூாங)

*   *   *   *

End:

மதமேருஞ் சித்தருக்குச் செயதி சொல்லி
மால்விடையோன் திருவுளத்தாற் சாபந்தீர்ந்து
இதமாக விந்நூல்தான் ஆயிரத்திருநூறும்
இதிற்சேர்ந்த பூரணசூத்திரமும்பாடிச்
சதமாக திகண்டு இருநூறுஞ் சொன்னேன்
தப்பாமற் பாடின வெண்ணூயிரமும் பார்த்து
விதமாகக் காண்ட நாலாகச் செய்து
விளம்பினேன் வைத்தியமும் வாதந்தானே. (௲௱௬௭)

வாதமுடனிந்திர மாஜாலவித்தை
மாந்திரீக மானதுறையிது முந்நூறு
போதமுடன் மூன்று முந்நூறுமூன்று காண்டம்?
புலத்தியனேயாக வாயிரத்திருநூறு
ஆதரவாய் வகைகாண்டம் நாலுஞ்சொன்னேம்
ஆதிதொடுத்தந்தம் வரைக் கோவைநூலாய்ச்
சாதகஞ் செய்திருந்த பெரியவர்கள் பாதந்தன்னிற்
றெண்டனிட்டு நின்றுதானே வாங்கே. (௲௱௬௮)

வாங்கினூற்பின் பொருவர்கை-கொடாதே
வரைமுனிவ ரீசனுடைம சவிப்பாரப்பா
ஏங்கிநீ யலைவாயடா பிறவிதோறும்
இதனிலுள்ள கருவுனக்குப் பலியாதப்பா
சாங்கமாயுள தேகம் நரகில் வீழ்வாய்
தலைதெறிக்குமிந்தநூல் வெளியிற் போட்டால்
தீங்குவரும் முக்காலு முனக்குச் சொன்னேன்
சிவனுரைத்த சாலநூற்சித்தி முற்றே. (௲௱௬௯)

சித்திபெறுந் தேவருஷி குகைகடோறும்
திருவருளா வடக்கிவைத்தா ரிந்தநூலைப்
பத்தியுடன் பூசைசெய்து வரைகள் தாண்டிப்
பலன் பெற்றோர் மேன்மேலு மவுனமப்பா
முத்திபெறுஞ் சிவயோகி யானுவிந்த
மொழி தப்பா தலகினிலே நடந்தாயானூற்
சத்தியருள் சகலசித்துங் கைக்குள்ளாச்சு
சத்தியந்தா னிந்தநூற் காண்டமுற்றே. (௲௱௭௰)

முற்றும்; பரிபூர்ணம் முன்றிற்கவும்.
சிவஜாலத்திரட்டு நாலுகாண்டம் ஆயிரத்திருநூறு
எழுதி முடிந்தது முற்றும்.

(கு-பு.)—

இந்தக் கிரந்தம், சித்தர் நூல்களைச் சார்ந்ததாய் அநேக ஜாலவித்தை, செப்பிடுவித்தை, அஷ்டகர்மவித்தை, மல்லிகைப்பூச் செண்டுவித்தை, சலாகைத் தொழில், சத்துருவின் நாவடக்கம் இன்னும் இன்னோரன்ன பலவகை வித்தைகட்குரிய கருக்களையும் மந்திரங்களையும் பிரயோகிக்கும் முறையையும் நன்கு விளக்குகின்றது. இடையிலே பில்லி சூன்னியங்களைத்

தடுக்குஞ் சில மந்திரங்களையும், பல்வேறு பிணிகளைப் போக்கும் மந்திரங்களையும் மருந்துகளையுங் கூறுகிறது. இந்நூலுக்கு நாலு காண்டங்கள் உள்ளனவெனத் தெரிகின்றது. அவைகளில் இச்சிறு பாகம் இறுதியான நாலாங் காண்டமாகும். (கூாக)ஆவது பாடலிலிருந்து தொடங்கப்பெற்றுள்ளது; தொளாயிரத்தோராவது பாடல் முதல் ஆயிரத்திருநூறும் பாடல் வரையிலும் இருக்கின்றனவாதலின் இப்பிரதியில் முற்றும் இல்லை. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இதற்கு முந்தியுள்ள பகுதி, மூவருடக் காடலாக்கில் 250-a நம்பரிலே அகத்தியர் ஜாலத்திரட்டு ஆயிரத்திருநூறு (முதற் காண்டம் முந்நூறு) என்னுமதுவாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

No. 1984. ஒட்டிய நூல் உரையுடன்.

OṬṬIYA NŪL WITH COMMENTARY.

Pages, 19. Lines, 10 on a page.

Begins on fol. 26-a of the MS. described under No. 1692.

Complete.

Same work as that described under No. R. 927-C, but different from the one described under R. No. 353 (a) ante.

கருவில்லா மந்திரமில்லை கருது மந்திரத்தையன்றி
யொருகருத்துலகத்தில்லை யுரைக்குமோ ரெழுத்துமில்லை
வரையுஞ்சக்கிரமேயன்றி வழங்கிய கருவுமில்லை
திருவருள் தெய்வமன்றிச் செகத்தினில் தெய்வமில்லை. (உள)

இல்லமும் பிறப்புமாகி யெங்குமாய் நின்ற தேவி
சொல்லிய கருவுமாறுஞ் சூத்திரமாட்டுந் தேவி
யெல்லம்மையான தேவி யிகத்தினிற் கைகண்டத்தைப்
புல்லியகட்டையொன்றிற் புதுவுருச் செய்யவேண்டும். (உஅ)

உரை:—இரும்பிலிமரம் நிற்கிறவிடத்தில் போய் அந்த மரத்தைச் சுத்தி பண்ணி . . . . . கம்பண்ணி நிவேதனஞ்செய்து புஷ்பஞ்சாத்திச் சாம்பராணிப புகை காண்பித்துப் பரமான்னம், தேங்காய் . . . . இந்தச் சிலையை எல்லம்மாளாக நியமித்துக்கொண்டு . . . . தொழிலுக்குத் தொழில் மந்திரம் செபிக்கவும் . . . . இன்னபடி இத்துணை நாளையில் செய்யவென்று சீட்டை எழுதிக்கூட வைத்து மயானத்தில் வைக்கவும். நோக்குமுன்னே தூக்கியடிக்கும்.

(கு-பு.)—

இந்நூல் ஒட்டியமுனி இயற்றியதென்று தெரிகிறது. இது மூவருடக் காடலாக்கு 353–a நம்பர் பிரதியினும் வேறாகவும் ஷை காடலாக்கு 927-C நம்பர் பிரதியில் வந்துள்ளதாகவும் இருக்கின்றது. மந்திரவிஷயமானது வசியம் முதல் மாரணம் ஈறாகத்தொழில் செய்யும் வகையை விளங்கக் கூறுவது. இருபத்தெட்டுச் செய்யுட்களாலானது. ஆங்காங்கு அட்டகர்மங்கட்குரிய சக்கிரங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் செல்லரிப்புண்டுள்ளன.

No. 1985. ஒட்டிய நூல் உரையுடன்.

OṬṬIYANŪL WITH COMMENTARY.

Pages, 20. Lines, 20.

Begins on fol. 89-a of the MS. described under No. 1180.

Complete.

Same work as that described above, from which this appears to have been restored.

கு - பு.—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. அதைப்பார்த்து எழுதியதென்று தெரிகிறது. இறுதியில் மூலப்பிரதியில் உள்ள இரண்டொரு சக்கிரங்கள் இதில் எழுதப்பெறவில்லை. மிகுதியான பகுதி முற்றும் உள்ளது. எழுத்துப் பிழையுடன் உளது.

No. 1986. சல்லிய நூல் உரையுடன்.

ŚALLIYANŪL WITH COMMENTARY.

Pages, 50. Lines, 10 on a page.

Begins on fol. 1–a of the MS. described under No. 1692.

Same work as that described under R. No. 353 (b) of the Tamil Triennial Catalogue Vol. III.

Complete.

கு - பு.—

இந்நூல் மூவருடக்காட்லாக்கின் 353-b நம்பர் பிரதியில் வந்துள்ளதே. ஆயினும் சிற்சில விடத்துப் பிரதிபேதங்களுடன் காணப்படுகிறது. வடமொழியிலுள்ள 'சல்லியம்' என்ற நூலின் மொழிபெயர்ப்பென்று மாத்திரம் அறியக் கிடக்கிறது. இது, கருவிஷயங்களையும், விஷக்கடி களுக்குப் பலமருந்துகளும் மந்திரங்களுங்கொண்டு இயற்றும் வைத்திய முறைகளையுங்கூறுகின்றது அஷ்டகர்மங்களுக்குரிய தேவதை மந்திரம் சக்கிரம் இடம் காலம் முதலிய வற்றைச் செவ்விதாகவிளக்குகின்றது. சித்தர் நூலைச்சார்ந்தது. நூறு செய்யுட்களான் முற்றுப்பெற்றுள்ளது.

No. 1987. சல்லிய நூல்.

ŚALLIYA NŪL.

Pages, 27. Lines, 7 on a page.

Begins on fol. 13-a of the MS. described under D. No. 1933.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இந்நூல் சித்தர்நூலைச் சார்ந்து கருவிஷயங்களையும் அஷ்டகர்மத்திற் குரிய தேவதை இடம் காலம் மூலிகை முதலியவற்றைக் கூறுகின்றது.

பிரதானவிடயம் மந்திரமும் சக்கிரங்களுமாம். ஒரு சிறிது வைத்தியத்தையுங் கூறுகிறது. இது முன்பிரதியில் வந்துள்ளதேயாயினும் அதில் உள்ள உரைப்பாகம் இதில் காணப்பெறவில்லை. இறுதியில் சில செய்யுட்களும் இல்லை. இறுதியில் ஓரேட்டில் உரை நடையாகச் சில வாக்கியங்கள் காணப்படுகின்றன. நிற்க, இடையிலே ஐம்பது செய்யுட்களுக்கு மேல் 'ஓட்டியம்' என்ற தலையங்கங் கொடுத்து இருக்கிறது. அது தவறென்று தெரிகிறது.

No. 1988. பிள்ளைகட்குத் தண்ணீரோது மந்திரம்.
PIḶḶAIKAṬKUT TAṆṆĪRŌDU MANTIRAM.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 15-a of the MS. described under D. No. 1457.

Describes a 'Mantra', the due repetition whereof is considered efficacious in curing the ailments of children.

Beginning :

சுவாமி குருவே ! மேலப்பட்டுப் பொய்யாத பிள்ளையீரே ! உன்பாதம் நான் மறவேன் (க) ஒன்றுங்கடல், (உ) இரண்டாங்கடல், (௩) மூன்றுங் கடல், (௪) நாலாங்கடல், (௫) ஐந்தாம் கடல், (௬) ஆறுங் கடல், (௭) ஏழாங் கடல், (௮) எட்டாங் கடல், (௯) ஒன்பதாங் கடல், (க0) பத்தாங்கடல், பத்தாங்கடலில் பாற்கடல் பாற்கடலில் வக்கிரகுஞ் சிட்டு வரைவுங் கொசுவும் வவாகாந்திப் பொய் ? கையிலே ஒக்கிட்டுச் சுக்குமாறி, தாய்குற்றம் தகப்பன்குற்றம் அத்தோஷ சமத்தோடே நிற்க. நடுவில் அத்தமிறுவில்லு அத்தோஷ சமத்தோடே நிற்க சுவாஹா.

(கு-பு.)—

இச்சிறு வாக்கியம், பிள்ளைகட்குண்டாகுந் தோஷங்களை நீக்குதற்குரிய தாய் ஓதும் மந்திரம் எனச்காணக் கிடக்கிறது. இரண்டு பக்கங்களில் எழுதப்பெற்றது. இங்குக் காட்டப்பெற்றிருக்கும் ஒரு சிறு பகுதியேயுள்ளது. மிகப்பிழையுடன்உள்ளது.

No. 1989. சிதம்பர கருமம்.
CIDAMBARA KARUMAM.

Pages, 9. Lines, 5 on a page.

Begins on fol. 25-a of the MS. described under No. D. 1211

Incomplete.

A fragment of a work on 'Mantra' Śāstra.

Beginning:

முத்தியிது மோட்சமிது சித்திகோடி
முக்கியமிது சித்தருக்குக் காட்டொண்ணுது
சத்தியிது சம்புவிது வொன்ருய்ச்சொன்னேன்
சகல நூற்கெல்லாந்தான் குருநூலப்பா
எத்திஞர் சாபத்தை நிவர்த்திசெய்து,
எத்திஞர் தீட்சையது வெண்ணியாகப்
பூத்தியுடனிந்நூருன் ஆர்க்குக்கிட்டும்
புண்ணியர்க்கு விதுகிடைக்கும் பொருளைப் பாரே. (க)
பொருளான சாபங்கள் நிவர்த்தியாகப்
பூட்டுகிறேன் சாபமது பொய்யாய்ப்போக
அருளான சிவாயநம அங் உங் கென்று
அப்பனே சீங் கிலீம் ஓம் ரீம் ஐம் என்று
மருளாமல் லட்சமுரு மாட்டு மாட்டு
மைந்தனே சாபங்களெல்லாந்தீரும்
இருளான சாபங்கள் நிவர்த்தியாக
ஏகமாய்ச் சொல்லிவிட்டேன் இயம்பத்தானே. (உ)
ஆயகலைஞ்ஞானமாகி இதமகிதமிரண்டுக்குமுன்னேதோன்றி
எதிரில்லாத் தோற்றத்தொடுக்க மெழுவகையுமாகி
ஏகமாய் வெவ்வேறே யியல்புமாகி யெதிரில்லா வஞ்செழுத்தின்
[மகிமைதன்னை
ஏத்துறேன் ஓவ்வொன்றிற்கு மிருபத்தைந்தே (க)
அஞ்சுமுக மொவ்வொன்றுக் கிருபத்தஞ்சும்
அறுபத்துநாலு முகமாடி நிற்கும்
பஞ்சமுக மேலிருந்த பூரணத்திற் சேர்க்கும்
பாராளு வாழுமாறுதலமும் பாயும்
துஞ்சாது சோராது இறைந்திடாது
சுத்தருக்கும் உடன்சித்தி சொல்லக்கேளு
பிஞ்சாகுங் காயுங் காணியுமாகும்
பேசரிய பலகோடி யண்டமாமே. (உ)

End:

ஆமப்பா மாயாத வட்சரத்தைக்கேளு
அப்பனே ஹ்ரீம் நமசிவாயமோதி
நாமப்பா வெப்பதத்தைக்கேட்கவேதான்
நயமாக வப்பதத்தைத் தருகுங்காணுந்
தாமப்பா ஈயும் நமசிவாயஞ் சொல்லில்
சாதகமாம் புத்திவித்தை யிரண்டுமுண்டாம்
போமப்பா வமுத பஞ்சாட்சரத்தைக்கேளு
புகழாக கிலீயும் நமசிவாய வென்னே. (கூ)

(கு-பு.)—
இந்நூல் மந்திர சாத்திரத்தைச் சார்ந்ததாயுள்ளது. அஷ்டகர்மங்களை நுவலுகின்றது எனத்தெரிகிறது. மிகப்பிழையுடன் உள்ளது. முதலில் தனித்த இரண்டு பாடல்களும் பின்னர் இந்நூலில் ஐந்து (5) பாடல் வரையுமே யிருக்கிறது. இத்தூணத்தென்றும் இன்னுரியற்றியதென்றும் ஒரு செய்தியும் விளங்கவில்லை. ஏடுகள் மிகச் சிதைந்திருக்கிறன.

சோதிடம்: Astrology: Sāmudrikam and Svaraśāstram.

No. 1990. இருது சாஸ்திரம்.
IRUTU ŚASTIRAM.

Pages, 30. Lines, 7 on a page.

Begins on fol. 154 (a) of the MS. described under No. D. 1918.

Complete.

Similar to the work described under No. R. 238 (i) of the Tamil Triennial Catalogue, Vol. II.

Beginning :

(இருது சாத்திரம்) இருதுவாகிற பெண்களறியும்படி:
மாதப்பலன் வருமாறு:—

சித்திரை மாதம் பெண்கள் இருதுவானால் புருஷனுக்கு ஆகாது. வைகாசி மாதம் ஆகில் சுகமாய் இருப்பாள். ஆனி மாதமாகில் யோகியா யிருப்பாள். ஆடிமாதமானால் பல பெயர்களை இச்சிப்பாள். ஆவணிமாத மானால் புத்திரசம்பத்துண்டாயிருப்பாள். புரட்டாசிமாதமானால் புத்திர சம்பத்துண்டாயிருப்பாள். ஐப்பசிமாதமாகில் விதவையாயிருப்பாள். கார்த் திகைமாதமாகில் பலபேரைத் தூஷிப்பாள். மார்கழிர்ஷமாகில் நல்ல பிள்ளை களைப் பெறுவாள். தைமாதமாகில் புண்ணியவதியாய் இருப்பாள். மாசி மாதமாகில் தர்மம் உடையவளாயிருப்பாள். பங்குனிமாதமாகில் அதிகப் பிள்ளைகளைப் பெற்று வாழ்வாள் என்க. மாதப்பலன் முற்றும்:

நட்சத்திரப்பலன் அறியும்படி. அசுவினி நக்ஷத்திரமானால் தர்மம் உண்டாய்ப் புத்திரன் உண்டாய்ப் புண்ணியவதியாய் இருப்பாள். பரணி யாகில் அசல்வீடு வாழப் பொருந்தாள். துர்ச்சனியாயிருப்பாள். பல புரு ஷர்களாலே இரண்டு பிள்ளைகளைப் பெறுவாள்.. கார்த்திகையாகில் மிடிய ளாய்த் துர்ச்சினியாய் மலடியாய் இருப்பாள். உரோகிணியானால் ஆசாரம் உள்ளவளுமாய் உறவுக்கு நல்லவளுமாய்ப் பர்த்தாவுக்கும் நல்லவளு மாய் வீடு வாசல்களைச் சிருங்காரிக்கவல்லவளுமா யிருப்பாள். . . . . இரேவதியானால் தனவதியாய்ச் சம்பத்துண்டாய்த் திருத்தமுடையவளாய்ச் சீராட்டுடையவளாய்ப் பிள்ளைகளைப் பெறுவாள். என்க.

End :

இருக்கையிலே கண்டால் நன்றாய் வளர்ந்துகொண்டிருக்கவும் போக பாக்கியமுமாய் ஐசுவரியமும் . . . . புத்திர ஸம்பத்தும் பூஷண வஸ்திரமும் அலங்காரமு முண்டாய் இருப்பாள். குதிரையின்மீது இருக்கச் செய்தே கண்டால் வாகன யோகமுமாய் ஐசுவரியமும் போக பாக் கியமும் ஏவற்றொழில் செய்வாளுமாய் இருப்பாள். குளக்கரை ஆற்றங் கரைகளிற் கண்டால் வெகு யோகமும் வெகு திரவியமும் உண்டாயிருப் பாள். கொல்லைத் தோட்டங்களில் கண்டால் காணி கரை வெகு போக பாக்கியங்களுடனே இருந்து வாழ்வாள் என்ப: இருது சாத்திரம் முற்றும்.—

அஸ்த்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் திருவோணம் அவிட்டம் சதயம் அசுவதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி மூலம் பூசம் உரோஹிணி இரேவதி மிருகசீர்ஷம் இந்த (கள) பதினேழு நட்சத்திரங்களும் மஹா உத்தமம். மகம் திருவாதிரை கிருத்திகை கேட்டை புனர்வஸு இந்த (ரு) ஐந்து நட்சத்திரங்களும் ஒரு பரியாயம். ஆயிலியம் பூரம் பூராடம் பூரட்டாதி பரணி இந்த(ரு)ஐந்து நட்சத்திரங்களும் சாமான்யம் என்றறிக.—

கு - பு.

இச்சிறு நூல் சோதிடத்தைச் சார்ந்ததாய்ப் பெண்கள் தாம் பிரதம ருதுவாகுங் காலத்திலே இன்னன்ன காலத்திலே இருது மதிகளானால் இன்னன்ன சுபாசுப பலன்கள் உண்டாகும் என்று அறிந்து கொள்ளும் வகையை வசனத்தான் உணர்த்துகின்றது. இதில் மாதம், நட்சத்திரம், வாரம், திதி, யோகம், கரணம், இராசி, குறிகள், வஸ்திரம் ஆகிய அநேக பிரிவுகள் கொண்டு சுபாசுபபலன்கள் தெளிவாக விளக்கப்படுகின்றன. இது பிழைகளுடன் காணப்படுகிறது. இறுதியில் 169-ஆம் ஏடு முதல் 173-ஆவது ஏடு வரையில் வைத்திய விஷயமாய் இரண்டொரு மருந்து முறை எழுதப்பெற்றிருக்கின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 1991. இலக்கின பலன். (ஆரூடம்).

ILAKKINAPALAN. (ĀRŪḌHAM).

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 76-a of the Ms. described under No. D. 578, Vol. II.

Similar to the work described under No. 243 (c) of the Tamil Triennial Catalogue, Vol. II.

Beginning :

இலக்கின பலன் பாட்டு பனிரண்டு.

மேடத்தில் வந்துநின்று விரவிய கருமங்கேட்கில்
காடுற்ற கறுவலென்னுங் கையிலேதழும் புண்டென்றும்
தேடுற்ற பொருள்சிகப்பு திடனுடன் வந்துசேரும்
காடுற்ற குழலின்மாதே கைவலஞ் சொல்லுந்தானே. (க)

கருதிய கருமம்நன்றே கலைமகள்துணை யுண்டென்றும்
பெறுவதோர் லாபஞ்சேரும் பெருமையும் மிகவேயுண் டாம்
உரியவன் கருஉல்நீளல் உண்மையாய் நம்புநீயும்
தருமெனச் சிகப்புமேவுந் தாழ்வில்லா ருஷபந்தானே. (உ)

திங்கள்மூம் மாரிபெய்யும் தெருவெலாங் கன்னல்செந்நெல்
அங்கொரு வினையுமில்லை யானதோர் மனையெடுக்க
செங்கையிற் குழவியுண்டாம் செல்வழி செயமேயாகும்
பொங்கிய பொருளும்சேரும் பொருந்திய கடகந்தானே. (ச)

End :

பிணியது விட்டுப்போகும் பிறந்ததோர் விசேடம் பொய்யாம்
அணிமலர் கையாள்சேர்வன் ஆனதோர் பயிரும்வாய்க்கும்
மணிபல பொன்னும்முத்தும் வாள்பணி பூணலாகும்
தணிபுமே மனமுந்தோளுந் தாழ்வில்லாக் கும்பந்தானே. (கக)

ஆனதோர் கருமமாகா வகவில்லை குறையுங்கண்டாய்
சேனையும் படையுமாகச் செல்வழி தீதேயாகும்
ஊனமாய் ஒருவன்சென்று வொண்டொடி வரவுமில்லை
போனவர் வருவாரிப்போ பொருந்திய மீனந்தானே. (கஉ)

* * * * * * * * * * * *

* * * * * * * * * * * *

கு - பு.

இந்த நூல் சோதிஷத்தில் ஆரூடவகையைச் சார்ந்து பிரஸ்நை யில் மேடம் முதல் மீனம் வரை இன்னின்ன இராசியானால் (இலக்கினம்) ஆனால் இன்னின்ன பலன்கள் உண்டாம் எனக் கூறுவது. இது மகடூஉ முன்னிலையதாய் அமைந்துள்ளது. பன்னிரண்டு இலக்கினங்களுக்கும் பன்னிரண்டு பாக்களாய்ப் பலன் கூறப்பெற்றுள்ளது. முற்றுப்பெற்ற தென்றே தோன்றுகிறது. இயற்றியவர் இன்னாரென்றறிய இயலவில்லை. இப்பிரதி படித்தற்கு அரியதாய் அத்துணைச் சிதைந்துள்ளது. இறுதியில் சோதிட விஷயமாய்ச் சில வடமொழிச் செய்யுட்கள் இருக்கின்றன. இது மூவருடக்காட்லாக்கு 243 (c) நம்பர் பிரதியின் நூல் போன்றது.

No. 1992. உள்ளமுடையான் உரையுடன் (பீமேசுவரம்).

ULLAMUDAIYAN WITH COMMENTARY (BHĪMĒŚUVARAM).

Substance, palm-leaf. Size, 13¼ × 1¼ inches. Pages. 251. Lines, 6-9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1 *a*. The other works herein are Tāṇḍavamālai with commentary 126 *a*. Grahasputam with commentary 152 *a*. *Jātakālaṅkāram* 195 *a*.

Complete.

Same work as *that described* under No. 31 c. of M. Seshagiri Sastriyar's Report No. 1.

கு - பு—

இந்நூல் சேஷகிரி சாஸ்திரியார் ரிபோர்டிலே 31-c நம்பரில் வந்துள்ள நூலாகும். இது சோதிடத்தைச் சார்ந்தது. ஆக்குவித்தோன் பெயரான் பெயர் பெற்றது. முந்நூற்றெழுபத்துமூன்று பாடல்களால் அமைந்திருக்கின்றது. இதில் நட்சத்திர உரிச்சொல் நிகண்டு கிரக உரிச்சொல் நிகண்டு இராசி உரிச்சொல் நிகண்டு என்னும் இவைபோன்ற பல பிரிவுகள் கொண்டு பல விஷயங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. தசாபலம்வரையும் முற்றும் உள்ளது. சிலர் இதனை "உள்ளமுடையான் சூடாமணி நிகண்டு" எனவும் வழங்குவர். இது, முதலில் நட்சத்திரம், இராசி, கிரகம், முதலாயவற்றுக்கு உரிய பலபெயர்களையும் அடைவே நுவலுவதால் அங்ஙனம் பெயர் பெறுவதாயிற்றுப்போலும். இதன் உரையை "பீமேசுவரம்" என வழங்குவர். ஏடுகள் மிகவும்சிதைந்திருக்கின்றன. பிழையதிகம்.

No. 1993. உள்ளமுடையான் உரையுடன் (பீமேசுவரம்).

UḶḶAMUḌAIYĀN WITH COMMENTARY (BHĪMEŚUVARAM).

Substance, palm - leaf. Size, 12 × 1 ¼ inches. Pages, 354. Lines, 6—8 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

Same work as the above.

கு - பு.—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதேயாகும்; இப்பிரதியில் இது உரையுடன் முன் பிரதியிற்போல தசாபலன்வரை முற்றும் உள்ளது. பாடபேதம் ஆங்காங்குக் காணப்படுகிறது. எழுத்துப் பிழைகள் மிகவுள. நூலுக்கு முன்னரே, இந்நூலில் வந்துள்ள நாளுரிச்சொல் கோளுரிச்சொல், இராசியுரிச்சொல் ஆட்சி யுச்சம் நீசம் பகை முதலிய சில சிறுபிரிவுகள் இரண்டாம் பிரதியாகத் தனியே 1—8 வரையிலான ஏடுகளில் எழுதப் பெற்றுள்ளன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன. இதற்கும் முன் பிரதிக்கும் செய்யுளெண்ணிக்கையில் மாறுபாடு உள்ளது.

No. 1994. உள்ளமுடையான் உரையுடன்.

UḶḶAMUḌAIYĀN WITH COMMENTARY.

Substance, palm - leaf. Size, 11¼ × 1¼ inches. Pages, 290. Lines, 8—9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Complete.

Same work as the above.

கு • பு—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்பிரதிகளில் வந்துள்ளவரையிலும் இருப்பதோடு ௬௱௭௪ ஆம்பாடலிலிருந்து அவைகளிலே இல்லாத சோதிட விஷயமாகிய பல்வேறு விஷயங்களைக் கொண்டதொரு பாகம் (சாகூடிஅ) ஆம் பாடல்கள் வரையிலும் உள்ளது ; அது இதைச் சார்ந்ததென்றே தோற்றுகிறது. செய்யுள் எண்களும் தனியாக வாரம்பிக்காமல் தொடர்ந்தே குறிக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் சிலப்பாக்களுக்குக் குறிப்புரையும் சிலவிடத்துப் பொழிப்புரையுமாகவுமோர் உரையுமுள்ளது. நூல் முடிந்த பின்னர் (9) கிரகங்களுக்கும் உறவும் பகையும் ஆட்சியும் சாதிவகையும், இன்னும் இவைபோன்ற பல்வேறு விஷயங்களும் வசன நடையான் விளக்கப்பட்டுள்ளன. ஏடுகள் மிகவும் சிதலுற்றுஞ் சிலவேடுகள் முறிந்து மிருக்கின்றன. எழுத்துப்பிழை மிகவுள.

No. 1995. உள்ளமுடையான் சூடாமணி உரையுடன்.

ULLAMUDAIYAN CŪDĀMAṆI WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 17¼ × 1½ inches. Pages, 120. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete in 226 Stanzas only.

Same work as the above.

Beginning:

கணிதநூல்.

விளம்பிய சகாத்த வாண்டாயிரத்திருநூற்றின் மிக்க
வளம் புகழ்ப்பாண்டிமங்கை மாதவனரியவன் சேய்
இளங்கொடி மடவார்காமன் இயற்றிருக்கோட்டி நம்பி
உளம்புக[ள்](ழ்) கணிதநூலை யுரைத்தனனுலகுக்கெல்லாம். (க)

கு • பு.—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் இருநூற்றிருபத்தைந்து பாடல்வரையுமேயுள்ளது. சில பாடல்கள் உரையின்றியிருக்கின்றன. அப்பிரதிகளிற் காணப்பெறாத வொரு மேற்காட்டிய "விளம்பிய சகாத்தவாண்டாயிரத்திருநூற்றின்மிக்க" என்கிற பாடல் காணப்படுகிறது. உரையிலும் மூலத்திலும் பல வித்தியாசங்கள் உள. ஷை பாடல் 2000 ஆம் நம்பரில் வந்துள்ள "கிரகஸ்புடம்" என்ற நூலின் இறுதியிற் காணப்பட்டுள்ளது. இதனால் பாண்டி மங்கையில் உதித்தவரான "அரியவன்" என்பவரது மகனாராய "திருக்கோட்டி நம்பி" என்பவரால் இந்நூல் ஆக்கப்பட்டதென்று ஊகிக்க இட முளது. பிழையுள.

நடுவில் 21வது ஏடு இல்லை. ஏடுகள் மிகச் சிதைந்திருக்கின்றன.

No. 1996. கப்பல் சாஸ்திரம் உரையுடன்.

KAPPALŚĀSTIRAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 11⅛ × 8⅛ inches. Pages, 79. Lines, 18 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins.—on fol. 1. A. The other works herein are—Tērūrnda-purāṇavacanam. 81. Aḻakēśwararājan kathai 131.

Complete.

Contains astrological matter relating to ships; at the end prognostication about ships, with "the Five Birds" for symbols, is also explained.

Beginning:

கப்பல் சாஸ்திரம்.

கப்பல் சாஸ்திரத்தை எஜமான்கள் உத்தரவுப் படிக்குத் தயங்கம்பாடியில் முத (ன்)மையாக தூசாஉம்ஹூப் தினமாரக்காது பாசியான ? காலங்கியராய பிள்ளை வீட்டில் அவர்கள் வர்க்கத்தார் கையில் இருந்து மன்ருசி பண்ணி வெளிப்படுத்தி வாங்கின கப்பல்கள் வைப்பிக்கிற சாஸ்திரத்தைப் பார்த்துச் சரியாகத் திருப்புகிற புத்தகம்.

தோத்திரம்.

ஆயகலைகளறுபத்து நான்கினையு
மேய வறிவித்த வெள்ளம்மை—தூய
உருப்பளிங்கு வாராமல் உள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாராதிடர். (க)

வெள்ளைக்கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக்கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
யரியாசனத்தி லரசரோடென்னைச்
சரியாசனத்தில் வைத்ததாய். (உ)

துவக்கத்தில் தேங்காய் உடைத்துப் பூசைபண்ணித் தேங்காய் உடைக் கையில் அது உடைந்த குறிப்பறிந்து பின்வருகிற (நற்பயன்) அறியச் சொல்லுகிற சாஸ்திரம் அதாவது;—

முடிபெருத்து வட்டமிடில் திருவே சேரும்
மூன்றுபங்கி லொன்றுடைந்தால் சேடந்தோடம்
நெடிய பங்கில் ஐந்திலொன்று தொலையாச் செல்வம்
நீங்கிய........பை பிடிநிதான வாய்ப்பாய்க்
கடிந்து கனிவுள்ளாறல் இரத்தினஞ் சேரும்
கரத்திறுலிரண்டறிந்த கனத்தபூசை
அடியவர்க்கு முன்னிலங்கும்கம....மேனடே
அருந்தியகாயின் சமனுமறிந்துகொள்ளே. (ந)

* * * * * * * * * * * *

* * * * * * * * * * * *

ஏராவின் . . . . . ஆராயும் அசுபதி பரணி முதலாக வெண்ணி யறிந்துகொள் வங்கநாளே என்பது. ஏராவின் நீளத்தையளந்து ஒரு முழத்துக்கு இருபத்து நாலு அங்குலமாகப் பெருக்கிக் கண்டதொகையை இருபத்தேழிற் கழித்து நின்ற சேடத்தை இத்தனையென்று அசுபதிதொட்டு எண்ணிக்கண்ட நாள் வங்கநாள் எனறறியவும்.

* * * * * * * * * * * *

* * * * * * * * * * * *

End:

கப்பல் வைக்கிற சாஸ்திரம் இருந்த புத்தக ஏடுகளில் அதனுடந்தையாய்ச் சொன்ன மனையடி சாஸ்திரமும் இந்த விரண்டும் சுருக்கமாய்ச் சொல்லப் பட்ட பாட்டுகளேயும் (அவையிற்றின்) அர்த்தங்களேயும் எழுதியும், அதற்காகத் தானே அந்தச் சாத்திரக்காரர் எடுத்துக் காட்டின பஞ்சபட்சி கிரியைகளேயும் காலங்களேயும் நன்மை தீமை (களேயும்) அறியும்படி அதிலிருந்தபடியே எழுதினதுமல்லாமல் இதிலிருந்த பஞ்சபட்சி சாஸ்திர சுருக்கத்தில் விளக்க மாய்த் தெரியாதது கண்டு பஞ்சபட்சி சாஸ்திரம் விளக்கமாய்த் சொல்லு கிறதைத் தேடி விவரப்பட எழுதியிருப்பவைகளேயும் மேலெழுதியிருக்கிற (78) பக்கங்களில் சொல்லப்பட்ட சாஸ்திர முறைகளே இந்தச் சாஸ்திரம் அறிந்தவர்களேப்பற்றி இன்னும் விவரமாய் இதன் ஒழுங்குகளே வாடிக்கை களால் அனுபவிகள் கேள்விகளில் பிரத்யட்சமாக வறியவேண்டியிருக்கும். ஆகிலும் இன்னும் ஜ்யோதிஷ சாஸ்திரிகளேப் பற்றியாவது சில (துகள் விளங்கும். கப்பல் சாஸ்திரங்கள் இன்னும் இருப்பவைகளேத் தேடிச் சில வற்றைச் சோதிக்கையில் இதிலிருக்கிற சாத்திர வேற்றக் குறைவுகளேக் கண்டு பிடிக்கலாம் என்றும் தோற்றுகிறது.

கப்பல் சாத்திரம் முற்றும்

கு - பு.—

இந்த நூல் மரக்கலங்களுக்குரிய சோதிட விஷயங்களே நுவலுகின்றது. செய்யுளும் பொழிப்புரையும் ஆகவமைந்திக்கின்றது. செய்யுட்களிலும் உரை நடையிலும் பல எழுத்துப்பிழை முதலியன உள்ளன. ஆகையின் அத்துணைச் சிறந்ததன்று இறுதியில் மரக்கல விஷயமாய்ப் பலன் அறிய பஞ்சபட்சி சாத்திரமும் விளக்கமாக வெழுதப்பட்டிருக்கிறது. செய்யுட்கள் இத்துணையென தெற்றென விளங்கவில்லை.

No. 1997. கப்பல் சாஸ்திரம் உரையுடன்.

KAPPALŚĀSTIRAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13½ – 8¾ inches. Pages. 62. Lines, 26. on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Complete

Same work as the above. This manuscript seems to be the original of that described under the previous number.

கு - பு.—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதேயாம். அதற்கு இது மூலப்பிரதியாகும்: ஏடுகள் மிகவும் சிதைந்து இருத்தலோடு பல பிழைகளும் மலிந்துள்ளன.

No. 1998. கரிநாள் விளக்கம்.

KARINĀḶ VIḶAKKAM.

Substance, palm-leaf. Size, 3. + ½ inches. Pages, 16. Lines, 2 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete.

Similar to the work described under No. 195 *c*. Tamil Triennial Catalogue, Vol. II.

Beginning:

மாதம் பன்னிரண்டுக்கும் ஆகாதநாள் அறியும் விதம்:—

சித்திரைமீ ௬ ௰௫ தேதி இரண்டும் கரிநாள்.

வையாசிமீ ௭ ௰௬ ௰௭ இவை மூன்றுங் கரிநாள்.

* * * * * * *

End:

மாசிமீ ௰௫ ௰௬ ௰௭ தேதிகள் கரிநாள்.

பங்குனிமீ ௰௧ ௰௬ என்ற தேதிகள் கரிநாள்.

(கு-பு.)—

இச் சிறு நூல் மூவருடக் காட்லாக்கு 195 C. நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேபோன்று, சித்திரை முதல் மாதம் பன்னிரண்டுக்கும் இன்னின்ன நாட்கள் கரிநாட்களாம் என்று வசனத்தில் உணர்த்துவதாகும். முற்றும் உள்ளது.

No. 1999. கருப்பத்துவாரவான்மீகம். (ஆரூட சாஸ்திரம்).

KARUPPADDUVĀRAVĀNMĪKAM ĀRŪḌAŚĀSTIRAAM.)

Pages, 14. Lines, 6 on a page.

Begins on fol. 71*a*. of the M.S. described under No. 578. Complete. Same work as that described under No. 195 (f) of the Tamil Triennial Catalogue, Vol II.

Beginning:

மீனம் மிதுனங்கன்னியுடன் விளங்குதனுசு கர்ப்பமதாம்
மானதுலாமே மகரநண்டு ஆடுதுவார மாமெனபர்
கானகருவுஞ் சங்கமுடன் கதித்த ரிஷபந்தேள் கும்பம்
வான [வர்](ம்) புகழும் வான்மீக மடைவார் பாதவா....யரே (க)

ஒருவன் கைதனி லொன்றை யெடுத்துமே
இருகைதன்னினு மெக்கையிலென்றால்
மருவு கர்ப்பம் துவாரம் வலக்கையே
பெரிய வான்மீகம் பேசிலிடக்கையே (உ)

End:

கள்ளர் தம்மை வரவு கருதினல்
மெள்ள வந்தனர் கெர்ப்பமாம்
உளள வாசலி லுள்ளவராமெண
மெள்ள வான்மீகம் வாரார்கள் மீளவே (௰)

ஒருவர் பொருளது [பி] (பெ)றவே யுரைத்திடில்
வருவதில்லையாம் கெர்ப்பமதாயிடில்
தருவன் சிலபொருள் தள்ளில் துவாரமே
அருளுவான் முற்று மடங்கல்வான் மீகமே (௰க)

முற்றும்

(கு.பு.)—

இது சோதிடத்தில் ஆரூடவகையைச் சார்ந்ததாகும்: (12) பனிரண்டு இராசிகளையும் கர்ப்பம் துவாரம் வான்மீகம் என்ற மூன்று பிரிவாகப் பிரித்துப் பலன்களை நுவல்வதெனத் தெரிகின்றது; (௰க) பாடல்களைக் கொண்டிருக்கின்றது. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றிருக்கின்றன- இறுதியில் "மீனம் மிதுனம் கன்னி தனுசு இந்த நாலும் கர்ப்பராசி(களாம்); துலாம் மகரம் நண்டு ஆடு ஆய இந்த நான்கும் துவார ராசி(களாம்); சிங்கம் இருஷபம் விருச்சிகம் கும்பம் இந்த நான்கும் வான்மீக ராசிகளாம்" என்ற தொடர் மொழிகள் எழுதப்பெற்றுள்ளன.

இது மூவருடக் காட்லாக்கு 195. (f) நம்பர் பிரதியில் "ஆரூட சாஸ்திரம்" என்ற பெயரான் வந்துள்ளதேயாம்: மிகவும் பிழையுடன் உள்ளது; அதற்கும் இதற்கும் மிகப்பாட பேதங்கள் காணப்படுகின்றன.

No. 2000. கிரகஸ்புடம் உரையுடன்.

GIRAHASPUṬAM WITH COMMENTARY.

Pages, 85. Lines, 7 on a page.

Begins on fol. 152 *a*. of the M.S. described under No. 1992.

Complete.

Same work as that described under No. 31 (d) on page 267 of M. Seshagiri Sastriyar's Raport No. 1. This is the original of that described under No. R. 340 of the Tamil Triennial Catalogue, Vol. III, by Tirukkōṭṭinambi, son of Āriyan of Caturvēdamaṅgalam.

(கு.பு.)—

இது, சேஷகிரிசாஸ்திரியாரது ரிபோர்ட்டில் 267-வது பக்கத்தில் 31 (d) நம்பரில் வந்துள்ளதேயாகும் ; மூவருடக் காட்லாக் R. 340-ம் நம்பரில் வந்துள்ளபிரதிக்கும் இதுமாத்ருகையான பிரதியாம்: இந்நூல் 375-வது பாடலிலிருந்து தொடங்கப்பெற்றுள்ளது;இது "உள்ள முடையான்" என்ற நூலின் ஒருபெரும் பகுதியெனவறியக் கிடக்கிறது:* ஒரு பிரதியிற் போல தனித்தில்லாமல் தொடர்ந்தே செய்யுட்களடி எண்கள் இடப்பட்டிருக்கின்றனவாதலின், இப்பிரதியின் ஏடுகள் மிகவும் கிழிந்திருக்கின்றன. எழுத்துப் பிழை சொற்பிழைகள் மிகவும் அதிகமாயிருக்கின்றன. நூலாசிரியர் சதுர்வேதமங்கலம் "ஆரியன்" என்பவரின் புதல்வரான திருக்கோட்டிநம்பியாவர் என்று அறியக் கிடக்கிறது.

No. 2001. குமாரசுவாமீயம் உரையுடன்

KUMĀRASWAMĪYAM WITH COMMENTARY.

Substance, paper. Size, 13¾ × 1 inches. Pages, 86. Lines, 26 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

This is a work on astrology by Tiruccendur Kumāraswāmi, a devotee of God Kumāraswāmi (Subrahmanya). This copy contains also a commentary on the work.

Beginning :

குமாரசுவாமீயம் பாயிரம்.

போதிடமாகிய வேதியனுதி புராதனன் மான் முதலோ
ரீதிடமாய் வருவாரெனில் யாவும் விடாதியல் பாகச்
சோதிடமே திடமாக நடாவு குமார சுவாமீயம்யா
ஞேதிடவே யெனதுள்ளிடம் வாழ்வதோராணை சகோதரனே. (1)

உரை :—

என்பது, செந்தாமரைப்புட்போதயனுகிய பிரமதேவனு. சத்தாடம்பாருப வனுதியான உருத்திர மூர்த்தியும் விஷ்ணுவும் இவர்கள் முதலாகிய மகேசு.

தன்னுடைய வடிவைப் பொன்னிறமாகக் கண்டால் தனலாபம். வெள்ளையாகில் முந்நூற்றறுபது நாளைக்கும் ஆயுசுக்கு அழிவில்லை. கறுத்திருக்குமாகில் நூற்றெண்பது நாளைக்குள் துக்கம் உண்டாகும். சிவந்திருக்குமாகில் வியாதியாம். அவன் கிளைக்குள் சேதம் ஆம்.

* * * * * * * *

ஆதித்தன் சந்திரன் அக்கினி இவை மூன்றும் திருஷ்டாந்தம். கண்ணும் கையும் இரண்டும் அறிவதற்குக் குருசொன்ன வடைவில் நில்லாமல் எதிராகத் தோன்றில் அன்று சோதி சோதியோடே கூடும் என்று அறிக. வேதாந்த சித்தாந்தத்தின் பொருள் இதுவே ; புத்திமானுனவன் தெளிந்துகொள்ளுவான்.

சரசாத்திர விருத்தி முற்றும்.

(கு - பு).—

இந்நூல் இடகலை பிங்கலை சுழிமுனை வழியே மூச்சுக்காற்று ஓடுவதை யறிந்து மனிதர்க்கு ஆயுள் முதலியவற்றை யறியும் நெறியையுணர்த்துவது. இது சிவபெருமான் உமாதேவியார்க்கு உபதேசித்ததாவுளது. இறுதியில் ' சரநூல் விருத்தி ' யென்று குறிக்கப்பட்டிருத்தலின் சரசாஸ்திரத்தின் உரையாக வியற்றியதெனத் தெரிகின்றது. இயற்றியவர் பெயர் முதலியன. ஒன்றும்விளங்கவில்லை. முற்றும் இருக்கிறது. பிழைகள் உள்ளன.

No. 2031. சரநூல் உரையுடன்.

ŚARANŪL WITH COMMENTARY.

Pages, 104. Lines 7, on a page.

Begins on fol. 79—*a* of the Ms. described under No. 250 T. D. C. Vol. I. Complete in 52 Stanzas.

Same work as that described under No. R. 512 Tamil Triennial Catalogue Vol. IV.

(கு - பு.)

இந்நூல் மூவருடக் காட்லாக் 512-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இது நாசியிலே சுவாசம் வருதலைக்கொண்டு மனிதர்கட்கு ஆயுள் நோய் சுகம் துக்கம் முதலியனவற்றை விளக்கமாக வறிவிப்பது. சோதிட நூல் கற்றுப் பயனை எளிதிற் பெறவியலாதவரும் மற்றேனையோரும் இதிற்சொன்ன விடயங்களை யுணர்ந்து நன்மை தீமைகளை யெளிதிலே உணருமாறு பரமசிவனுர் உமாதேவியார்க்கு உபதேசிக்கு முகத்தான் இதை யுலகத்தவர்க்குத் தோற்றுவித்ததெனை வறியக்கிடக்கிறது. (ருஉ) பாடல்களானமைந்தது. இப்பிரதியில் இது உரையுடன் பூர்ணமாயிருக் கிறது. பாட பேதங்கள் பலவாய் மூலத்திலும் உரையிலுங் காணப்படு கின்றன.

No. 2032. சரநூல் உரையுடன்.

ŚARANŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{2} \times 1\frac{1}{4}$ inches. Pages, 76. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

The text is the same as in the above work, but the commentary is different.

Beginning :

சர(நூல்) சாஸ்திரம்.

சந்திரன் வானிலக்கணமுங் கோளுநாளும்
தயங்கிய பக்கங்கரணம் யோகம்வாரம்
வந்துசொலும் சோதிடநூ லறியாதார்க்கும்
மனநினைவாம் வகையுமையாள் வணங்கிக்கேட்ப
இந்தவுட லுயிர்நிலையை யறியாதார்க்கு
இயல்புடனே யறியும்வகை யாதோவென்ன
பைந்தொடியே யாஞ்சொன்னபடியே நெஞ்சிற்
பரிந்துநீ பாரென்று பரமன்சொல்வான், (க)

உரை.

என்பது சந்திராதியான நவக்கிரகமும் நட்சத்திரமும் திதி வார யோக கரணம் என்னப்பட்ட சோதிட விதி மார்க்கம் அறியாதபேர்க்கும் மன நினைவால் அறியும்படிக்குப் பரமேசுவரனைப் பார்வதியார் வணங்கிக் கேட்க, சுவாமியார் அருளிச் செய்வார். தாம் சொன்ன சரநூல் முன்னிலே யாகச் சகலமும் அறியலாம். ஆகையினாலே இந்தச் சரநூல் பரிவுடனே கூர்ந்து பார் என்றவாறு. (க)

சொல்லாரு நெடுங்கயிற்றின் வருணமான
சூத்திர ருத்துவக்கெனு மாச்சிரமந்தன்னில்
நல்லாரு மூக்கணுங்கயிறு கோத்து
நலந்தீங்காய் வருகின்ற நஞ்சுட்கொண்ட
பொல்லாத காலன்கைப்பட்டு வீழ்ந்து
பூதலத்திற் பிறந்திறந்து போவரேனும்
எல்லாரும் நாஞ்சொன்ன சரநூறன்னை
யிகழாதார் சுரர்..........ரிகழ்வோர்தாமே. (உ)

உரை.

என்பது, பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரராதியான வர்ணச்சிரமமான தேகத்திலே மூலாதாரந்தொடங்கு யாருதாரத்தினு நடக்கும் வாய்வு மூக்கணுங் கயிருகி இடை பிங்கலையிலே நடந்து நன்மை தீமையை யியற்றிக் காலன் கைப்பட்டு இறந்தும் பிறந்தும் பிழைக்கும்பொருட்டு நன்மை யடையும்படிக்கு நாஞ் சொன்ன வருணமான மந்திரத்தைக் குருமுகமாந் திறத்திலே தெளிந்து இந்தச் சரவிதி யுணர்ந்து சாத்......ரனுல் வரும் வினையைக் களைந்து தேவருக்கும் அதிகாரம் வர * * * * * * * * * * * பெருமைகளுக்குச் சரியாவார் என்றவாறு. (உ)

End :

நன்றான மறைவல்லோர்க் குலமானலென்
நாமுரைத்த சரநூலி னடைதப்பாமல்
எந்நாளும் பார்ப்பவரே பூமிதேவர்
இசைந்த மானிடப்பிறப்பி லின்பாய்க்கொள்வர்
குன்றாத மாப்பறவை யெறும்புதாங்கு
கொடிமரத்தி னளவறிந்து கொண்டுவாழும்
பொன்றாத தெய்வீகம் புகலுவாரே
புகலாதார் சிவத்தினும்பின் பிறப்பினோர்க்கே. (ருக)

உரை.

என்பது, நாலு வேதமுங் கற்ற பிராம்மணனாகிலும் நாஞ்சொன்ன சரநூலின் அடைவு தப்பாமல் எந்த நாளும் பார்ப்பவரே நன்மையாகித் தேவர்களும் இவர்களும் ஒன்றாகி நன்மை யடைவார்கள்; யானை முதல் எறும்பு கடையுள்ள சீவாத்மாவுக்கும் வாயுவீயக . . . . சரி யாகவே யிருக்கும். இது, தெய்வீக போகம். இந்தச் சாஸ்திரம் அல்லாமல் மற்றைச் சாத்திரத்தில் ஒன்றுந் தெரியாது. இதை யறிந்தவன் முத்தி யுடையவன் என்றவாறு. (ருக)

புன்பிறப்பு பிறக்கினுஞ் சற்குருமுகத்தாற்
பொருந்திய நற்சரநூலைப் புகலக்கேட்டு
நன்குணர்ந்து நெறிநடந்தோர் யாவரேனும்
நரன்நாமென் றிரண்டில்லை நல்லாய்கேண்மோ
மின்பிறக்குஞ் செந்தழலை யடுத்ததெல்லாம்
மிகத்தழலின் வடிவான விதமேபோல
தன்பிறப்பி லினிப்பிறவா ரவமேசாகார்
சடைமேலே....ணிந்து சந்திரனெப்பாரே. (ருஉ)

உரை.

என்பது, ஈன சாதியிற் பிறந்தாலும் சற்குருமுகத்தால் இந்தச் சர நூலைக்கேட்டு அந்த வழிபாடு தப்பாமல் நடந்தவர் மனுஷ்யன் என்றும் நாம் என்றும் பேதமில்லை. மின்னிற் பிறந்த வனலை யடுத்தவெலாம் அந்த அக்கினி யுறவானவாறு போலப் பிறப்பிறப்பென்னும் அவமிருத்து வாலே சாவுமில்லை. நம்முடைய சடைமேல் (அணிந்த) அணியப்பட்ட சந் திரனை யொக்கும் என்று பரமேசுவரன் பார்வதியாருக்கு அருளிச்செய் தருளுவார். ஆகையினாலே, இந்தச் சரநூலைக் குரு சொன்ன நெறி முறைமையினாலே நியம நிட்டையுடனே யறிந்து பார்க்கிறவர்கள் மேலாகிய வாழ்வும் பெற்றுப் பதவியும் பெறுவார்கள் என்றவாறு. (ருஉ)

குரு கடாக்ஷம் உண்டாகவும் ஸ்ரீராமர்ஜய உண்டாகவும் ஸ்ரீமதரங்கநாயகர் கிருபாகடாட்சம் உண்டாகவும். ரக்தாக்ஷிஹு மார்கழிமீ". ௩ம சரநூல் சாத்திரம் எழுதி நிறைந்தது முற்றும். சபாபதி கையெழுத்து. நன்றாகவும்

(கு - பு.)

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. உரை மாத்திரம் வேறாக வுள்ளது. ருஉ-பாடல்களுக்கும் உரைப்பாகம் இருக்கிறது. பிழைகள் மிகுந் திருக்கின்றன. நூலாசிரியர் உரையாசிரியர் இவர்களது பெயர் முதலியன இப்பிரதியிலும் ஒருவாற்றானும் விளங்கவில்லை.

No. 2033. சரநூல் உரையுடன்.

ŚARANŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 10 × 1 inches. Pages, 52. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

The text is the same as in the above work; but the commentary is different.

(கு-பு.)—

இந்நூல் முன்பிரதிகளில் வந்துள்ளதே மூலமாத்திரம் சிற்சில விடத்துப் பாடபேதங்களுடன் ஒன்றாய்க்காணப்படுகிறது. உரைவேறு. ஏடுகள் பல பாண மரித்துக் கிழிந்தும் முறிந்தும் இருப்பதால் இப்பிரதி படித்தற்கரிதாயுள் ளது. பிழைகள் மிகவுங்காணப்படுகின்றன. இந்நூல் இப்பிரதியில் முற்றுப் பெறவில்லை.

No. 2034. சரநூல் உரையுடன்.
SARANŪL WITH COMMENTARY.

Pages, 36. Lines, 6 on a page.

Complete.

Begins on fol. 342—*a* of the MS. described under No. 520 T.D.C. Vol. II.

The text is the same as in the above work; but the commentary is different.

(கு-பு.)—

இதுவும் முன்பிரதிகளில் வந்துள்ளதே. உரை மாத்திரம் வேருகவுள்ளது. இது மிகவும் பிழையுடன் காணப் பெறுவதோடு ஏடுகள் மிகவும் முறிந்துஞ் சிதலுற்றும் படித்தற்கு மிகவரிதாயுள்ளது.

No. 2035. மூலசரம்.
MŪLAŚARAM.

Pages, 3. Lines, 7 on a page.

Begins on fol. 125—*b* of the MS. described under No. 251 T.D.C., Vol. I

Complete in 5 Stanzas.

A short treatise on prognostication with the help of the characteristics of man's breath and genitals and the colour of his urine. Contains all the five verses, of which it consists; but is full of mistakes.

Beginning:

ஹரி : ஓம் :— மூலசரம் :—

வென்றி செய்துடனே மீளும்
மிகமல முந்துமாகில்
அன்றியே சல முன்பாகில்
அங்கமே தழும்பதாகுங்
கன்றிய வாயுமுந்தக்
கழிந்திடிற் காலந்தோன்று
என்றிவையிதனை நாமிப்படியறிந்து கொள்வோம். (க)

சந்திரனில் மிக்கநல்லவுமையே கேளாய்
யான் சொன்னசாரத்தை யறிந்துணர்ந்தாசிரிய ரேனும்
இந்துவு மிருசுடரும் வலமாய்க் கொண்டும்
இயல்புடனே மூலசரங்சுழியுங்காலே
வந்து வலமிடந்திரியில் நன்றுதீதாம்
மத்திமதம் வலந்திரியில் மணக்கில்வாழ்வாம்
புந்திக்குப் புலானுறிற் பொல்லாங்காகும்
பொல்லாங்குநாறு மெனிற்பொல்லாங்காமே, (உ)

End:

வலந்திரிதாரை யொன்றும் பரந்துநீர்ப்பாயுமாகில்
நலந்தரு மரசனுவானிரண் டொடுநான்குநன்மை
கலந்தது சிந்திப்பாயில் வறுமையாமூன்றுங் குற்றங்
கவிந்திடத்திரியுமாகிற் கட்டமேவிளைக்குமென்றே (௫)
திருச்சிற்றம்பலம்: காசியாநந்தர் திருவடிகளேசரணம்
வயிரவநாதர் சடாதார சித்தர் திருவடிகளேசரணம்.

மூலசரம் முற்றும். திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இந்நூல், முன்வந்தநூல்களைப்போல் சுவாசங்களுடைய சில குறிப்புகளைக் கொண்டு பலநன்மை தீமைபயன்களை யுணர்த்துவதோடு நீர்நிறக்குறி லிங்கக்குறி இவைகளாலும் பயன் உணர்த்துவது. இது ஐந்து செய்யுட்களான் அமைந்துள்ளது; இப்பிரதியில் ஐந்து செய்யுட்களும் இருகின்றன. மிகப் பிழைகளுடன் காணப்படுகிறது.

No. 2036. மூலசரம் உரையுடன்.

MŪLAŚARAM WITH COMMENTARY.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 45(*a*) of the MS. described under D. No. 1898.

Complete in 10 Stanzas.

Similar to the above.

Beginning:

ஹரி : ஓம் : மூலசரம் உரையுடன்:—

சந்திரனுமுடிந்த பிரான் உமையேகேளாய்
சரநூலே யறிந்துணர்ந்தார் சதுரரேனும்
அந்தமில்லா மூலசரம் அறியாதாரோ
அறிந்தவர்கள் பெரியவர்களாகு மென்றும்
ஏந்தியதாயென்பரனை யிந்திரனைப்போலவாழ்வார்
இயலுடைய பிறைபோலே யுனதேயாகும்
மந்திரிவேண்டுவர்போல் சரநூலுக்கு
மூலசரம் மந்திரியாம் வகுத்துக்கேளே (௧)

(உ-ரை.)—

என்பது, பரமேசுவரன் பார்வதிக்கு அருளிச்செய்வார்: சரநூல் அறிந்த பெரியோர் மூலசரம் அறியவேண்டும். மூலசரம் மந்திரியென்னப்படும் சரநூல் ராஜா வென்னப்படும் என்றவாறு. (௧)

வலந்தனிற் சாய்தல்நன்றும்
இடந்தனிற்றிதா மணக்கில் வாழ்வுண்டாம்
புலவுமணிப்புதல்வர் உண்டாவர்
பொல்லாங்கு நாறுமெனிற் வறுமைபூண்பர்

தலைபெருக்கில் மிக்கருமை நடுநோக்கத்துக்
கந்தன் கோவணையறு போகில் தறுகுஞ்செல்வம்
நரம்பு பருக்கினுந்தீதாங் கொற்றுநொந்து
பருக்கினுந் தீங்கில்லை யெனப்பகருவாரே. (உ)

(எ-து.)—

நீர் வலத்தில் சாய்ந்தால் நன்றும். இடத்திற் சாய்ந்தால் தீதாம். சாயாமல் ஓடினுல் வாழ்வுண்டாம். புலால் நாற்றமாளுல் புத்திரருண்டாம்; பொல்லாங்குக் கமிழில்வீசினுல் வறுமை. இனி லிங்கத்தலைபெருக்கில் மிடிகுவளை போன்றிருக்கில் செல்வம்; பலநரம்பு பருக்கினும் தீங்கொற்று பருக்கினும் தீங்கில்லை என்றவாறு. (உ)

End:

நிகழ்கின்றதுக்கெண் ணெய்போலே நிற்கில்நிகரில்
சிறுவிரலன்றிக் கோலால் தோய்த்துப்
புகழ்கின்ற காடிபோல் நிறமேலிட்டெண்ணெய்
பொட்டெனவீழ்ந்தால் பித்தம் பொருந்துமென்றுரே. (ம)

(எ-து.)—

சிறுநீர் எண்ணெய்போலே நிற்கில்சிறுவிரலளவு கோலால் சிறுநீரில் தோய்த்து எண்ணெயில் விட்டால்வலம்வரும் பசு(ண) ம தரிக்கில் உயிரில்பற்றினது வாதம். சிறுநீர்காடிபோலே சிறுநீரில் விட்டஎண்ணெய் கயிறு போலே கிடக்கில்வாயுவாம். நீர்முத்துப்போன்று நீரில்விட்டஎண்ணெய் மிதவாமல் பொட்டென வீழ்ந்தால் சேத்துமம்என்றவாறு. மூலசரம் உரையுடன் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் முன்வந்துள்ள சரநூல்களுக்கு அங்கமாய் அமைந்ததென்று தெரிகிறது; அரசர்கட்கு அமாத்தியரே போன்று இம்மூலசரம் சரநூல் உணர்ந்தார்க்கு இன்றியமையாத தொன்றென்று இந்நூலின் முதற்செய்யுள் வலியுறுத்தியுணர்த்துகின்றது. இந்நூலில் முன்வந்துள்ள 'சரநூல்களில்'' போல் அல்லாமல் நீர்நிறக்குறி இலிங்கக்குறி என்றிவைகளால் நன்மை தீமைப்பலன்களை உணருமாறு நன்குவிளக்கப்பட்டுள்ளது; பத்து பாடல்களான் ஆகியது; இப்பிரதியில் உரையுடன் முற்றும் உள்ளது. மிகப் பிழையுடன் உள்ளது.

No. 2037. அருங்கலச்செப்பு உரையுடன்.

ARUṄKALACCEPPU WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size $15\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 40. Lines, 9 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 4.- The other work herein is Aruṅkalacceppu padavurai, 1*a*.

Complete.

A treatise on Dharma, as understood by the *Jainas*; with a commentary.

Beginning:

அருங்கலச்செப்பு உரையுடன்.

முற்ற வுணர்ந்தானை யே[ற்றி](த்தி) மொழிகுவன்
குற்ற மொன்றில்லா வறம். (க)

(உரை.)—

முற்ற உணர்ந்தானை=லோகாலோக ஸ்வரூபமான ஸகல ஜீவாஜீவஸ்வரூபத்தினை யறிந்த ஸ்வாமியை, ஏத்தி = ஸ்தோத்ரம் பண்ணி, மொழிகுவன் = சொல்லுவேன் ; குற்றம் ஒன்று இல்லா அறம்= பதினெட்டுக் குற்றமும் நீங்கினஸ்வரூபத்தினை என்றவாறு: (உ)

நற்காட்சிநன் ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந்
தொக்க வறச் சொற்பொருள் (உ)

நற்காட்சி = ஸம்யக்தர்சனமும், நன் ஞானம் = ஸம்யக்ஞானமும், நல்லொழுக்கம் =ஸம்யக்சாரித்ரமும், இம் மூனறும (ஆன) இம்மூன்றும தொக்க அறச் சொற்பொருள் = இந்த மூன்று ப்ரகாரமுங் கூடினது தர்மம் எனறு சொல்லப்படும் பொருளாம். (உ)

மெய்ப்பொருடேறுதல் நற்காட்சியென்பர்
எப்பொருளுங் கண்டுணர்ந்தார் (௩)

(எ-து.)—

மெய்பொருள் தேறுதல் = மெய்யான பொருளான ஸப்த தத்வம் நவபதார்த்த ஜீவாஜீவங்களுடைய ஸ்வரூபத்தினை யறிந்து நம்புகை ; நல் காட்சி என்றுரைப்பார் = நல்லஸம்யக்தர்சனம் என்றறைகுவர் எப்பொருளும் கண்டு உணர்ந்தார் = எல்லாவஸ்து ஸ்வரூபத்திணையும் அறிந்துள்ள பெரியவர் என்றவாறு (௩)

தலைமகனு நூலு முனியு மிம்மூன்று
நிலைமை யதாகும் பொருள் (௪)

End:

காமம் வெகுளிமயக்க மிவை மூன்றின்
நாமங் கெடக் கெடு நோய் (கஎஅ)

(ஏ-து)

காமம், வெகுளி, மயக்கம், இவை மூன்றும்=ராகம், த்வேஷம், மோஹம், என்னுமிம் மூன்றும், நாமம் கெட கெடும்நோய்=பேர்கெடவ, ஸம்ஸாரமென்றும் வியாதி கெடுமென்பதாம். (கஎஅ)

முத்தி நெறி காட்டு முன்னறி யாதோர்க் கெல்லாஞ்
சித்தியருங்கமச்செப்பு. (கஎக)

(எ-து.)—

முத்திநெறிகாட்டும் = மோக்ஷமார்க்கத்தைக் காட்டும். முன்னறியா தோர்க்கெல்லாம் = முன்னம் ஒருக்காலும் அறியாத பேர்க்கெல்லாம்; சித்தி அருங்கலச்செப்பு=வஜ்ரஸித்தியான அருங்கலச்செப்பு என்பதாம். (கஎக)

தீராவினைதீர்க்குஞ் சித்திபத முண்டாக்கும்
பாராயருங்கலச் செப்பு (கஅ0)

(எ-து.)—

தீராவினைதீர்க்கும் = தீராதவினைகள் எல்லாவற்றையும் தீர்த்துவைக்கும்; சித்திபதம்உண்டாக்கும் = ஸித்திபதம் உண்டாம்படிசெய்யும். பாராய் அருங்கலச்செப்பு = அருங்கலச்செப்புஎனும் சிறந்தநூலை நோக்குவாயாக, என்பதாம். (௱அ0)

அருங்கலச்செப்பு வியாக்கியானம் எழுதிமுடிந்தது முற்றும்;— ஸ்ரீ ஜிநாய நம: ஸித்தம் நம:॥

ஸ்வஸ்தி ஸ்ரீ ... ஆடிமீ உகஉ ... வஜ்ர ... நக்ஷத்ரம் ... காரணமுங்கூடின ... அருங்கலச்செப்பு எழுதி முடிந்தது முற்றும். ஸ்ரீ ... ஸ்ரீ ...

(கு - பு.)—

இந்நூல் ஜைனமதத்தைச் சார்ந்ததாய் அறனுணர்த்துவதெனத் தோற்றுகிறது. நற்காட்சி நன்ஞானம், நல்லொழுக்கம் என்னும் மூன்றுபெரும் பிரிவினையுடைத்தாய் அம்மதக்கொள்கையினைவிரித்துணர்த்துகிறது. இவை முறையே வடமொழியில் ஸம்யக்தர்சனம், ஸம்யக்ஜ்ஞானம், ஸம்யக்சாரித்திரம் எனஅருக மதசித்தாந்தமாய் வழங்கப் பெறுதலுங்காண்க (௱அ0) நூற்றெண்பது குறள்வெண்பாக்களான் அமைந்துள்ளது, இப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றும்உளது. நூலாசிரியர்உரையாசிரியர் இவர்கள் இன்னாரென்றும், அவர்களுடைய வரலாறுகளில் ஒன்றும் இக்கிரந்தவாயிலா கத்தெரிந்திற்றிலது. இறுதிப்பாகத்தில. 'காமம் வெகுளிமயக்க மிவை மூன்றின்'' என்ற திருவள்ளுவனார்குறள். [௱எஅ] ஆங்குறளாக வமைந்தது மேற்கோள் வகையைப்பற்றியோ? அல்லது இடைப்பிறச்செருகலோ' யாது காரணம்பற்றியோ? தெரியவில்லை, இது ஜைநமதநூல் ஆராய்வார்க்குமிகவும் பெருந்துணையாயிருக்கும். இப்பெயர் தன்மைபற்றிய பெயராமெனத் தோன்றுகிறது.

No. 2038. அருங்கலச்செப்பு உரையுடன்.

ARUNKALACCEPPU WITH COMMENTARY.

Substance, paper. Size $8\frac{1}{2} \times 6\frac{3}{4}$ inches. Pages, 51. Lines, 23 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Aruṇkalacceppu 27*a*.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இந்நூல் முன்பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றும் உளது. எழுத்துப்பிழைகள் மிகப்பொதிந்து கிடக்கின்றன. ஏடுகளும் ஒரு சிறிது சிதைந்துள்ளன. இப்பிரதியிலும் நூலாசிரியர் உரையாசிரியர் பெயர் விளங்கவில்லை.

No. 2039. அருங்கலச்செப்பு பதவுரையுடன்.

ARUṄKALACCEPPU WITH COMMENTARY.

Pages, 6. Lines, 6 on a page:

Incomplete.

Begins on fol. 1 (*a*) of the Ms. described under No. 2037 *ante*.

Complete in 11 Stanzas only.

Same work as the above, but the commentary is different.

Beginning:

அருங்கலச்செப்பு பதவுரையுடன்.

முற்ற வுணர்ந்தானை யேத்திமொழிகுவன்
குற்ற மொன்றில்லா வறம் (1)

என்பது :—முற்ற=சீவன் முதலான அறுவகைப்பொருளையும், உணர்ந்தானை=அறிந்த சுவாமியை, ஏத்தி=தோத்திரம் பண்ணி, குற்றம்=இருபத்தைந்து குற்றங்களிலும், ஒன்று இல்லா=ஒன்ருயினும் இல்லாத, அறம்=சினதருமத்தை, மொழிகுவன்=சொல்லுவேன் என்றவாறு: அறுவகைப் பொருள் ஆவன:—ஜீவத்ரவ்யம் புத்கலத்ரவ்யம் தர்மத்ரவ்யம் அ . . . . . த்ரவ்யம் ஆகாசத்ரவ்யம் காலத்ரவ்யம் என்பனவாம்: இனி, இருபத்தைந்து குற்றங்கள் ஆவன:—மூடமூன்றும், மதம் எட்டும், அநாயதஸேவை ஆறும், ஸங்காதிதோஷம் எட்டும் ஆகிய இவைகளாம் (1)

நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கமிம் மூன்று
தொக்கவறச் சொற் பொருள் (2)

என்பது;—நற்காட்சி=ஸம்யக் தர்சனமும், நன் ஞானம்=ஸம்யக் ஜ்ஞானமும், நல்லொழுக்கம்=ஸம்யக் சாரித்ரமும், (ஆன) இம்மூன்றும—இந்த மூவகையும்,தொக்க=கூடிய, அறச்சொல்=தருமமென்று சொல்லப்பட்ட சொல்லுக்கு, பொருள்=பொருளாம் எ-று [2]

End:

இந்தியத்தை வென்ருன் ஞெட ர்ப்பாட்டோடாரம்பம்
(முந்து துறந்தான் முனி (11)

என்பது;—இந்திரியத்தை=பஞ்சேந்திரியங்களை, வென்றான்=செயித்தவனும், தொடர்ப்பாட்டோடு=பாஹ்யாப்பியந்தர பரிக்கிரகங்களோடு, ஆரம்பம்=காரியாரம்பத்தையும், முந்து=முன்னமே: துறந்தான்=விடுத்தவனும் எவனோ ? அவனே, முனி=முனிவரன் ஆம் எ-று (11)

தத்துவஞான நிகழ்ச்சியுஞ்சிந்தனையும்
உய்த்தலிருடிகண்மாண்பு (12)

என்பது

(கு - பு.)—

இது முன்பிரதியில் வந்துள்ளதேயாம். உரை மாத்திரம் வேறுப்பிரதி பதவுரையாக வமைந்திருக்கிறது. இப்பிரதியில் (11) பதினொரு பாடல்களுக்கே உரையுள்ளது, எழுத்துப்பிழைகள் மிகவுள. ஏடுகள் நுனியில் முறிந்திருக்கின்றன.

No. 2040. அருங்கலச்செப்பு மூலம்.

ARUṄKALACCEPPU TEXT.

Pages, 14: Lines, 26 on on a page.

Begins on fol. 27 (a) of the Ms. described under No. 2038 *ante*.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே இப்பிரதியில் முற்றும் உள்ளது. எழுத்துப்பிழையுள இப்பிரதியிலும் நூலாசிரியரது பெயர் குறிக்கப்பெறவில்லை. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 2041. அருங்கலச்செப்பு மூலம்.

ARUṄKALACCEPPU TEXT.

Pages, 22; Lines, 9 on a page.

Begins on fol. 95 (a) of the Ms. described under No. D 150.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இந்நூல் முன்பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இது முற்றும் உளது. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன. ஏடுகள் ஓரங்களில் செல்லரிப்புண்டிருக்கின்றன. இப்பிரதியானும் இந்நூலாசிரியரின் பெயர் விளங்கவில்லை.

No. 2042. அருங்கலச்செப்பு மூலம்.

ARUNKALACCEPPU TEXT.

Pages, 18. Lines, 6, on a page.

Begins on fol. 20—*a* of the Ms. described under No. 123 *ante*.

Complete-

Same work as the above.

(கு - பு.)—

இது முன்பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூல் முழுவதுமி ருக்கிறது. ஏடுகள் மிகவும் சிதலுண்டு சிதைந்துள. எழுத்துப் பிழையுள.

No. 2043. திருநூற்றந்தாதி உரையுடன்.

TIRUNŪṞṞANTĀDI WITH COMMENTARY.

Substance, palm—leaf. Size, 17¼ × 1 inches. Pages 38. Lines, 4 on a page, Character, Tamil, Condition, much injured. Appearance, old.

Incomplete.

A *Jaina* work in praise of Śrī Arhat here and there explains some doctrines of that sect.

Text by Avirōdhināthar.

Printed.

Beginning:

திருநூற்றந்தாதி உரையுடன்.

மறமே முனிந்துமயிலாபுரி நின்று மன்னுயிர்கட்கு
அறமே பொழியு மருட்கொண்டலே யதரஞ்சிவந்த
நிறமே கரிய வொண்மாணிக்கமே நெடுநாளொளித்துப்
புறமே திரிந்த பிழையடியேனைப் பொறுத்தருளே. (க)

உரை:—

என்பது—பாபத்தைக் கடிந்து மயிலாபுரியில் நின்று உன்பாதத்தைச் சேர்ந்த உயிர்களுக்குத் தருமத்தைப் பொழியா நின்றகிருபையாகிய மேகமே! அதரஞ் சிவந்த நிறமே; சரீரவண்ணம் கறுத்த நீலரத்தின வொளியே; அநேகதினம் உன்பாதம் பணியாதே ஒளித்துப் புறமே திரிந்த குற்றத்தைப் பொருத்தருள்க வென்றார். (க)

பூக்கொண்டு பொன்னுலகங் கொடுப்பானைப் புலவர் செஞ்சொற்
பாக்கொண்டு முத்திபணிக்கவல்லானைப் பைங்கோசிலங்கள்
கூக்கொணடு சேருங் குளிர்ப்பிண்டியானைக் குணமகிழ்வான்
மாக்கொண்டல் வீழுதுளியென்னவேண்பேய் மனம்மால்
கொண்டதே. (௩)

உரை:—

என்பது—பத்தர் அருச்சித்த பூவுக்குகந்து பொன்னுலகை யருளா நின்றவனே, வித்துவான்கள் இனிதாய்ச் சொல்லுகின்ற பாமாலையைக் கொண்டு மோட்சத்தை யருளாநின்றவனே, அழகிய குயில் முதலாகிய பறவைகள் முழக்கமுங் குளிர்மையான மலர் தளிர்கள் பொதிந்து விளங்காநின்ற பிண்டிநிழலானே, குணமாகிய அனந்தஞ் ஞானத்தைப் பொருந்தியிருக்குங் கடவுளைக் குணமறிந்து துதிசெய்வேன் என்று நான் சொல்லியது எத்தன்மைத்தென்றால் மேகவர்ஷதாரையை யெண்ணித் (தொ)கைப்படுத்துவேன் என்று பேய்மனம் ஆசைகொண்டது என்றார்?(௨)

End:

பாரிடையீர் இருநூற்றெண் பத்தெட்டு பத்தாம்பவணத் ?
தோரெழுகோடி யெண்ணேன் பானிலக்க முயர்ந்த கற்பத்
தோரியல்யோனி தொண்ணூழாயிரச்சின்ன மெண்ணவொண்ணுச்
சீரிய வியந்தார் சோதீடத்தீசர் நற்சேதியமே (௱௨)

உரை:—

என்பது—அகர்திம சயித்திலாய்த் தொகைப்படுத்திச் சொல்லுகின்றார் கேட்பீராக பூலோகத்தில் சாருஅ பவணலோகத்தில் ஏழுகோடி எழு பத்திரண்டு நூறுயிரம் சவுதற்மகல்பம் முதல் சர்வார்த்தசித்தி வரைக்கும் எண்பத்திநாலு நூறுயிரத்துத் தொண்ணூற்றேழாயிரத்து இருபத் துமூன்று. இதுவல்லாமல் * * * * * * * (௱௨)

(கு - பு.)—

திருநூற்றந்தாதி யென்னும் இந்நூல் சைனமதத்தைச் சார்ந்ததாய் அருகக்கடவுளின் மீது துதிரூடமாய் அமைந்துள்ளதொரு பிரபந்தமாகும். இதில் அம்மதத்தினரது கொள்கைகளும் ஆங்காங்கு விளக்கப்பட்டிருக் கின்றன. இப்பிரதியில் (ச) ஆவது ஏடுமுதல் (௬ச) ஆவது ஏடுவரை யிலும் உள்ள ஏடுகளில்லையாதலின் அவைகளில் அடங்கிய (ச) ஆவது செய்புண் முதலாய் (௬ச) ஆவது செய்யுண்வரையிலுமான பகுதியும், இறுதியிலே (௱௨) ஆஞ்செய்யுண்முதலாகிய மிகுதியான பகுதியுநீங்கலாக மிகுதியான பகுதி உரையுடனிருக்கிறது. இவ்வுரை பொழிப்புரையாயிரா நின்றது. நடைப்போக்கு அத்துணைச்சிறந்ததன்று. ஆயினும் உபயோக மானது. மூலம்மாத்திரம் சிறந்த நடையுடைத்தாய்க் காணப்படுகின்றது. இவ்விரண்டிலும் எழுதிஞேர்பிழை மிகவும் அதிகமாயுள்ளன. நூலா சிரியர் அவிரோதி நாதர். உரையாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

No. 2044. தர்ம பரீக்ஷை.

DARMAPARĪKṢAI.

Pages, 242, Lines, 6 on a page.

Begins on fol. 1. A of the Ms. described under No. D. 289.

Complete.

A *Jaina* work professing to narrate the "previous history" of Gods Brahma, Viṣṇu and Rudra.

Beginning:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

யதீந்த்ரமதபீபிகா.

வைராக்யத்துடனே கூடின ஸர்வ ஜீவன்களாகிற வண்டு ஸமூஹங்களுக்கு விசேஷஸம்பவத்தைப் பண்ணுகிற ஸகல நிர்யாஸமாகிற ஜந்துக்கள் காரத்தைப் போக்கடிக்கிற நிர்மலஜ்ஞாநகிரண ஸமூஹங்களினாலே மிகவும் விளங்கு மோக்ஷமாகிற தாமரைக்கு சந்தோஷத்தை உண்டாக்க . . , ... , . என்கிற உதயாசலவலத்திலே உதியா நின்று மிகவும் ப்ரஸந்நமாய் கெளராகாரத்தோடே கூடி ஸுவர்ணஸுமேரு வமாக அந்த அபரஞ்சி ஸ்வரூபமாக உதியா நின்ற கலஜ்ஞாநநிதிமான ஸூர்யன் போலே நிசராகாக்ஷணி விளங்கியிருக்கிற ஸ்ரீவரத்தாசார்யரையை நமஸ்கரித்து ப்ருஹ்மவிஷ்ணு ராமாநுஜர்களுடைய ஸம்மதமாகிய யதீந்த்ரமதபீபிகையைச் சொல்லுகிறேன் என்றவாறு (க) உக்தா . . சார்யத்துள் உத்தமோத்தமரும் பூர்வாதி . , . யாமீ ஸம்ப்ரதாயம் தயாசரணத்தில் உத்தரஜநஸேவா தரும் ஸகலசூஷித * * * * * * * * * * *

. . . , . . . , ...

End:

தர்சிதகிராசக்தி இது: ஸவிசேஷவஸ்துநிசரணி இது ரத்நத்ரயம் என்று சொல்லப்பட்ட யதீந்த்ரமதபீபிகை ஸர்வஜநமித காரணம் ஜிநவாதவைவகம் நிரீக்ஷ வாதாவலிகம் கந்தவேதம் வைகவெ ஸ்வப்நத்திலும் நிணையாதவன் உத்தமிதன் உதாரவரேம ஸஜநநிதி ஸத்யஸந்த மணாகரன் நயகீர்த்திமான் ப்ரஸந்நவிமலன் இப்படி விநயஸம்பந்நனான வித்வான் ஸ்ரீவிஜயநகர ஜநவாதசாலவிதரணசாதுர்ய ஸௌந்தர்யவதநசிந்திக . . . , . வைராக்யநவஸம்பாதகாரம் . . . . ஸுராஸுர ஸேவிதபாத ஷட்தர்சநப்ரஸந்நவிலாஸ விராஜிதமான யதீந்த்ரமதபீபிகையில் ஸவாதவைமன் முதலாகிய ஸகல ஜநவிவரஜநங்கள் உபகாரமாக ஸ்வவர்ணனையை ஸ்ரீமத் ராமாநுஜ ஸ்வாமிகளுடைய சிஷ்யரான விஜயஸிம்ஹஸூரியர் ஸ்வாமிகளி வசனமாகச்செய்த உபதேசம் ஸம்பூர்ணம் ஸ்ரீமதே ராமாநுஜாய நம: உகி யதீந்த்ர [பீபிகா](தீகா) ஸமாப்தா |

(கு - பு.)—

இந்நூல் ஜைநமதத்தைச் சேர்ந்ததாயுள்ளது. இது அம்மதச் சார்பாகப் பிரம்ம விஷ்ணுருத்ரர்களுடைய பூர்வ சரித்திரத்தை விளக்குவதென் நூலாரம்பத்துள்ள தொடர்மொழிகளான் அறியக்கிடக்

இறது பத்துப்படலங்களான் ஆகியது. இந்நூலாசிரியர் முநிபத்ரஸ்வாமிகளது சீடர் விஜயஹம்ஸ (மூநி) ஜீயர் ஆவார். மணிப்ரவாளநடையுடைத்து. எழுத்துப்பிழை மிகுந்துள்ளது.

No. 2045. தர்ம பரீக்ஷை.

DHARMAPARĪKṢAI.

Substance, paper, Size, 11¼ × 9¼ inches. Pages, 184. Lines, 21 on a page. Character Tamil and Grantha. Condition, good. Appearance, new.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இது முன் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பத்துப் படலங்களும் இருகின்றன. இடையிடையே வசனநடையில் ஒரு சிறிது வசனபேதங்காணப்படுகிறது. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. கர்ணாடக பாஷையிலிருந்ததை மணிப்ரவாள நடையில் 'விஜயஹம்ஸ முனிவர்' என்பவர் இயற்றியதாக நூலாரம்பத்துக் காணக்கிடக்கிறது.

No. 2046. அநித்திய நித்திய வியத்தியாச விவேகம்.

ANITTIYA NITTIYA VIYATTIYĀSAVIVĒKAM.

Substance, paper. Size, 8 × 6¼ inches. Pages, 130. Lines, 22 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

A Christian treatise explaining how the attainment of Salvation has for its means the distinguishing of things eternal from those that are perishable.

Beginning.

அநித்திய நித்திய வியத்தியாசத்தின் விவேகம்.

சிஷ்டபரிபாலனை பரமகர்த்தாவானவர் பரமகதி என்கிற மோக்ஷத்தை மனுஷ்யனானவனுக்குக்கொடுக்கக் கர்த்துருத்துவம் உள்ளவராயிருக்கிறபடி யால் மனுஷ்யன் ஆனவன் அப்படிப்பட்ட பரமகதியை எளிதாய் அடையத் தக்கதாக உலக பிரபஞ்சங்களை . . . . ப்போலே கட்டளையிட்டு அருளிச் செய்தார். இப்படியிருக்கையிலே மனுஷ்யன் சொல்லப் பட்ட பிரபஞ்ச வாழ்வுகளைப் பரமகர்த்தரானவர் கட்டளையிட்ட ஞாயத்தின் படியே அனுபவியாமற் கிரமந்தப்பி அவைகளெல்லாம் கதியென்றெண்ணி அவைகளைப் பிரியாத நேசத்துடனேபற்றி வருகிறதனால் தன்னுடைய வீடேற் றத்துக்கு விரோதம் பண்ணிக்கொண்டுவருகிறான். இதுவுமன்றியே அவை

கள் நன்மை சித்திக்க உண்டாக்கப்பட்டிருக்கையில் மனுஷ்யனானவன் அவை களை அனுபவிக்கிறதிலே பாபத்தைக்கட்டிக்கொள்ளுகிறதினால் தனக்கு நரகம் என்கிற ஆக்கினையை வரப்பண்ணிக்கொள்ளுகிறான். தான் கொஞ்ச நாளைக்கு மாத்திரம் நித்தியமாயிருக்கிற பிரபஞ்சவாழ்வுகளை நம்பினதற்கு நித்திய மோக்ஷராஜ்யத்தை இழந்து முடிவில்லாத வாக்கினைக்குப் பாத்திரமாய்ப் போகிறான். ஆகையால் அந்தக்கொடிதான வாக்கினைகளுக்கும் இழந்து போன நல்ல மோக்ஷ ராஜ்யத்தின் நித்திய பாக்கியங்களுக்கும் தங்களிலே எத்தனை வேற்றுமை உண்டாயிருக்குமென்றும் இதிலே காண்பிக்கப்படும் என்கிறவதினால் '**இந்த நிபந்தனந்தனக்கு** ' அநித்திய நித்திய **வியத்தியா சம்**' என்கிற பெயர் வந்த காரணம் என்றறிக. ஆனால் நரகமோட்சங்களைக் கண்டது யார் என்று தீதுல்கர் சொல்லும் சொல்லை மனதிலே வைத்தாயா இல் * * * * * * *

End:

அந்தத்தலையான பாவங்கள் ஏழுக்குட் பேர் ஆவன :—முதலாவது அகங்காரம், இரண்டாவது கோபம், மூன்றாவது மோகம், நாலாவது உலோபித்தன்மை, ஐந்தாவது போசனப்பிரியம், * * * ஏழாவது சோம்பல் என்கிற பாவங்கள். அநேக பாவங்களுக்கு தலையான பாவங்களாயிருக்கிறபடியினாலே அவைகளை யகற்றி உனது பரமகதியாயிருக்கிற மோட்ச ராச்சியத்தைச் சேர்ந்தடையப் பண்ணுகிற மேற்சொல்லப்பட்ட சுகிருத புண்ணியங்களைச் செய்ய மனந்துணிந்து ஓட்டமெடுத்தோடக்கடவாய். இல்லாவிட்டால் பரகதியடையாது என்றென்றைக்கும் பாடுபட நரகத்திலே தள்ளப்பட்டுப்போவாய் . . . . . . சீக்கிரத்திலே கர்மஜமான பாவங்களைவிட்டுத் தூய்மையுள்ள சுகிருத புண்ணியங்களைச் செய்யத்துணிந்து நடக்கக்கடவாய், 14 வியத்தியாசம் முற்றும் முடிந்தது.

1828-ம்ஞு செப்டம்பர்மீ 20உ சனிக்கிழமை சாயங்காலம் 5½ மணிக்கு ஞானப்பிரகாசன் கையினால் எழுதிமுடிந்தது.

(கு - பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தைச்சார்ந்ததாய் நித்தியாநித்திய வஸ்து விவேகவாயிலான் வீடு பெறுமாற்றை விளக்குகிறது (14) பதினாலு சிறு பிரிவுகளால் நிறைந்துள்ளது. வசன நடையத்துணைச் சிறப்பின்றியிருத்தலோடு மிகப்பிழை பாட்டுடன் காணப்படுகிறது

No. 2047. ஆன்ம நிர்ணயம்.

ĀNMANIRṆAYAM.

Substance, paper. Size, 9⅝×7¼ inches. Pages, 128. Lines, 22 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete in the 7th Pāṭham.

Explains Christian doctrines in the form of "lessons"; and contains only the first seven of the thirty-eight lessons, of which it purports to consist.

(ஆத்ம நிர்ணயம் முதற்பாடம்). பாயிரம்.

Beginning:

* * * *

என்கிற விசேஷமும் சீவனுனது சரீரத்திற்கு மாத்திரை முதற்பாடத்திலே ஒப்புவிக்கிறேம் என்கிறதினுலே சீவனுடைய சாதாரண நிரூபணம் இன்னதென்று அதிலே சொல்லப்படும். அறிகையென்கிற ஞான மானது இன்னதென்றும் அது சரீரத்தில் ஆதேயமாயிராமல் ஆன்ம மாத்தி ரம் அதற்காதாரமாயிருக்கிறதனுலே ஞான விருத்தியைப் பண்ணிக்கொண்டு வரு * * * * சீவனுனது அழிவில்லாமல் என்றென்றைக்கும் நிற்கத் தக்க பொருளாயிருக்கிறதென்றும் ஞான விருத்தியானது உத்பவிக்கிற பொருளிலே மாத்திரம் ஆதேயமாயிருக்கலாமொழிய வேறே பொருளோடே சார்ந்திருக்கக்கூடாது என்று

End:

ஆதலாலே பாவிகளானபேர்கள் தங்களை நரகத்திலே கர்த்தரானவர் தள்ளி ஒழியாத அக்கினி வேதனையைத் தாங்கள் அனுபவிக்கிறதற்கு நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிடப்போகிறுர் என்கிறதனுலே மு றைப்பாடு சொல்ல அவர்கட்கு முதலாய்ச் சற்றுனும் அவகாசம் உண்டாயிரா தென்று சொல்லக்கடவோம். ஆனபடியினுலே மனுஷ்யர் என்னப்பட்டவர் யாவர்க்குங் கர்த்தரானவர் கட்சியாய் மோட்சங்கொடுப்பார் என்று சில துர் மதங்களிலே சொல்லியிருக்கிறதே. அப்படிப்பட்ட பட்சமானது ஞாயமுள்ள கிரமத்துக்கு விருத்தமாயிருக்கக் கொள்ள அது தத்பரையாயிருக்கிறதென்று அங்கீகரிக்கக் கடவோம். இவ்விடத்திலே மிகவும் அறியவேண்டிய ஒரு விசே டம் உண்டு. அதை வருகின்ற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம். ஏழாம் பாடம் முற்றும் (280)

(கு - பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தின் சார்பாக அவர்களது மதக்கோட்பாடு களை விரிவாகப் 'பாடம்' என்கிற சிறு பகுதியைக்கொண்டு உணர்த்துகிறது. முப்பத்தெட்டுப் பாடங்களான் ஆகியது. இப்பிரதியில் இந்நூல் முதலாவது பாடம் முதல் ஏழாம் பாடம் வரையிலுமே உள்ளது. ஏடுகள் சில சிதைந்து முறிந்திருக்கின்றன. வசன நடை மிகவும் பிழைபட்டுள்ளது. இதில் முக் தி விஷயம் சுகதுக்கரூபமான மோட்ச நரகங்களை யனுபவிக்கும் ஆன்மா வென்றதொரு தத்துவம் உண்டென்று எல்லா மதத்தினரும் ஒப்புக்கொண்ட அவ்வொரு விடயமேபோலும்.

No. 2048. ஆன்ம நிர்ணயம்.

ĀNMA NIRṆAYAM.

Substance, paper. Size, 9⅞ X 7⅞ inches. Pages, 788. Lines, 22 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains from the 8th Pāṭham to the 38th Pāṭham.

Same work as that described above.

Beginning :

எட்டாம் பாடம்.

நீதியுள்ள கர்த்தரானவர் மோக்ஷத்தைக் கொடுக்கிறதற்குப் போரு மென்று சொல்லப்பட்ட பலத்தை மனுஷ்யர் என்னப்பட்ட யாவர்க்குங் கொடுக்கிறதென்கிறது அவருடைய முடிவில்லாத தயைக்கும் நீதிக்கும் ஏற்றிருக்கின்றதென்கிறதற்குத் தப்பாது. ஆனால் எல்லாரும் மோக்ஷத் தைப் பெறுகிறதற்கு எல்லாருக்கும் போருமென்னப்பட்ட பலத்தைத் தயா பரனான கர்த்தன் கொடுத்தபோதே ஒருவன்றனது சுவாதந்தர்யத்தினாலே கர்த்தன் கொடுத்த தர்ம விசாரங்கள் முதலான உதவிகளைக்கொண்டு கரையேறுவானென்றும் வேறொருத்தன் கர்த்தன பண்ணின தயவைச் சட்டை பண்ணுமற்றனது சுவாதந்தர்யத்தினாலே பாவம் பண்ணி நரகத் திலே விழுவானென்றும் அளவில்லாத ஞானசுரூபமாயிருக்கிற சர்வேச்வர ரானவர் கேவலம் பார்த்துக்கொண்டிருக்கையில்லை வேறே பிரகாரமாய்ப் பலிக்கமாட்டாது. அவ்வண்ணமே வர்த்தமானமானது வரும் என்று எந்தவடைவிலே கர்த்தனாலே காணப்படுகிறதோ அந்தவடைவிலே வர்த்த மானம் பலிக்கு மொழியக் கர்த்தன் காண்கிற வகைக்கு விருத்தமாய்ப் பலிக்கமாட்டாது. ஆதலாலே திவ்விய தரிசனமானது அந்தந்தக் காரியம் வருகிறதற்குக் கட்டாயம் பண்ணுகிற காரணமாயிருக்கிறதென்று காண்பித் தாற்போலாயிற்று. * * * * *

End :

இந்த மூன்று விசேஷங்களிலே ஒப்புக்கொள்ளத்தக்க சித்தாந்த மேதென்று கண்டு பிடிக்கிறதற்குத் தேவோக்த வேதப்பிரமாணத்தினாலே யறியவேண்டிய சில பரம ரகசியங்கள் உண்டு. அவைகளை நன்றாக யாவன் ஒருவன் அறியாமலிருந்தால் முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களிலே போம்வழி ஏதென்று கண்டு பிடிக்கமாட்டான் என்கிறதனாலே ஞானோப தேசத்தின் மூன்றாங் காண்டத்தின் கடைசிப்பாடங்களிலே பாதாளமாகிற நரக முதலான ஸ்தலங்கள் இத்தனையென்று தொகுத்து வரையறுக்கும் போது முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களை யடைவாக வெளிப்படுத்து வோம் என்கிறதனால் இவ்விடத்தில் இப்படிப்பட்ட விசேஷங்களை நினைக்கிறது உசிதமாயிராதென்க.

ஆன்மநிர்ணயத்தின் முப்பத்தெட்டாம் பாடம் முற்றும்.

ஆன்மநிர்ணயம் முற்றும்.

(கு - பு.)—

இவ்வான்ம நிர்ணயம் எனும் நூல் முன் நம்பரில் வந்துள்ளதே. இதில் அதன் தொடர்ச்சியாக எட்டாம் பாடம் முதல் முப்பத்தெட்டாம் பாடம் வரையிலான பகுதி முற்றும் உள்ளது. இதனை யியற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லையாயினும் நூலிறுதியில் உள்ள சில தொடர் மொழிகளால் இந்நூலாசிரியர் 'ஞானவுபதேசம்' என்ற மற்றொரு நூலும் இயற்றியுள்ளார் என்று தெரிகிறது. வசன நடை மிகப் பிழை யுடன் உளது. ஏடுகளிற் சில சிதைந்துள. ஏடுகள் முற்றுயே படித்தற் கியலாவண்ணம் மலினமடைந்திருக்கின்றன.

No. 2049 கித்தேரியம்மாள் அம்மானை.

KITTERIYAMMĀḶ AMMĀNAI.

Pages, 72. Lines, 34.

Begins on fol. 74-*a*. of the Ms. described under No. 2061.

Complete.

A poem, in the *Ammánai* style, on the story of Kittēri Ammāḷ, a Christian martyr.

Beginning:

தேவதாய் துணை.

அர்ச்சீய சீஸ்ட கித்தேரியம்மாள் அம்மானை

பாயிரம்.

விருத்தம்.

கார்கொண்ட வானுமேற்றக் கசடெதி ரளவுநீக்கி
நேர்கொண்ட துணைநீத்தொன்று நிமலனைப் பணிந்துபோற்றிப்
பார்கொண்ட சிறப்பின்மிக்கோர் பயன்றருஞ் சரிதைபாடச்
சீர்கொண்ட தொடைப்பாததா னெதிருதெனவடிவமேற் கொள்வாம்? (க)

ஒப்பருஞ் செல்வத்தோங்கு முலுசித்தானிய நாடுற்ற
மைப்பரு மலையுட்சீரால் வளர்பொம்ப ரென்னுங்குன்றிற்
செப்பருங் கீர்த்திதன்னுற்சிறந்த கித்தேரி காதை
தப்பரு முரிமையூன்றித் தரணிமேல் வழங்கச்சொல்வாம். (உ)

தங்கையி னல்லோர்யாருந் தரணிமேற் பணிந்துவாழ்த்தச்
செங்கையிற் கொய்ததன்பூஞ் சிரமெடுத் தேந்திப்போன
நங்கையின் கதையம்மானை நவின்றுளோர் நவிலக்கேட்போர்
சங்கையிலுயர்ந்து வான்மேற் றகுங்கதிவழி பெற்றுய்வார். (ங)

அம்மானை.

பார்முதலாய்த் தான்படைத்த பல்லுலக மத்தனையும்
வேர்முதலாய்ப் போர்த்தசைக்கும் வீரத்தனிக் கோலான்
மூவாளொரு பொருளாய் முற்றும்பகாப் பொருளாய்த்
தேவாதி தேவனவன் சேவடியைச் சேர்ந்தேற்றி
வானுவப்ப மண்ணுலகின் மன்னுயிர்கள் வாழ்ந்தோங்கத்
தானுவப்ப தந்தசேய்த் தன்மையெழுங் கன்னிகையின்
காதையுரைத் தம்மானைக் கூட்டாக விளையாடப்
பேதையர்க் கோரம்மானை பேதையும் நான்றந்திடுவேன்
பொய்வழிநூல் நீத்தொழியப் பூதலத்தி லோர்மகனுய்
மெய்வழிநூல் ஓதிநம்மை மேவியளித் தாண்டபிரான்

கன்னியருத் தாயாய்க் களித்தீன்ருள் சேவடியைச்
சென்னியரு மாலையெனச் சேர்த்தியநான் ருழ்ந்திறைஞ்சித்
தேவகன்னித் தாயடிக்கோர் தேந்தொடையாய் மற்றவளை
மேவுகன்னி காதைநலம் வெள்ளுரையாற் பாடுகின்றேன்

* * * * * * * * *

ஈங்குதித்தாள் தங்கரமேல் வந்தியதன் பொற்சிரத்தாள்
ஓங்குரத்தாள் வெற்புநல்லாள் ஒப்பில்கித்தேரி யென்பாள்
இமிழ்வாழும் பொம்பரெனு மலைமே லாண்டனளே
தமிழ்வாழுந் தென்மலைமேற் றன்றயையால் வந்தெழுந்தாள்

அன்னமலை வாழ்புலவர் ஆய்ந்தபுகழ் ப்பாமுழங்க
இன்னசிறு வம்மானை யேற்றிய சொற்கேளாரோ
வாய்க்கசப் பென்ருலும் மருந்துகொள்வா ரென்னிளஞ்சொல்
காய்க் கசப்பென்ருலுங் கதையினி தென்றுன்னுரோ

* * * * *

நூல்.

(1) பிறப்புக்காதை.

பார்வினைசிறப் பின்மிக்கதாய்ப் பார்படர்நிலத் தொருமுகமாகச்
சீர்விளைசிறப்பிற் பூமகளணிகள் சேர்த்திய செம்பெனவாகப்
போர்விளைசிறப்பில் பூதலத்தாண்மை புக்குறை நல்லறனுக
ஏர்விளைசிறப்பிற் பொருவிலதாகுமிலு சித்தானியவெனு நாடே. (க)

இத்திறநாட்டில் உயர்மதிட் பிராகமென்னு மானகரில்வீற்றிருந்து
பொய்த்திறத்தேவர் புகழ்கெடவணங்கிப் புகற்சினக் காயனேயென்பான்
மெய்த்திறச்சுருதிபகைத்த கோனவற்கே வியப்பிலோர் சுரத்திலேயொன்பான்
கைத்திறத்தரிதிற் கடைந்தென மணிபோற்கன்னிகள் பிறந்தெனவாறும்.(உ)

கொடும்பகைநினைத்து நதியிடத்தெறியக் கொடியதா யேவியவாறும்
அடும்பகைக்கஞ்சிச் சீலதீயென்பா ளருமறைப் படுத்தியவாறும்
கடும்பகைவிளைத்த தீவினைநீத்த கன்னிக ளோங்கியவாறும்
படும்பகைநமக்கே பயன்றரச்செய்யும் பரமனைவாழ்த்தி யீங்குரைப்பாம். (ங)

அம்மானை.

கன்னியரு ளோர்விளக்காங் கன்னியங்கித் தேரியம்மாள்
மின்னியருண் மிக்கருளி வீற்றிருந்த நன்னுடே
அவ்வுலகிற் சேர்ந்துவப்ப வாய்த்தெவர்க்கு மோர்வழியாய்
இவ்வுலகி லொவ்வா இலுசித்தானிய நாடே.

* * * * * * * *

எந்நாடு மொப்பிலதாய் ஈறுமில்லா மட்டுமில்லா
அந்நாடு மண்டியசீர் ஆய்ந்துரைப்ப வல்லவரார்

* * * * * * * * *

கண்டாருளம் வியப்பார் காணுருளத் துணரார்
உண்டான செல்வநகர்க் கொப்பிலேயா லம்மானே
அந்நாளி லந்நகரில் அந்நாட்டை யாண்டிருந்தான்
எந்நாளுங் குன்றுதெழும் பெருஞ்சீர்க்காய னென்பான்
கோலியலுஞ் சீரியலுங் கொண்டபடை போர்நடுக்கும்
வேலியலு மொப்பிலதாய் வீற்றிருந்தா னக்கோமான்
கோல்வளையச் சீர்மெலியக் குன்றுக்குணத் தனியோர்
மேல்வளையை யேந்திறையோன மேவாப் பகைத்தனுல்

* * * * * * *

தான்பகைத்த வேதந் தரணியெல்லாம் நீத்திகழ
வான்பகைத்த புல்லறிவான் வன்முரசா லேவினுல்
நூல்வழியே வந்தமறை நுண்மையறிந் துட்படுவோர்
வேல்வழியே யாவிவிட வென்சினத்தாற் கொல்லுவனுற்
றீயாக வென்சுரத்துச் செங்கமலம் பூத்தனபோல்
சேயாகக் கன்னியொன்பான் சேர்ந்திவற்கே யன்றுதித்தார்
அன்னான்மனைவி யகத்தச்ச முறப்பார் வியப்ப
உன்னுதொரு சுரமாய் ஒன்பதுமா தீன்றனளால்
இதையறிந்தா ரென்னுவரே யென்றுளத்து நாணியதால்
அதைமறியா மன்னவற்கு அன்றெளித்துத் தீதுணர்ந்தே
தேர்ந்தபல பாங்கியருட் சீலதியென்பா ளொருத்தி
ஓர்ந்தவளை வாவெனநான் ஓயாத நிந்தைபெறத்
தாயிவரைப் பெற்றேன் தரணியுள்ளோ ரான்றறியார்
நீயிவரைக் கொண்டோடும் நீரிலெறிகென் றுரைத்தாள்
வேங்கையினுந் தீக்கொடியாள் வெஞ்சொற் கமைந்தனள்போல்
பூங்கையிலம் மாதரையோர் போர்வையினுட் கொண்டகன்றாள்
மெய்மறைதான் கொண்டதனுல் வெங்கொலைக்கே யஞ்சினளால்

* * * * * * * * *

இத்தேரி பாசிலி கேடில்சே னேவுரியே
வித்தோரி யெப்பேமி வீரலிபீராத்தையுடன்
செருமானி மாரீனே சீர்மாற்சி யாளெனவே
அருமான நாமமுற்றார் அந்நவப்பூ மெல்லியலார்

* * * * * * * * *

போற்றியுலகன் றுவப்பப் பூமேற்பிரான் பிறந்த
நூற்றிருபத் தாண்டிலன்ன துன்னிடையார் தோன்றினராய்
ஒவ்வா வரங்கொண்டு ஒருநவமீன்போலிலங்கி
இவ்வா றுலகொளியா யிங்குதித்தார் அம்மானே. (எ௷)

பிறப்புக்காதை முற்றும் தொடை.

* * * * * * *

* * * * * * *

End:

இனம்வேண்டி யாண்டவரை யிங்கிழவாதோர் நிலையாய்
தினம்வேண்டிக் கொண்டிருக்கத் துன்னுறுதி தந்தருள்வாய்
பாயிரத்தோ டுன்னருமை பாடியபுற் பாவிசைத்த
ஆயிரத்தோர் நூறுதொடை யம்புயத்தாண் மேலணிந்தே
உன்னுமங் கீர்த்திபெற வுன்னினனென் றன்பொடுநீய்
தன்னுமம் வானுலகிற் றன்காணத் தந்தருள்வாய்
வான்விளைந்த நல்லமுது மட்கலத்தில் வந்ததேன்
தேன்விளைந்த காதைநலம் செப்பியசொற் றீதெனினும்
உயிர்தருமென் றின்னமிர்த முண்டுயிர்தாம் வாழ்ந்துவந்து
செயிர்தருமென் சொல்வெறுக்க தேர்ந்தநல்லோ ரம்மானை.

புதுமைகாதை முற்றும்.

அற்சியசீஷ்ட இத்தேரியம்மாள் அம்மானை முற்றும்.

இது தொம்மையப் பிள்ளைக்குச் சொந்தம். (ஆனி உ௰-ம் ௵) 1827-ம் ௵ செப்டெம்பர்மீ எழுதினது.

(கு-பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாய்க் "இத்தேரியம்மாள்" என்னும் அம்மையாரின் விஷயமாக வியற்றப்பெற்றதொரு 'அம்மானை' யென்ற பிரபந்த விசேடமாகும்; இயற்றியவர் இன்னாரென்று புலப்படவில்லை; இது, இஉசித்தானிய நாட்டில் 'பிராகம்' என்றதொரு நகரில் அரசாட்சி புரியும் "காயன்" என்னும் அரசன் ஒருவன், கிறிஸ்தவர் மதத்தில் மிகத் துவேஷம் பூண்டிருந்து "அம்மதத்திற் புகுந்தார் உண்டாகில் அவரை யான் வேலுக்கு இரையாக்குவன்" என்று பறையறைவித்திருக்க, அந்நாளே அவனுக்குக் "இத்தேரியாள்" முதலான ஒன்பது கன்னிகைகள் பிறக்க, அக்கன்னியர்களைத் தாயும் மிக வெறுத்துத்தன் சிலதியாளை யழைப்பித்து நீ இப்பெண்களை நதியில் எறிந்துவிட்டு வருவாயென்ன, அத்தோழியும் கிறிஸ்தவர் மதம்பற்றி யொழுகுவாளொருத்தி. யாதலின் அப் பாபச்செயலுக்கு அஞ்சினளாய் அக்கன்னியரை மறைத்துவைத்து வளர்த்துவர, அக்கன்னியரும் கிறிஸ்தவர் மதப்பற்றுடையவர்களா யிருந்தார்கள். அதுகண்ட தந்தையான காயனும், அக்கன்னியரைத் தன் மக்களென்றும் அறியானாய் மிகச் சினந்து பலவாறாக வொறுத்து வந்தான். அங்ஙன் ஒறுத்தும் அவர் திருந்தாதவர்களாய்க் கிறிஸ்துவையே வழிபட்டிருந்தார்கள்; இருக்க, ஒரு நாள் அவ்வொன்பது மங்கையரும் ஏசு கிறிஸ்துவின் ஆணையால் அரயன் கொடுமைக்குப் பயந்தவர்களாய்த் தனித்தனியாய்ப் பிரிந்திருந்தார்கள்; அப்படிப் பிரிந்திருந்தார்களில் இக் இத்தேரியாள் மாத்திரம் அகப்படவே, அவளைச் சாமதான பேதங்களால் இசைவிக்கவும், இசையாதவளாய் மதக்காழ்ப்புகொண்டிருக்க, இறுதியான தண்டோபாயத்தான் தண்டிக்கவும் மாறுதது கண்டு அவள் சிரத்தினைக் கொய்ய ஏவலாளர்கட்கு ஆணையிட, அவர்கள் சிரத்தைக் கொய்தார்கள் என்றிவ்வரலாற்றை விளக்கமாகப் பத்துக் காதைகளான் உணர்த்துகின்றது.

No. 2050. மேரிகருதம்மாள் அம்மானை.

MĒRĪKARUDAMMĀḶ AMMĀNAI.

Pages, 62. Lines, 34 on a page.

Begins on fol. 43–*a* of the Ms. described under No. 2061.

Complete.

A poem, in the *Ammânai* style, on the story of the Christian martyr, Mary Karudammāḷ.

Beginning:

தேவதாய் துணை.

மேரிகருதம்மாள் அம்மானை.

காப்பு.

சந்தமேரி கருதாள்தன்ம சரித்திரத்தைப்
பைந்தமிழா லம்மானைப் பாடுதற்கு—முந்தவரந்
தாரணியிற் செய்ததருந் தமிழையான் பாடவல்ல
காரணமாம் பொற்சிலுவை காப்பு.

பாயிரம்.

சீராருஞ் ஞானத்திறையோ னெனெஞ்சில் வைத்துப்
பாராரும் வாழ்கப் பகர்ந்துரைத்தே னம்மானை
முன்னவனே யேகன்முகனே முகிவில்லா[னை]னே
தன்னிக ரில்லாதபரன் றுறுயிருப்போனே
வந்துதவு மிக்கதைக்கு வானவனே யுன்றயவால்
எந்தை சருவேசுவரனே யெவ்வுயிர்க்குங் கர்த்தாவே
மாதுதவக்கன்னி மேரிகருதாள் மாதவத்தைத்
தீதுநிறைந்த பொல்லாச் சிறியேனுன் பாடுகிறேன்
தந்திடுவீர் நல்வாக்குத் தாதாவே தற்பரனே
உந்தனருள் [பி](ப)லத்தா லொலிவொரு கையாலே

* * * * * * * * *

பத்து வசனப்படியே பாருலகத்தோர் நடக்க
முத்திவழி காட்டுகின்ற முனிவோர் திருச்சரணம்
ஆதாரமாக வடைக்கலமாய் நெஞ்சில் வைத்து
பாதாரவிந்தம் பணிந்தேனே யம்மானை
வேதபுராணமதை விரித்தே சுயம்பாட
பேர்தவங்கள் ஞானம்புகலும் பெரியோரே
அறியேன் பலகலைகள் ஆராய்ந்து யான்பாட

* * * * * * *

ஒளிசெறியுங் கன்னிதலே உறுபாவி வெட்டினதும்
மட்டில்லா மோட்சமதில் மங்கைகன்னி யாத்துமந்தான்
தானுய பரஞ்சோதி சருவேசு வரனுடைய
தேனுர் முகமுகமாய்ச் சென்றுகன்னி முத்திபெற்ருள்
முத்திபெற்ற வாறுதன்னே முகனேமுகிவைத்துவக்கிச்
சித்திரமாகத் தெரிந்து செப்புகிறேன் கேட்டருளும்
செப்புகிறேன் புத்தகத்தி னுரையொழுங்கு தான்பார்த்து
பார்த்தடியேன் பாடுகிறேன் பாவல[ரை](ரே) யிக்கதையில்
ஏத்த குற்றம் உண்டானு லிசைவா யுரைத்திடுவீர்.

* * * * * * * * *

நூல் அம்மானே.

வாராழி சூழ்ந்திலங்கும் வையகப்பூ மண்டலத்தில்
பேராகவே விளங்கும் பெருமையுள்ள மாநகரில்
நகரியந்தி யோக்கியிலே நாணமில் லாதேயிருப்போன்
சிகாரிநகர்க் குருவாந்தேயோ தேசியானேன்
தேயோ தேசிமகள்தான் திறஞ்சேர் மரிகருதாள்
தாயார் சடமழிந்து தானரகிற் போனபின்பு
போனதற்பின் தன்மகளேப் பொல்லாத் தேயோதேசி
தானேயொருத்தி கையில்தான் வளர்க்கவே கொடுத்தான்
கொடுபோய் மடமாதைக் கோதை வளர்த்தபின்பு
அடைவாக நல்லபுத்தி அறிவையற்குவந்தபின்பு
வந்து வளர்த்தவளும் மேரிகருதாளுங்கூடி
எந்தை சருவேசுவரனுர் இறைவருடையாகமத்தை
அறிந்து ஞானதீட்சையவர்கள் பெற்றபின்பு நல்ல
சிறந்தவொரு சந்தினல்ல செபத்தியானங்கள்செய்வார்
செய்யும் மரிகருதாள் செகதலத்தினுசைவிட்டு
ஐயர்சருவேசுவரனே யடிக்கடி தோத்திரங்கள்பண்ணி
உத்தபரமண்டலத்தை யோங்கித்தியானஙகள்பண்ணி.

* * * *

அடைத்திடுவாள கண்காது யானமுகவாசலெல்லாங்
கெடுத்திடுவாள் தன்னுடலைக் கதிபெறவேவேணுமென்று
எண்டுமேரிகருதாயிருக்கு மந்தநாளேயிலே
மண்டலருந்தன் தகப்பன் வளமைதனையறிந்து
தொடுத்தானே புத்திசொல்லத் துய்யமின்னுரைச்சினந்து
கெடுத்தாளே யென்பிழப்பை கிருபைமிஞ்சியேயிவள்தன்

* * * *

பண்ணரிய நம்முடைய பலசமைய சாஸ்திரத்தை
எண்ணுமற்றட்டுகிருள் என்றுசொல்லியேசலித்து

என்றுபுராணங்களோடு இசைந்தொருநால்வேதம்
ஒன்றுபட சாஸ்திரத்தை யொக்கவேதான் தட்டுகிருள்
தட்டுகிருள் தேவர்களைத் தழல்நகரப் பேயெனவே
விட்டெரியச்சொல்லுகிருள் வேதபுராணங்களெல்லாம்.

* * * *

End :

இப்படியேவேண்டல் செய்துகொண்டிருக்கும் வேளையிலே
அப்படியே மோட்சபதியான பரமண்டலத்தில்
நின்றுயொருபெரிய நேசமுள்ளசத்தமது
மேரிகருதாளென்று நல்லமாதவஞ்சேரும்விரத்தி
வரிசைபுகழ்மோட்சவாழ்வு பெறவிங்கேவா
அஞ்சாதே சற்றும் நீயாகந்தடுமாருதே
மிஞ்சுபறவைசூழ் விண்ணுலகந்தன்னிலேவா
தேவப்பிரசாதந்திருப்தியை நீ யடைந்து
ஏகர்பிரசாதநன்மையீறில்லாக் காலமெல்லாம்
உண்டுபரமண்டலத்தில் உயிராநந்தப்பதியில்
பூண்டாய் மாமலரைப் பூரணப்பதியடைவாய்
என்று பரசத்தம் இப்படியே சொல்லவேதான்
நன்றெனவேதந்தவத்தாள் நளினசந்தோஷமுடன்
ஒன்றுமில்லாக்காலம் உலகம்படைத்தோனே
அண்ணலே தெய்வீகவநாதிபிதாச்சுதனே
விண்ணுலகிலென்னை விரும்பியழைத்தருளும்
எந்தனுயிருக்கிரக்கம் புரியுமென்று
அந்தரத்தைநோக்கி யவளழுதுதான்வேண்டி
ஏசுவே சேசுவே யென்றுசொல்லி நிற்கையிலே
வெட்டினூர்சென்னிதலை மேதினியிற்ருன்விழவே
மட்டில்லாவேகன் வரவிட்டார் சம்மனசோர்
ஒன்பதுசங்கமொருமித்து நின்றிறங்கி
கீதங்களோசையிடக் கின்னரராகமுழங்க

* * * *

தம்புராமுழங்கத்தவில் வீணைதான்முழங்க
கொம்போடுவெக்காளை குலாவிநடம்புரிய
பாடினூர் சங்கீதம் பலராகங்கீதமுடன்
ஆடினூர் நாடகங்கள் ஆனந்தம்பெற்றிடவே
மாசில்லாக்கன்னி மேரிகருதாளாத்துமமே
தேசுலவுமேகன் திருமுகமாய்வாருமென்று
வெத்திமுடியணிந்தார் வேதத்தின் சாட்சியென்பார்
மெத்தவரிசையுடன் மேவுலகில் வாருமென்று
சுத்தியணியாய்ச்சூழ்ந்து நின்றுசொற்பணிந்து

பத்தியாய்க்கூடியேதான் பரலோகங்கொண்டுசென்றார்
அப்போதுவகன் அதிகப்பிரியமுடனே
இப்போதுமோட்சமதில் இருமென்று கையமர்த்தி
சுத்தமேரிகருதாள் துய்யகன்னியாத்துமத்தை
கர்த்தரிடந்தன்னில் களிக்கவைத்தாராத்துமத்தை
மாசில்லாக்கன்னி மேரிகருதாள்தன்சடத்தை
நேசித்துப்போற்றிசெய்து நீள்நிலத்திலேயிருந்து
உற்றகிறிஸ்தவர்கள் இடத்திலே வைத்தார்கள்
என்றுமவளுதவி யெப்போதுந்தப்பாது.

* * * *

மெய்யுகந்த விண்ணுலகில் விமலர்திருப்பதத்தைச்
சேர்ந்தமனதிற் சிறப்பாயுரைத்தவரும்.

* * * *

என்பரனார் தன்னருளால் எல்லாம்பெற்று வாழ்ந்திருப்பார்
மேரிகருதாள் அம்மானை முற்றும்; 1827-ம்வரு அக்டோபர்மீ
எழுதினது.

இந்நூல், கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாய் 'மேரிகருதாள்' என்னும் அம்மையார்மீது இயற்றப்பெற்றதொரு 'அம்மானை' என்ற பிரபந்த விசேடமாகும்; இது, அவ்வம்மை 'அந்தியோக்கிய' நகரியிலே சிகரி நகர்க்குக் குருவான "தேயோதேசி" என்ற இந்து சமயம் பற்றி யொழுகுவார் ஒருவருக்குப் பெண்ணாகப் பிறந்ததுமுதல் கொண்டு அந்த நகரத்தில் அரசாளும் 'ஒலி வோரு' என்னும் அரசன் ஒருவன் இவள், தன் தாயின் ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கையிலே இவளைக் கண்டு வடிவழகில் ஈடுபட்டுக் காமவெறிகொண்டு ஏவலாளர்களான் இவளை அரண்மனைக்கு வரவழைத்துத் தன்னை மணம் புணரவேண்டி நிற்கை யிலே, இவள் அம்மனனனோடு மாறுபட்டுத் தர்க்கித்துத்தான் மேற்கொண் டொழுகும் கிறிஸ்தவ வொழுக்கத்தையவற்குபதேசித்துப் பின்னர் அது காரணமாய் அவன் பெருஞ் சீற்றத்துக்கிலக்காகிச் சிறை புகுந்து இறு தியில் தலையறுப்புண்டாளாய் மோட்சம் பெற்றதுவரையிலான இச்சரித்திர வரலாற்றை விரிவாக உணர்த்துவது; இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை. முற்றுமுளது நடைநோக்கு அத்துணை நன்றாகவில்லை பிழையுள.

No. 2051. கிறிஸ்தவர் வேத புத்தகம்.

KIRISTAVAR VĒDA PUTTAKAM.

Substance, paper. Size, 11 × 8½ inches. Pages, 302. Lines, 32 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A Tamil rendering of the "Gospel of St. Luke."

Beginning :

(லூக்கா எழுதின சுவிசேஷம்.)

முதற் பிரிவு : சுதனுகிய சர்வேசுவரன் மனுஷ்யாவதாம் :—சர்வேசுவரனுடைய சுதனுகிற எசுகிறிஸ்து சுவிசேஷத்தின் . . . . வார்த்தையானது ஆதியிலே. இவ்வார்த்தை சர்வேசுவரனிடத்தில் சர்வேசுவரன்றனே வார்த்தையாயிருந்தார்.

ஆதியில் இது சர்வேசுவரனிடத்தில்
இதனுற் பொருளெல்லாம் உண்டாக்கப்பட்டன.
இதில்லாமல் ஒன்றும் உண்டாகவில்லை.

இதனுற்றனே உயிர் உண்டாயிருந்தது. இவ்வுயிர் மனிதனுடைய பிரகாசம். இப்பிரகாசம் இருட்டிற் பிரகாசித்தது. இருட்டு அதைக் . . . . மாட்டாமற் போயிற்று * * * * * * * * இவ்வுலகத்திற் பிறக்கின்ற எல்லாமனிதரையும் பிரகாசிப்பிக்கிறவர்தானே மெய்யான பிரகாசம்.

இரண்டாம் பிரிவு :—லூ-முதல் அதிகாரம்.

ஏரோதை யிராசா யூதேயா சீமையில் இராச்சிய பாரம் பண்ணுகிற காலத்தில் அபியாவென்கிற குரு கோத்திரத்து சககரியா வென்கிறவர் குருவாயிருந்தார். அவர் பெண்சாதி இலிசபெத் என்பவள் ஆரோன் குருகோத்திரம். இவர்கள் இருவரும் மகா நீதியோடே சர்வேச்வரன் கற்பனையின்படி குற்றமில்லாதவர்களாய் நடந்துகொண்டு வந்தார்கள். எலிசபெத் என்கிறவள் மலடியா யிருக்கிறதுந்தவிர இருவரும் முதிர்ந்த வயதினர்களாயிருப்பதால் அவர்கட்குப் புத்திரசந்தானம் இல்லாமற் போயிற்று * * * * * * * * சக்கிரியா என்பவரே நீர் பயப்படாதேயும், உம்பெண்சாதி உமக்கோர் ஆண் பிள்ளையைப் பெறுவாள். பிறந்த பிள்ளைக்கு யோவான் என்றுபெயர் இடும் * * * * * * * * * * *

End :

எருசலேமில் . . . . மார் செய்த புதுமைகளைக் கண்டு யாவரும் பயபக்தியோடிருந்தார்கள். விசுவாசித்தவர்கள் யாவரும் ஒற்றுமையாய் அவர் பொருள்களைப் பொதுவாய் அனுபவித்துத் தங்கள் உடைமைகள் யாவற்றையும் விற்று வேண்டினபடி அவரவர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தேவாலயத்திலும் வீடுகளிலும் அங்கங்கே தேவபோசனங் கொடுத்துப் பிரியத்தோடும் கவடில்லாததனத்தோடும் புசித்துச் சர்வசனங்களால் சினேஹிக்கப்பட்டு * * * * * * * விளங்கப்பண்ணினுர்கள்; (வேதபுத்தகம்.) எழுதி முடிந்தது.

(கு - பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாய்த் தமிழில் " வேதபுத்தகம், எனவழங்கும் (Bible) பைபிலிலே எசுகிறிஸ்து அருளிய புதிய உடன்படிக்கை " என்கிற விரண்டாம் பாகத்தில் வந்துள்ள " லூக்கா" எழுதின சுவிசே

ஷம்" என்ற பகுதியேயாகும்; அதில் உள்ள விஷயங்களே இதில் வசன நடையிற் சிறிது மாறுபாட்டுடன் காணப்படுகின்றன. இது வசுகிறிஸ்துவின் பெருமைகளையும் வரலாற்றினையும் விளங்கக் கூறுகின்றது. வசன நடைப்போக்கு நன்றாயில்லை. மிகவும் பிழைபட்டுள்ளது.

No. 2052. கிறிஸ்தவர் ஸ்வதந்தரம் (வாக்குதத்த தொகுப்பு).

(THE) CHRISTIANS' INHERITANCE.

Substance, paper. Size, 8½ × 6¾ inches. Pages, 360. Lines, 22 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A collection of Christian doctrines handed down by oral tradition.

Beginning :

கிறிஸ்தவர்கள் ஸ்வதந்திரம் அல்லது வாக்குதத்தங்களின் தொகுப்பு.

முதற் பிரிவு.—நல்லவர்களுக்கு அருளிச்செய்த திவ்விய வாக்தத்தம். முதலாம் அதிகாரம் : லௌகீகத்திற்குரிய திவ்விய வாக்தத்தங்கள் :—

சங். ௰சு. ௬. நேர்த்தியான இடங்களில் எவ்விதம் எனக்குக் கிடைத்தது. வடிவமான சுதந்திரம் எனக்குண்டாயிற்று.

சங். அ௪. ௰க. பராபரனாகிய கர்த்தா சூரியனுங்கேடயமுமானவர். கர்த்தா கிருபையையும் மகிமையையும் அளிப்பர். மனவுண்மையாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காது இரார்.

பிற. அ. ௰உ. பராபரனுக்குப் பயந்து அவருடைய முகத்துக்கு முன்பாக அச்சிக்கையாயிருக்கிறவர்களே நன்றாயிருப்பார்களென்று நான் அறிவேன்.

எசா. ௩. ௰. நன்றாயிருப்பீர்கள் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள். ஏனெனில் தங்கள் கிரியைகளின் கனியைப் போசிப்பார்கள்.

சங். ௫அ. ௰க. மெய்யாகவே நீதிமானுக்குப் பலன் உண்டு.

சங். ரு. ௰உ. கர்த்தாவே! தேவரீர் நீதிமானையாசீர்வதித்து அவனைத் தயவென்ற கேடயத்தினாற் சூழ்ந்துகொள்வீர்.

சங். ௩. அ. இரட்சிப்பு கர்த்தருடையதே. தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய சனத்தின்மேல் இருப்பதாக.

சால. உக. உக :—நீதியையும் தயவையும் பின் தொடருகிறவன் சீவனையும் நீதியையும் மகிமையையுங் கண்டடைவான்.

சால. ௰. ௬. நீதிமானின் சிரசுக்கு ஆசீர்வாதங்கள் உண்டாம். நீதிமான்கள் விரும்புகிறதே அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

ஷை. உஅ. நீதிமான்களின் நம்பிக்கை மகிழ்ச்சியாகும். நீதியை விதைக்கிறவனே உத்தம பலனையடைவான்.

* * * * * *

End:

சு. கூ. துன்பப் படுகிறோம் ; ஆனுல் கைவிடப்படோம்.

உ. யஉ. நாம் சயித்துக்கொண்டிருந்தாற்கூட இராசரிக்கம் பண்ணுவோம்.

அ. யஎ. இப்படிக்கு அவரோடுகூட நாமும் பாடுபட்டோமானுல் அவரோடு கூட மகிமைப்படுவோம்.

ஷை. ஙரு. நம்மைக் கிறிஸ்துவின் ஸ்நேஹத்தைவிட்டுப் பிரிப்பவன் யார் ? உபத்திரவமோ வியாகுலமோ துன்பமோ பசியோ நிர்வாணமோ நாசமோ . . . .

(கு - பு) —

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்தது. அம்மதப் பெரியார்கள் வழிவழியாக உபதேசத்தான் வந்த அம்மதக்கொள்கையின் வசனங்களைத் தொகுத்து வைத்ததொரு நூலெனத் தோற்றுகிறது வசனநடை நன்று யில்லை. பிழைகள் உள. இப்பிரதியில் மற்றொரு பக்கத்திலே அந்தந்த வாக்குகளுக்கு எதிராக நேர் ஆங்கில மொழிபெயர்ப்பான வாக்கியங்களும் எழுதியுள்ளன. ஆகவே, ஆங்கில மொழிபெயர்ப்பான நூல் ஒன்றும் தமிழ் மொழிபெயர்ப்பான நூலொன்றும் ஆகிய இரண்டு பிரதியிருக் கின்றன.

No. 2053. கிறிஸ்துமத சித்தாந்தம்.

KIṚISTUMATA SIDDĀNTAM.

Substance, palm-leaf. Size, 12 × 1¼ inches. Pages, 50. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 998 of Tamil Triennial Catalogue Vol. VII.

(கு · பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக் 998-ம் நம்பரில் வந்துள்ளதேயாகும். ஷை நம்பர் பிரதிக்கு இது மாதுருகையாகின்றது. எழுத்துப்பிழை மிகவுள. வசனநடையும் சாமான்யமாயிராநின்றது. ஏடுகள் மிகவும் முறிந்தும் சிதலுண்டுமிருக்கின்றன.

No. 2054. கிறிஸ்துமத சித்தாந்தம்.

KIṚISTUMATA SIDDĀNTAM.

Substance, palm-leaf. Size, 18 × 1¼ inches. Pages, 72. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இது முன்பிரதியில் வந்துள்ளதே. மூவருடக் காட்லாக்கில் 999-ம் நம்பரில் வந்த பிரதி இப்பிரதியைப்பார்த்து எழுதி வைத்ததாகும். வசன நடை சாதாரணமானது. பிழைகள் மிகவுள. ஏடுகள் பல செல்லரித்து முறிந்திருக்கின்றன.

No. 2055. ஞாயிற்றுக்கிழமை புதுமை விவேகம்.

SUNDAY MIRACLES.

Substance, paper. Size, 12¾ × 8½ inches. Pages, 374. Lines, 24 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete in 52 miracles.

On Fifty-two miracles wrought by Jesus Christ.

Beginning :

ஞாயிற்றுக்கிழமை புதுமை விவேகம்.

பராபர வஸ்துவாகிற சர்வேசுவனாலே படைக்கப்பெற்ற வஸ்துக்களுக்குள்ளே சூரியனிடத்திலே மகா ஆச்சர்யமான காரியங்கள் விளங்குகிறதற்குச் சந்தேகமில்லே. அதேதென்றால் சூரியனுடைய மிகுந்த பிரகாசத்தினாலே நட்சத்திரங்களெல்லாம் மறைந்துபோகிறதுந்தவிர அச்சூர்யப்பிரகாசத்தை யண்ணாந்து பார்க்கவுங்கூடாது. பின்னேயுஞ் சூரியனுடைய பிரகாசம் சந்திரனுடைய பிரகாசத்தைப்போல் குறைகிறது நிறைகிறதுமாயிராமல் எப்போதும் ஒரு சீராயிருக்கிறது * * * * * * * * * * * * * * * *

அந்தப் பிரகாரம் சர்வேசுவரன் அளவில்லாத சகல நன்மை ஸ்வபாவமாயிருந்தாலும் * * * * * அவைகளை நினையாதபடியினாலே சில கிறிஸ்தவர்கள் அவரைத் தம் விசுவாசக் கண்ணினாலே கண்டாலும் அவரைச் சட்டை செய்யாமல் அவருக்குப் பொருந்தாத பாவங்களைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். ஆனால் முன் சொன்னபடி சர்வேசுவரனுடைய மகிமைகளையும் அவர் பண்ணும் எண்ணக் கூடாத உபகாரங்களையும் மனுஷ்யர் அடிக்கடி நினைத்தால் ஆண்டவரைக் கனமாய் எண்ணி அவரை ஸ்நேஹித்து அவருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்யாதிருப்பார்கள். * * * * * *

ஆனால் வருஷத்துக்குள்ளே ஐம்பத்திரண்டு ஞாயிற்றுகிழமை யிருக்கிறதினாலே முன் சொல்லப்பட்ட புதுமைக்குள்ளே ஐம்பத்திரண்டு புதுமை வெளிப்படுத்துவோம் அவைகளையும் அதன்பேரிற் சொல்லப்போகிற புத்திகளையும் நீங்கள் பராக்கில்லாமல் கேட்டால் சூரியகாந்தக் கண்ணாடியில் சூரியனுடைய கதிர்கள்பட்டு நெருப்புப் பற்றிக்கொள்ளுகிறாப்போலே நீங்கள் கேட்கப்போகிற புதுமை புத்தியாகிற ஞானக்கதிராலே உங்கள் இருதயத்திலே இரண்டு நெருப்பாகிற தேவபக்தி உண்டாகும்.

* * * * * * * *

End :

உம்முடைய நன்மைதனத்திலே என்னைச் சேர்த்துக்கொள்ளும். தேவரீருடைய சௌந்தரியத்திலே என்னை உம்முடைய வண்டைக்கு வரப் பண்ணும். உம்மை விசுவசிக்கத்தக்கதாக மெய்யான விசுவாசத்தை எனக்குக் கொடும். உம்முடையபேரிலே நம்பிக்கையாயிருக்க கெட்டியான நம்பிக்கையைத் தாரும். உம்மை ஸ்நேஹிக்கத்தக்கதாக என்னிருதயத் துக்கு உத்தம ஸ்நேஹத்தைக் கொடும். நான் உம்மை சிநேகிக்கவும் என்னைப் பகைக்கவும் உம்மையும் என்னையும் அறியப்பண்ணியருளும் சம்மனசுக்கள் முதலான. * * * கூட்ட அளவில்லாதகாலம் நான் உம்மைத் தோத்திரம் பண்ணத் தயை பண்ணியருளும். * * * *

கர்த்தர் மனுஷ்யாவதாரம் பண்ணி ஆயிரத்தெழுநூற்று நாற்பத் தாரும் வருடம் பங்குனிமீ ௰௩௳. தேவமாதாவின் உதவியால் ஞாயிற்றுக் கிழமை புதுமை விவேகம உண்டாக்கி முடிந்தது முற்றும்.

(கு - பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாகும் : இதில் அம்மதப் பெரியார் ஒருவர் அறிவில்லாத சில கிறிஸ்தவ ஜனங்கட்கும் அறிவூட்டுவான் வேண்டி ஏசுகிறிஸ்து செய்தருளிய புதுமைகள் பலவற்றில் ஐம்பத்திரண்டு புதுமைகளையறிய வெடுத்துரைத்து அம்மதக்கொள்கைகளை உபதேசித்துப் போருகின்றனர். வசனநடை எளியதாயிருக்கிறது. பிழைகள் மிகுந்துள.

No. 2056. ஞாயிற்றுக்கிழமை புதுமை விவேகம்

SUNDAY MIRACLES.

Substance, paper, Size, $8\frac{1}{4} \times 6\frac{1}{4}$ inches. Pages, 454. Lines, 23 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு - பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. இப் பிரதி முன் பிரதிக்கு மாதுருகையெனத் தோற்றுகிறது. இதில் ஐம்பத்திரண்டு புதுமைகளும் உள.

No. 2057. ஞான சூத்திரங்கள்.

ÑĀNASŪTTIRAṄKAḶ.

Pages, 2. Lines, 20 on a page.

Begins on fol. 101 (*a*) of the M. described under No. 2067 *ante*.

Complete.

34 Aphorisms inculcating Christian doctrines.

Beginning :

ஞான சூத்திரங்கள் :

(1) தாழ்விற் பெருமையே தாட்சி.

(2) மிகக்குனிந்த வில்லன்றே உள்ளூறுமம்பெய்தும்.

(3) அறமில்லாக் கல்வி கத்தியில்லா வுறை.

(4) தயையில்லா வுபதேசி தண்ணீரில்லா மேகம்.

(5) கல்வியில்லா வுபதேசி முதலில்லா வாணிகன்.

(6) புண்ணியமில்லா வுபதேசி காலில்லாக் கூத்தன்.

(7) கல்வியுமறமும் வேதியர்க் கிருகை.

(8) அழுது வேண்டுவார்க் கரியதில்லை.

* * * * * *

நகைக்கினு மயங்காதான் கலக்கினுஞ் சேறாகாக்கடல்.
வருந்தீர்வையச்சம் மதயானைக்குப் பாகன்.
தீவினையச்சந்தனை செய்தால் வழியிலச்சமில்லை.
மறைமொழி மாந்தர் நிறை மொழியாற் காணப்படும்.

வேதிய ரொழுக்கச் சோதனை முற்றும் :

(கு-பு.)—

இச் சிறு நூல் சிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாயுள்ளது ; அம் மதத்தினது கொள்கையை யாவரு முணருமாறு எளிய நடை யுடைத்தாய் (34) முப்பத்து நான்கு சூத்திரங்களாலமைந்து அறிவூட்டுவது. இது, 'வேதிய ரொழுக்கச் சோதனை' யெனும் நூலைச்சேர்ந்ததென்றே தெரிகிறது. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2058. ஞானம் உணர்த்தல்.

ÑĀNAM UṆARTTAL.

Substance, paper. Size, 9¾+8¾ inches. Pages, 91. Lines, 24 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

A Christian treatise explaining, in an easy style, the nature of the soul, sin, hell and salvation.

Beginning :

ஞானம் உணர்த்துதல் :—

பாவ மயக்கந் தெளிவிக்கும் விவரங்கள்.

தோற்றப்படுகிறதும் ஆத்மாவின் ஞானமகிமை காணப்படுகிறதும்.

பாவ மயக்கத்தை விடத்தக்கதாக முன்ன முன்னம் தன்னைத் தான் அறியவேண்டும். தன்னைத்தான் அறிந்தால் தன்னைப் படைத்த சருவேசுவரனையும் அறியலாம். அவரை யறிந்து அவரால் ஆன்மாவிற்கு வேண்டிய மோட்சத்தின் நன்மையும் பெறலாம். அதெப்படியென்றால் ;—

இராச குமாரன் ஒருவன் புத்தி யறியாத சிறு பிள்ளையாயிருக்கிற பிராய த்திலே வேடர் கையில் அகப்பட்டு அவர்களோடுகூடிக் காட்டிலுள்ள காய் கனி கிழங்குகளைத் தின்று வளர்ந்தான். புத்தி யறிந்த பிற்பாடு தன் தகப்பன் இராசா வென்றறிந்தால் என்ன நினைப்பான். தகப்பன் கிட்ட எப்பொழுது போவேனோ என்று மிகவும் ஆவலோடிருப்பான் அல்லாமல் அந்தக் காட்டில் கொஞ்சநேரமாகிலும் தரித்திருக்க மனதுவருமோ ? அப் படியே மனிதனுவன் தன்னுத்மாவின் ஞானப் பிறப்பையும் திவ்விய லட்சண மகிமையையும் அறிந்தால் அழிந்து போகிற பூலோகத்தை வெறு த்து அழியாத மோட்ச ராச்சியத்திலே சர்வேஸ்வரனோடுவாழ்ந்திருக்க மனது வையாதிருப்பானோ.

பாவி மற்ற தெல்லாவற்றையும் நினைக்கிறாய் உன்னையும் உன்னுத்துமா வையும் பற்றி நினையாமற் போகிறாய். பூலோகத்திலே காணப்பட்ட ஊர் வன பறப்பன நடப்பனவாகிய சகலத்தையும் இன்னபடியென்று திட்டம் பண்ணுகிறார்கள். * * * * * ஆனால் தன் ஆத்மா எப்படிக் கொத்தது என்றும் அதன் மகிமை வல்லமை எவ்வளவு என்று விசாரிப்பாரும் கேட்பாரும் இல்லை. இதைப் போல புத்தியின முண்டோ.

* * * * * *

End :

பாவியே ! இப்படிப்பட்ட நியாயங்களைக் கண்டு இன்னம் புத்திமானுயிரு க்கமாட்டாயோ ? இம்மாத்திரம் அறிவு உனக்குச் சொன்னதும் இம்மாத் திரம் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு உன்னை யெழுப்பிவிட்டதும் போதா தோ ? இப்படிப்பட்ட கூக்குரலுக்கும் கண் விழியாவிட்டால் செத்த பிண மல்லாமல் உயிராயிருக்கிறவன் அல்ல. பாவக் கட்டிலிலே நித்திரைகொ ண்டதும் போதும் என்று பாவ மயக்கத்தை விட்டுச் சடுதியாய் எழுந்திரு ந்து உன் பாவங்களுக்காக விசனப்பட்டுப் பிரார்த்தித்துக் கொள்ளு.

தயாதிக்கியம் மனஸ்தாபம் :—

ஞானம் உணர்த்துதல் முற்றும்.

(கு - பு.)—

இந்நூல் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததாகும், இது (1) ஆத்மாவின் தோற்றமும் அதன் மகிமையும், (2) ஆத்ம கதி, (3) பாவக்கிரியையின் கடோரம், (4) பாவத்தால் வரும் கேடுகள், (5) பாவத்துக் குடனே பரிகா ரம், (6) பாபமயத்தான் வரும் கேடுகள், (7) உலக வாழ்வநித்தியம், (8) மரண பயங்கரம், (9) தேவநடுவில் ஆத்மா தீர்வைப்படுகிற முறை, (10) தேவ உபகாரங் கொடுதீர்க்கு நடு. (11) வேதங்கொண்டு தீர்க்கும் நடு, (12) அவரவர் சரீரக்கிரியை கொண்டு தீர்க்கும் நடு, (13) நரக வேதனை, (14) மோட்ச மகிமை. என்கிற இப்பதிநான்கு சிறு பிரிவுகள் கொண்டு கிறிஸ்தவர்கள் தாம் தம்முடைய ஆன்மா சுயரூபத்தை யுள்ளவாறுணர் ந்து பாவங்களை நீக்கி ஏசு கிறிஸ்துவை வழிப்பட்டு மோட்ச மடைதற்கான நெறியைக் கற்றறியா மூடர்களும் எளிதிலுணருமாறு எளிய வசன நடை யால் உணர்த்துகின்றது. பிழைகள் மிகுந்துள்ளன.

No. 2059. ஞானோபதேசம் வசனம்.
ÑĀNŌPADĒŚAM VACANAM.

Substance, paper. Size, 11¼ × 8¾ inches. Pages, 366. Lines, 31 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Gives "instruction" in Christian doctrines, iu an easy style ; under the title, at the beginning of this work, it is stated that it was written by Tattuvabōdhaka Svāmi, a monk, who taught the Christian faith at Madura for about forty years.

Beginning :

ஞானோபதேசம் முதற் காண்டம், முதற் பாடம்:—

ஞானோபதேசத்தைக் கேட்க வருகின்றவன் முந்துற முந்துற இரண்டு விசேஷங்களை நிச்சயம் பண்ணவேண்டும். ஞானோபதேசம் எதென்று அறிகிறது முதலாவது விசேஷம். இந்த ஞானோபதேசத்தினாலே வருகிற நன்மை எதென்று தெளிகிறது அறியவேண்டின இரண்டாம் விசேஷமாகும். ஞானோபதேசமாவது லோக சம்பந்தமாயிருக்கிற வியாபாரங்களும் லோகத்துக் கடுத்த நடக்கைகளும் வியர்த்த கதைகளும் அல்ல. ஆனபடியினாலே ஞானோபதேசம் ஆவது மூன்று விசேஷங்களுக்குள்ளே யடங்கும். அவைகளிலே சர்வேச்வரனை யறிகிறதென்கிறது முதலாம் விசேஷமென்றும், பாவந்தள்ளுகிறதற்கு உபாய மேதென்று நிச்சயிக்கிறது இரண்டாம் விசேஷமென்றும், சர்வேச்வரனை யறிந்து பாபங்களைத் தளுகிற உபாயம் எதென்று நிச்சயம் பண்ணினதுந் தவிரத் தரும வழியிலே மரணபர்யந்தம் நீ நடந்து அதிலே பிரதிதினம் வருகிற அபராதங்களைத் தள்ளிக்கொண்டு வரவேண்டுமே. இதற்கு உன்னுடைய பலம் போராததனாலே சர்வேச்வரன் உனக்குக் கிருபை பண்ணித் துணை செய்ய வேண்டுமல்லோ ? அதற்கு நீ செய்யத்தக்கது எதென்று அறிகிறது மூன்றும் விசேஷமாகும். இந்த மூன்று விசேஷங்களை நீயறிந்தாயானால் ஞானோபதேசம் பெற்றாய் என்று சொல்லலாம். ஆதலால் இந்த மூன்று விசேஷங்களைத் தெளிவாக நீ அறிகிறதற்கு மெள்ள மெள்ளச் சொல்லிக் கொண்டு வருவோம். இதிலே உன் மனதிற்குச் சந்தேகம் வரலாம். அஃதேதென்றால் மகா மகாப்பட்ட பெரியோர்களும் சர்வேச்வரனைத்தேடி அறியமாட்டாதே போனார்கள் என்று சொல்லுகிறார்களே. இது இப்படி இருக்கையிலே சேவகர் முதலான குடியானவர்களும் ஸ்த்ரீ சாதிகளும் சர்வேச்வரனை யறியமாட்டுவார்களோ * * * *

* * * * * * * *

End :

விருத்தனாயிருக்கிற எனக்கு மலடியாயிருக்கிற . . . . . ஸ்த்ரீயினிடத்திலே பிள்ளை யுண்டாமென்றதை நான் கண்டுபிடிக்கிறதுக்கு இலட்சணம் எதென்று சொல்லிச் சர்வேச்ரனனவர் சம்மனசுவைக்கொண்டு சொல்லிவரவிட்ட வார்த்தையிலே சக்கீரீயச் என்கிறவர் . . . . சந்தேகப்பட்டு . . . . . நான் இப்படிக்கொத்த நல்ல விசேஷத்தை உனக்கு

அறிக்கையிட அவராலே யனுப்பப்பட்டேன். என்னுடைய வார்த்தையைப் பூர்ண விசுவாசத்தோடே யங்கீகரிக்கிறதற்கு அங்கீகரியாதே போனுயே என் வார்த்தைப்படியே சுமுத்திரையாய்ப் பலிக்குமொழிய மற்றப்படியல்ல. இப்படிக்கொத்த வார்த்தையை நீ யங்கீகரியாததினுலே நான சொன்னதை நீ காணுமளவும் வார்த்தை சொல்லாமல் ஊமையாயிருப்பாயாக வென்று சம்மனசு சொன்னுர். இப்படிப்பட்ட பயங்கரமானது சம்மனசு சக்கிரீயசு என்கிற இருவர்க்கும் நடக்கச் செய்தே புறத்திலே பார்த்துக்கொண்டிருக்கிற பிரசைகள் . . . சக்கிரீயசு என்கிறவர் புறத்திலே வந்து வார்த்தை சொல்லுகிறதற்கு வல்லவனுயிருக்கவில்லை யென்று எல்லாரும் பார்த்து யாதோ ஒரு அத்புதமான காட்சி யவருக்குண்டாயிற்று என்றறிந்து கொண்டார்கள் இத்தறுவாயிலே கேட்கத்தக்க சந்தேகம் ஆவது.—புண்யாத்மா வாயிருக்கிற சக்கிரீயசு என்கிறவர் சம்மனசு சொன்ன வார்த்தையைப் பூர்ணுங்கீகாரத்தோடே . . . .

(கு-பு.)—

இந்நூல் கிறிஸ்தவர் மதத்தின் சார்பாக அம்மதக் கொள்கைகளை எளிதிலுணருமாறு உபதேச ரூபமாய் அமைந்துள்ளது. இது, கிறிஸ்தவ மதத் துறவியாய் மதுரையிலே நாற்பது வருடம் கிறிஸ்தவர் கொள்கைகளைப் பலர்க்கும் உபதேசித்துப் போந்த 'தத்துவ போதக சுவாமி' என்பவரால் இயற்றப்பெற்றதென இந்நூலின் முதலிலுள்ள தலையங்கப் பெயரின் கீழ் எழுதப்பெற்ற ஒரு வாக்கியத்தான் அறியக்கிடக்கிறது. மற்றும் மூன்று காண்டங்களாய் அமைந்ததென்றுந் தெரிகிறது. இங்கு இரண்டாங்காண்டத்தின் இருபதாம் பாடம் வரையினுமே உள்ளது. இருபதாம் பாடமும் அரைகுறையாய்ச் சக்கிரீயசு என்பவர் ஊமையான வரலாற்றில் சிறிது சங்கை யுணர்த்தும் பகுதி வரையுமே யுள்ளது—. பிழை யதிகமாய்க் காணப்படுகின்றன.

No. 2060. திருநாள் பிரசங்கம்.

TIRUNAL PIRASANGAM.

Substance, paper. Size, 8¾ × 6 inches. Pages, 636. Lines, 28 on a page Character, Tamil. Condition, *injured*. Appearance, *old*.

Complete.

Contains an account of the Apostles and other such celebrated followers of Christ and teachers of his religion.

Beginning :

வையாசி ௴ க. உ. அப்போஸ்தலர்களான அர்சியா சீஷர் பிலிப்பும் சின்னயா கப்பர் திருநாள் பிரசங்கமாவது.—

அர்சியா சீஷர் பிலுப்பென்கிறவர் கலிலேய சீமையிலே பெதராயித வென்குற பட்டணத்திலே பிறந்தார். இவர் தீர்க்க தரிசியான மோயிசு என்கிறவருடைய புத்தகங்களை வாசிக்கிறபோது லோகத்தை இரட்சிக்கப்போகிற வருடைய அடையாளங்களை அறிந்திருந்தார். இத்னுலே கர்த்தர் அவரைத் தமக்குச் சீஷனுகத் தெரிந்துகொள்ளுகிற சமயத்திலே முன் சொல்லப்பட்ட

அடையாளங்கள் ஏசுநாதரிடத்திலிருக்கிறது என்று அவர் அறிந்து லோகத்தை இரட்சிக்கிறவர். இவர் தாமே யென்று எளிதாய்க் கண்டுபிடித்ததல்லாமல் அவர்பிறகே சீஷனுகப் போனுர். தாம் அப்போஸ்தலாகாகுற தொழிலைத்தரித்தக்கொண்டவுடனே அத்தை நடத்தத் துவக்கினுர். அதெப்படியென்றுல் ஏசு நாதர் லோகத்தை இரட்கிக்கிறவர் தாமே யென்று தாந்தானே ஏலுக்குச் சொல்லியவரைச் சுவாமி கிட்டக் கூட்டிப்போனுர். பின்னையும் கர்த்தர் அஞ்சப்பத்தை ஐயாயிரம் பேருக்குப் பகிர்தற்குமுன்னே இத்தனை சனங்களுக்கு வேண்டிய அப்பம் எங்கே விலைக்கு வாங்கலாமென்று பிலிப்பென்கிறவரைத் தானே கேட்டார்.

* * * * * * * * *

* * * * * * * * *

End :

ஆவணி மீ ௩௰௧௨ பிறவாத அர்சியசீஷர். இரேமுந்து திருநாள் பிரசங்கம் ஆவது.—

இந்த இரேமுந்து என்கிறவருடைய தாய் தகப்பன்மார் கத்த லோனியா வென்கிற இராச்சியத்திலே உயர்ந்த கோத்திரமுள்ள புண்ணியவான்களாயிருந்தார்கள். இவர் தாயினுடைய கர்ப்பத்திலே யிருக்கையிலேதானே தாய் மரணத்தை யடைந்தாள். செத்துப்போன தாய் வயிற்றைச் சத்திர கத்தியினுலே ? கீறி உள்ளே யிருக்கிற குழந்தை உயிரோடே வெளியிலே எடுக்கப்பட்டது. இந்தக் குழந்தை மற்றக் குழந்தைகளைப்போலே (கவாடமாய்) (யோனிவரயிலான்) பிறவாததனுலே இவருக்குப் ' பிறவாதரேமுந்து ' என்று பெயரிட்டார்கள். இவர் வளர்கையிலே ' விளையும் பயிர் முளையிலேயே தெரியும் ' என்கிறுப்போலே இனிமேல் பெரிய அர்சிய சீஷாவராயிருப்பார் என்கிற வடையாளங்கள் சிறு பிள்ளையா யிருக்கையிலேதானே யவரிடத்திலே காணப்பட்டது.

* * * * * * * *

மந்திரமும் வேண்டிக்கொண்டு அந்த வேண்டுதலை யவர் பேரிற் பக்தியுள்ள உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு ஒப்புக் கொடுங்கோள். ௩௧

(கு-பு.)—

இத் ' திருநாள் பிரசங்கம் ' எனும் நூல் கிறிஸ்துமத சித்தாந்தத்தைச் சார்ந்ததாகும், ஏசுகிறிஸ்துவுக்குப் பின்னர் தோற்றிய அம்மதப் பெரியவர்களுடைய சரித்திரங்களைப் பிறந்த இடம் முதலானவற்றைக் காட்டியுணர்த்துவது. இது வைகாசி மீ க. உ. முதலாய் ஆவணி மீ ௩௧ வரையிலான ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொருவர் சரித்திரமாக வமைந்துள்ளது. இது இரண்டு பாகமாகக் கட்டப்பட்டுளது. இங்குக் காட்டியிருக்கும் இறுதிப்பாகம் இரண்டாம் பாகத்ததாகும். இன்னுரியற்றியதென்றும் இத்துணைத்தென்றும் விளங்கவில்லை. பிழையுள. ஏடுகள் படித்தற் கியலாவண்ணம் அத்துணை மாசுற்றிருக்கின்றன.

No. 2061. தெய்வ சகாய சிகாமணிமாலை.

DEYVA SAHĀYA ŚIKHĀMAṆIMĀLAI.

Substance, paper. Size, 8 × 6¼ inches. Pages, 84. Lines, 28—34 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 1-*a*. The other works herein are Mērikarudammāḷ ammānai 43 *a*; Kittēriyammāḷ ammānai 74 *a*.

Complete.

Contains the story of Deyvasahāyam, a high-placed Hindu of Travancore, who embraced Christianity in his later years, and died a martyr to his new faith.

Beginning :

தெய்வ சகாய சிகாமணி மாலை. (1827-ம் ௵ நவம்பர் ௴ எழுதியது.)

திங்கள் வானகமும் பூமியு மலையுந்
திரைகடற் சருவபல்லுயிருந்
திட்டித்த வேக பரப்பொருளாதி
தேவன்றன் திருவுரையதனை
மங்களம் நிறைந்த தயிரியத்துடனே
மனதினி லுறுதியாயிருந்த
மாசிலான் தேவசகாய சிகாமணி
மாலை மானில மிசைபாடத்
தங்கமாமகுட முடியது சூடித்
தருமசெங்கோற் கரம்பிடித்துத்
தரும சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
தரையெனு [ம் ரேமை] (மு ரோம) மானகரும்
எங்குமே புகழ்ப் பரப்புவாயிருந்த
ராயப்பரான வப்போஸ்தலரின்
இருபதஞ் சரணந்தனை யனுதினமும்
எத்தியே பரவுகாப்பாமே.

ஆதி பிதாவின் திருமறை தனக்காய்
அதிர் வெடிகுண்டு கொண்டிறந்து
அளவில்லா மோட்சத்தல மதிலிருக்கும்
அற்புதன் தேவசகாயம்
நீதிமான்றனது சரித்திர மதனை
நிகழ்த்துறேன் திருச்சபையோர் முன்
நிலை தவருமலி கிலுள்ள பொருளை
நினைவொடு நீங்கள் கேட்டிருந்தால்
வேதினையான கணமணுகாது
பில்வி சூனியங்கள் சாரா

வினைஞர்கள் தமிழ ரிடமிடரகலும்
விரிபரகதியது பெறலாம்
சீதள மதியைப் பதத்தினிலணிந்த
தேவமாதாவின் வேண்டுதலுஞ்
சிலுவையில் மரித்துயிர்த்திடுந் தேவன்
திருவருள் பெறுவதுந்திடனே.

* * * * * * * *

பரவைசூழுலகம் புகழுமாநகரம்
பாரெனு மிந்தியதேசப்
பட்டணத்தி ருவாங்கோட்[டு](டி) ராச்சியத்திற்
பற்பனுபபுற மெனும்நகரிற்
றரைதனிலுயர்ந்த குலமுள்ளமரபிற்
சந்ததியாகவே யிருந்து
தமிழ்மதமறையை யனுதினம் வணங்கித்
தலந்தனி லிருக்கு மந்நாளில்
வரிசையா யந்தகராள்கின்ற ராயன்
வஞ்சி மார்த்தாண்ட ராசேந்திரன்
வரவழைத்திவரை நமதுட வருகில்
மாபிரதாணி யாயிருமென்
றருளிய படியாலுரை தவறுமல்
ஆமென மனது சம்மதித்து
அரசன் றனருகில் தளகர்த் தனிகராய்
அருமை பெற்றினி திருந்தனரே.

* * * * * * * *

தோடம் வந்தாலுனுபவிப்பேன் அளவில்லாத
சோதிபரன் திருமறையை மறப்பதில்லை
நீசமுள்ள தமிழை யனுசரிப்பதில்லை
நீதிபரன் மறையதைக் கைநெகிழமாட்டேன்
ஏசு நாதர் திருவசனம் மறக்கமாட்டேன்
எரிநரகப் பேய்களைக் கையெடுக்கமாட்டேன்
பேசுவதெல்லா மவத்தம் அனர்த்த வார்த்தை
பேசுவதோ வுலகிலுள்ள பெரியோர்தாமே.

* * * * * * * *

வெளியதனிற் கொண்டுவந்து புளியமாறல்
மேனிதனிலே யடியுமடித்தபின்பு
தெளிவு மனசுள்ளவனைக் காணவார, சனங்களுக்குக்
கட்டிவைத்த விடுதிவீட்டில்,
தளைவிலங்கோடே நடத்திக் காவல்வைத்துத்
தனியே நடுச்சாமம் விலங்கோடெடுத்துக்
களியதெனுங் காத்தாடி மலைமேல் வைத்துக்
கைவெடியான் சுடுமெனவே கருதிச்சொன்னான் ௰௬

End :

நம்பின பேர்க்கனேக வுபகாரஞ்செய்வார்
நாடோறும் நமக்கதிக நன்மை செய்வார்
அம்புவியில் வெருவ வதிப்பட்டு நித்தம்
அலைபவர்க்கு நிறைபடிகள ளக்கசச்செய்வார்
தும்பமெனவரும் பேர்க்கு நோய்கடீர்த்து (வா)
தாமுமவர் வந்து கண்டு மீண்டு போ(ரு)ர்
வெம்பசியோர் வெறுமையுள்ளோர் அவரைப்பார்த்து
வேண்டுதல் செய்தால் வெறுமைபோமே ல

வெறுமை போந்தரித்திரம் போம் நமக்கு வாற
விக்கனங்களணுகாமல் விலகிநிற்கும்
அறுசமயத்தோர்கள் சத்திய வேதத்தோரை
வல்வினைகள்செய் . . . . . யிரந்தீரும்
உறுதியுண்டாந்தேவபத்தி யுண்டா மூத்தமன்சாப
முண்டா மூயருஞ் ஞானசசருவமறைக்காக
. . . .
. . . . . தொழுவீர் தரையுள்ளோரே லக

எந்தை பிதா சுதன் சாந்து மீஸ்பிரித்து ஏக
சருவேசுவரனுக்கே இத்தோத்திரம், சந்தபரிக்த
வுனெவுளரண்ட வளகுஞ் சஞ்சூசையார்க்கும்
இத்தோத்திரம் உண்டாக.

சிகாமணிமாலை முற்றும் :—இது, தொம்மையப்பிள்ளைக்குச் சொந்த மென்று அறியவும். சூஅளஉயஎ. (1827)ஷு நொவம்பர்மீ எழுதினது.

(கு-பு:)—

இந்நூல் கிறிஸ்துமதத்தைச்சார்ந்ததாய்த் "தெய்வ சகாயம்" என்ற பெரியவரின் சரித்திரவரலாற்றினை யுணர்த்துவதொரு நூலாகும், இது, திருவாங்கோட்ரோச்சியத்திலே "பத்மநாபபுரம்" என்னும் நகரில் உயர் குடியிற்பிறந்தவராய் "நீலன் பிள்ளை" எனப்படுவார் ஒருவர் முதன் முதலில் ஹிந்து மதத்தைத்தழுவியவராய் அந்நகர் அரசனிடத்துத் 'தள கர்த்தர்' என்ற உத்தியோகத்தில் அமர்ந்திருந்து பின்னர் ஒரு காலத்துக் கிறிஸ்தவர்களின் மதக்கொள்கைப்படி ஆஸ்திகபுத்தியை யடைந்தவராய் நற்குருவைத்தேடிச்சென்று அவர் உபதேசங்களைப் பெற்று "தெய்வ சகாயம்" என்ற புனைப்பெயரையுங்கொண்டு அம்மதக்காழ்ப்புக்கொண்டவராயிருக்கையில், அதுகண்ட அந்நகராளும் "வஞ்சிமார்த்தாண்டராசேந்திரன்," வெகுசினங்கொண்டு பல்லாறுகவொருத்தும் அவர் ஒரு சிறிதும் மாறுதவராய் மனவுறுதிகொண்டு கடைசியில் அவ்வரசன் ஆணையால் காற்றுடிமலையின் கண், கைவெடியால் இறந்துபட்ட செய்தியையும், பின் அவரது உடலைக்கிறிஸ்தவர்கள் கூடி கல்லறையில் அடக்கஞ்செய்த வரலாற்றினையும் விரிவாக உணர்த்துகின்றது. ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பிரதி மிகப்பிழையுடன் உளது.

No. 2062. தெய்வ சகாய சிகாமணிமாலை.

DEYVA SAHĀYA ŚIKHĀMAṆIMĀLAI.

Substance, palm-leaf. Size, 18 × 1¼ inches. Pages, 48. Lines, 5 on a page Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு-பு:)—

இந்நூல் முன்நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும்: இப்பிரதியில் "நீலன்" என்னும் இயற்பெயர் பூண்ட "தெய்வசகாயம்" என்பவரைத் தண்டிப்பிதற்காய் ஐந்தாம் அதிகாரியிடங்கொண்டுபோகும் வரையிலான பகுதிமாத்திரம் உள்ளது: மிகப்பிழையுடன் காணப்படுகிறது. ஏடுகள் சிதலுண்டிருக்கின்றன. (5) ஐந்தாவது ஏடு முதல் (12) பன்னிரண்டாவது ஏடு வரையிலான (8) எட்டு ஏடுகளில்லை.

No. 2063. பிரசங்க புத்தகம்.

PIRASAṄGA PUTTAKAM.

Substance, paper. Size, 9 × 7 inches, Pages, 272. Lines, 25 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A book of Christian sermons.

Beginning:

தேவமாதா சன்மபாவ மில்லாமல் உத்பவித்த
திருநாளுக்கு முந்தி யொனபது நாட்களில் ஏழாம்
நாள் பிரசங்கமாவது:—

அர்சியசீஷர் கன்னிமாரியாயி உத்பவித்தபோது உத்தமபிரகாரமாய்ப் புத்தியுள்ளவளாயிந்த அதிசயத்தின்பேரிலே இந்தப் பிரசங்கத்தை வெளிப் படுத்துவோம். மற்ற மனுஷ்யர் தங்களுடைய தாயார் வயிற்றிலிருக்கிற போது புத்தியின்றி [வு] (உ) யி (ரி) ல்லாதிருக்கிறதன்றியே பிறந்த பிற்பாடு சில வருஷம் புத்தியின்றி வளர்ந்திருக்கிறது. பிற்பாடு புத்திபிரகாசிக்கிற போது புண்ணியம் இன்னது பாவம் இன்னது என்று அறியப்படும். அர் சியசீஷர் கன்னிமாரியாயினிடத்திலே இப்படியல்லவே. எந்தக்ஷணத்திலே அவள் உத்பவித்தாளோ? அந்தக்ஷணத்திலே தானே சர்வேசுவரனுடைய மகிமையையும் பாவம் இன்னது புண்ணியம் இன்னது என்றும் அறிந்திருந்தார். இது ஆச்சரியந்தானே. அந்தந்த மரத்தின்கனி, முளைத்து வளர்ந்து சில வருஷஞ்சென்று கனிபழுக்கின்றது சரியே. ஆனால் ஒரு வகை மரத்தின்கனி முளைத்தவுடனே பழம் பழுத்ததைக்கண்டால் எல்லாரும் ஆச்சரியம்படுவார்களே. அநதபிரகாரமாய்.

* * * * * * * * *

* * * * * * * *

End :

அப்போது நீக்குதே மூசாணவரும் சூசேயென்கிறவரும் அந்தி படப் போகிறது என்று கண்டு ஆண்டவருடைய அறசியசீஷமான திருச்சரீரத்தைக் கண்ணீர்களாலே குளிப்பாட்டித் தாங்கள் கொண்டுவந்த பரிமளங்களைப்பூசி மெல்லிய வஸ்த்திரத்தினலே உடல்முழுதும் மூடி யூத சாதியா சாரத்தின் படியே செய்யப்பட்ட ஆசந்திகையிலே வைத்துக் காங்குத்துகிலாலே மூடி யடைக்கிற ஸ்தலத்துக்குப்போமளவும் துக்கராகம்பாடி யெடுத்துக்கொண்டு போய் சூசையானவருடைய தோட்டத்திலேபோய் அவர் தமக்கென்று குறித் துச்செய்யப்பட்ட புதுக்கல்லறையிலே யாண்டவருடைய திருச்சரீரத்தை மகா வொடுக்க வணக்கத்துடனேயும் பூச்சியத்தோடேயும் திருச்சரீரத்தை வைத்து அந்தக்கல்லறையை ஒருபாராங்கல்லினலே மூடினர்கள். ஏழாம் வெள்ளிக் கிழமை பிரசங்கம் முற்றிற்று.

(கு.பு.)—

இந்நூல் கிறிஸ்தவமதத்தின் சார்பாகவுள்ளது. இதில் கிறிஸ்து தேவ மாதா முதலியவர்களைப்பற்றிய பிரசங்கங்கள் உள. இந்நூலில் அடங்கியுள் ள பிரசங்கங்கட்கு நூலினது இறுதியில் எழுதப்பெற்ற அட்டவணையைக் காண்க. எழுத்துப்பிழைகள் மலிந்திருக்கின்றன. ஏடுகளும் செல்லரிக்கப் பெற்றுக்கிழிந்திருக்கின்றன.

No. 2064, புறக்கோல முள்ளழிவு

PUṞAKKŌLAMUḺḶAḺIVU.

Substance, paper. Size, 9½ × 7½ inches. Pages, 166. Lines, 25 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

A Christian controversial work, adversely criticising the school of Luther.

Beginning :

புறக்கோலமுள்ளழிவு.

ஆகிலும் தான் புறக்கோலத்தளவைக்கொண்டு உட்பயனை மதித்து மயங்கினதென்னை. உண்ணிறைவில்லா மாதரல்லோ வாசனை கம்மெனப் பூசி அணிகலன் சுமக்கத்தாங்கி மதுமலர் நெருங்கச்சூடிக் கற்புடை மடந்தை யாகம் நாணத் தம்முடல் மினுக்கிப்பேணு நிற்பார். காஞ்சிப்பழத்தின் புறத்தழகெண்ணி யதனை உண்பாருண்டோ தன்னழகில்லா மரப்பாவை யொளிபெறத்தங்கமேற்பூசி யலங்கரிப்பாருண் டொழிய விரியொளித்தூய் மணிப் பாவைமேலெ தேனும் பூசுவாருண்டோ ? ஆயினும் பொற்பொறி பூசின கொடுமொழித்தமிழை வாசித்த தன்மையிற் றுன்மயங்கி நினைத்த பழுதளவாக வருந்தினதுஞ் சரிதானல்லோ ?

லுத்தேராணிகள் யார்.—இத்தன்மைத்துக்கே சரியான சொன்ன கதையைக் கேட்டும் மகிழ்ந்தபின்பு தன்னோலையை வாசித்து அதிலே முன்னவனுரைத்ததைத் தானுமெழுதினதின்மேல் வைத்த வசனமா வது.—

அக்கொடுமொழித்தமிழெழுதின கொடியர் யாரோவென்று விசாரித்த வளவில் தரங்கன்பாடியில் இருக்கும் லூத்தேராணிகள் என்றார்கள். ஆயினும் லூத்தோரணிகள் யாவர் என்றும் எப்பிறப்பினவர் என்றும் அடியேற்கு அறிவிக்கத் திருவுள்ள மிரங்கி யெழுதக்கற்பித்தருளவும் என்று தான் எழுதினதல்லோ ? அப்படியே லூதர் உண்டுபண்ணின சமயத்தராகிய லூத்தேராணிகள் எப்பிறப்பினத்தார் எனறும் எவ்வகை யியல்பினர் என்றுந்தான் கேட்டபடிக்கு எழுதுவேனாயினும் உள்ளதை நானே சொன்னாலும் அவ்வினத்தியல்பின் கொடுமையைக்கேட்டவர் நான் சொன்னதெல்லாம் பகையாற்கண்டகனாவென்று உட்கொள்ளார் என்றஞ்சி நானாக வொன்றுஞ்சொல்லாமல் பொய்யாநிறை மொழிவாயனாகிச் சத்திய வேதத்தில் உள்ள நாற்சுவிசேஷங்களில் ஒன்றினை யெழுதின அறசியசிஷ்டர் அருளப்பர் அருளித்தந்ததை மாத்திரம் எழுதித்தருவோம்.

* * * *

End :

வேறே துர்ப்புத்திக் கிடங்கொடாமலும் உடனே வருவீர்கள் என்றிருக்கிறோம். உங்களுக்காகச் சிலுவையில் அறையுண்டிருந்த ஏசுநாதர் தாமே திரும்பி வருவீர்களென்று தயையோடு கைவிரித்துக் காத்துக்கொண்டிருக்கிறார் நாங்களும் உங்களை யணைத்து . . . . ஏசுநாதரால் உங்களுக்குக் குருவாகவனுப்பப்பட்ட நாமே அவர் வார்த்தையாக இவையெல்லாம் உங்களுக்கு எழுதியனுப்பினோம். சலஞ்சாதியாமல் கண்திறந்து வந்தகேடறிந்து தாமதஞ் செய்யாமலும் ஆண்டவர் தயைமறுத்து நீதி கோபத்துக்கிடங்கொடாமலும் உடனே வரக் கடவீர்கள். நீங்கள் எல்லோரும் பொருளாசை பரப்பினவிருளை ? நீக்கி யுண்மையை யறியத்தெளியும்படிக்குத்திருவிளக்காகவும் பொய்யான பதிதர் மதத்தை வெறுத்துச் சத்தியத்தையனுசரிக்கத் துணியும்படிக்கு மனத்திறமாகவும் உங்களுக்குவேண்டிப் பாடுபட்டிறந்த பரமகர்த்தராகிய ஏசுநாதர் எல்லாருக்கும் பரிபூர்ண ஆசீர்வாதஞ் செய்யக்கடவதாக.

[கு. பு.]—இது கிறிஸ்தவ மதத்தைச்சார்ந்ததாயுள்ளது. அதிலும் பலவேறுமதங்களிருக்கின்றனவாதலின், லூதர்மிஷன் மதத்தைக் கண்டித்துத் தம்மதத்திற்சேர்ந்து ஏசுகிறிஸ்துவை வழிபடுவீர்களாகவென அம்மதத்தினர்க்கு அறிவூட்டுவதெனத் தெரிகிறது. வேதாகம அருளப்பர் கொள்கையைத் தழுவியிருக்கின்றது. இயற்றியவர் இன்னாரென்றும் இத்துணைத்தென்றுந் தெளிவாகவறிய வியலவில்லை. இப்பிரதியில் உள்ள விஷயங்களுக்கு நூலாரம்பத்து முதலேட்டில் அட்டவணையை நோக்குக. இது லூதர்மிஷன் மதக் கோட்பாட்டைத் தழுவினார் ஒருவர்க்கு அறிவூட்டுவதின் நிமித்தம் நிருபமாகவெழுதி விடுத்ததென்று மாத்திரம் விளங்குகிறது.

No. 2065. மந்திரச்சுவடி வசனம்.

MANTIRACCUVADI VACANAM.

Substance, palm-leaf. Size, $17\frac{1}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 58. **Lines, 5 on a page.** Character, Tamil. Condition, much injured. **Appearance, old.**

Complete.

A collection of Christian religious formulas, intended to be repeated by the faithful.

Beginning :

தாவீது படிக்கின்ற மந்திரச்சுவடி .—

சிலுவையடையாளம்.—

அற்சியசிஷ சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் எங்கள் சர்வேசுவரர் பிதாவினுடைய வும் சுதனுடையவும் இஸ்பரித்து சாந்துடையவும் நாமத்தினாலே ஆமெண சேசு ஆறுலட்சண மந்திரம். (1) ஆவது சர்வேசுவரன் தாமாயிருக்கிறார். (2) ஆவது அநாதியாய் இருக்கிறார். (3) ஆவது சரீரமில்லாமல் இருக் கிறார். (4) ஆவது அளவில்லாத சகல நன்மை ச்வரூபமாயிருக்கிறார். (5) ஆவது எங்கும் வியாபித்திருக்கிறார். (6) ஆவது எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாயிருக்கிறார். ஆ மெனசேசு. பரமண்டலமந்திரம் — பரமண் டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே ! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உம்முடைய ராச்சியம் * * * * உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாறும். எங்கள் கடன் காரருக்கு நாங்கள் பொருக்க மாறுபோலே எங்கள் கடன்களை எங்களுக்கும் பொறும். எங்களைச் சோதனையிலே பிரவேசிப்பியாதேயும். தீமையில்நின் றும் எங்களை இரட்சித்துக்கொள்ளும் ஆமெனசேசு *

End :

(உரு-ம்பக்கத்தில் ஆரம்பம் :—மோட்சமும் நரகமும் முகியுமோ முகியாது. தம்முடைய ஆத்துமம் அழியுமோ ? அழியாது, சரீரமோ அழிந்துபோம். இவையெல்லாம் ஆர் படிப்பித்தார்களென்று விசுவாசிக் கிறீர்கள். தப்பில்லாத சத்திய சுவரூபியாயிருக்கிற சர்வேசுவரன் திருவுளம் பற்றினபடியினாலே நானும் உண்டென்று உறுதியாக விசுவாசிக்கிறேன். ஆமெனசேசு.

பரலோகம் மட்டும் பழிவாங்கிற பாவம் (ச). (க) ஆவது வேண்டுமென்று ஒருவரை ஆவலாதிப் பண்ணுகிறது, அல்லது கொலை பாதகங்களைச் செய்கிறது (உ) ஆவது கற்போடிருக்கிறவர்களையும், கைம்பெண்சாதிகளையும், தாய் தகப்பன் இல்லாத பிள்ளைகளையும், ஸம்ஸாரிகளையும், பரதேசிகளையும் கெடுக்கிறது. (ந) ஆவது ஒருவர் அடைக்கலமாய் வைத்தபொருளை எடுத்துகொள்ளுகிறதும், ஒருவருடைய ரஹஸ்யங்களை வெளிப்படுத்துகிறதும், மகிமையுள்ளவர்களை இல்லாமல் பண்ணுகிறதும், சேவித்தவர்களுக்கும் வேலைசெய்தவர்களுக்கும் கூலிகொடாமற்போகிறதும் (ச) ஆவது சுவபாவத் துக்கு மிஞ்சிமோக பாவஞ் செய்கின்றதும் ஆம்.

விசுவாச மூன்று முயற்சி :—விசுவாச முயற்சியைச் சொல்லு. என் சர்வேசுவர சுவாமி. திருச்சபை விசுவாசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை யெல்லாம் தேவரீர் தாமே அறிவித்தபடியினாலே நானும் உறுதியாக விசு

வாசிக்கிறேன். நம்பிக்கை முயற்சியைச் சொல்லு. என் சர்வேசுவர சுவாமியே! தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே எசுநாதஸ்வாமி பாடுபட்டபுண்ணிய பலன்களைப் பார்த்து என்னுடையபாபங்களைப் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்சபாக்கியத்தையும் தந் தருளுவீர் என்று நம்பியிருக்கிறேன் *

கு - பு:—

இந்நூல் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததாயுள்ளது. இது அம்மதத் தினர் தியானஞ் செய்தற்குரிய மந்திரங்களை யுணர்த்துவதால் இப்பெயர் பெற்றதுபோலும் முற்றுமுள்ளது. மிகவும் வசனநடை பிழைபாட்டுடன் காணப்படுகின்றது. ஏடுகள் மிகவும் சிதைந்திருக்கின்றன.

No. 2066. வெள்ளிக்கிழமைத் தியானம்.

VEḶḶIKKIḶAMAIDDIYĀNAM.

Substance, paper. Size, 10¾ × 8 inches. Pages, 319. Lines, 27 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

A collection of 52 expositions on the life of Jesus Christ, every such exposition being intended for study on one of the 52 Friday in the year.

Beginning:

வெள்ளிக்கிழமைத் தியான விவேகம்.

மெய்யான சர்வேச்வரனும் மெய்யான மனுஷ்யனும் ஒன்றுயிருக்கிற எசுநாதர் பாடுபட்டதின் பேரிலே எல்லாருக்கும் பக்தி வரத்தக்கதாக மகாத்துமாவாயிருந்த பெரிய அலபெற்று வென்கிறவர் திருவுள்ளம் பற்றினதாவது யாதாம் ஒருத்தன் தினத்தினம் வேறேகறி பதார்த்த மில்லா மல் தண்ணீருஞ் சோறும் ஒரு நேரம் சாப்பிட்டு இப்படி யொரு வருஷம் முழுதும் ஒரு சந்தியாயிருக்கிறதும், ஒரு வருஷம் தன்னுடைய சரீரத்தை இரத்தம் புறப்படுமட்டுஞ் சங்கிலியினாலே தினந்தினம் அடித்துக்கொள்ளுகிற தும், ஒரு வருஷம் முழுதும் தினமொரு சாமம் சபம் பண்ணுகிறதும் (என்றி)ந்த மூன்று புண்ணியங்களினாலே ஆத்துமத்திற்குக் கனமான பிரயோசனம் வருமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால், இத்தைப் பார்க்க ஒருவிசை மாத்திரம் எசுநாதர் பாடுபட்டதன் பேரிலே த்யானம் பண்ணினால் ஆன்மாவிற்கு மிகவும் அதிகமான பிரயோசனம் வருமென்றும் எழுதி வைத்தார் *

ஆகையால் கிறிஸ்தவர்களே உங்களுடைய ஆன்மாவிற்கு இப்படிக்கொடுத்த உத்தமஞான பிரயோசனம் வரத்தக்கதாக அற்சிய சிஷ்டர் வியாகுலமுள்ள தே உமாதாவின் ஆசீர்வாதத்தினாலே வெள்ளிக்கிழமை தோறும் எசுநாதர்

பாடுபட்ட காரியத்தின் பேரிலே கூடின மாத்திரம் சொல்லிக் காண்பிப்போம். இதனால் ஒரு வருஷத்தில் ஐம்பத்திரண்டு வெள்ளிக்கிழமை வருமென்கிறதினாலே ஐம்பத்திரண்டு தியானங்களாக வெளிப்படுத்தக் கடவோம். ஆகையால் நீங்கள் பாக்கில்லாமல் பயபக்தியோடே கேட்டால் * * * * * * * * * * * * * * * * முதல் வெள்ளிக்கிழமைத் தியானமாவது.

பெரிய வியாழக்கிழமை இராத்திரி எசுநாதரானவர் துக்கமுகத்தோடே தம்முடைய தாயாரண்டையில் போய் எம்முடைய தாயாரே! உம்மையனுப்பிவித்துக் கொள்ளத்தக்கதாக உம்முடைய வண்டையில் வந்தோம். அதேதென்றால் மனுஷ்யர் செய்த பாவத்துக்காகப் பிதாவாகிய சர்வேசுவரனுடைய நீதிக்குச் சரியாய் நாம் சிலுவையில் அறையுண்டு சாகிறதற்குக் காலமாயிற்று. இதனாலே நாம் சாகப்பயணமாயிருக்கிறோம். ஆகையால் உமக்குக் கனமான வியாகுலம் வரும் *

End:

கிறிஸ்தவர்களே 'சுவக்கீறு' என்கிறவர் பண்ணிக்கொண்டுவந்த வியாகுல மாதாவின் சபத்தைப் போலே நீங்களும் சபம்பண்ணி அப்படிக்கொத்த பத்தியை உங்களிடத்திலே வளரப்பண்ணினால் அந்தப் பத்தி வழியாக அவருக்கு வந்த பாக்கியம் உங்களுக்குவரும். கடைசியிலே வேண்டிக் கொள்ளுகிறதாவது.—வியாகுலமுள்ள மாதாவே! தேவரீர் எனக்காக இத்தனை வியாகூலம் அனுபவித்திருக்கையிலே இற்றை வரைக்கும் நான் அதை நினையாமல் அதின் பேரிலே பத்தியும் இரக்கமும் இல்லாதிருந்ததை நினைத்து வெக்கப்படுகிறேன். தேவரீர் எனக்காக வனுபவித்த வியாகூலத்தைக் குறித்து மோட்சவாசிகள் எல்லாரும் தேவரீரைத் தோத்திரம் பண்ண நான் அவர்களை வேண்டுகிறேன். இனிமேலாகிலும் அடியேன் உம்முடைய வியாகுலத்தின் மீது மகாபக்தியும் இரக்கமுமாயிருக்க உமது வியாகுலத்தையும் கர்த்தருடைய திருமரணத்தையும் குறித்து உம்மை மன்றாடுகிறேன். ஆமெனசேசு.

(ருயஉ) ஆம் வெள்ளிக்கிழமை தியானம் முற்றும்.

* *

கு - பு.

இந்நூல் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததாயிருக்கிறது. இது ஞாயிற்றுக்கிழமை புதுமை, எனும் உபந்யாசம் போல ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கிறிஸ்தவ மக்களுக்கு அம்மதப் பெரியவர்களில் ஒருவர் எசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரங்களை யெடுத்துக்காட்டி யுபதேசித்து அறிவூட்டுவதாக வமைந்திருக்கின்றது. ஐம்பத்திரண்டு வெள்ளிக்கிழமைகளிலும் கிரிஸ்துவின் சரிதம் ஐம்பத்திரண்டு பகுதியாகப் பிரித்துக்கூறப்பட்டு அதன் வாயிலாக கிறிஸ்தவர்களுக்குரிய பழக்க வொழுக்கங்கள் பலவும் அறிவுறுத்தப் பெற்றிருக்கின்றன. வசன நடை மிகப்பிழையுடன் உள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இடையிடையே மற்றுஞ் சில கிரிஸ்தவர்களுடைய சரித்திரங்களும் எடுத்துக்காட்டு முகத்தான் வந்துள்ளன.

No. 2067. வேதியரொழுக்கம்.

VĒDIYAROḺUKKAM.

Substance, paper. Size, 10 × 8 inches. Pages, 179. Lines, 20 on a page. Character, Tamil. Condition, injured. Apperance, old.

Complete.

Begins on fol. 1-*a*. The other works herein are :—Vēdiyarolukkaccōdanai, 90-*a*, Nānasūttirankaḷ, 101 *a*.

Gives the rules for the good conduct of Christian priests.

Beginning :

வேதியரொழுக்கம் : பாயிரம்:—

மேற்குலமனிதர் செய்யவேண்டிய ஆறு தொழில்களில் வேதத்தைப் போதிப்பித்தல் ஒன்றுகையின் மேற்குலத்தோரை வேதியர் என்பார். ஆயினும் இப்பெயர் தொழிற்பெயராகையால் இந்தத் தொழிலைச் செய்வார் யாவரும் மேற் குலத்தில் பிறந்தாராயினும் வேதியரென்னப்படுவது நியாயமே. ஆதலால் வேதத்தைப்போதிப்பிக்குங் குருக்களும் இவர்களிடமாக வேதவுணர்ச்சிகளைச்சொல்ல வனுப்பப்பட்ட உபதேசிகனும் வேதியர் என்னப்படுவார். இது மெய்யாயினும் வேதியரொழுக்கமென்று நாம் இப்புத்தகத்தை யெழுதத் துணிந்தபோது வேதியரென்னும் பெயரால் குருக்களைக் குறித்தோமென்று நினைக்கவேண்டாம். காரண குருக்கள் யாவரும் பொன்மலை யுச்சிமேல் விளங்கின செஞ்சுடரொப்ப நின்று * * * * ஆகையால் இதில் வேதியர் என்னும் போது விசேஷமாய் உபதேசிகளைக் குறித்தோம் என்றறியக் கடவீர்கள். விசேஷமாய் என்றேம் அதென்னெனில், நாங்கள் கரையேற விலக்க வேண்டிய தீயவினை, செய்யவேண்டிய நல்வினை, அறிய வேண்டிய சத்தியங்கள் இவை யெல்லாவற்றையும் பிறர்க்குணர்த்துவது உபதேசிகளுக்கு மாத்ரம் தொழிலாமென்று நினைக்கத் தேவையில்லை. இந்தத் தொழிலைச் செய்வது உபதேசிகளுக்கல்லாதே சில பெயர்களுக்குக் கடனுகி எவர்க்கும் பெறும் பயனுமே. தாய் தகப்பன்மார் தம் மக்களுக்கும், ஆண்டவர் தம்மடிமைகளுக்கும், மூப்பர் தம்மைச் சேர்ந்த இளையோர்க்குந் தீய வினை விலக்கி நன்னெறி காட்டி அவர்களை மேற்கரையேற்ற வருந்துவதுங் கடன்றனே. இக்கடனில்லாதவர்களும் பிறருயிர் கெடுவதற் கிரங்கிப் பிறரையுங் கதியிற் சேர்க்கப் பிரயாசப்பட்டால் இந்த வரிய தயையால் தங்களுக்கு உத்தமபலனே விளைவது. விளைந்தபலனும் ஒரு நாளுங் கெடாது வளர்வதுஞ் சந்தேகமற்ற நிச்சயந்தானே. ஆதலால் இதிலே உபதேசிகளை விசேஷமாய்க் குறித்தெழுதினுலும் பொதுப்படயாவர்க்கும் நன்மையாக முடிக்கப் பிரயாசப்படுவோம் * * * * * * முறைகள் பலவற்றையுங் காட்டி இருபது அதிகாரங்களாக இப்பயனை வகுத்துத்தருவோம். * * * * * எசுநாதர் உதவ மன்றுடியவர் திருப்பாதத்தை யெந்தலைக்கணியாகவேற்றி வணங்குகிறேம்.

பாயிரம் முற்றும்.

முதல் அதிகாரம்: வேதியர் தொழிலியல்பு.

அற்சிய சிஷ்டர் சின்னப்பர் திமொத்தையருக்கெழுதின முதல் நிருபம் நாலாமதிகாரம் பதினாறும் வசனத்திற் சொன்னதாவது: உன்னைக்காக்கவும் பிறரையுணர்த்தவும் செய்வாய் இவ்விரண்டையும் விடாமல் முகிக்க வருந்து வாயாகில் உன்னையும் உன்புத்திகளைக் கேட்டவர்களையும் கரையேற்றுவாய் என்றார். சின்னப்பர் இதிலே சொன்ன இவ்விரண்டையும் ஒருப்பட முகிப் பது வேதியர் தொழிலியல்பாமே. அவனவன்றான் கரையேறப்பிரயாசப்படு வது எவர்க்குங்கடனும். இப்பூவுலகில் இன்பமாய் உண்ணவும் அலங்கார மாய் உடுக்கவும் திரளாய்ப் பொருள்களைக் குவிக்கவும் கீர்த்தியாய்ப் பேரொலி தேடவுஞ் செல்வமாய் நெடுநாள் இங்கே வாழவும் மனிதருக் குள்ளே பிறந்தவர் ஒருவரும் இல்லை. இங்கே தரும நன்னெறி வழுவா தொழுகி மோட்சகதி பெற்று அங்கே முடியாக்காலத்தும் உயிர்வாழ்ந் திருப்பவே எல்லாரையும் நம் ஆண்டவர் உண்டாக்கினார் என்றறிவோம். * * * * * * * முன்னும் பின்னும் ஒரு நாள் எவருஞ் சாவதொழியப் பிறந்தவருட்சாகாதவரில்லை. *

End :

இருபதாம் அதிகாரம்.

வேதிய ரொழுக்கத்துக் குறுதி:

நாம் உங்களுக்குக் குருவாக எசுநாதரால் அனுப்பப்பட்டமையான் நமக்கிருக்கிற கடனைத்தீர்க்க இதெல்லாம் உபதேசஞ்சொல்லிக்கொண்டு திரியும் உங்களுக்கு அறிவிக்கப்பிரயாசப்பட்டோம். இதுவுமன்றியே மனி தர் மோட்சத்தையடையவும் நரகத்திலே வீழவும் நீங்கள் உபதேசத் தொழிலைமுடிக்குந் தன்மையாலாகும் என்றமையால் எவர்க்கும் நா மிரங்கி எசுநாதர் அடிமிதிப்பட்டிறந்து மீட்டு மிரட்சித்த ஆத்மாக்கள் என்றைக்கும் பிசாசுக்கு அடிமையாகாமலும் நரகத்தில் விழுந்து ஓயாமல் வெந்து நொந்து தங்களைப் படைத்த சுவாமியைத் தூஷிக்காமலும் முடி வில்லாத பாக்கியங்களை மோட்சத்திற் பெற்று வாழ்விக்க வேண்டுமென் றாசையால் நீங்கள் குறைவின்றி உங்கள் தேவத்தொழிலை முடிக்குந் தன்மைகாட்டி 'வேதியரொழுக்கம்' என்று இந்தப்பயனை யெழுதித்தந் தோம். இனி நாமெழுதினதை நீங்கள் அடிக்கடி வாசித்து உங்கண்மேலே நிற்கும் கடனைத் தீர்க்கவும் எல்லாரையும் ஆண்டவர் திருப்பாதத்திற் சேர்க்கவாசைவைக்குங்கால் இதற்குக்குறைவு வாராதபடிக்கு நடக்கவும் * * * * சந்தோஷத்தோடே பிரயாசப்படக் கடவீர் கள் * * * * * * * அப்போது இவ்வகை ஞான விடையர்க்கெல்லாம் பிரதான கோவலனாகிய எசுநாதர் நடுத்தீர்க்கத் தோன்றுமளவில் நீங்களே அழியாத பாக்கியமுடியைப் பெற்றுப்போவீர்களென்றார். இப்படியே யாக்கும்படிக்கு இதை யெழுதத் துணிவும் உதவியும் தந்தவருமாய் உங்களையுபதேசிகளாய் ஸ்தாபித்தவரு

மாய் உங்கள் தொழிலை செய்ய இப்பூவுலகில் மனிதனுகிப் பிறந்தவருமாய் எல்லாரையுங் கரையேற்றவும் அடிமிதிப்பட்டுச் சிலுவையில் அறையுண்டிறந்த பரமகர்த்தராகிய எசுநாதர் திருப்பாதத்தில் விழுந்து மன்ருடி வணங்கா நிற்போம்.

வேதியர் ஒழுக்கம் முற்றும்.

கு - பு—

இவ்வேதிய ரொழுக்கம் எனும் நூல் கிறிஸ்தவர் மதத்தைச் சார்ந்ததாய் அவர்களுக்குள்ளே 'உபதேசிகள்' என்ருெருவகையினரது ஒழுக்கங்களிற் சில குறைகண்டு அவையிற்றை நீக்கி நல்லொழுக்க மொழுகுமாறு அவர்க்குபதேசிப்பதாயமைந்துள்ளது. இயற்றியவர் இன்னுரெனத் தெரியவில்லை. சிலர் வேதியரொழுக்கமென்ற பெயர் மாத்திரத்தானே இந்நூலைப் 'பார்ப்பனரைக் கண்டிக்கு நூல்' என்றையுறுவர். அஃதன்றும் ஏடுகள் சிறிது சிதைந்துள்ளன. எழுத்துப்பிழை மலிந்துள.

No. 2068. வேதியரொழுக்கச் சோதனை.

VĒDIYAROḶUKKACCŌDANAI.

Pages, 22. Lines, 20 on a page.

Begins on fol. 90-*a* of the MS. described under previous No.

Complete.

A work advising Christian priests to examine and regulate their lives in the light of the rules given in the previous work.

Beginning :

வேதியரொழுக்கச் சோதனை:

உபதேசிகள் நடக்கவேண்டிய முறைகளைக்காட்டி நாம் பட்ட பிரயாசத்துக்கு நினைத்தபலன் உண்டாகத்தந்த வேதியரொழுக்கம் ஓராணிக்கோவையாகக்கொண்டு அவனவன் நடக்குந்தன்மையைப் பொன்னை உரைகல்லில் உரைத்தாற்போல வாராய்ந்து சொன்ன வொழுக்கத்துக்கு ஏற்றதோ தாவில்லையோ வென்று சோதிக்கக்கடவான். இதனால் வேதியரொழுக்கம் முடிந்தபின்பு இந்தச் சோதனை செய்யும் வகையை இங்கே கூட்டிச் சேர்க்கத்துணிந்தோம். இதிலே எட்டு. சோதனை வகைப் பிரித்துத் தருவோம். ஒவ்வொன்றுக்கு ஒரு நாளாகச் சிறிது நேரத்தக்குத் தனியே நின்று தன்னைக் கணக்குக் கேட்டாற்போல இதிலே சொன்னதை யாராய்ந்து தான் செய்த குறையும் நடக்கவேண்டிய முறையுங் காணப்படுமே. தன்ருெழில் கடனைத்தீர்த்துத் தானுங் கரையேறிப பிறரையுங் கரையேற்ற வாசையுள்ள உபதேசிகள் யாவரும் மாசத்துக்கு மாசந்தப்பாமல் எட்டுநாளாக இந்த வகை சோதனை செய்துகொண்டுவரக் கடவார்கள்.

முதற்சோதனை ஆண்டவரைப்பற்றின வொழுக்கம்.

(1) நீ உபதேசியாய்த் திரிகையில் மனிதருக்கு ஊழியஞ் செய்கிறாய் என்றிருக்கிறாயோ ? ஆண்டவருக்கு ஊழியஞ் செய்கிறாய் என்றிருக்கு றாயோ ? ஆண்டவருக்கென்றால் மனிதருக்கு மாத்திரம் அஞ்சுவானேன். மனிதர்காணச் சுருக்காய் நடந்து அவர்கள் காணாமையிற் சோம்பலாய்க் கிடப் பானேன். ஆண்டவருக்கு ஊழியமிது என்றிருந்தால் எங்கும் வியாபித் திருக்கும் சுவாமிக்கஞ்சி நடவாமல் மனிதர்க்கொப்புவித்தாலே போதுமெ ன்று திரிவானேன். பின்னையும் ஆண்டவர்க்கு ஊழியஞ் செய்கிறாயாகில் அவரே நிறைந்த பலன் றருவார் என்றிராமல் உன்னுசைக்களவாக மனி தரால் உனக்காதாயம் வராமையால் முறைப்படுவான் என ?

(2) மனிதர் கரையேற்றுவது தேவத்தொழிலாகி மனிதர் வல்லமை யாலாகாமல் ஆண்டவரின் விசேஷ வுதவியால் ஆகவேண்டுமென்று நிச்சய மாய் நினைக்கிறாயோ ? உனக்கிது நிச்சயமானால் உன் திறத்தை நம்புவான் என ? சிலரைத் திருப்பினவிடத்தில் நீயே நல்ல உபதேசியென்று மன திலுமெண்ணிப் புறத்திலுஞ்சொல்லி மகிழ்வானேன் ?

End:

இதிலே எண் வகையாகப் பிரித்துக்காட்டின உபதேசிக்கு வேண்டிய வொழுக்கமுறைகளை நீங்கள் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து உங்கள் ஒழுக்கமும் அதற்கொத்ததோ ? இல்லையோ வென்று பார்த்துக் கண்ட குறைகளைத் தீர்த்துக்காட்டின முறையின்படியே ஆண்டவருதவியைக் கொண்டு நடக்கத் துணியக்கடவீர்கள். ஆண்டவர் பகைத்த பாவங்களை யொழிக்க அவர் அரு ளிச்செய்த வேதத்தைப் பரப்ப அவர் மீட்டி ரட்சித்த ஆத்மாக்களைக் கரை யிலேற்ற ஆண்டவர்மேலே பற்றியும் ஆத்மாக்கள் மேலே இரக்கமும் உங் கண்மேலே பட்சமுமிருந்தால் ஆசையும் உண்டாகிக்காட்டின முறையோடு ஒழுக்கவாசையும் உண்டாம்.

(கு - பு.)—

இது 'முன்வந்துள்ள வேதியரொழுக்கம்' என்ற நூலில் உபதேசித் துள்ள ஒழுக்கங்களைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டுமெனக்கூறி, அவ் வுபதேசிகளுடைய வொழுக்கத்தோடு தத்தமது ஒழுக்கங்களும் பொருந்தி யுளவோ வெனச் சோதிக்கு மாற்றை யுபதேசிப்பது. எட்டு சோதனைகள் உள்ளன. எழுத்துப்பிழைகளிருக்கின்றன.

No. 2069. பாப்புவேத விகற்பம்.

PĀPPUVĒDA VIKAṞPAM.

Substance, palm-leaf. Size, 17 × 1 inches. Pages, 41. Lines, 4 on a page.

Begins on fol. 15-*a* of the MS. described under No. D. 244.

Complete in 33 Stanzas.

A tract, in verse, adversely criticising Christianity.

By Śivajnānakaruṇālayasvāmigaḷ.

Beginning.

திருச்சிற்றம்பலம் :

சிவானுபவ குருவேதுணை. பாப்புவேத விகற்பம் காப்பு :—
சூதரடிக்கக் கழுமரத்தைச் சுமந்தரியா மருட்பாப்பு
வேதவிகற்ப மதுவிளம்ப வினைகலிரண்டுங் கருவிகளும்
போதசரத்தோ டசரமுதற் புகலும் பேதாபேதங்களோத
விரிந்த சொற்பொருளு முகமுங் கடந்தோன் காப்பாமே. (க)

குரு வணக்கம்.

போக்குமற்று வரவற்று மேலுமைம்பூதமற்றுப் பொறிபுலன்றனற்று
வாக்குமற்றுச் சிருட்டிதிதியற்று மலங்கள் வையங்களென்பதற்றுக்கலை
நோக்குமற்று நில்லாதெனவியாவையு நொய்தினுறி நீர்த்தூளிபடச்செயுந்
தாக்குமற்றுந் தனக்கீறில்லாததைச் சாற்றுமெய்க்குருத்தாடலை மேற்கொள்
வாம்] (உ)

எல்லப்ப மாணுக்கர் சொல் :—

காப்பனென்றுலகிற் சொலு மேசுவைச்
சூதர்முன் கழுமரந்தன்னிற் பாச்சிக்
கைக்கு மிருகாற்கு நினைநெஞ்சிற்கும்
நாலுறுகதி ராப்பிணைச் செறுக்கிச்
சேப்பபுண்ணீரோ ழுகமாட்டுமச் செய்கை
பொற்சிறந்த வீடருளு மென்று
தீயவஞ்சகரை மூற்கரைத் தந்தைதாத
யிலியைத் திருடரைப் புலையார்ச் சேய்
பாப்பு வேதந்தனக்கு மதற்குள்ளாகு
பதிதர்நாவுக்கு நீண்முப்பத்து மூன்று
வானறு நற்கவியாப் பிணைக்கொண்டு
கடாவினுன் மாயை நீத்து
மாப்பெரும்புகழ் பெறுஞ் சின்யயானந்த
சிவஞானமணி வாரி தோய்ந்து
வயங்கு பொன்னம்பலத் தெம்பிரானெமது
வினைமாற்றவரு மவுன குருவே. (ங)

நூல். பாப்பு சமயவேத விகற்பம் :—
சீர்கொண்ட பஞ்சபூதங்கள் படையாமுனந்
தேவனென் பவனெங் குறு ந்
தெளிவுடைய ஞானதானம் பெற்றதெங்ஙனே
சந்தைமிசை குடியா யெழுங்
கார்கொண்ட மலமெங்கொதுங்குஞ் ஞான
த்தினற் கண்ணொளிகள் பாய்வதுண்டோ
கண்டதுண்டேற் சகங் காணுதரகசியங்
கழறு வீரிங் கெந்தனுக்

கேர்கொண்டகொங்கை மங்கையர் மீதி
லாசையு மிரணியந்தனி லாசையும்
இருநிலத் தாசையு முமைவிட்டகன்றதோ
என் சொலுவனுங்கள் புகழை
பேர்கொண்ட தல்லாது நீர்கொண்ட
வடவினைப் பேசுவீர் சபலமுடையீர்
பிரியாரகத்தினுக் குரியார் மகத்துவப்
பெரியோர் தம்மைச் சேருமே. (ச)

அறந்தழைந்திட வந்த வேதத்தொழுங்கினை
யடைந்தோர் பவஞ்செய் வரோ
வாயினுஞ்செய்த போதாசானுடன் சொல்லி
யறிவிப்பதோ வறைந்தால்
துறந்திருந்தவர்காதி லேற்பதோவேற்பினுஞ்
சொல்லுமவ்வினை தீருமோ
சூக்குமந்தனை யப்பமென்று கொண்டாலும்
தொய்தத்தினிற் கூட்டுமோ
மறந்தினஞ் செய்கின்ற பேர்கடமதுயிர்போல்
மன்னுயிரை யெண்ணுவீரோ
வாயினுற்கழுமரத் தடைவறிந்தே னெனின்
மலம்போய தீதமுறுமோ
பிறந்திறநதிடு பிணத்தெய்வமோ தெய்வமாம்
பேய்கொண்டநிர் மூடரே
பிரியாரகத்தினிக் குரியார் மகத்துவப்
பெரியோர்தமைச் சேருமே. (ரு)

* * * * * * *

End :

எங்கினும் வியாபியென்றங்கிலை யெனுமயக்கநாளும்
பொங்கிய போக்குப் பாப்புப்புகல்வேதவிகற்பம்வாழி
தங்கிய செங்கோல்வாழி தற்சிவசமயம்வாழி
பங்கிலென்னுவிற்றங்கிப் பகர்குருபதங்கள் வாழி. (ருச)

மாணுக்கன் எல்லப்பன் சொன்னது.

பார்தங்குகீர்த்தி நிலையில்லாத லேர்ப்பாப்பு
வேதத்தை மாறுபாஷை
சொற்பாதிரிக் கித்தேய நற்றமிழ்படிக்க
வறியாமல் பாப்பின்
னோர்தங்கு வேதமேன் றேதினுற்றீமை
யென்றெண்ணுமற்குலமிழந்தவ்
வீனனுக்காட்பட்டு நம்பாமனம்பினேந்
தேஞ்சுவாற் காயிதங்கீ

சீர்தங்கு மென்னைய னேங்குபொன்னம்பலச்
சிவஞானி கருணையன்
செய்விகற்பச் செய்யுண முப்பத்து மூன்றையுஞ்
தேர்ந்து சூட்சுமந்தெரிந்து
போர்தங்கு பாழ்நெஞ்சடக்கி மாசற்றமெய்ப்
பொருளையறிவாலறிந்து
போக்கற்ற சமயத்தை நீக்கிஞல்வைகலும்
புகழ்பெறுங் கதிசேர்வரே. (௩௫)

(கு - பு)—

இச்சிறுநூல், கிறிஸ்தவர் மதத்தில் வழங்கும் 'போப் வேதம்' என்ற நூலுக்கு மாறுகச் 'சிவஞானிகருணையன்' என்னும் ஹிந்து சமயத்துச் சைவமதம் பற்றியொழுகுவார் ஒருவர் அம்மதக் கொள்கைகள் முற்றும் தவறுனவையென்று கண்டித்து இயற்றப்பெற்றதொரு நூலாகும்; இது ஆரம்பத்து காப்பு, வணக்கம் அவையடக்கம் என்ற விச்செய்யுண் நீங்கலாக முப்பத்து மூன்று செய்யுட்களான் ஆகியது; முதலில் "காப்பனென்று சொலும் ஏசுவை" என்ற பாடலும், இறுதியிற் "பார்தங்கு கீர்த்திநிலை" என்ற பாடலும் இந்நூலாசிரியரது மாணக்கஞர் 'எல்லப்பன்' என்பவ னால் இயற்றப்பெற்றவைகளாகும்; மற்றும்மிகுதியான பாடல்கள் எல்லாம் இந் நூலாசிரியராலே இயற்றப்பெற்றவைகளாகும். இதுவும் அவைகளின் தலைப்பெயரான் உணரக்கிடக்கின்றது. இப்பிரதியில் மிகவும் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2070. அகராதி நிகண்டு.
AKARĀDI NIKAṆḌU.

Pages, 88. Lines, 8 on a page.

Begins on fol. 1 of the MS. described under No. D. 1178. Incomplete.

Same work as that described under No. D 4 of the Descriptive Catalogue of the Tamil MSS Vol. I.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 4 - வது நம்பர் பிரதியில் வந்த நூலேயாகும். இப்பிரதியில் இது முதல் இரண்டு தொகுதிகள் முழுவதும், மூன்றுவது தொகுதியாய் சகாரத்தில் தொடங்கும் பெயர்த்தொகுதியில் அரைகுறையாயும் இருக்கின்றது. நூலாசிரியர் இரேவண சித்தர் ஆவார். பிழையுள.

No. 2071. அகராதி (ஆங்கிலம் - தமிழ்).
ENGLISH - TAMIL VOCABULARY.

Substance, paper. Size, 13¾ × 8 inches. Pages, 640. Lines, 26 on a page. Character, English and Tamil. Condition, good. Appearance, old. Complete in C Alphabet.

This Vocabulary gives the Tamil equivalents for English expressions.

Beginning :

A. முதலெழுத்து அகரம் the broad A எ. கபம் A or An the இவைகள் Articles. பெயரிடைச் சொற்கள் : உதாரணம் :— A house - ஒரு வீடு. A man - ஒரு மனிதன். சில இடங்களில் A An இந்தச் சப்தங் களுக்கு ஒரு என்கிற அர்த்தம் இல்லாமல் போகிறது : அதாவது A house=வீடு, An elephant=யானை. Vowel (உயிரெழுத்து) silent H ஒலியாத ஹகாரம் இவைகளுக்கு முன்னே வரப்பட்ட A என்கிற சொல் லுக்குப் பதிலாய் An என்கிற சொல்லு வருகிறது. அதாவது: An honourable man=ஒரு கனவான், An offering=ஒரு தர்க்காஸ்து. A என்கிற பெய ரிடைச் சொல்லுக்குக் 'கு' என்கிற அர்த்தம் வருகிறது. அதாவது : He has three hundred a year=அவனுக்கு வருஷத்துக்கு மூன்று நூறு கிடைக்கிறது. சில இடங்களில் 'இல்' or 'மாய்' என்கிற அர்த்தம் வரு கிறது. A thirst=தாகத்தில், a sleep=நித்திரையில். He is a thirst= அவனுக்குத் தாகமாயிருக்கிறது. A row=வரிசையாய், all of those pillars are a row=அந்தத் தூண்கள் எல்லாம் வரிசையாயிருக்கின்றன. He came a foot yesterday=நேற்றவன் கால்நடையாய் வந்தான்.

End :

Cypress. ns=புங்கமரம். தமால விருட்சம் : இது முக்கியமாய்ச் சுடு காட்டில் இருக்கப்பட்ட செடி.

Cyprian. ns. தேவடியாள் * * * * *

* * * * * *

* * * * * *

(கு - பு.)—

இது ஆங்கில பாஷையில் உள்ள பதங்களுக்கு நேரான தமிழ்மொழி களை யெடுத்துணர்த்தி அப்பாஷையின் சொற்களுக்குப் பதஸாரமும் உணர்த் துவது இந்தப் பிரதியில் A. B. C. என்ற எழுத்துக்கள் வரையும் உள்ளது. இது 1841–வது வருஷத்திலிருந்த C. P. Brown என்ற தொரையின் விருப்பத்தின்படி C. கிருஷ்ணமாசாரியரால் இயற்றப்பெற்றதென முதலி லுள்ள ஆங்கல மொழிகளான் அறியக்கிடக்கிறது.

No. 2072. இலக்கண விளக்கம் பொருளதிகாரம் உரையுடன்.
ILAKKAṆAVIḶAKKAM PORUḶADHIKĀRAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 400. Lines, 7-9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Begins - on fol. 1–*a*. The other work herein is Vīraśōḻiyam with Commentary 201–*a*.

Same work as that described under No. 36 of the Descriptive Catalogue of Tamil MSS., Vol. I.

(கு. - பு)

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 36-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் இந்நூலின் மூன்றும் அதிகாரமாகிய 'பொருளதிகாரத்தில்' மூன்றுவது இயலான 'அணியியல்' வரையிலுமேயுள்ள பகுதி உரையுடனிருக்கிறது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன எழுத்துப் பிழைகளும் உள.

No. 2073. வீரசோழியம் உரையுடன்.

VĪRAŚŌḺIYAM WITH COMMENTARY.

Pages, 30. Lines 8, on a page.

Begins on fol. 201-*a* of the Ms. Described under the Previous No. Incomplete.

Same work as that described under No. 91 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. I.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருடிவ் காடலாக்கில் 91-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூலின் சில சூத்திரங்களேயுள. அவையாவன.—எழுத்ததிகாரித்தின் (உஅ) இருபத்தெட்டுப் பாடல்களும் (காரிகைகளும்) அடுத்ததாக அவையிற்றின் உரையும், இரண்டாமதிகாரமாகிய சொல்லதிகாரத்தின் (கூ) பாடல்களும் (காரிகைகளும்) மாத்திரமேயுள்ளன. இவ்வொன்பது காரிகைகளுக்கும் உரைப்பாகமும் மிகுதியான பகுதி முற்றவும் எழுதப்பெறவில்லை. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன. பின்னர் இரண்டு ஏடுகளில். இரண்டாம் வேற்றுமையில் ஒரு பெயரை இலக்கணத்தோடு முடித்துக்காட்டிய பகுதி அரைகுறையாய் உள்ளது. பிறகு மெய்ப்பாடு முப்பத்திரண்டும் எழுதப்பெற்ற மூன்று ஏடுகள் உள்ளன. பிற வெற்றேடுகள்.

No. 2074. யாப்பருங்கலக்காரிகை மூலம்.

YĀPPARUṄGALAKKĀRIKAI TEXT.

Pages, 12. Lines, 8 on a page.

Begins on fol. 8-*a* of the Ms. described under No. 355 T. D. C. Vol. 1.

Complete.

Same work as that described under No. 82 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. 1.

இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 82-ம் நம்பரில் வந்துள்ளதேயாம். இப் பிரதியில் முற்றும் உள்ளது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. பிழையுள்ளன.

No. 2075. யாப்பருங்கலக்காரிகை உடையுடன்.
YĀPPARUṄKALAKKĀRIKAI WITH COMMENTARY.

Substance, Palm-leaf. Size, 14 × 1¼ inches.

Pages, 312. Lines, 6 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 1-*a*

The other works here in are :—Kalitturaippāṭṭiyal 155. *a*, Uvamānasaṅgiraham 168 *a*, Veṇpāpāṭṭiyal 171 *a*, Veṇpāppāṭṭiyal with Commentary, 182-*a*, Daṇḍiyalaṅkāram with commentary 204-*a*.

Complete.

Same work as that described under No. 81 of the Descriptive Catalogue of Tamil Mss. Vol. I.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 8-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இது உரையுடன் முற்றும் உள்ளது. எழுத்துப் பிழையுள.

No. 2076. கலித்துறைப்பாட்டியல் (நவநீதப்பாட்டியல்).
KALITTUṞAIPPAṬṬIYAL (NAVANITAPPAṬṬIYAL).

Pages, 26. Lines, 6 on a page.

Begins on fol. 155-*a* of the Ms. described under previous No.

Incomplete.

Same work as that described under No. R. 433 of the Tamil Triennial Catalogue, Vol. IV.

(கு - பு.)—

இது மூவருடக் காடலாக் 433-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பகுதிகள் மூன்றில் முதல் இரண்டு பகுதிகளேயுள்ளன. இறுதிப்பாகம் மாத்திரம் இல்லை. இது– போழ்து இதன் முதற்பாகமாகிய பொருத்தவியன் மாத்திரம் அச்சிடப்பெற்றுள்ளது. ஆகவே மிகுதியான பகுதிகளை அச்சிடுவதற்கு, இது பெருந்துணையாகவிருக்கும். இந்நூல், குணவீரபண்டிதர் இயற்றிய வெண்பாவான் அமைந்துள்ள வெண்பாப் பாட்டியலே போன்று 'நவநீதநடன்' என்பவராலியற்றப் பெற்று நூறு கலித்துறைகளான் அமைந்துள்ளது ; ஆதலின் இந்நூலுக்கு 'நவநீதப்பாட்டியல்' என்றவோர் பெயரே யன்றிக் 'கலித்துரைப்பாட்டியல்' என்ற மற்றொரு பெயரும் உண்டெனத் தெரிகிறது. மற்றிதனை இப்பிரதியின் தலைப் பெயரைக் கொண்டுந் தெளிந்துணர்க.

No. 2077. வச்சணந்திமாலை (வெண்பாப்பாட்டியல்)
(VACCAṆANDIMĀLAI VEṆPĀPPĀṬṬIYAL).

Pages, 22. Lines, 6 on a page.

Begins on fol. 171-*a* of the Ms. described under No. 2075. Complete.

Same as the text of the work described under No. 89 of the Descriptive Catalogue of Tamil Mss.

(கு - பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 89-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. அப்பிரதியில் உரையுடன் உளது. இப்பிரதியில் மூலம் மாத்திரம் உள்ளது. எழுத்துப்பிழை மிகவும் காணப்படுகிறது.

No. 2078. வச்சணந்திமாலை உரையுடன்.

VACCAṆANDIMĀLAI WITH COMMENTARY.

Pages, 44. Lines, 6 on a page.

Begins on fol. 182-*a* of the Ms. described under No. 2075.

Complete in 42 stanzas only.

Same work as that described under No. 89 of the Tamil Descriptive Catalogue, Vol. I.

(கு - பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 89-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் 42-ம்செய்யுள் வரையிலான பகுதிக்கு மாத்திரம் உரையிருக்கிறது. எழுத்துப்பிழை மிகவுள்ளன.

No. 2079. பாட்டியல் வசனம் (செய்யுளிலக்கணம்).

(PĀṬṬIYAL VACANAM (ŚEYYUḶILAKKAṆAM),

Pages, 88. Lines, 20 on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. 1239.

Complete.

Same work as that described under No. 42, Tamil descriptive catalogue, Vol I.

(கு - பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 42-ம் நம்பரில் 'செய்யுளிலக்கணம்' என்ற பெயரான் வெளி வந்துள்ள நூலேயாம். இப்பிரதி ஷை நம்பர் பிரதியைப் பார்த்து எழுதி வைத்ததாகும். யாப்பிலக்கணத்தை வசனத்தான் உணர்த்துவது.

No. 2080. உவமான சங்கிரகம்.

UVAMĀNASAṄGRAHAM.

Pages, 6. Lines, 6 on a page.

Complete.

Begins on fol. 168-*a* of the Ms. described under No. 2075 *ante*.

Same work as that, described under No. D 41 Tamil Descriptive Catalogue, Vol. I.

(கு - பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 41-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூலின் பதினைந்து (15) செய்யுளும் இருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. 2081. தண்டியலங்காரம் உரையுடன்.

DAṆDIYALAṄKĀRAM WITH COMMENTARY.

Pages, 316. Lines, 6 on a page.

Begins on fol. 204—*a* of the MS. described under No. 2075 *ante*.

Complete.

Same work as that described under No. D 43, Tamil Descriptive Catalogue, Vol. I.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 43-ஆவது நம்பரில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றும் உள்ளது. இறுதியில் கடைச் சூத்திரத்தின் உரைப்பாகத்தில் சில தொடர்மொழிகண் மாத்திரம் எழுதப்பெருமல் குறையாக விடப்பெற்றுள்ளன. அவற்றிற்காகச் சில வேடுகள் வெற்றேடுகளாய் உள்ளன. இவ்வுரை பழையவுரையாகும். பிழையுள.

No. 2082. திருவள்ளுவர்க்குறள் தலை வரவு.

TIRUVAḶḶUVARKKUṞAḶ TALAI VARAVU.

Pages, 10. Lines, 7 on a page.

Begins on fol. 88—*a* of the MS. described under No. D. 355.

Incomplete.

A table of the words at the beginning of every couplet of the *Tirukkuṟaḷ* of Tiruvaḷḷuvaṟ. A sort of index.

Beginning :

கடவுள் வாழ்த்து,

(1) அகரமுதல வெழுத்தெல்லாம், (2) கற்றதனாலாயபயன், (3) மலர்மிசையேகினான், (4) வேண்டுதல், (5) இருள்சேரிரு, (6) பொறிவாயிலைந்தவித்தான், (7) தனக்குவமை, (8) அறவாழி, (9) கோளிற் பொறி, (10) பிறவிப்பெருங்கடல் * * * *

* * * * *

End :

வினைத்திட்பம்.

(2) வீறெய்தி மாண்டார், (3) எண்ணியவெண்ணி, (4) உருவுகண்டெள்ளாமை, (5) எனைத்திட்பமெய், (6) துன்பமிகவரினுஞ் வினைச்செயல்வகை.

(கு-பு.)—

இது திருவள்ளுவ நாயனார் இயற்றிய திருக்குறளினுக்கு அட்டவணை யாய்த் தலைவரவினையுணர்த்துவது. பொருட்பாலில் வினைத்திட் பம்வரை யிலான பகுதிக்குள்ளது. சிலவதிகாரங்களில் சிற்சில குறள்களுக்கு அடி வரவில்லை.

No. 2083. நீதி வெண்பா உரையுடன்.

NĪTI VEṆPĀ WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16 × 1 inches. Pages, 36. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete in 83 Stanzas only.

Same work as that described under No. 185 of the Tamil Descriptive Catalogue Vol. I.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 185-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூல் 83-ஞ் செய்யுள் வரையிலுமே உள்ளது. மிகுதியான பாடல்களில்லை. ஏடுகள் மிகவும் முறிந்துள்ளன. பிழையுள.

No. 2084. நீதி நூற்றிரட்டு.

NĪTI NŪṞṞIRAṬṬU.

Pages, 20. Lines, 5 on a page.

Begins on fol. 78-*a* of the MS. described under No. 495 *ante*.

Contains 44 stanzas only.

A collection of didactic verses.

Beginning :

வேதியர் கருமம் யாவு நீங்கிய கருமமற்றைச்
சாதியர் புரிவதாகித் தாழ்ந்தவர்க்குயர்ந்தோர் பின்சென்
றாதியம் பெறுதற்குன்னியுடன் படவணக்கஞ் செய்துஞ்
சோதிட மேலோர் கேட்பச் சொல்பவர் கடையராகி. (க)

தாழுமவர்க்கொலி வாரிதியுந்தன்னுள்ளமிழ்த்துமோர் நாவாயாற்
போழுமவர்க்கு நன்மணியுஞ் செம்பொன்னு மளித்தவை புனைவிழும்
வாழுமவர்க்குளதுறவெங்கு மற்றையவர்க்கிலை மரபினுமீ
ரேழுலகத்தையு மடுகிற்கு மெரிசிறிதாயினு மெண்ணுரால். (உ)

* * * * * *

* * * *

சொற்றருஞ் சிதைக்கு மன்னர் சொன்னபடி சொன்னவரே தொலையாச் செல்வம்
பெற்றருள் வரவைதிருத்திப் பேசினோர்க்கு முறைகேடு பிறக்கும் பித்தர்க்
குற்றகுண நூலினுஞ் செவ்வொழுங்கன்றே யூன்புசிக்கு முழுவை முன்போய்க்
கற்றறிநல்லற மோதிற் கடுங்கொலை மாபாவ மென்றுங் கருத்துறுதே. (ச)

End :—

காய்த்தறு கண்ணராங் கயவர்கைமிகத்
தீதுறு வாசகஞ் செப்பினு லெதிர்
வாய்த்திறவாமையா மவுன மன்றிவே
றேற்றை வெல்வதற்கியன்ற செய்கையே. (சஉ)
ஒழிவிலா துணரந்தண ருள்ளுவந்தோதும்
பழைய வேதநூல் வசனமும் வாய்மையேபாரில்
வழுவில் சோதிடமருத்து நூன் முன்னமே வகுத்து
மொழியுமாறு பின்பவ்வகை பலித்திடுமுறையால். (சங)
ஆயத்தக்கது வேதத்தினந்தமே யாயத்தால்
ஓயத்தக்கது வேட்கையின் பெருக்கமே யொருவர்க்
கேயத்தக்கது பரம்பரன் கருணையே யென்றுந்
தோயத்தக்க தானந்த வாரிதி யிதுதுணிவே. (சச)

(கு - பு.)—

இந்நூல், பல்வேறு நீதி நூல்களிலிருந்து பல நியாய முணர்த்தும் பாடல்களாகப் பொறுக்கித்திரட்டிய தொரு சிறு நூலெனக் காணக்கிடக்கிறது. (சச) பாடல்கள் கொண்டிருக்கிறது. இப்பிரதியில் பிழைகள் உள. இடையே சில பாடல்களுக்கு மாத்திரம் 'தாயுமானவர் பாடல்' என்ற தலைப்பெயர்க்குறிப்புக் காணப்படுகிறது. மிகுதியானவைகட்கு ஆகரம் இன்னதெனத் தெரிந்திற்றிலது. இறுதியில் ஒரேட்டில் **பித்தச் சூட்டுக்காம்** ஒரு நன்மருந்து வகை அரைகுறையாக வசனத்தில் எழுதப் பெற்றுள்ளது.

No. 2085. சிஷ்டரந்தாதி.

ŚIṢṬARANTĀDI.

Pages 6. Lines, 6, on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. D 1294 Vol. III.

Complete.

Same work as that described under No. 251 *ante*.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கில் 251-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இந்நூலின் ஐந்துசெய்யுளும் ஓரோவொரு விடங்களில் சிறிது பாடபேதத்துடன் இருக்கின்றன. நிற்க, " கரியுரி யாடைக்கடவுளுங்

கார் நிறவண்ணங்கொண்ட அரிபிரமாதி நின்நாதன் " என்ற வொரு பாடலும் உளது. அதுவும் இந்நூலைச் சார்ந்ததாயிருக்கலாமெனத் தோற்றுகிறது.

No. 2086. திருவானைக்காவல் உலா.
TIRUVĀNAIKKĀVAL ULĀ.

Substance, palm-leaf. Size, 14¼ × 1 inches. Pages, 106. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

This is the original of the work described under No. 21 of the Triennial Catalogue of Tamil Mss.

(கு-பு.)—

இந்தப்பிரதியில் வந்தநூல், மூவருடக் காடலாக்கு 21-வது நம்பர் பிரதியில் வந்தநூலுக்கு மாதுருகையானநூலாகும். இதன் ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று மிகவும் முறிந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் மிகவுள.

No. 2087. திருவாமாத்தூர் கலம்பகம்.
TIRUVĀMĀTTŪR KALAMBAKAM.

Pages, 30. Lines, 5 on a page.

Begins on fol. 39-*a* of the MS. described under No. 1719 T. D. C., Vol. II.

Incomplete.

A poem, in the *Kalambakam* style, in praise of God Śiva in the sacred shrine at Tiruvāmāttūr, a place about five miles from Villupuram. The authors are the two brothers Iraṭṭaiyar by name, who were famous for their skill in composing poems of the ***Kalambakam*** type. They were the contemporaries, as stated in the *Abhidhánacintámaṇi*, of Koṅgarāyan, otherwise known as Āṭkoṇḍān of Tiruvakkai and Camparáyan of Káṇci and were patronised by these rulers.

Beginning:

ஹரி: நன்றாக. குருவாழ்க. குருவேதுணை.

திருவாமாத்தூர் கலம்பகம்.

மெய்யஞ்சுவாரி கரைபுரண்டாலும் வருகலியன்
மெய்யஞ்சு வெள்ளி தெற்கடைந்தாலு மிமவான்பயின்ற
அய்யஞ்சு மஞ்சு மிரண்டு பெற்றாள் பெற்றவாரணத்தின்
கையஞ்சுநாலு புயமுமுண்டே யெம்மைக்காப்பதற்கே. (க)
பம்பைநெடு வீதிதனிற் பத்தர்பலருந்தொழுது
கம்பமதவானை முக்கை களிற்றின்
உம்பர்புவியோர் துயரந்தீர்த்தருளும் மாங்குபுக
மாமாதைமால்துயரந் தீர்த்தானைவாழ்த்து. (உ)

தொல்காப்பிய தேவர் சொற்றமிழ்ப் பாடலன்றி
நல்காதிச் செவிக்கு நாமுறைப்ப தேறுமோ
மல்காப்புனல் துங்கமா னீலக்கண் பிசைந்து
பல்காற்பொரு மகற்குப் பாற்கடலொன்றீந்ததுவே, (௩)

போக்குப் பரிவுடன் நன்றுஇளட்டைப் புலவர்தந்த
மாதைக்கலம்பகஞ் சொல்வாரைக் காக்கவருந் துணையால்
நாதற்கு நாதர் அழகியநாதர் நட்பெற்ற
வேதக்கணபதி பாதார விந்தங்கள் வேண்டினர்க்கே. (௪)

தஞ்சமென்ற மரர்கெஞ்சத் தானவரதனுண் மிஞ்ச
அஞ்சவே யெவருநஞ்சை யுண்டவழகிய மாதைக்கு ?
மஞ்சுசேர் பொழில்சூழ் பம்பைமால்துயரந் தீர்த்தான்றன்னைக்
கஞ்சமாமலர் கொண்டேத்திக் கலம்பகஞ் செய்வோம்நாமே. (௫)

End:

சிவமயம்.

கலித்துறை:—

வல்லிக்கிடந்தந்த மாமாதை நாயகர் வண்டின் கையில்
கொல்லைப் பசுங்கொன்றைத் தாருகந்தாரில்லை கோலிவைத்த
முல்லைப்பறவையுந் தேமாவையும் விட்டு மொய்குழலீர்
அல்லிக்கடுக்கையை வைத்திலமே நம்மறிவின்மையே. (௫௪)

விருத்தம்.

வில்லிடுங்கொம்பு பல்லியங்கொம்பு
விளையிடுங்குன்றில் வேடர்காள்
சொல்லழிந்துங்கண் மன்னனைப்பின்பு
சொன்னசம்பந்த மென்னடா
வல்லிதன்பங்கன் மைபொருங்கண்டன்
மாதையஞ்சம்பு மார்பிலே
இலலில்வந்தன்றென்ற தொன்றன்றி
யென்னசம்பந்த மில்லையே. (௫௫)

(கு - பு.)—

இந்நூல் சிவஸ்தலங்கள் பலவற்றில் நடுநாட்டின்கண் அமைந்துள்ள ‘ திரு ஆமாத்தூர் ’ என்னும் திவ்விய ஸ்தலத்திலே கோயில் கொண்டிருக்கும் சிவபிரான் விஷயமானதுதியாகும். ‘ கலம்பகம் ’ என்ற பிரபந்த வகையைச்சார்ந்தது. ‘ கலம்பகத்திற்கு இரட்டையர் ’ என்று கலம்பகம் இயற்றுவதில் பெயர்பெற்றிருந்த இரட்டைப்புலவர்களால் இயற்றப்பெற்றது. இது மிகவுஞ் சிறந்தநூலாகும் ; இப்பிரதியில் இந்நூல் ஐம்பத்தைந்து பாடல்கள்வரையிலுமே யுள்ளது. மிகுதியான பகுதியில்லை. எழுத்துப் பிழை மிகப்பொதிந்து கிடக்கின்றன. ஏடுகளும் பல சிதலுற்றுச் சிதைந்திருக்கின்றன. ஷெ ஊர் விழுப்புறத்துக் கருகாமையில் ஐந்தாறு மைல்களுக்கப்பால் உள்ளது.

No. 2088. திருவிளையாடற்போற்றிக் கலிவெண்பா.

TIRUVIḶAIYĀḌAṞPŌṞṞIKKALIVEṆPĀ

Pages, 10. Lines, 9 on a page.

Begins on fol. 118-*a* of the Ms. described under No. D 1157.

Complete.

Same work as that described under. No. 305 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. 1.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 305-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளது. முற்றும் உளது. பிழைகளிருக்கின்றன. 64, திருவிளையாடல்களும் சுருக்கமாகக் கூறப்பெற்றிருக்கின்றன.

No. 2089. மீனாட்சியம்மை கலிவெண்பா.

MĪNAKṢIYAMMAI KALIVEṆPĀ.

Pages, 20. Lines; 5 on a page.

Begins on fol. 121 of the Ms. described under. No. 1074.

Complete.

Same work as that described under No. 522 (*f*) of the Triennial Catalogue of Tamil Mss., Vol. IV.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கில் 522 (f) நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் இந்நூல் முழுமையும் இருக்கிறது. இதன் ஏடுகள் பல சிதலுண்டு முறிந்து மிருக்கின்றன வாதலின் அவையிற்றி லடங்கிய பகுதி நீங்கலாக மிகுதியை ஒப்புநோக்கிக்கொள்ளுதற்கு இது மிகவும் உதவிபுரியும். பிழைகள் உள. நூலாரம்பத்திலும் இறுதியிலும் 'மீனாட்சியம்மை யகவல்' என்று குறிக்கப்பெற்றது மிகவுந் தவறுகும்.

No. 2090. அஞ்ஞவதைப்பரணி.

AÑÑAVADHAIPPARAṆI.

Pages, 124. Lines, 8 on a page.

Begins on fol. 7-*a*. of the Ms. described under No, 337 T. D. C. Vol., I.

Complete.

Same work as that described under No. 1421 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. III.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 1721-ம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. பரணி யென்னும் பிர பந்த விலக்கணத்தை டிஷ நம்பர் பிரதியின் குறிப்பு கொண்டும் பிறவாற்று னுந் தெளிந்துணர்க. பெரிதும் எழுத்துப் பிழையுடன் உளது. ஏடுகள் தாம்பல செல்லரிப்புண்டும் முறிந்தும் உள.

No. 2091. தக்கயாகப்பரணி.

DAKKAYĀGAPPARAṆI.

Pages, 85. Lines, 20 on a page.

Begins on fol. 1-*a* of the Ms. described under No. 220 *ante*.

Complete.

Same work as that described under No. 321 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. I.

This work has been printed with a Commentary by M. R. Ry. Mahāmahopādhyāya U. V. Svāminathayyar Avl.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 321 ம் நம்பரில் வந்துள்ளதே. இது மிகவும் பிழையுடன் காணப்படுகிறது. உரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

No. 2092. சுந்தரர் வேடுபறி

SUNDARARVĒḌUPAṞI.

Pages, 32. Lines, 4 on a page.

Begins on fol. 50-*a* of the Ms. described under No. D 495.

Complete.

Same work as that described under No. 352 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. I.

(கு - பு.—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 352-ம் நம்பர் பிரதியில் வந் துள்ளதேயாகும். இறுதியில் சில அடிகள் தவிர்த்து மிகுதியான பகுதி முற்றும் இப்பிரதியில் உள்ளது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

No. 2093. கம்பராமாயண சங்கோத்தர விருத்தி

KAMBARĀMĀYAṆA ŚAṄKŌTTARAVIRUTTI.

Pages, 74. Lines, 20 on a page.

Begins on fol. 47—*a* of the MS. described under No. D. 1239.

Complete.

Same work as that described under No. 524 of the Descriptive Catalogue of Tamil MSS., Vol. II. Restored from the above number.

(கு - பு)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 524-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். ஷை நம்பர் பிரதியைப் பார்த்து எழுதிவைத்ததாகும். பிழையுளது.

No. 2094. சித்திரகவி உரையுடன்

CITTIRAKAVI WITH COMMENTARY.

Pages, 48. Lines, 20 on a page.

Begins on fol. 30 of the MS. described under No. 241, T.D.C., Vol. I.

Same work as that described under No. 354 of the Descriptive Catalogue of Tamil MSS. Vol. I.

(கு - பு)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 354-ம் நம்பரில் வந்துள்ளதேயாகும். அதில் உள்ளவரையில் இதிலும் உள்ளது. இப்பிரதி மிகவும் பிழைபட வெழுதப் பெற்றுள்ளது. இது ஷை நம்பர் பிரதியைப் பார்த்து எழுதி வைத்ததெனத் தோற்றுகிறது.

No. 2095. சித்திரகவி உரையுடன்.

CITTIRAKAVI WITH COMMENTARY.

Pages, 2. Lines, 20 on a page.

Begins on fol. 45-*a* of the MS. described under No. 1239 *ante*.

Incomplete.

Same work as the above.

(கு - பு.)—

இந்தப் பகுதியிலுள்ள நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 354 ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இதில் ஒரு சிறிது பாகமே யுள்ளது. மிக பிழைபட வெழுதப் பெற்றுள்ளது.

No. 2096. அளகேசுவர ராஜன் கதை

அல்லது

(தமிழறியும் பெருமாள் கதை).

ALAKĒŚVARARĀJAN KATHAI

OR

TAMILARIYUMPERUMĀL KATHAI.

Substance, palm-leaf. Size, 13¼ × 1 inches. Pages, 192. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D 377 of the Descriptive Catalogue of Tamil Mss.

End:

சுகமாக வாழ்ந்திருந்து ஒளவையாரது அனுக்கிரகப்படிக்கும் சிவனுடைய பாதாரவிந்தஞ் சேரக்கடவீர்கள். உங்கள் அரண்மனையேறப் போயிருந்து வாழக்கடவது என்று அனுப்பிக்க, இவர்கள் இரண்டுபேரும் நற்கீரதேவர் பாதத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி அனுப்புவித்துக்கொண்டு தங்கள் அரண்மனையேறப் போய் வாழ்ந்திருந்தார்கள். பிற்பாடு நற்கீர தேவர்க்குச் சோழமகாராஜா......வரிசை பூஷணமுங் கட்டுவர்க்கமுங் கொடுத்துப் பச்சைப் பல்லக்குமிட்டு நமஸ்கரித்து நற்கீரதேவரை மதுரா புரிக்கும் அனுப்புவித்தான். நற்கீரதேவரும் சோழராசன் கையில் அனுப்பு வித்துக்கொண்டும் விருதுபாடுவித்துக்கொண்டும் மதுரைக்கு வருகிறபோழ்து பாண்டிய ராசாவும் சங்கத்தாரும் எதிர்கொண்டுவந்து சந்தோஷப்பட்டு நற்கீரதேவரை யழைத்துக்கொண்டு போனார்கள். நற்கீரதேவரும் உறை யூருக்குப்போய் * * * *

* * * * *

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 377-வது நம்பரில் வந்துள்ளதே; ஆயினும் இப்பிரதியில் இது வசனநடையில் சிறிதுமாறுபாட்டுடன் காணப்படு கிறது. அதில் இல்லாத சில கதைப்பகுதியும் இதிற்காணப்படுகிறது முற்றுப்பெற்றது.

No. 2097. குசலவர் வாக்கியம்.

KUŚALAVAR VĀKKIYAM.

Pages, 20. Lines, 7 on a page.

Begins on fol. 1 of the M.S. described under No. 511 *ante*.

Similar to the work described under No. 509 of the Descriptive Catalogue of Tamil Mss., Vol. II.

Beginning :

குசலவர் வாக்கியம்.

. . . .

சீக்கிரமாய் ஒமந்தனைத் துவக்கிச் செயலுற்றுர் அக்கினியை இருவர் பெற்றழ கோமத்தட்டிற் சுமங்கிலியர் கொண்டுவந்து சோபனங்கள் பாட விக்கினங்கள் வாராமல் வேண்டி வரந்தொழுது விருப்பமுள்ள தேங்காயை யுடைத்தவரும் பணிந்தார். அக்கினியைத் தீமூட்டி யடைந்த முனி தேவர் அபிராம ரெழுந்தி ரென்று . . . .

End:

மத்தளங்கள் பேரிகைகள் துந்துபிகள் முழங்கமற் ராமர் சீதையரை மணம் பொருந்தி வரும்போது மாபாவி கைகேசி மனதை மெத்த. . . த்து வனவாசம் போவா வென்று வாழ்த்தினது மறியோம் ஆட்சியான பந்தரிலே யரசுநிலை நிறுத்திக் காட்சியான பந்தலிலே காடைவிளக்கெரிய கற்பூர வாலத்தி யெடுக்க. . . . . . . .மத்தோம் களிப்புடைய தசரத னூர் காணுத காட்சி கலியாணி மகாதேவி கண்குளிரப்பாரும்.

அந்திநேரம் பந்தடிப்பா ளன்னவூஞ்சலாடுவாள்
அனந்தனுந்திரு . . . . . மழகுபெறச் சாற்றுவாள்
எல்லைவீதியோடுவாள் கொன்றரத்தம் வாங்குவாள்
இலங்கைசுட்ட ராமருக்கிளையவள் பார்வதி. (க)

* * * * *

கட்டிவிட்ட சேலையுங் கனகனத்தா ளோசையும்
இட்டமார்க்கிசைந்திருக்க எட்டுபந்தடிப்பளே. (அ)
பந்துக்காரியவளூரத்த தோழிமச்சினி
யொருபந்தையிங்கேவைத் தொன்பதுபந்தடிப்பளே. (கூ)
பத்தில்லாத பத்தினி பழுதில்லாத பார்வதி
பத்துவாய் மரத்தின்கீழே டத்து பந்தடிப்பளே. (ம)

பந்துப்பா முற்றும் :

(கு.பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 511-ஆம் நம்பரில் வந்த சுக்கிரீவ விஜயம் என்ற நூலேபோல ஒருவகைக் கீர்த்தனை வகையைச் சார்ந்ததாகும். இதில் நுவலப்படும் விஷயம் இராம சரிதையாம். இறுதியில் பந்துப்பா வென்ற தலையங்கத்துடன். பத்துப்பாடல்கள் உள்ளன. பிழைகள் மிகவுள. நடை சிறந்ததன்று.

No. 2098. திருநீலகண்டன் பள்ளு.

TIRUNĪLAKAṆTHAN PAḶḶU.

Pages, 18. Lines, 5 on a page.

Begins on fol. 164-*a* of the Ms. described under No. 1074 *ante*.

Incomplete.

A poem, in the *Paḷḷu* style, embodying the story of Tiru Nīlakaṇṭhar, the *Saiva* saint. Every verse ends with the refrain, *Paḷḷiyare.*

Beginning:

திருநீலகண்டன் பள்ளு:—

தில்லைச் சிதம்பரந்தன்னி லொருநாள்
திரு நட்டமாடுஞ் சிவனுடனே
தேவி சிவகாமி நாயகியந்தத்
திருநீல பத்தன்நெறி யுரைக்கச்
சொல்லைச் செவிதனிற் கேட்டரனுருஞ்
சோதித்த வன்றனைச் சூதாக்கிச்
சொன்னமொழி நிலையாம லெந்நாளுஞ்
சுகத்தினில் வாழ்க நினைத்திடென்றார்
கல்லைப்பிளந்து பெருநா ருரித்துக்
கையாற் றிரித்துக் கயிருக்கிக்
காண்டிபந்தன்னைக் குதைப்பூட்டி நாளும்
கருத்தய வானைப் பிரிக்குமதோ
அல்லற் பணியு மழகாகப்பூண்ட
வம்பலவாணர் மிகக்கடிந்து
அன்னங்கள் கேட்க வுபாயங்கள்பண்ணி
யறிய வென்றார் பள்ளியரே. (க)

கங்கணச் சேர்வை விபூதிகோயிலுங்
காலிற் சதங்கையும் மான்மழுவுங்
காளகண்டத் திருமேனியுங் காவுங்
காதினில் வெண்குழைக் குண்டலமும்
தங்கப்பிரகாசமுந் திங்களுங் கங்கையுந்
தாபித்த செஞ்சடையு மிரற்குந்தற்பரனுன்
சதாசிவ சங்கரர்தன் கபால
சங்குஞ் சிகண்டிகையும்
குங்குமவில்லை திருநுதர் பூச்சுடர்
கூரிய சூலமும் மாத்திரையுங்
கொஞ்சு நகைப்பு மஞ்சனகாப்புங்
கூட வென்பும் புலித்தோல்களுஞ்
செங்கதிரோனைத் திருவோட தாக்கிச்
செம்பொ னிழற்பட்டு மேறபோட்டுஞ்
செவ்வந்தி மாலை யிருபுறமா....
சிவன் வடிவானார் பள்ளியரே. (உ)

End :

நம்புந் திருநீலபத்தனைச் சோதித்து
நாளுநா மகிழ்ந்து மனங்களித்து
நல்லவிளமையி னயினூர் குளத்தினில்
........................று மென்றூர்

கும்பிட்டிருவருங் கைதனைக் கோத்துக்
கூசாம லோருடை தானுடுத்திக்
கூத்தமென மிதிலேசத்து மில்லேயென்று
குளத்தின் மூழ்கி யுரைத்திடென்றூர்

அம்பிட்ட நேர்விழியாள் சிவகாமி
யாண்டவன் வந்து மொழிந்தாலும்
அந்தப்படி மனமொவ்வாது நீங்கள்
ஆயிரஞ் சொன்னூலு மாகாது

செம்பொற் சிலம்பு கலகலென்வெள்ளைச்
சேவின்மே லேறும் வடிவழகன்தில்லை
சித்தம்பல வாணர் சிவபதஞ்
சேர்ப்ப மென்றென்றூர் பள்ளியரே. (கூ)

அந்தப்படியே யுமக்கு இருவருமாணை

* * * *

* * * *

(கு - பு.)

இந்நூல் 'பள்ளும்' எனும் பிரபந்த வகையைச் சார்ந்ததாய் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராய் 'திருநீலகண்டர்' என்பவரது திவ்விய சரித்திரத்தை உணர்த்துவது. இப்பிரதியில் (கூ) ஒன்பது பாடல்களே உளவாதலின் முற்றுப் பெறவில்லே. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதைவுற்று முறிந்திருக்கின்றன. இப்பிரபந்தத்தின் இலக்கணம் செவ்விதின் விளங்கவில்லேயாயினும் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றில் 'பள்ளியரே' என வந்திருக்கிறது.

No. 2099. புரந்தரன் களவு மாலே.

PURANDARAN KAḶAVU MĀLAI.

Substance, palm-leaf. Size, $16\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 362. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

A ballad on the popular story of Purandarankaḷavu.

By Pukalēndippulavar. Printed.

Beginning :

ஆனைமுகப் பிள்ளையாரே யாறுமுகத்தோனே
கானமயில் வேலவற்குங் கந்தருக்குமூத்தோனே
மானீன்ற வள்ளியர்க்கு மச்சினரே முன்னடவாய்
அப்பமெழுநூறும் அரியதிரந் தொண்ணூறும்
செப்பமுடன் தேன்கரும்பு செவ்விளநீர்தேங்காயும்
வாழைப்பழமும் மறுவில் பலாச்சுளையும்
சீனிகண்டு சர்க்கரையும் செங்கரும்பும் வெண்கரும்பும்
பேராற்பெரிய பெருங்கடலை வெல்லமுடன்
ஆனதுவரை யவரைப் பயறுடனே
காரணிகமானதொரு கற்பகமே முன்னடைவாய்
காரணிகமானதொரு கற்பகமே நான்படைப்பேன்
சேனாபதிதலைவா சிவனார்த் திருமகனே
பஞ்சவர்கள் நற்கதையைப் பாரிலுள்ளோர் தான்மகிழ

* * * *

* * * *

போரான மைந்தன் பிரபலங்கள் தன்னுடையாள்
புரந்தரனார் தன்கதைக்குப் புண்ணியரே முன்னடவாய்

* * * * * *

முத்தின்வளநாடு முடிகவிழ்ந்த பெண்பெருமாள்
பிறவாமுடிகவிழ்த்த பெண்பெருமாள் நாயகியாள்
வண்டார்குழலாளும்தன் மாளிகையிற் போயிருந்து
சிங்காரமாகவே தேன்மொழியும் வீற்றிருந்தாள்
வயிரக்கவரியிடுவவளை வாவென்றருகழைத்து
நேற்று இரவில் நித்திரையில் நீர்கேளீர் காரிழையீர் !
சொப்பனங்கள் கண்டேன் துன்னுகுழலாளே
இதுநல்லதோ பொல்லாதோ நாயகியே கூறுமென்றாள்
ஏதேது சொப்பனங்கள் எனக்கறியச் சொல்லுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் கூறுவாள்.

End :

. . . துவேயமையுமையா யறியாதே யனுப்பினோம்.
என்றுதான் அல்லியரும் எங்கிமுகம் வாடுகிறாள்
வாருமென்று சொல்லி வரிசையுடன் வந்தார்கள்
வந்தார்கள் எல்லோரும் மங்கைநல்லாள் வாசலிலே
பூங்கொடியுந் தான்றானே போர்வழுதியைத் தழுவி
ஆசனத்தின்மேலே யருகேயிருத்திவைத்து
போனீரே தம்பியரே போனதென்ன சொல்லுமென்றா
போனேன் குறைவுமில்லை பொற்கொடியாளிப்பொழுது
சல்லியனுமப்பொழுதே சதிராக வெதிர்வந்து
கட்டித்தழுவிக் கட்டழகா வாருமென்று
கூட்டியழைத்துப் போனார்கள் கொம்பனையே

போனேன் கொலுவிற்போய் அந்தமன்னரெல்லோரும்
. . . . கடுந்திரளாய் நூற்றொருவர் தம்பியரும்
. . . . கையனுந்தானிருந்தான்
. . . . னுமாய்
பதினெட்டு அக்குரோணி பாரிற் பெருமன்னரையும்
சமுத்திரம் போலே சதிராகக் கொலுவிருந்தார்
போனேனடிபணிந்தேன் பொற்கொலுவிலுள்ளோரை
முன்னேவரிசை முறைமுறையாய்த் தானிறுத்தி
ஆனவுலுப்பை யெல்லாம் அடைவாகத்தானிறுத்தி
எருதுமேல் உலுப்பையெல்லாம் எதிராகத்தானிறுத்தி
. . . .

(கு - பு).—

இந்நூல் புகழேந்திப் புலவரான் இயற்றப்பட்டது ; இது அருச்சனன் மனைவிகள் பலரில் 'அல்லியரசாணி' என்னும் தேவியின் புதல்வனும் புரந்தரன்றன் தாய்மொழிக்கிணங்கித் தென்பாண்டி நாட்டிலிருந்து அத்தினபுரி சேர்ந்து அங்குச் சிறையில் உறைகின்றன் தன் பாரியாள் காந்தாரி யென்பவளைக் களவிற் புணர்ந்து கருவுண்டாக்கி வந்த கதையை விரிவாக உணர்த்துகின்றது. ஆகவே இதற்குப் 'புரந்தரன் களவுமாலை' என்ற பெயரே தகுதியாம் பழைய காடலாக்கிலும் இவ்வேட்டுப்பிரதியின் இருபுறக் கட்டைகளிலும் அல்லியரசாணிமாலை, அல்லியரசாணியம்மானை என்ற பெயர்கள் தவறாகும். பிழைகள் மிகவுள்ளன.

No. 2100. தொண்டைமண்டல சதகம்.

TOṆḌAIMAṆḌALA ŚATAKAM.

Pages, 36. Lines, 20 on a page.

Begins on fol. 45-*a* of the MS. described under No. 90 T. D. C., Vol. I.

Complete.

A centum of verses on the *Toṇḍaimaṇḍalam*, as the country round Conjeeveram is called in Tamil Literature.

Beginning :

தொண்டைமண்டல சதகம்.

தெய்வ வணக்கம்.

கொண்டலைநிகர்க்கும் வேளான் குடியொடுதழீய தொண்டை
மண்டல சதகந்தன்னை வளமையால் வகுப்பதற்கே
புண்டரநுதலிரண்டு புயமிசை யிருந்திரண்டு
குண்டல நிகரிரண்டு குமரரைவணக்கஞ் செய்வாம்.

நூல்.

சீர்கொண்ட கச்சித்திருவேகம்பத்தரன் செல்வ முக்கட்
கார்கொண்ட மும்மதத்தைங் கரந்தாங்கிக் கடவிகடப்
பேர்கொண்ட சக்கரப்பிள்ளையைத்தான் பெற்றபேறதனுல்
வார்கொண்ட கீர்த்திபடைத்தன்றே தொண்டைமண்டலமே. (க)

சிறப்பைப்பற்றிக் கூறுகின்றது. இது, சந்தர்ப்பத்திற்கேற்பப் பலநூல்களி லிருந்து மேற்கோட்பாக்களுடன் அச்சிடப்பெற்றுள்ளது. அச்சிட்ட பிரதியிற் காணும் மேற்கோள்பாடல்களிற் சில பாடல்கள் காணப்பெறுததனோடு பல பாடல்கள் முன்னது பின்னதாகவுமிருக்கின்றன. இறுதியிற் றெண்டை நாட்டெல்லையைக் குறிக்கும் இரண்டொரு பாடல்களுமிருக்கின்றன. எழுத் துப் பிழையுள.

No. 2101. நல்லாப்பிள்ளை பாரதம் உரையுடன்.

NALLĀPPIḶḶAI BHĀRATAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 18 × 1¼ inches. Pages, 1054. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

The text in this work is the same as is found in MS. No. 239 of the Triennial Catalogue of the Tamil MSS. in this Library. This work contains a brief gloss also.

By Nallāppiḷḷai.

Beginning :

நல்லாப்பிள்ளை மகாபாரதம்.

நீடாழி யுலகத்து மறைநா லொடைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாகமாமேரு வெற்பாக வங்கூரெழுத்தாணி தன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ. (க)

(உ-ரை).—

என்றது, நெடிய கடல்சூழ்ந்த பூலோகத்திலே நாலு வேதங்க ளுடனே இது ஐந்தாம் வேதமென்று நிலைநிற்கும்படியாக வாடாத தவ மகிமையுள்ள பிரம ருஷிகளுக்கெல்லாம் இராசாவாகிய வேதவியாச மகா ரிஷியானவர் **மகாபாரதம்** வடமொழியினாலே சொல்லுகிற நாளையிலே கையேடாக ஆதிமகாமேருவைப் பிடித்துக்கொண்டு கூர்மை பொருந்திய எழுத்தாணியாகத் தம்முடைய ஒரு கொம்பைப் பிடித்துக்கொண்டு எழுதிய மகாகணபதியைத் தண்டம்பண்ணி இந்தப் **பாரதகதையை** அன்பாகச் சொல்லுகிறேன் விக்கினேசுவர மூர்த்தியைத் தோத்திரஞ்செய்து வணங்கு வாம் என்றவாறு : (க)

உலக மாக்கலுங் காக்கலு முண்மையால்
இலக நீக்கலு மென்றுந் தவிர்கலார்
சலச வாண்மலர்த் தாள்களெந் நெஞ்சினும்
நிலவு சென்னியினும் நிலையாமரோ. (உ)

(உ-ரை).—

என்றது உலகங்களை உண்டுபண்ணி (வையிற்றி) [அதி]லே சகல சீவாத் மாக்களையும் உண்டுபண்ணுகிற தொழிலும், அந்தச் சகல சீவராசிகளையும் இரட்சிக்கிற தொழிலும், சகலலோகத்தையும் அதிலுள்ள சீவராசிகளையுஞ்

சங்காரஞ் செய்யுகிற தொழிலும் இந்த மூன்று தொழிலும் எத்தேச காலமும் செய்து நடத்திவரப்பட்ட கர்த்தாக்களாகிய பிரமன், விட்டுணு, உருத்திரன் என்று சொல்லப்பட்ட மும்மூர்த்திகளுடைய சிவந்த தாமரை மலர் போன்றிருக்கும் பாதாரவிந்தங்களை அடியேனுடைய நெஞ்சிலேயுந்தியானம் பண்ணிச் சிரசினாலேயுந் தண்டம் பண்ணிப் பிரார்த்தித்து **இந்த மகாபாரத கதையைத்** தமிழிலே சொல்லத் தொடங்கினேன் என்றவாறு. (உ)

• • • • • •

அவையடக்கம் :—

மண்ணிலாரண நிகரென வியாதனார்வகுத்த
வெண்ணிலா நெடுங்காதையை யானறிந்தியம்பல்
விண்ணிலாதவன் விளங்குநீ டெல்லையையூமன்
கண்ணிலாதவன் காட்டலுங் காண்டலுங் கடுக்கும (ங)

(உ-ரை).—என்பது பின்னையும் அவையடக்கஞ் சொல்லுகிறார் :

பூலோகத்திலே வேதத்துக்குச் சமானமாக வேதவியாச மகாருஷி வகுத்துச் சொல்லிய எண்ணிக்கையில்லாத மகாபாரதமாகிய பெருங் கதையை அறிவில்லாத நரசன்மம் (எடுத்த) அடியேன் தூக்கிச் சொல்வது எத்தன்மையதெனில் : ஆகாயத்திலே உலாவப்பட்ட சூரியபகவானிருக்கிற நிதானமும் நாழிகை திட்டமும் ஊமையானவன் கண்ணில்லாதவனுக்குக் காட்டுகிறவத்தைப் பார்த்து நகைப்பது போலவும், கண்ணில்லாதவன் ஊமையன் குளறுகிற நிதானந் தெரியாமற் கலங்குகிறவற்றையும் பார்த்துச் சகலமானபேரும் நகைப்பது போலவும் அடியேன் இந்தக் கதையைத் தமிழிலே சொல்லத் துணிந்தேன் என்றவாறு. (உ)

* * * * * *

* * * * * *

சம்பவச் சருக்கம் இறுதி வேறு :

எயில்நலம்புனை கோபுரமாபுரத் தெழுதுமாளிகைதோறும்
வெயில் நிலாவுமிழ் கனகநீள்வீதியில் விலாசமுற்றிடுநாளிற்
பயினன்மேல் வருகல்லெனச் செறிந்த மேய்ப்படவளன்மைந்தனு மொத்தாள்]
வயினதேயனைக் காத்திரவேயரை மன்னன்மைந்தருமொத்தார். (மசுா)

(உ-ரை).—

என்றது யாதவ குலத்தவர் எல்லாம் வந்து போனபிறகு, கோட்டை மதிலும் நலமாகச் செய்யப்பட்ட மாளிகை உப்பரிகை மேடைமேலும் சூரிய பிரகாசமும், சந்திர பிரகாசமும் எரிக்கப்பட்ட யகலமான நீண்ட வீதிகளிலே சிறு தேர் உருட்டி விளையாடுகிற நாளையிலே ஒலியுடனே மேலே வரப்பட்ட பருவதம்போலே யிருக்கப்பட்ட சரீரம் படைத்த வாயு பகவானுடைய புத்திரன் வந்து, கருடபகவானுக்கு ஒக்குமென்று சொல்ல, ஒத்து வளர்ந்தான். காற்றை இறையாகக் கொள்ளப்பட்ட பாம்புகளுக்குச் சமானஞ் சொல்லத் தக்கதாகத் திரதராஷ்டிர மகாராசன் புத்திரர்களும் ஒத்து வளர்ந்திருக்கிறார்கள். என்றவாறு. (மசுா)

சம்பவச் சருக்கம் முற்றும் : ஆகச் சருக்கங்கள் உ௰-க்குச்
செய்யுள் "தூ௱௫௰"

ஸ்ரீ கிருஷ்ணர் சகாயம்.

பண்ட சோழநல்லூரிலிருக்கும் வாத்தியார் கோமான் ஆதிபருவம் சம்ப வச் சருக்கம்: பாயிரம் முதற்கொண்டு சம்பவச் சருக்கம் மட்டுக்கும் சருக்கம் (உ௰) எழுதினது முற்றும்.

ஸ்ரீராமஜெயம்.

(கு-பு).—

இது மூவருடக் காடலாக்கில் 239-வது நம்பரில் வந்துள்ளதே. அங்கு மூலமாத்திரம் உள்ளது. இப்பிரதியிலே ஆதி தொடங்கிச் சம்பவச் சருக்கம் வரையில் உள்ள பகுதி ஒரு பொழிப்புரையுடன் உள்ளது. உரையாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. ஏடுகள் மிகவும் சிதைந்திருக்கின்றன.

No. 2102. வில்லிபுத்தூரார் மகாபாரதம் கிருஷ்ணன்தூதுச் சருக்கம் உரையுடன்.

VILLIPUTTŪRĀR MAHĀBHĀRATAM KIRUSṆANDŪTUC-CARUKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16¾×1¼ inches. Pages, 403. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

The text found in this work is the same as that found in MS. No. 529 of the Descriptive Catalogue of Tamil MSS. in this Library but the brief gloss in this work is slightly differnt from that found in the other work.

Beginning :

கிருஷ்ணன் தூதுப் படலம் உரை.

நீடாழியுலகத்தில் மறைநாலோடைந்து நிலைநிற்கவே
வாடாததவவாய்மை தவறாதமுனிராசன் மகாபாரதஞ்சொன்ன நாள்]
ஏடாகமகாமேரு வெற்பாகவெங் கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும் பிரானைப்பணிந்தன்பு கூர்வாமரோ (க)

(உ-ரை).—என்பது

நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்திலே வேதம் நான்குடனே 'ஐந் தாம் வேதம்' என்னப்படாநின்ற வேதவியாசரிஷி மகாபாரத கதையைச் சொன்ன நாளில் மகாமேருமலை . . . . . . யாகவும், தம்முடைய வெள்ளிக்கொம்பே எழுத்தாணியாகவும் பிடித்து எழுதின விக்கினேசுவர மூர்த்தியின் பாத மலரைப் போற்றிச் செய்குவாம் என்ற வாறு. (க)

* * * * * *
* * * * * *

நூல் :—

பேர்படைத்த விசயனுடன் மும்மை நெடும்பிறவியினும் பிரியானுகிச் சீர் படைத்த கேண்மையினுற்றேரூர்தற்கிசைந் தருளுஞ்செங்கண்மாலேப், பார் படைத்த சுயோதனற்குப்படையெடேன மரிலெனப்பணித்த கோவைக்கார் படைத்த நிறத்தோனேக் கைதொழுவார் பிறவாழிக், கரைகண்டாரே. (க)

உ-ரை :—என்பது, பூலோகமெங்கும் சௌரியம் பராக்கிரமங்களிலும் வில்வித்தையிலும் கீர்த்தியிலும் பெயர்பெற்ற அர்ச்சுன மகாராசனுடனே மூன்று பிறப்பும் பிரியாதபடி இரண்யவதை நிமித்தமாகக் குறித்த தூணி லே நரசிங்கமூர்த்தியாக வெழுந்தருளிவந்தபோது 'பிரஹ்லாதன்' என் னும் பெயராக வந்ததும், இராவணகும்பகர்ணன் நிமித்தமாக இராமாவ தாரமாக வந்தபோது இராவணன் தம்பி விபீஷணனுகவும், பூமி பாரந்தீர்க்க ஸ்ரீகிருஷ்ணவதாரமாக வந்தபொழுது அர்ச்சுனனுக வந்ததும் இப்படி மூன்று அவத்தாரத்துக்கும் பிரியாத தோழனுய்ப் பிரியாத காரணத்தி னுலே அர்ச்சுன ராஜனுக்குத் தேர்ப்பாகனுக எழுந்தருளிய ஸ்ரீகிருஷ்ண நாராயண சுவாமியைத் துர்யோதனன் வந்து தர்மரது கூட்டத்துடனே கூடி யுத்தத்திற்கு வரப்படாது என்று வேண்டிக் கேட்டபோது அந்தப் பாரத முனையிலே தன்கையினுல் ஆயுதம் எடுப்பதில்லேயென்று உறுதி யாய்ச் சொன்ன நாராயணஸ்வாமியைக் கார்மேக வர்ணனேக் கைதொழுது பணிந்து போற்றி செய்தபெயர் பிறப் பென்னுங்கடலே நீந்தி கரைகண் டிருப்பார் என்றவாறு. (க)

* * * * * *

செஞ்சொன்முனி சஞ்சயனுக்கியா முரைத்த கருமமுமுன் சென்ற காலே
யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்தமருமமு நீயறிதியன்
றேநஞ்சுதனே மிகவருந்தி நன்மருந்து மந்திரமும் விரைந்துநாடா
தெஞ்சினர் தங்களேப்போல விருக்குமதோ யார்மனத்துமிருக்குஞ் சோதி.

(உ-ரை) :—என்பது, செவ்வையான சொல்லுப்போலே சஞ்சயமாமுனிக்கு நான் சொன்ன வசனமும் கிருஷ்ண நாராயணரே ! தேவரீர் திருவுளமே யறியுமே. விடத்தை வெகுவாய்ப் பட்சித்து அது தீர்தற்கு நன்மருந் தும் மந்திரமும் விசாரியாமல் விருதாவிலே சீவனேவிட்ட பெயர்போலே நாங்கள் போகாதபடிக்கு ஒரு புத்தி அடியேங்களுக்குப் போதிக்க வேண் டும். சர்வ ஜீவதயாபரனுன சுவாமி ! சர்வலோகத்தார் மனதிலுமிருந்து விளேயாடுகிற சோதிமூர்த்தியே ! என்று சொல்லி பின்னேயுஞ் சொல்லு கிருர் தர்ம புத்திர மகாராசன் என்றவாறு. (ரு)

* * * * * *
* * * * *
*

End :

தூது போயுரகத்துவசனுேடுறுதி சொன்னது மறுத்தவன் சினந்து
மோதுபோர் புரியத்துணிந்ததும் விதுரன்மூரிவில்லிறுத்ததுங் கங்குற்
போதுபோர் வஞ்சமர் விளேத்துங் கண்ணன் புரந்தரற் கிசைந் ததும்பெற்ற
மாதுபோய் வரங்கள்பெற்றவை யொழியமற்றெல்லாம் மைத் துனர்க்குறைத்தார் (உசுச)

உ-ரை :—என்பது, நாராயணசுவாமி எழுந்தருளின பிரசங்கங் கேட்ட வுடனே தர்மபுத்திராதியர்ராசக்கூட்டத்துடனே எதிர் கொண்டுவந்து அனேக வணக்கமுஞ்செய்து உபப்லாவ்வியம் நகரமோறவழைத்துப் போய்த் தேவரீர் அஸ்தினுபுரத்துக் கெழுந்தருளித் துரியோதனனிடத்திற் போனதும் அவன் மறுத்துச் சொன்னதும் திருவுளம் அருளவேண்டும் என்று கேட்டவுடனே நாராயணசுவாமி யருளுகிறார் :—தாம் தூதுபோய் துரியோதனனுடனே தாயாதி பட்சமான பாதி நாடு கேட்டதும், அவன் மறுத்ததும், உயுத்தஞ்செய்ய சம்மதித்ததும், மறுபடிபோய்க் குழி தோண்டுவித்து வஞ்சகமாய்ச் சிங்காதனஞ் சோடித்ததும், மறுபடி தேவேந் திரனை வரவழைத்துக் கர்ணனிடத்திற் கவசகுண்டலங்களை வாங்கினதும், குந்திதேவியம்மனை யனுப்பிக் கர்ணனிடத்தில் வரம் வாங்கச்சொன்னதும், இன்னம் இன்னமும் நடந்த வர்த்தமான மெல்லாவற்றையும் விவரமாய்ப் பாண்டவர்களுக்கு அருளிச்செய்தா ரென்றவாறு. (ரு௪)

* * * * * * (உசுச)

மாதிரிமங்கலம் அய்யன் செட்டியார் அவர்கள் செல்வக் குமாரன் சுவாமிநாதன் சிரஞ்சீவியாயிருந்து சகல தனதான்ய சம்பத்துடனே எந்நாளும் வாழ்ந்து கொண்டிருக்கவும் அவர்கள் கிளை கோத்திரத்துடனே சகல பாக்கியங்களுடனே சந்தான சௌபாக்கியத்துடனே தீர்க்காயுசுடனே நோவு நொடி யில்லாமல் ஸ்ரீரங்கநாதஸ்வாமி கிருபையினாலேயும் திருப்பதி வெங் கடாசலபதி கிருபையினாலேயும் ஸ்ரீகோபால கிருஷ்ணநாராயணசுவாமி கிருபையினாலேயும் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகன் கோடிசூர்ய பிரகாசன் கிருபையினாலேயும் தூதுப்படலம் படித்து எந்நாளும் சகல ஐசு வர்யவானாய் வாழ்ந்திருக்கவேண்டிய சுவாமிநாதன் தூதுப்படலம் படித்த தென்றவாறு.

(கு-பு)—

இந்நூல், வில்லிபுத்தூரார் மகாபாரதத்து ஐந்தாம் பருவமாய் உத்தி யோக பருவத்தில் உள்ள "கிருஷ்ணன்தூதுச் சருக்கம்" என்ற பகுதியா கும் ; இப்பிரதியில் இச்சருக்கம் மாத்திரம் ஒரு பொழிப்புரையுடன் முற்றும் இருக்கிறது. இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 529 ஆம் நம்பரில் வந்துள்ள பொழிப்புரையினும் வசன நடையில் ஒரு சிறுது வேறானது. இதன் ஏடு கள் மிகவுஞ் சிதைந்து முறிந்துமிருக்கின்றன. உரை நடையத்துணைநன்று யில்லை. முதலில் இரண்டு ஏடுகள் மாறிக் கோக்கப்பட்டிருக்கின்றன. இறுதி யில் அப்பிரதியில் இல்லாத பாடல்கள் உரையுடன் எழுதப்பட்டுள்ளன.

No. 2103. வில்லிபுத்தூரார் பாரதம் (ஆதிபர்வம்) உரையுடன்.

VILLIPUTTŪRĀR BHARATAM (ĀDIPARVAM) WITH COMMENTARY.

Substance, plam-leaf. Size, 15 × 1¼ inches. Pages, 352, Lines, 7 on a page, Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 527, T. D. C., Vol. II.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 527 ஆவது நம்பரில் வந்துள்ளதே. ஆயினும் அங்கு மூலமாத்திரம் உள்ளது. இங்கு இந்நூலின் ஆதிபர்வத்தில் ஆதிதொடங்கிச் சம்பவச்சுருக்கம் (ாயக) (111) ஆவது பாடல் வரையிலும் ஒரு பொழிப்புரையுடன் இருக்கிறது. வசனநடை சாதாரணமானது. எழுத்துப்பிழைகள் மிகவுள்ளன. ஏடுகள் மிகவுஞ் சிதைந்திருக்கின்றன.

No. 2104. வில்லிபுத்தூரார் பாரதம் (வீட்டுமபர்வம்) பொழிப்புரையுடன்.

VILLIPUTTŪRAR BHĀRATAM (BHĪṢMAPARVAM) WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 416. Lines, 6., on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 527 T. D. C., Vol. II.

(கு-பு)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 527 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில்வீட்டும பர்வத்தில் ஐந்தாம் போர்ச்சருக்கம் (அ) எட்டாவது பாடல் தொடங்கித் துரோணபர்வத்தில் பதின்மூன்றும் போர்ச்சருக்கம் (சுயி) அறுபதாவது பாடல் வரையிலும் உள்ள பகுதி, ஒரு பொழிப்புரையுடன் உள்ளது. உரையாசிரியர் இன்னாரென விளங்கவில்லை. உரை நடையும் அத்துணை நன்றாயில்லை. எழுத்துப் பிழைகள் மலிந்திருக்கின்றன. இதன் ஏடுகள் படித்தற்கியலாதவண்ணம் அத்துணை சில முறிந்து சிதைந்திருக்கின்றன. முன்னும் பின்னும் சில ஏடுகள் அடியோடு முறிந்துளவாதலின் அவைகள் கணக்கிடப்பெறவில்லை.

No. 2105. ஸ்ரீ பாகவதச் செய்யுட்டிரட்டு.

ŚRĪBHĀGAVATAC CEYYUṬṬIRAṬṬU.

Pages, 12. Lines, on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. 355, T. D. C., Vol. I.

Incomplete.

A collection of some stanzas from "Śribhāgavatam" by Āriyappa Pulavar in Tamil.

Beginning :

(க) (1) தாமரைத் தவிசுறைதரு சதுர்மறைக்கிழவன்
நேமியுயத்தலானை மிசமௌனநிலநிகழ்த்தும்
நாம முற்ற நல்வனத்திடை நவில்சவுனகரே
யா முதற்றவர் சத்திர வேள்வியாற்றினரால். (ரு)

(உ) (2) உலகெலாந் தனைதகல்வயிற்றெரு புடைகிடப்ப
கலையரும்பிய கதிரிளமதி யெழில்கவற்றும்
திலகவாணுதற் றேவகி திருவயிற்று தித்தோன்
குலவுமாக்கதை கூறுவா யென்றுகூறினரால். (சு)

(ங) (3) முத்தரானவர் பிரம மொன்றெனத்தனி மொழிவார்
வித்தை சேர்தரு முனத்தினோர் விராட்டினைநயப்பார்
சுத்தரானவர் பரமவான்மா வெனச் சொல்வார்
பத்தியோர் பகவானெனவே நனிபகர்வார். (௰௮)

(ச) (4) அந்தரத்துறை யமரரு மசுரருங்கடையும்
மந்திரத்தினை மறுகு மவ்வாரிதி மருவிச்
சுந்தரப் பெருங்கமடமாய் முதுகினிற்சுமந்தான்
கந்தரத்தினிற் கவுத்துவங் கவினியகண்ணன். (உகூ)

* * * * *

End:

(சுங) (64) அயர் மகத்தினிலரசநீ படுத்திடு மறிகள்
செயிர் தழைத்துக்கண்டீயுக வரவுபார்த்திருக்கும்
பயில் விசும்பு செல்காலையில் வெருவரப்பாய்ந்து
வயிற் பொழிந்திடு மிரும்புசெய் மருப்பினின்மாதோ.

* * * * *

(கு-பு.)—

இந்நூல் ஆரியப்பப்புலவர் இயற்றிய பாகவதத்தினின்றும் ஆங்காங்குப் பொறுக்கியெடுத்துத் திரட்டிவைத்த தொரு சிறுநூலாகும். இவை அச்சிடப்பட்ட பிரதிக்குள் காணப்படுகின்றன. இங்கு ஈற்றிற்கொடுக்கப்பெற்ற செய்யுள் எண்கள், அச்சிட்டபிரதியின் எண்களாகும் ; முதலிற் கொடுக்கப்பெற்றவை, இப்பிரதியின் தொடர்ச்சியெண் களாம்.

ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன. பிழைகள் உள.

No. 2106. அஷ்டாதச புராணாதி விஷய விவரணக்குறிப்பு:

AṢṬĀDAŚA PURĀṆĀDI VIṢAYA VIVARAṆAKKUṚIPPU.

Pages. 47. Lines, 20 on a page.

Begins on fol. 65-*a* of the MS. described under No. D. 1180.

Complete.

Same work as that described under No. 535 of Tamil Descriptive Catalogue, Vol. II.

(கு-பு.)

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 535 ஆம் நம்பரில் வந்துள்ளதே. ஷை நம்பர் பிரதியைப்பார்த்து எழுதிவைத்ததெனத் தோன்றுகிறது. எழுத்துப் பிழைகள் மிகவும் உள.

No. 2107. வாயுசங்கிதை.

VĀYUSAṄGITAI.

Substance, palm-leaf. Size, 13⅞ × 1¼ inches. Pages, 293. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 593-a of the Tamil Triennial Catalguoe, Vol. V.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கில் 535-a நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் 29 ஆம் அத்யாயம் வரையிலுமே யிருக்கிறது. எழுத்துப்பிழைகளிருக்கின்றன. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 2108. காசிகண்டம்.

KĀŚIKHAṆḌAM.

Pages, 4. Lines, 5 on a page.

Begins on fol. 162-*a* of the MS. described under No. 802, T.D.C., Vol. II.

Five stanzas only.

Same work as that described under No. 565, T. D. C., Vol. II.

கு-பு.—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 565 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. ஐந்துபாடல்களேயுள.

No. 2109. செவ்வந்திப் புராணப் பொருளடக்கம்.

ŚEVVANDIP PURĀṆAP PORUḶAḌAKKAM.

Pages, 68. Lines, 28 on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. D. 462.

Complete.

Contains a summary of the contents of *Sevvandip Purāṇam* or the *Purāṇam* about Uṟaiyūr near Trichinopoly, and an account of certain *Cōḻa* Kings. Purports to be written by Vēdanāyaka Vēdāgama Śirōmaṇi, at the instance of Col. Mackenzie.

Beginning :

செவ்வந்திப் புராணத்தின் பொருளடக்கம்

முகவுரை :—

கனம் பொருந்திய கர்னெல் காலன் மெகென்ஸிதுரையவர்கள் வேதநாயக வேதாகம சிரோமணியாருக்குக் கொடுத்த கட்டளைப்படியே ஒவ்வொரு தல புராணத்தின் (பொருள்) அடக்கத்தையும், விசேடமாக அதிலிருக்கப்பட்ட ராசாக்களுடைய சரித்திரத்தையும் திட்டமாயெடுத்தெழுத வேண்டியது கிரமமானபடியினாலே செவ்வந்திப்புராணம் அல்லது திரிசிராமலைத் தல

புராணத்தின் (உட்பொரு)ளடக்கத்தையும் எடுத்து இவ்விடத்தில் எழுத வேண்டியது ஆயிற்று.

பின்னையும் சோழன் ஆண்ட உறையூர் மண்மாரி பேய்ந்தழிந்து போயிற்றென்று பலபேர்கள் வாயினாலே சொல்லக் கேட்கிறதல்லாமல் இந்தப்புத்தகத்திலேயும் அதைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறபடியினாலே அதின் பசுமையை அதிக திட்டமாய் அறியும்படியாக இந்தப் புத்தகத்தை முற்றிலும் சோதித்துப் பிரதானமானவைகளைத் தெரிந்தெடுத்து இவ்விடத்தில் எழுத வேண்டியதாயிற்று. (க) முதலாவது : இந்தப்புத்தகத்திலே ஐந்து சோழர்கள் காணப்படுகிறார்கள். அவர்கள் யார் என்றால் :—(1) சனநாத சோழன். (2) இராச சிரோமணி சோழன். (3) சூரவாதித்த சோழன். (4) வன்பராந்தக சோழன். (5) கரிகாற் சோழன். முந்தின சனநாத சோழன் வடக்கேயிருந்து இராச்சியபாரம் செய்தானும். அவன், உயிரோடிருக்கிறபொழுதே தானே தன்மகனும் இராச சிரோமணி சோழனுக்குப் பட்டங்கட்டிப்போட்டுத் தவசுக்குப் போய்விட்டான். இந்த இராசசிரோமணி சோழன் சிறிதுநாள் வடக்கேதானேயிருந்து இராச்சியபாரம் பண்ணிப் போட்டுத் தன் மகன் சூரவாதித்தனோடேகூடத் தனது சேனைகளையுங் கூட்டிக் கொண்டு இத்தேயத்திற்கு வந்து காவேரியாறோடிய தலங்கள்எங்கும் இருக்கிற சுவாமிகளைத் தரிசனம்பண்ணித் திருப்பணிகள் கட்டினானும். இவன் மகனாகிய சூரவாதித்தன், உறையூர் பட்டணத்தைக்கட்டி அதிலே குடியிருந்தான். அவன் முதல் (சசு) சோழர்மட்டு உறையூரிலே தர்ம நீதியோடே இருந்து இராச்சியபாரம் பண்ணினார்களாம். இங்கே, நாலாமவனாகச் சொல்லப்பட்டவன் பராந்தக சோழன் ஐம்பதாந் தலைமுறையிலே யுண்டானவனும் இவன் செய்த குற்றத்தினாலே உறையூர் மண்மாறி பேய்ந்து அழிந்து போயிற்றாம். . . . . ஐந்தாவதிற் சொல்லப்பட்டவன் பராந்தக சோழன் மகன் கரிகாற் சோழன் பட்டத்துக்கு வந்து (மீட்டும்) உறையூரைக் கட்டியாண்டான் என்று இவை முதலான செய்திகளெல்லாம் இந்தப் புத்தகத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. . . . .

செவ்வந்திப்புராணம் பொருளடக்கம்.

செவ்வந்திப்புராணம்' என்று சொல்லப்பட்டது திருச்சிராப்பள்ளிதலபுராணம் ஆம் : இதற்கு இப்பெயர்வந்தது என்னென்றால் :—செவ்வந்திப்பூ நிமித்தம் சோழன் ஆண்ட உறையூர் அழிந்துபோனபடியினாலும், அத்தலத்துச்சுவாமிக்குச் 'செவ்வந்தீசுவரர்' என்கிற பெயர் இருந்ததனாலும் இதற்குச் ' செவ்வந்திப்புராணம் ' என்கிற பெயர் ஆயிற்று. . . .

. . . .

End.

மஉ தாயானவள் சருக்கம் :—

இதிலே காவேரிக்கு வடபாரிசுவத்திலே வித்துவான்களாலே புகழப்பட்டதும், ... ' காவிரிப்பூம்பட்டிணம் ' என வொருபட்டிணமிருந்தது. இதிலே எயிற்பகைநாயனார் எனப்பட்டவர்.

* * * * * *

திரிசிராமலைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். இப்படியிருக்கிறபோது செட்டிப்பெண்ணானவள் புருஷன் உத்திரவின்படிக்குத் திரிசிராமலைநாதனைத் தினம்போய்ப் பூசைசெய்து வருவாள். . . . . . . செட்டிப்பெண் வயிற்றிலே கர்ப்பம் உண்டாயிற்று. இந்தச்செய்திக்குக் காவிரிப்பூம்பட்டினத்திலிருக்கும் தாய்க்கெழுதியனுப்பினார்கள். அவளும் மகளுக்குத்தேவையான சம்பாரங்கள் சேகரித்துக்கொண்டு வரும்போது காவேரியாற்றிலே வெள்ளம்வந்து பெருகினபடியினாலே வரக்கூடாமல் தடைப்பட்டிருந்தாள். அந்தவேளையிலே பரமசிவனாகப்பட்டவர் அந்தத்தாயைப்போலே யுருவம் மாற்றிவந்து இந்தச்செட்டிபபெண்ணைத் தன் மகளென்று சொல்லிக்கட்டி முத்தமிட்டுக் கூடவே சிலநாளிருந்து பிள்ளைப்பேறும் பார்த்துக்கொண்டிருக்கிறபோது காவேரி தண்ணீர் வடிந்ததும் சுபாவமாய்ப்பெற்ற தாயானவள் பார்க்கவந்தாள். இந்த விரண்டு கிழவிகளும் ஒருமுகம் போலிருந்தபடியினாலே எல்லாரும் அதிசயப்பட்டுக்கொண்டிருக்கிறபோது சிவனாகவந்த கிழவி மறைந்துபோனார். அப்போது எல்லாரும் ஒருமித்து இப்படிப்பிள்ளைப்பேறு பார்க்கவந்த சிவனைக்கொண்டாடினார்கள் என்றிவை முதலான செய்திகள் எல்லாம் இந்தப் பன்னிரண்டாஞ் சருக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன.

முற்றும்.

(கு.பு.)—

இந்நூல் 'செவ்வந்திப்புராணம்' என்ற திருச்சிராப்பள்ளி (திரிசிராமலை) த்தல புராணத்தில் உள்ளடங்கிய பொருள்கள் எல்லாவற்றையும் விரிவாக வெடுத்துணர்த்துவது: இது, மெகென்ஸி துறையவர்கள் கட்டளைப்படி 'வேதநாயக வேதாகமசிரோமணி' என்பவரால் இயற்றப்பட்டதென்று இதன் முகவுரையின் முதற்சொற்றொடர்களால் அறியக்கிடக்கிறது. இதில் பல்வேறு சோழவரசர்களுடைய சரித்திரங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே இது செவ்வந்திப்புராணத்தின் விடயத்தையாராய்கின்றார்க்குப் பெருந்துணையாகவிருக்கும். வசனநடையத்துணைச்சிறந்ததன்று. பிழைகள் மிகுந்துள்ளன. இன்னும் இவர் வேறு சில தல புராணங்களுக்கும் பொருளடக்கம் எழுதியிருப்பதாகவுந்தெரிகிறது.

No. 2110. திருவிளையாடற் புராணச் செய்யுட்டிரட்டு.

TIRUVIḶAIYĀḌAṞ PURĀṆAC CEEYYUṬṬIRṬṬU.

Pages, 30. Lines, 9 on a page.

Begins on fol. 14-a of the MS. described under No. D. 355.

Incomplete.

Same work as that described under No. 605.

A collection of some stanzas from "Tiruviḷaiyāḍaṟpurāṇam" by Parañjōtimunivar.

(கு.பு.)—

இந்நூல் பரஞ்சோதிமுனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணத்திலிருந்து ஒவ்வொரு படலத்தினின்றும் மிகவருமையான இரண்டு மூன்று பாடல்களை

யெடுத்தை ஒருங்கு திரட்டிவைத்ததொரு சிறு நூலாகும். பூர்ணமான பிரதி, டிஸ்கிருப்டிவ் காட லாக் 605 ஆம் நம்பரில் வந்துள்ளது. இதில் ஆதி தொடங்கிபன்றிக்குட்டிக்கு முலேகொடுத்த படலம், வரையிலான பகுதிகளில் உள்ள பாடல்கள் திரட்டிவைக்கப்பட்டுள்ளன. மிகுதிக்கில்லே. பிழையுள்.

No. 2111. சித்திரகூட மகத்துவம்.

CITTIRAKŪṬA MAHATTUVAM.

Pages, 37. Lines, 21 on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. D. 404.

Complete.

On the religious importance of Cittrakūṭam, as Chidambaram is called by Srīvaisṇavas.

By Tirumalaikavi (Sāttadava caste.)

Beginning.

சிதம்பர மகாத்மியம் :

சிதம்பர மகத்துவமாவது : சித்திரகூட மகாத்மியத்தினுடைய கதை. சித்திரகூட பர்வதமாவது என்னவென்றால் சிற்சபை. சித்து - என்றால் ஞானம். அம்பரம் என்றால் ஆகாசம். சகலவேத சாத்திரங்களாலேயும் நிர்ணயிக்கப்பட்ட சபையிலே ஒருவனாலேயும் அறியப்படாத அம்பலவர் நர்த்தன ஸ்தானத்துக்குப் பெயர். சிற்சபை. தமிழில் சித்தம்பலம் : வைஷ்ணவம்- சித்திரகூடம். * * * * * இப்படி வைஷ்ணவ மதத்தில் திருமலைகவி என்கிற சாத்தாதவன் தானே சுவயமாய்ச் சிறிது புராணாந்திர கதைகளை யனுசரித்து தன்னுடைய மதத்தினாலே உண்டாக்கின சித்திரகூடமகாத்மியத்தின் கதை. புராணார்த்தபிரகாரம் என்னவென்றால் பதினெட்டு புராணம் வேதசாஸ்திரம் முதலாகிய சாஸ்திரங்கள் சொல்லாநின்ற ஸ்ரீ வேத வியாசபகவான் தமக்கு முக்கிய சிஷ்யனாகிய சைமினி மஹாமுனிக்கு அஷ்டாதச புராணத்தில் பவிஷ்யத் புராணத்தினுடைய கதையில் ஸ்ரீ சித்திரகூடத்தில் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகனாகிய ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமியுடைய மகிமையும். * * * *

End.

இந்தப்படிக்கு இவ்வியாசர் சொன்ன புண்ய கதையை சைமினிமாமுனிவர் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு இந்த ஸ்தலத்திலேவந்து வெகுநாள் வாசம் பண்ணிக்கொண்டு கோவிந்தராஜ சுவாமியினுடைய தரிசனம் பண்ணிக்கொண்டு தவசுபண்ணினார். இந்தப்படிக்குச் சித்திரகூட மகாத்மியம் என்று அறியவேண்டியது. சித்திரகூடம் கோவிந்தராச ஸ்தலத்தார் எழுதிக்கொடுத்த அட்டவணைக்கு நகல் ரக்தாக்ஷிளு ஆவணிமீ ௨௨ என்னவென்றால் பல்லவ மகாராஜா சுவாமிக்குச் சகல விபவங்களும் நடப்பிவித்துக்கொண்டு வந்தார்கள். கிரிமிகண்ட சோழன் நாளிலே சிறிதுநாள் வரைக்கும் நடந்துகொண்டுவந்தது. அந்தக் கிரிமிகண்ட சோழன் எங்கள் விஷ்ணு ஸ்தலத்தைக் கிலம்பண்ணிப் போட்டான். அதன் பின்னர் கோவிந்தராஜசுவாமி கீழைத்திருப்பதியிலே போயிருந்தார். அப்பால் சிறிது நாளைக்கு

ப்பிறகு அச்சுதராயர் விசாரணைசெய்து ஈனழத்திருப்பதியிலே யிருந்த கோவிந்தராஜ சுவாமியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து * * * *
* * * * * *

(கு - பு).—

இந்நூல், வைஷ்ணவ மதத்தைச்சார்ந்ததாய்ச் 'சித்திரகூடம்' என வழங்குஞ் சிதம்பரத்தின் மான்மியத்தை யுணர்த்துவது. திருமலைகவி யென்ற ஒரு சாத்தாதவரால இயற்றப்பெற்றதென நூலாரம்பத்தால் அறியக்கிடக்கிறது. முற்றும் உள்ளது. பிழையுளது.

No. 2112. சித்திரகூட மாகாத்மியம்.
CITTIRAKŪṬA MĀHĀTMIYAM.

Pages, 30. Lines, 30 on a page.

Begins on fol. 1-*a* of the MS. described under No. D. 403.

Complete.

Same work as the above.

(கு -) —

இந்நூல் முன்பிரதியில் வந்துள்ளதே. அதில் உள்ளவரையிலும் இதிலும் உள்ளது. ஏடுகள் பல சிதைந்திருப்பதோடு எழுத்துகள் படித்தற் கியலாவண்ணம் அத்துணை மாசுற்றிருக்கின்றன. பிழைகள் பலவுள்ளன. இடையிற் சில ஏடுகள் தலைகீழாகச் சேர்த்துவைக்கப்பட்டுள்ளன.

No. 2113. ஸ்ரீரங்க மகத்துவம்.
ŚRIRAṄGAMAHATTUVAM.

Pages, 106. Lines, 7 on a page.

Begins on fol. 1 of the MS. described under No. D. 1740, T. D. C., Vol. IV.

Complete.

Same work as that described under No. D. 579 Tamil Descriptive Catalogue Vol. II.

(கு -).—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 579 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பதினேரு அத்தியாயங்களும் உள. இது டி நம்பர் பிரதியினும் எழுத்து தெளிவாகவுள்ளது. அனேக வேடுகள் பெரிதுஞ் சிதைந்தும் முறிந்தும் இருக்கின்றன. எழுத்துப்பிழையுள்ளது.

No. 2114. பத்மாசல மான்மியம்.
PADMĀCALA MĀNMIYAM.

Pages, 153. Lines, 21 on a page.

இந்நூல் அத்வைதமதத்தைச் சார்ந்ததாய். வேதாந்த ஞானம் உணர்த்துவது. வசனநடையால் ஆகியது. இது பிரகரணோத்பத்தி திருக்திருச்ய விவேகம்' முதலிய பகுதிகளாளி விவேகஞானத்தை யுண்டாக்கி அவித்

தியை நீக்கி " விதேஹகைவல்லியம் " என்னும் முக்தியை யடையுமாற்றை விளக்கிப் போருகிறது. இதை இயற்றியவர் இன்னார் என விளங்கவில்லை. இந்நூற்பெயர் காரணப்பெயராய் அமைந்ததற்கு ஆதாரம் நூலாம்பரத்துள்ள தொடர் மொழியாகும். எழுத்துப் பிழைகள் மலிந்திருப்பினும் நுவலும் விஷயம் நன்றாயிருக்கிறது. ஏடுகள் மிகவும் சிதைந்துள.

No. 2145. மாயாவாதி மதம்.

MĀYĀVĀDI MATAM.

Pages, 10. Lines, 7 on a page.

Begins on fol. 44—a of the MS. described under No. D. 1185.

Incomplete.

A work relating to the "Mēyāvāda" or "Advaita" " school of the "Vēdanta" of philosophy.

Beginning :

மாயாவாதி மதம் உரையுடன்.

நவிற்றிய நிரையில வித்தையினேனுரை. என்பது, முன்சொல்லப் பட்ட வொழுங்கில் மாயா உபாதிகளினாலே வாதிக்கப்பட்டுப் பரப்பிரம்மம் இப்படிமயங்கிநிற்கும் என்று சொல்லுகிற மாயாவாதியுடைய மதம் இருக்கிறபடி.

நித்தன் அறிவன் சுத்தன் அகண்டிதன். (உ) என்பது, ஒருகாலும் அழியாதவனுமாய்ச் சருவஞ்ஞனுமாய் நிர்மலனுமாய்க் கண்டிக்கப்படாதவனுமாய், "நிர்விகற்பன் நிர்த்தத்துவன் நிரஞ்சனன்" என்பது, விகற்பமில்லாதவனுமாய்த் தத்துவாதீதனுமாய் மறைப்பில்லாதவனுமாய்; "சொல்வகை எவையுந் தொடராததூய்மணி" என்பது, சொல்லும் பொருளுமாயிருக்கின்ற சாத்திரங்களில் ஒன்றாலும் சென்று கிட்டவொண்ணுமலிருக்கிற சுத்தரத்தினமாய்; * * * *
* * * * * * * *

End ;

இந்தப் பிரம்மம் இப்படிசெய்யவேண்டுவான் என்னென்னில், இது தன்னியல்பென்றும், என்பது, இப்படிச்செய்து வருகிற இந்தப்பிரம்மம் தன்னுடைய தன்னுடைய வியல்பாயிருப்பதொன் றென்றும், பிரம்மம் இந்த வுபாதிகளினாலே பாதிக்கபட்டிருப்பான் என்? என்னில்; விளையாட்டென்றும். இந்த உபாதிகளோடுங் கூடிக்கொண்டு நிற்கிறத்தைப் பிரம்மத்திற்கு விளையாட்டாயிருப்ப தொன்றென்றும், பரப்பிரம்மத்திற்கு இயல்பென்றும் விளையாட்டென்றும் எங்கே காணப்பட்டதென்னில் ; முன்னுள்ள மறைகண் மொழிதலினால் ; என்பது, அநாதியாயுள்ள வேதங்கள் சொல்லுகையினாலே (இந்த வுபாதிகள் பலவாகக்காணப் பட்டாற்போல அந்தப் பிரம்மமும். இப்படிப் பலவாகக் கண்டிக்கப்பட் டிருக்குமோவென்னில்

"ஒருநூற் பன்மணிநிலையும் பசுப்பாலெனவும்......நீரினவாதித்தரென வுங் கூவலாழி குளஞ் சிறுகுழி கால்வாவியாவையும் வருபுனலெனவும் அவ்வவற்றடங்கி" என்பது.

மணிகள் பலநிறமாயிருந்ததாமாயினும் அதிலே கோப்புண்ட நூல் ஒரு தன்மையாயிருந்தாற்போலவும், பசுக்கள் பலவர்ணங்களா யிருந்ததாமாயி னும் பாலொரு நிறமாயிருந்ததன்மை போலவும், பாத்திரங்கள் பலவா யிருந்ததாமாயினும் அவையிற்றிற் பிரதியிம்பஞ் செய்த வாதித்தன் ஒன் ருயிருந்ததன்மைபோலவும், கிணறும் கடலும் குளமும் சிறிதாய் உள்ள குழிகளும் வாய்க்கால்களும் வாவிகளும் இவையெல்லாம் பலபேதமாயிருந்த தாமாயினும் தண்ணீர் ஒன்ருயிருந்த தன்மைபோலவும் இப்படியே யோனி கள் பலவாயிருந்ததாமாயினும் அறிவேகமாய் அந்தந்த யோனிகள்தோ றுங் கூடியிருக்கும்; அப்படியோனிகள் தோறும் அறிவுகூடி யிருந்ததாமா யின் அந்தந்த உடல்கள்தோறும் பந்திக்கப்படாதோவென்னில்; . . .

(கு-பு.)—

இந்நூல் மாயாவாதி மதத்தைச்சார்ந்ததாகும்; இது அம்மதச்சார்பா னக் கொள்கையை நு வலுகின்றது. இப்பிரதியில் முழுவதுமில்லை. நிற்க. இது தனித்தநூலோ? அல்லது ஒருபெரும்நூலின் ஒருபகுதியோ? ஒன் றுந்தெரியவில்லை. உள்ளவரையில் உரையுடன் உள்ளது. பிழையுள்ளன. ஏடுகண் மிகச்சிதைந்திருக்கின்றன.

No. 2146. இருசமயத்தராசு.

IRUSAMAYATTARĀŚU.

Substance, palm-leaf. Size, 19¼ × 1⅛ inches. Pages, 160. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 1007, Tamil Triennial Catalogue . . .

(கு - பு).—

இந்நூல் மூவருடக் காடலாக்கில் 1007 ஆவது நம்பரில் வந்த நூலுக்கு மூலப் பிரதியாம். இதில் உள்ளவளவே அதிலும் இருக்கிறது. எழுத்துப் பிழைகள் மிக மலிந்துள்ளன. இது சைவ வைணவ சமயங் களில் உள்ள குற்றங் குறைகளை யெடுத்துக் கூறித் தம் மதக் கோட் பாட்டை யுணர்த்துவது. 'இருசமய விளக்கம்' என வழங்கும் நூலா யிருக்கலாமென்று தோற்றுகிறது. அங்ஙனமாயின் நூலாசிரியர் அரிதாச ராவர்.

No. 2147. தர்க்கபரிபாஷை.

TARKAPARIBHĀṢAI.

Pages, 76. Lines, 8 on a page

Begins on fol. 87-*a* of the MS. described under No. D. 1388.

Complete.

A rendering, into Tamil, of a Sanskrit work, of the same name, by Kēśava Miśra.

By Tuṟaimaṅgalam Śivappirakāśa Svāmigaḷ

Beginning :

திருச்சிற்றம்பலம்.

அளவைநூற் பிரமாணம்: தர்க்கசாத்திரம்.

(1) நியாய நூலின் முயற்சியைச் சுருங்கிய கேள்வியினுலே மடியனுயும் அவாவும் பாலன் எவன் அவனுக்கு என்னுல் உத்தியோடு கூடிய இவ்வளவை நூல் சுரு கி விளக்கப்படா நின்றது

(2) பிரமாணம் பிரமேயம் சம்சயம் பிரயோசனம் திருஷ்டாந்தம் சித்தாந்தம் அவயவம் தருக்கம நிண்ணயம் வாதம் சற்பம் விதண்டை எத்துவாபாசம் சலம் சாதி நிக்கிரகத்தானங்களது தத்துவ ஞானத்தால் உயர் சிறப்படைதல். (3) இது நியாயத்தினது முதற் சூத்திரம். இதன் பொருள். பிரமாணம் முதலிய பதினுறு பொருளது உண்மையறிவால் வீடு அடைதல் உளதாமெண்க.

(4) எவ்வளவு பிரமாண முதலியவற்றின் உத்தேச இலக்கண பரீக்ஷை பணணப்படாது அவ்வளவும் அவற்றின் உண்மை யறிவுண்டாகாது. எங்ஙனம் பாஷ்யகாரர் கூறினுர் அங்ஙனம் இந்நூலது வழக்கு மூன்று வகைத்து. உத்தேசமும் இலக்கணமும் பரீட்சையும் என. (5) உத்தேசம் ஆவது. பெயர் மாத்திரையாய்ப் பொருளைச் சொல்வது. அஃதும்—(உத்தேசமும்) இச்சூத்திரத்தாளே பெறப்படும்.

(6) இலக்கணம் ஆவது. சிறப்பியல்பு. எங்ஙனமெனின் ஆவினுக்குத் தாடி முதலிய வுடைமையாம்.

(7) பரீட்சையாவது. இலக்கியத்திற்கு இலக்கணம் பொருந்துமோ? பொருந்தாதோ? என்றுராய்தல் பரீட்சை.

* * * * * *

End :

நிக்கிரகத்தானம்.

(143) நிக்கிரகத்தானம் ஆவது. தோல்வி எது நிக்கிரகத்தானம் அது, நூனம் (ந்யூநம்) அதிகம் அபசித்தாற்தம் அர்த்தாந்தரம் அப்பிரதிபை மதானுஞ்ஞை விரோதம் முதலான பேதத்தாற் பலவிதமாயினும் பெருகும் என்று அவையெல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவை யாவன; (1) 144 சொல்லவேண்டிய பொருளிற் சிறிது குறைதலுடைமை நூநம் என்ப.

(145) 2. சொல்லவேண்டிய பொருளின் அதிசம். உடைமை. அதிகம். (146) 3. சித்தாந்தத்தின் கேடு அபசித்தாந்தமாம்; (147) 4. பிருகிருதத்தில் அநேக சம்பந்தமான (அசம்பத்தமான) பொருளுடைய சொல் அர்த்தாந்தரம் ஆம்; (148) உத்திரத்தினது தோன்றுமை அப்பிரதிபை. (149) தனக்குப் பிரதிகூலமாய்ப் பரனுக்குச் சம்மதமான அர்த்தத்தைத் தானே யங்கீகரித்தல் மதானுஞ்ஞை. (150) இஷ்டார்த்த பங்கம் விருத்தம். ஈண்டு மிகவும் வேண்டப்படுவதாய பதார்த்தங்களை ரூபபேதத்தினாலே யடிக்கடி கூறுவதும் வேண்டாமையாகிய ரூபபேதங்களுக்கு இலக்கணங் கூறுமையும் குற்றமின்று. இவ்வளவிற் பாலனுக்கு வியுத்பத்தி சித்திக்கையால்.

‡ சிவகேசவ மிசிரரியற்றிய தருக்க பரிபாஷை தமிழிற் றுறைமங்கலம் சிவப்பிரகாசரால் மொழி பெயர்க்கப்பெற்றது முற்றும்.

(கு - பு).—

இந்நூல் வடமொழியில் கேசவமிசிரர் என்னும் புலவர் இயற்றிய 'தர்க்க பரிபாஷை' என்னு நூலினது தமிழ் மொழி பெயர்ப்பாகும்; இது, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்றது; கோ. வடிவேலு செட்டியாரியற்றிய ஓர் குறிப்புரையுடன் அச்சிடப்பெற்றுளது. அதற்கு மிதற்கும் பல பாட பேதங்கள் காணப்படுகின்றன. இப்பிரதியில் இது முழுவதும் இருக்கிறது.

No. 2148. உடலறிஞானம்.

UḌALAṚIÑĀNAM.

Pages, 28. Lines, 5 & 6 on a page.

Begins on fol. 34-*a* of the MS. described under No. D. 1187.

Incomplete.

A work dealing with the structure and peculiarities of the human body, as viewed from the standpoint of the *Yōga* of the *Siddhas*.

Beginning :

காா்கடலும் பூவுங் ககன முயர்பொன்னுலகும்
சீர்பெறவே நாளா . . . . செய்த பிரான்—ஏர்பெறவே,
சுருதி முறையாற்றெளிந்து தோற்றிய ஞானங்கூறக்
கருதிய மெய் வல்லோனே காப்பு. (க)

End :

ஒண்டே தெரிந்து உதிநினைவிற்றரிக்கக்
கண்டே யினிசிக்குலைகனிரசமதே பாலும்
உண்டே மகிழ்ச்சிதர உள்ளிக்கால் முதல்
செண்டேயழியாத தேகமே லம்பொனனி . . . .

(கு - பு).—

இந்நூல் ஞான மார்க்கத்தைச் சார்ந்ததாய் உடலில் அமைந்துள்ள தத்துவங்களை விரிரித்துணர்த்தி நாசியின்வாயிலாகச் செல்லும் சரத்தினையும் சூட்சுமாய் அறியும் நெறியையுணர்த்துவதெனத் தோற்றுகின்றது. ஒன்றுமுதல் நாற்பத்தெட்டுச் செய்யுட்களே இருக்கின்றன. இன்னும் இந்நூலுக்கு எத்துணைச் செய்யுட்களிருக்கின்றனவோ தெரியவில்லை. எழுத்துப் பிழைகள் மிகவுங் காண்பதோடு எடுகள் மிகவுஞ் சிதலுண்டிருக்கின்றன.

No. 2149. திருவள்ளுவநாயனாரகவல்.

TIRUVAḶḶUVANĀYANĀRAHAVAL.

Pages, 7. Lines, 6 on a page. Begins on fol. 1a of the MS. described under No. D. 218.

Complete.

A poem on *Yoga*, purporting to be composed by Tiruvaḷḷuvar the famous author of the *Tirukkuṟaḷ*.

Beginning :

திருவள்ளுவநாயனார் வகுத்த பாவையகவல்.

பூவிலயனும் புரந்திரனும் பூமிதனைத்
தாவியளந்தோனுந் தாமறியார்—நாவில்
இழைநக்கி நூனெருடுமேழையறிவேனோ
குழைநெக்கிப் பிஞ்சகன்றன் கூத்து.

வேதப்பரஞ்சோதிப் பார்வையாய் விளங்கிய
சீரொட்டும் பாவைகேள் ஓங்காரமாகியே
நின்றதோருண்மை பார்த்ததின் வெளியுள்ளே
உற்றுவளரும் பரஞ்சோதியுருவைப்

பல பல நெய்யக்கேள் சுக்கிலமான கருவிது
சுரோணிதமான விரைக்கருவிந்தொடு
நாதம் விளைந்ததாய்ப் பிந்தொடு காயுங்
கனிந்ததாய்ப் பாவை வெடித்ததோர் பஞ்சதாய்ப்

* * * *

End :

தெளிந்து சுழிமுனை தாளைத்திறந்து
துரியாதீத விளக்கையு மேற்றி
ஆரியனுடு திரையிடும்போது
ஆராடுந் திருக்கூத்துக் காணலுமாமே.

திருச்சிற்றம்பலம்.

திருவள்ளுவ நாயனார் அகவல் முற்றும்.

குருபாதமேதுணே :—

கு. பு.—இந்நூல் யோக விஷயமென்று தெரிகிறது. திருவள்ளுவ நாயனூர் இயற்றியதாக உள்ளது. (பாவையடவல்) என்று அடைமொழி கொடுத்திருக்கிறது. இந்நூலுக்கு இப்பெயர்தானே அல்லது வேறு ஒரு பெயர்தான் உண்டோ ? ஒன்றும் தெரியவில்லை.

No. 2150. திருப்பாண் ஆழ்வார் பாடல்

TIRUPPĀṆ ĀḺVĀR PĀḌAL.

Pages, 6. Lines, 6 on a page. Begins on fol. 56a of the MS. described under No. D. 802.

Complete in 12 stanzas.

Verses on the *Yogam* and *Jñānam* of the *Siddhas*. It is not certain whether Tiruppāṇāḻvār, who is said to be the author of this work, is the same person as the famous Śrī Vaiṣṇava Saint of the same name.

Beginning

திருப்பாண் ஆழ்வார் பாடல்.

உவ்வே அவ்வாயோங்குமது உலகமேழுந் தானுகி
வவ்வே சவ்வாய் நிற்குமது வளர்ந்தேயேக மொன்றுகிக்
கவ்வே யுண்டுகவிந்து பச்சை கலந்தே தன்வடிவாய்
அவ்வே யரிமால் வளர்ந்தானே யாய்ந்தே பாருமவனெளியே (க)

வெட்டவெளியிலி ரேகையதே மேலே சுழிக்கில் உகாரமதாம்
ஒட்டி முடிந்த வெழுத்துதான் உறுப்பு வொளியே யென்றுரை
ரெட்டையெழுத்து நாதபிந்து நேரேகா லேவன்னியுமாம் [க்கும்
மட்டுமதுவே பலியெடுத்து மாலேயாகு மதுதானே. (உ)

மஞ்சனம் வன்னியாக வாயுவே புட்பமாக
நெஞ்சமே யமுதமாக நேசமாய் ஆசைசெய்தால்
பஞ்சுபோல் பறக்கும் பாசம் பாரினிற் பிறப்புமில்லே
வஞ்சகமல்ல சொன்னேன் மாலேயே பூசைசெய்யே. (ந)

வாசியென்றெழுத்துதானே வாயுவேயுண்டிருந்தான்
வாசியென்றெழுத்துதானே வாழ்சத்தியுண்டிருந்தான்
வாசியென்றெழுத்துதானே வளர்ந்ததுவுலகமெங்கும்
வாசியே மாலேதானே வகையுடன் அறியமாட்டார். (ச)

End :

அரியேதானேதென்னில் அரிதன்னில் ஊமைநாக்கில்
அரியதுவாச்சுதப்போ அரனுமே யதுவேயாச்சு
அரியரன்வேறேதென்று அருநரகதனில் வீழ்வார்
அரியரன்மாலாயொன்றாய் ஆதியாய் மூலமானார். (யஉ)

பன்னிரு ஆழ்வார்கள் தேனேமலருந் திருவடித்தாமரைகளே சர ணம் :— ஸ்ரீராமஜயம் :—

கு. பு.—இந்நூல் யோகம்ஞானம் என்னும் விஷயங்களை நுவலுவதா ய்ச் சித்தர் நூல்களைச் சார்ந்திருக்கின்றது. நூலாசிரியர் 'திருப்பாண் ஆழ் வார்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒரு வரான திருப்பாணாழ்வாரோ ? அல்லது இவர் பெயர்கொண்ட மற்றொரு வரோ ? ஒன்றுந் தெளியவியலவில்லை. ஆய்ந்துணரற்பாற்று. பன்னிர ண்டு பாடல்களால் அமைந்திருக்கின்றது, எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2151. நெஞ்சறிவிளக்கம் வெண்பா பன்னிரண்டு.

NEÑJAṞIVIḶAKKAM VEṆPĀ PANNIRAṆḌU.

Pages, 4. Lines 6, on a page. Begins on fol. 32 a of the MS. described under No. D. 1378, T.D.C. Vol. III.

Complete.

12 verses, in the *Veṇpa* style, on the *Yogam* and *Jñānam* of the *Siddhas.*

Beginning :

நெஞ்சறிவிளக்கம் வெண்பா பன்னிரண்டு.

நெட்டெழுத்தினூடே போய்நின்றளந்து பாரத்தக்காற்
றெட்டெழுத்து வந்தசெயல் தோன்றுமே—வட்டமிட்டுச்
சித்தொளியாய்க் காணுஞ் செழுங்கதிராயிரங்கோடி
பெற்ற பிரகாச மென்பேசு. (க)

பேசாதே நெஞ்சகமே பேசும்பொருளதுவே
ஆசார நெஞ்சமந்தப் பொருளாய்—ஈசான..
மூலையிதுகாண் முகமாறுடையான்
காலையினித் தேடிக்காண். (உ)

End :

உண்மைகண்டாய் நெஞ்சகமே யொடுங்குமிடங் கேளீர்
தண்மைபடு மைம்பூத தற்பரத்தைச்—செம்மை
செங்கதிரோன் அவ்விடத்தே சேர்ந்திருப்பாரென்று
எங்கள் குருசொன்ன றிடம். (கூ)

* * * * *
* * * * *

சிந்திக்குஞ் சிந்தனையுஞ் சிவனுமொன் றுணக்கால்
நெஞ்சறி விளக்கமது நேசமாய்—இந்தத்
தத்துவத்தினுள்ள தகைமையுடை யோர்க்குச்
சத்தும்வெளி யாகாது காண். (கஉ)

நெஞ்சறிவிளக்கம் வெண்பா முற்றிற்று.

(கு-பு.)—

இந்த 'நெஞ்சறிவிளக்கம்' எனும் நூல் போகம் ஞானம் என்ற சாத்திர விஷயங்களைச்சார்ந்ததாய் அச்சாத்திரக்கொள்கையைக் கூறுகின்றது. பன்னிரண்டு வெண்பாக்களான் அமைந்துள்ளது. இயற்றியவர் இன்னார் என்று தெரியவில்லை. இது, டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 189-ஆவது நம்பரில் வந்துள்ள 'நெஞ்சறிவிளக்கம்' என்னும் நூலினும் வேறாகவுள்ளது; அது நூறுபாடல்களான் இற்றது எனவும், கணபதிதாசன் என்பவரால் இயற்றப்பெற்றதெனவும் வெளிப்படையாக முதற்கடைப்பாடல்களான் அறிய கிடக்கிறது. அங்ஙனில்லை இது.

No. 2152. அவிநாசி நாதர் துதி.

AVINAŚI NATHAR TUDI.

Pages, 6. Lines, 4 on a page.

Incomplete.

Begins on fol. 1—a of the Ms. described under No. D. 1756.

Same work as that described under No. 1676, Tamil Descriptive Catalogue Vol. IV. Contains 10 stanzas only.

(கு-பு.)—

இந்தநூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 1676-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இந்நூலின் மொத்தசெய்யு ளெண்கள் இத்துணையெனத் தெரியவில்லை, இப்பிரதியில் 10 பாடல்களே இருக்கின்றன. எழுத்துப் பிழைகள் மிகவுள்ளன. ஏடுகள் சிதைந்துள.

No. 2153. அனுமப்பத்து.

ANUMAPPATTU.

Pages, 14. Lines, 5 on a page.

Begins on fol. 1—a of the Ms. described under No. D. 1744.

Complete.

Same work as that described under No. 1041 of the Tamil Descriptive Catalogue Vol. II.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1041-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் பத்துப்பாடல்களும் இருக்கின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள. எழுத்துப்பிழைகள் உள்ளன. இப்பிரதி ஷை நம்பர் பிரதிக்கு மூலப்பிரதியெனத் தோற்றுகிறது.

No. 2154. அனுமப்பத்து.

ANUMAPPATTU.

Pages, 14. Lines, 5 on a page.

Begins on fol. 14 of the Ms. described under D. No. 1744.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இதுவும் முன்பிரதியில் வந்துள்ளதே. இரண்டாவது பிரதியாக எழுதி வைத்திருக்கின்றனர். இப்பிரதியிலும் இந்நாலின் பத்துப்பாடல்களும் இருக்கின்றன. எழுத்துப்பிழைகள் மிகவுள.

No. 2155. கணபதியாசிரிய விருத்தம்.

GAṆAPATIYĀŚIRIYA VIRUTTAM.

Pages, 2. Lines, 5 on a page.

Incomplete.

Begins on fol. 11—a of the Ms. described under D. No. 1756.

Same work as that described under No. 1621. Tamil, Descriptive Catalogue. Vol. IV.

Contains 2 Stanzas only.

(கு-பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக் 1621-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் முதலிரண்டு பாடல்களே உள. எழுத்துப்பிழைகள் உள்ளன. இதற்குக் கணபதி துதி. பிள்ளையார் துதி. கணபதியாசிரிய விருத்தம் எனவாங்குப் பலவேறு பெயர்கள் காணப்படுகின்றனவாயினும் நூல் ஒன்றேயாகும்.

No. 2156. கணபதியாசிரிய விருத்தம்.

GAṆAPATIYĀŚIRIYA VIRUTTAM.

Pages, 2. Lines, 5 on a page.

Incomplete.

Begins on fol. 4 a of the MS. described under D. No. 1756.

Similar to the work described under No. 1621 in Vol IV. of the Descriptive Catalogue of Tamil MSS.

(கு-பு.)—

இதுவும் முன்பிரதி போன்று விநாயகரின்மீது துதிரூபமாகவமைந்துள்ளது. ஒரு பாடலே காணப்படுகிறது. அதுவும் அரைகுறையாகவுளது. பிழைகள் உள. ஏடு சிறிது சிதைந்து நுனியில் முறிந்துள்ளது.

No. 2157. கொல்லூர் மோகாம்பரி விருத்தம்.

KOLLŪR MŌHAMBARI VIRUTTAM.

Pages, 18, Lines, 5 on a page.

Begins on fol. 112-a of the MS. described under D. No. 1074.

Complete.

10 verses in praise of Goddess Pārvatī worshipped under the name of Mōhāmbarī at Kollūr.

Beginning :

கொல்லூர் மோகாம்பரி விருத்தம்.—

சங்கரி சிவானந்தி லோகரட்சாகரி
சாம்பவி மாகேசுவரி சடாசூட
கங்காதரி கவுரி பார்வதி சாமளே கோமளாங்கி
பங்கய முகத்தி வில்பாணிச்சி நிர்வாணி
பஞ்சாட்சரி குண்டலி பாலலோசனி
விமலி மாதங்கி நிர்மலி பாரேதி லட்சுமி
மங்கையே முருவத்தி வேதத்தி ஞானத்தி
வராகி வராகேசுவரீ மகாமாயி ஆயி
நரமாங்கிஷ மதுபட்சிணி வராகிணி மோகஞங்கி
குங்கும பயோதரி மஞேண்மணி தயாநிதி
கொல்லூரில் மேகாம்பரி குமரனைப் பெற்ற மகமாயி
யென்னிரு கண்கள் குடிகொண்ட குலதெய்வமே. (க)

* * * * * * * * *

End :

பங்கய மலர்ந்த முகவழகு மருள்சேர் விழிப் பார்வையழகுங்
குழையினிற் . . . . ரிய . . . . கொந்தளக மிலகுமழகும்
இயலான மார்பணி நறுந்தோட்டினழகும்
செங்கையிருகை கமலவிதழி னழகுமதிக
சீர்ப்பட்டி னிடையினழகு மன்னநடை
யழகுமெனது கண்டரிக்க வந்தருளுவாய்
சங்கரரிருந்தவரை யுந்திய இராவணன்றலை
யொருபது முருளவே தனுவெடுத்தே சரமதுந்
தொடுத்தேவிடுந் தாமோதரன் சகோதரி
கொங்கை குறவள்ளி மணவாளருடை தாய்புகழ்
கொல்லூரில் மோகாம்பரி குமரனைப் பெற்ற மகமாயி
யென்னிரு கண்கள் குடிகொண்ட குலதெய்வமே (அ)

* * * * * * * *

(கு-பு.)

இந்நூல் 'கொல்லூர் மோகாம்பரி' என்ற தேவியின் விஷயமான தொரு தோத்திரமென வறியக்கிடக்கிறது. "கொல்லூரில் மோகாம்பரி குமாரனைப்பெற்ற மகமாயி யென்னிரு கண்கள் குடிகொண்டகுலதெய்வமே" என்ற சொல் தொடரை மகுடமாகப் பெற்று பத்துப் பாடல்களான் அமைந் துள்ளது. இதன் ஏடுகள் சிதலுற்றும் முறிந்தும் இருக்கின்றன. எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன.

No. 2158. சரஸ்வதி துதி.

SARASVATI TUDI.

Pages, 2. Lines, 5 on a page.

Begins on fol. 10-a of the MS. described under D. No. 1756. Incomplete.

In praise of Goddess Sarasvati, the presiding deity of learning.

Beginning :

ஸரஸ்வதியம்மன் துதி.

மகமேரு கவமாக வாசுகியே கயிருக
வா(ரி) தியேய மிர்தமாக
வானவர்கள் புகழாக வமுதங் கடைந்ததிலே
வாழுலகை மாதர் வருகான்
செகமுழுது மன்பான வாணியே[ன்று](நா)விலேன்
செப்பியே செந்திருவே நான்
செந்தமிழ்த் துதிக்கின்றேன் வந்துதவு[ம்]பூமகளே
செப்பரிய கலைமகளே நீ
விகடதட செல்வியே வெண்டாமரைப் பெண்ணே
வெள்ளைமேனியே யமுதமே.

* * * * * * * *

* * * * * * * *

End :

வித்தையும் புத்தியும் அளித்த திருமாதே நீ
வேண்டிய செல்வந் தருகுவாய்
குகைமுருகர் அடியேன்நான் குறைசெய்த
தமிழைநீ குற்றங்கள் பார்க்கவேண்டாம்
கொன்மறையோர் மனைவியே வானவர்கடு திசெய்ய
கோகனகப் பெண் . . . .
. . . .
. . . .
. . . .

(கு-பு.)

இந்நூல் சரசுவதீ தேவியின்மீது துதியாக வமைந்துள்ளது ; இயற்றிய வர் இன்னுரென்றும், இந்நூலின் அளவு இத்துணைத்தென்றும் என்றிவை முதலிய வரலாறுகள் ஒன்றுந் தெரிந்திற்றிலது. அரைகுறையாகவெழுதப் பட்டுளது. எழுத்துப் பிழைகள் மிகவுள்ளன. ஏடு ஒரு சிறிது சிதைந் துள்ளது.

No. 2159. சிவகவசம்.

ŚIVAKAVACAM.

Pages, 8. Lines. 7 on a page

Begins on fol. 29—a of the MS. described under D. No. 1185.

Complete.

Verses in which God Śiva is invoked to protect the devotee and his body like an armour.

Beginning:

பனிரண்டாவது சிவகவசவத்தியாயம்.

பங்கயத் தவிசின்மேவி யிருந்துடற் பற்றுநீக்கி
யங்குறை பூதசுத்தி யடைவுடன் செய்துபின்னர்
கங்கையைத் தரித்தசென்னி கற்பக தருவைச்செம்பொற்
கொங்கை வெற்பணைய பச்சைக்கொடியொடு முளத்தில்வைத்தே (க)

அகிலநாயகனும் ஞான வானந்த ரூபியாகி
துகடருமணுவாய் வெற்பின் றேற்றமா யுயிரையெல்லாம்
தகவுடன வனிபாகித் தரிப்பவன் னெம்மையிந்த
மகிதல மதனிற்றீமை மருவிடா தருளிற்காக்க. (உ)

* * * * * *

கடையுகந்தன்னி லெல்லா வுலகமுங் கடவுள்தீயால்
அடலேசெய்த மலேதாள மறைதர நடிக்குமீசன்
இடைநெறி விளைதாபத்தி லெறிதரு சூரைக்காற்றிற்
றடைபடா தெம்மை யிந்தத் தடங்கடலுலகிற்காக்க. (௯)

End:

முடங்குளை முதலாயுள்ள முழுவலிக் கொடியமாக்கள்
அடங்கலும் நாகங்கொல்களி றென்றிவை யனைத்துமுள்ளந்
திடம்பட நினைந்து பாவஞ்செய்யுஞ சிவகவசந்தன்னை
உடம்படத் தரிப்பையாணுனு லம்பொருருவவுத் தோளாய். (உ௰)

வேறு

(கு-பு.);—

அந்நூல் சைவமதத்தைச் சார்ந்தது. இது ' நாராயண கவசம் ' ' அரிகவசம் ' போல்வதோர் சிவவிஷயமானதொரு ' கவசம் ' என்ற

தோத்திர ரூபமந்திரமாகும். இன்ன நூலைச் சார்ந்ததென விளங்கவில்லை. தலையேட்டில் 'பனிரண்டாவது சிகவசவத்தியாயம்' என்ற வொரு தொடர்மொழி காணப்பெறுவதால் இது ஒரு பெருநூலின் சிறு பகுதி யாம். எனக் காணக்கிடக்கிறது. இந்தப் பகுதியில் உள்ள பாடல்கள் (உ௰) இருபதாகும். இதன் எடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

No. 2160. திருப்புகழ்.

TIRUPPUKAḺ.

Substance, palm—leaf. Size, $15\frac{1}{2} \times 1\frac{1}{4}$, inches. Pages, 90. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete, contains 3 to 84 Stanzas only.

Same work as that described under No. 1649 of the Tamil Descriptive Catalogue. Vol IV.

(கு—பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 1649 - வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும் இப் பிரதியில் 3-ம் பாடல் முதல் 84-ம் பாடல் வரையி லுள்ள பாடல்களே யுளவாதலின் முற்றுமில்லை, பிழைகள் மிக மலிந் துள்ளன. ஏடுளும் சிதைந்திருக்கின்றன. 3-வது ஏட்டிலிருந்து தொடங்கியுள்ளது. (1—2) ஏடுகள் காணப்பெறவில்லை. நடுவிலும் (சம) ஆவது ஏடு இல்லை.

No. 2161. திருப்போரூர் கந்தப்பர் மயில்விருத்தம்.

TIRUPPŌRŪR KANDAPPAR MAYIL VIRUTTAM.

Pages, 2. Lines, 5 on a page.

Incomplete.

Begins on fol. 12—a of the MS. described under No. 1756, T.D.C. Vol IV.

Similar to the work described under No. 1666, T. D. C. Vol IV.

Contains 2 Stanzas only.

(கு—பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 1666-ம் நம்பர் பிரதி நூல்போன்று திருப்போரூர் சுப்பிரமணியரது வாகனமாம் மயிலின்மீது துதி ரூபமாக வமைந்துள்ளது. இந்நூல் அருணகிரிநாதர் இயற்றிய மயில் விருத்த நூலுக்குப் பிற்பட்டது எனத் தெற்றென விளங்குகிறது. நூலாசிரியர் தாமே இதில் " அருணகிரிநாதரும் பகர்ந்து துதிசெய்யும் மயிலே " எனக் குறிக்கின்றார் ஆதலின். இந்நூலின் செய்யுட்கள் இத்துணையனவெனத் தெரியவில்லை. இப் பிரதியில் இரண்டு பாடல்களே யுள்ளன. எழுத்துப் பிழைகள் மிகுதியாக இருக்கின்றன.

No. 2162. மாரியம்மையூஞ்சல்.

MĀRYIAMMAIYŪÑJAL.

Pages, 3. Lines, 4 on a page.

Begins on fol. 1—ā of the MS. described under D. No. 356.

Contains 6 Stanzas only. Seems complete.

Songs, in the *Uncal* style, in praise of Goddess Māriyamman.

Beginning :

மாரியம்மன்பேரில் ஊஞ்சல்.

முந்தி முந்தி விநாயகன்றன் சரணம் போற்றி
முருகருடன் கருணையதான் முற்றும்பாட
அந்தி பகலுந்தொழுது பூசைசெய்து
ஆதிபுத்தி லம்மனுமேல் ஊஞ்சற்பாட
எந்தனுடை யிதயமதி லிருந்து வாழும்
ஏகாந்த சேனவதன்னி லெல்லோருங் காணப்
பந்துமுலை மங்கையர்கள் பாதம் போற்றப்
படைவீட்டாளம் (மணவள்) ஆடிரூஞ்சல். (க)

அற்புதமாம் பூமியொரு பலகையாக
ஆறுநால் வேதங்களுங் கயிறதாகச்
சொற்பெரிய வாகாசம் பந்தாகச்
சுகமுடனே நட்சத்திர மாலையாகக்
கற்பமுடன் இகபரங்கள் கால்களாகச்
சகச்சந்திர சூரியருந் தீபங்காட்ட
இப்புவியிற்சிம்மநகர் தன்னில்வாழும்
ஈசுவரியாள் புத்திலம்மன் ஆடிரூஞ்சல் (உ)

மூவருடன் தேவர்களும் ருஷிகள் பாட
முத்து நவரத்தினங்கள் முன் டணிகளாடக்
காவலுடன் வயிரவனுங் காத்து நாடக்
கனக்ஷேத்ர பாலனும் வெண்கவரி வீச
பாவையர்கள் ஒருகோடி பரந்து சூழப்
பகைத்தவர்கள் சித்தமுடன் பணிகள் செய்யப்
பூவை வளர் சிம்மநகர் தன்னில்வாழும்
பூரணியாள் புத்திலம்மன் ஆடிரூஞ்சல் (ங)

End.

இந்திரன் குபேரனுடன் இசைந்துவாழி
இவ்வுலகில் மறையோர்கள் இணங்கிவாழி
தந்திமுகன் குகன் குமாருடன் வாணி வாழி
தரணிதன்னில் வேளாளர் தழைக்க வாழி
விந்தையுடன் மாதவர்கள் வேதம் வாழி
விளங்கு கவிஞர்கள்பதம் விருதும் வாழி
சிந்தையுடன் சிம்மநகர்தன்னில் வாழும்
தேவி புத்திலம்மன் அவள் ஆடிரூஞ்சல் (சு)

(கு. பு.)—

இந்நூல், மாரியம்மன் விஷயமானதொரு 'ஊஞ்சல்' என்னும் பிரபந்தவகையாகும். இப்பிரதியில் ஆறு பாடல்களேயிருக்கின்றன. இந்நூலின் செய்யுளும் அத்துணையே என்று தோற்றுகிறது. ஏடுகள் நுனியில் முறிந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகளிருக்கின்றன நடையத்துணை சிறந்ததன்று. இயற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லை.''

No. 2163. மாணிக்கவாசகர் திருமணியகவல். MĀṆIKKAVĀCAKAR TIRUMAṆIYAKAVAL

Pages, 11. Lines, 10 a page.

Begins on fol. 1-a of the MS. described under D. No. 1157. Complete.

A poem, in the *Ahaval* stylo, in praise of God Siva by Māṇikkavācakar.

Beginning. :

மாணிக்கவாசகர் திருமணியகவல்

சீரணி கமலத் தாரணி வாழ்க
நாரணன் முதலாய் ஆரணம் போற்ற
தில்லையுண் மீதே திருநடஞ்செய்தாய்
வல்லபைநாதா வன்னியுள் வடிவே
அரகராசிவனே புவனேசுவரனே
மௌனோர் தங்கண் மனதுள்ளிருக்கும்
ஆதி நாதனே சோதிமேனியனே
மாது பங்கனே வாவிகள் புடைசூழ்
அம்பலத்துறையு மெம்பெருமானே
மூவருமாகிய யாவரும் போற்ற
வேதப்பொருளே கீதப்பிரியா
உரகனையணிவாய மூன்றுகோணத்தில்
* * * * *
* * * * *

End :

தூக்கிய பாதமுந்துய்யமறலியைத்
தாக்கிய தாளும் வீரக்கழலும்
வானுந்து தேவர்கள் வந்து வணங்கும்
ஆனந்தமாகி நின்றாடிய கூத்தும்
அம்மை பாகமும் வெள்ளைவிடையும்
இம்மைதனிலே யான் காணும்படி
வந்திட வேண்டும் ஆன்விடையேறி
* * * * *

நாலாம்பதத்தில் நண்ணிவீற்றிருக்கும்
பாலாம்பதத்திற் பரிந்து பாலிப்பாய்
தரசிங்கமறையோர் தா [ன்] மகிழ்ந்தேற்றும்
நரசிங்கரூபா நமச்சிவாயமே.

திருச்சிற்றம்பலத்துணை :

மாணிக்கவாசகர் திருமணியகவல் முற்றும்.

(கு பு.)—

இந்நூல் சிவபெருமானை விளித்துத் துதிப்பதாய் அமைந்திருக்கிறது : அகவலாயமைந்தது. முற்றும் உள்ளது. மாணிக்கவாசகர் இயற்றியதாகத் தெரிகிறது. பிழைகண்மலிந்துள்ளன.

No. 2164. மாரியம்மைவர்ணிப்பு.

MĀRIYAMMAIVARṆIPPU.

Pages, 33. Lines, 6 on a page.

Complete.

Begins on fol. 1a. of the MS. desribed under No. 306. T. D. C. Vol. I.

Similar to the work described under No. 86 of the Tamil Triennial Catalogue Vol. I.

Beginning ;

மாரியம்மன் வர்ணிப்பு :—

கன்னனூர் மேவுங் கௌமாரிதாலாட்டைப்
பன்னிப்படித்தவற்குப் பாவமணுகாதே
மாரித்தாய் வல்லியே மகராசி வருமம்மா
திக்கெல்லாம் போற்றும் ஏககலாதேவிவா
ஏக கலாதேவியரே யெங்குமசாமாயி
கரகம் பிறந்தது கண்ணனூர் எல்லையிலே
வேம்பு பிறந்தது விசையநகர் பட்டணமாம்
சிலம்பு பிறந்தது சிவலிங்கப்பாறையிலே
உடுக்கைபிறந்தது உத்திரர்பூமியிலே
பம்பைபிறந்தது பளிங்குமாஞ் சோலையிலே
கருத்துப்பிறந்தது கஞ்சகிரியிந்திரபுரம்
மருளாதழைக்க வாருமம்மாவையகத்தில்
அஞ்சுகரகமமர்ந்தாடும் பொற்கரகம்
ஆறுகரகமமர்ந்தாட வேப்பிலையும்
ஏழுகரகமெடுத்தாடும் பொற்கரக
பத்துகரகம் பதிஞ்சாடும் பொற்கரகம்

வேப்பிலையும் பொற்கரகம் வீதிவிளையாடிவா
ஆயிரங்கண்ணுடையாள் அலங்காரிவாருமம்மா
பதினாயிரங்கண்ணுடைய பராசத்தி வாருமம்மா
* * * * * *

அறியாதான் பாடுகிறேன் அம்மைத்திருக்கதையைத்
தெரியாதான் பாடுகிறேன் தேவிதிருக்கதையை
என்னைப்பார்த்துப் பழித்தாற்குப் பழுதுகளைச்சொன்னாற்கு
ஆதிபரமேசுவரி நீயருகேதுணையிரும்மா
என்னைப்போல பூசாரி யெங்குமுண்டு வையகத்தில்
உன்னைப்போல தெய்வமுலகத்திற் கண்டதில்லை
* * * * * * *

End:

சரணஞ் சரணமம்மா தைய லிளம்பிறையே
சரணஞ் சரணமம்மா தாயே சரணமம்மா
எல்லாத் தெய்வங்களுக்கும் ஈசுவரியே யுன்சரணம்
காக்கிறேன் மகனேயென்று கட்டழகி கண்பாரு
எங்கெங்கும் போனாலும் எத்தூரம்போனாலும்
அண்டையிலே நின்று வருகிருந்து காரடிதான்
ஆல்போல்தழைத்தே யருகுபோல் வேரோடி
மூங்கிற்போற்சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பீர்

மாரியம்மன் வர்ணிப்பு முற்றும் : சிவமயம்.

(கு.பு.)—

இது மூவருடக்காடலாக் 86 ஆவது நம்பர் பிரதிபோன்றது. இதுவும் அதுபோல் கண்ணனூர் மாரியம்மன் விஷயமாகித்துதிரூபமாயமைந்துள்ளது. பூசாரிகளால் பாடப்படுவதாகும். நடைதாழ்ந்தது. இப்பிரதியில் இது முற்றும் இருக்கிறது.

நூலாரம்பத்து.—

" கன்னனூர் மேவுங்கௌமாரி தாலாட்டைப்
பன்னிப்படித்தாற்குப்பாவமணுகாதே "

என்றதொரு பாடல் காணப்படுகிறது. அது இந்நூல் " வர்ணிப்பு " என்ற தலைப்பெயருடன் காணப்படுகிறதாதலின், அடுத்துள்ள " மாரியம்மன் தாலாட்டைப் " பற்றியதாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

No. 2165. வாகை வனத்தாலாட்டு.

VĀKAI VANATTĀLĀṬṬU.

Pages, 3. Lines, 22 on a page.

Begins on fol. 60*a* of the MS. described under DNo. 602. Vol. II.

Complete.

Songs, in the *Talattu* (Lullaby) style, in praise of God Śiva, worshiped at Vāhaivanam.

Beginning:

வாகை வனத்தாலாட்டு.

ஏர்கொண்ட வாகைவனத்தீசர்தம்மைத்தாலாட்ட
சீர்கொண்ட சித்தி விநாயகனே வந்தருள்வீர் (க)
கூறுமலைவள்ளிதனைக் கோலமணம்புரிந்த
வாறு முகமான வருள் வடிவே வந்தருள்வீர் (உ)
* * * * * * *
சிற்பரமாய்த் தற்பரமாய்ச்சின்மயமாய்நிட்களமாய்
அற்புதமாயாரமுதாய் ஆண்டபரிபூரணமோ (ச)
வண்டமர்பூங்குழற்கு மணவாளராயிருந்தே
யண்டரெல்லாம் போற்றும் அரும்பொருளே பள்ளிகொள்வீர் (ரு)
உள்ளம்பிரியா வுமைவண்டுவார் குழற்கே
தெள்ளமுதாய் வந்த சிரோமணியே வந்தருள்வீர் (சு)
அன்றயன் மாற்றேடி முடியுங்காணுமல்
நின்ற பரம்பொருளே நின்மலனே பள்ளிகொள்வீர் (எ)
* * * * * * *

END:

சுமதி யெனவந்த வினைத்தொல்லைத்தீர்த்தருளி
அமைதியாய் வீடளித்த வண்ணலே கண்வளரீர் (௰எ)
அன்புடனே நின்பூசை யாவர்தான் செய்தாலும்
இன்புடனே வீடளிக்கு மெந்தையே கண்வளரீர் (௰அ)
தத்துவத்தின் மேலான தற்பரையிலே யிருந்தே
அதுவிதமான வரங்கிலே கண்வளரீர் (௰கூ)
அருளிற் பிறந்து தினமன்பிலேதான் வளர்ந்தே
இருளிற் பொருந்தாத வீசனே கண்வளரீர் (உ௰)
பாடுமடியவர்க்குப் பண்போடருளளித்தே
நீடும்பொருளளிக்கும் நின்மலனே கண்வளரீர் (உக)
வாகை வனத்தாலாட்டு முற்றும்.

(கு.பு.)—

இச்சிறுநூல் ‘வாகைவனம்’ என்னும் திவ்வியத்தலத்திற் கோயிற் கொண்ட சிவபிரான்மீது “தாலாட்டு” என்னும் பிரபந்தமாயமைந்துள்ளது. (உ௧) இருபத்தொன்று கண்ணிகளேயிருக்கின்றன. இயற்றியவர் இன்னரெனவிளங்கவில்லை.

No. 2166. பிரகலாதன் தோத்திரம்.

PIRAHALĀDAN TŌTTIRAM.

Pages, 3. Lines, 7 on a page.

Begins on fol. 94 a of the MS. described under No. 1074, T. D. C. Vol. II.

Complete.

A passage purporting to contain Prahlāda's praise of God Viṣṇu

Beginning:

சக்கிரபாணியே [சக]ல (கமல) லோசனனே
காயாம்பூவண்ணனே கருடவாகனனே
மாயாவிநோதனே வண்டுழாய்ப்புயனே
கேசவாமாதவா பரமஇருடையாள
* * * * * *

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகா
சகலாண்ட ரக்ஷகா சற்குணமூர்த்தி
நாராயண[ய]நமவென்று நித்தியபாராயணம்.

End:

உன்னையல்லாமல் வேறு துதிகாணேன் நான்
உன்னையல்லா தெனக்கோர்துணையில்லை
இதுவேயோரட்சிக்க விதுவேயேசமயம்
காத்து ரட்சித்திடுங் கார்வண்ண கமலநேத்ரா
புருடோத்தமா நிரஞ்சனனந்தா
அஞ்சுதலில்லா தெனையாண்டளவகுந்தா
பஞ்சாயுதனிருபாத * * *
* * * * * *

நி . . . கண்டிதகாரண நிர்வாகபூஷண
நாயகா விதுவேயென நம்பினேன்
நண்பர் தாயகமாயருள் தந்தசர்வேசா
நமோ நமோ நாராயண நமஸ்தே நமோஸ்து.

(கு-பு.)—

இச்சிறுநூல் நாராயணன்மீது தண்டகா காரமாய்த் துதியாகவமைந்துள்ளது. இதன் நடைப்போக்கு அத்துணைச்சிறந்ததன்று. முற்றும் உளது. 'பிரஹ்லாதன் தோத்திரம்' என்று முதலிற் குறிக்கப்பட்டிருக்கிறது. எழுத்துப்பிழை மிகவுள.

No. 2167. வேங்கடேசர் திருவனந்தல்.

VENKAṬEŚAR TIRUVANANDAL

Pages, 22. Lines, 4 on a page.

Begins on *fol.* 96-*a* of the MS. *described* under D. No. 1074.

Complete.

Same work as that described under No. 1763, Tamil Descriptive Catalogue, Vol. IV.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 1763-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும், இப்பிரதியில் அப்பிரதியில் இல்லாத இரண்டொரு செய்யுளும் சிலபாடபேதங்களும் இருக்கின்றன. முற்றும் உள்ளது. பிழைகள் உள. ஏடுகளிற் சில முறிந்துள்ளன. இயற்றியவர் இன்னாரெனத்தெரிந்திற்றிலது.

No. 2168. ஸ்ரீ புராணம் (மகாபுராணம்).

ŚRĪPURĀṆAM (MAHĀPURĀṆAM).

Substance, paper. Size, 13¼ × 8¾ inches. Pages, 248. Lines, 24 on a page. Character, Tamil and Grantha. Condition, good. Appearance, old.

Incomplete.

Same work as that described under D. No. 459 of the Tamil Descriptive Catalogue. Vol. I.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 459-ம் நம்பரில் வந்துள்ளதேயாகும். ஷை நம்பர் பிரிதியைப்பார்த்து இப்பிரதி எழுதிவைத்தது. அப்பிரதியில் உள்ளவளவே இப்பிரதியிலும் உள்ளது. "சதுர்விம்சதி புராணம்" என்ற மற்றொரு பெயர் தலைப்பெயராகக் கொடுத்திருக்கிறது.

No. 2169. ஸ்ரீ புராணம் (மகாபுராணம்).

ŚRĪPURĀṆAM (MAHĀPURĀṆAM)

Substance, paper. Size, 13½ × 8½ inches. Pages, 391. Lines, 24 on a page. Character, Tamil and Grantha. Condition, good. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு.-பு.)—

இது, முன் நம்பரில் வந்துள்ள பகுதிக்கு மேலாகவுள்ள பகுதியாகும். 249-வது பக்கத்தில் தொடங்கியுள்ளது. இரண்டு பிரதிகளும் சேர்ந்து 781 பக்கங்களில் அடங்கியுள்ளன.

No. 2170. அண்ட கோளவகை வசனம்

AṆḌAGŌḶAVAKAI VACANAM.

Pages, 22. Lines, 10 on a page.

Begins on fol. 39-*a* of the MS. described under D. No. 1143.

Complete.

A treatise on Cosmology, as explained in the Hindu *Purāṇas*.

Beginning:

அண்டகோளவகை:—

நூறு கோடியோசனை விசாலம் அகலமும் நூறு கோடியோசனை உயரமும் உள்ளது பிருதுவி ....
இதைச்சுற்றி ஆயிரங்கோடி யோசனையகலம் நீளமுடையது அப்பு அண்டம், இதைச்சுற்றிப் பதினாயிரங்கோடி யோசனை யகலமும் நீளமுமுடையது தேயுவண்டம். இதைச்சுற்றி நூறாயிரங்கோடி யோசனை யகல நீளமுடையது வாயுவண்டம். இதைச்சுற்றி[ப் பார்த்து] (பத்து) நூறாயிரங்கோடியோசனை யகல நீளமுடையது ஆகாசவண்டம். இதைச் சுற்றி நூறுமடங்கு அகல நீளமுடையது அகங்காரதத்துவ அண்டம். இதைச் சுற்றி நூறு மடங்கு உடையது புத்திதத்துவ அண்டம். இதைச்சுற்றி நூறு மடங்கு உடையது பிரகிருதி தத்துவ அண்டம்; ஆக அண்டம் எட்டுக்குப் புவனம்.

End:

* * * * * * * * *

* * * * * * * * *

இதைக்சுற்றிச் சொர்ண பூமி பத்து கோடியோசனை. இதைச்சுற்றிப் பெரும் புறக்கடல் கோடியே இருபத்தேழு நூறாயிர யோசனை. இதைச்சுற்றிச் சக்கிர வாளகிரி பத்தொன்பது நூறாயிர யோசனை. இதைச்சுற்றி இருள்நாடு முப்பத்தைந்து கோடி. இதைச்சுற்றி அண்டச்சுவர் ஒரு கோடி யோசனை. ஆகச் சுற்றுக்கு ஐம்பது கோடியோசனை. மகாமேருவுக்குஞ் சக்கிரவாளகிரிக்கும் வடக்கு அண்டச்சுவர்க்குத் தெற்கு மகா கைலாசம். அதில் சதாசிவ மூர்த்தி யெழுந்தருளியிருந்து ஞானனுக்கிரகம் பண்ணுவர். நாவலந்தீவே இறலித்தீவே குசையின் தீவே கிரௌஞ் சத்தீவே சான்மலித்தீவே * * * ஆகத்தீவு ஏழாம். உவரே கரும்பு .. .. .. நெய் தயிர் பால் புனலென மாகடலேழு மெனவகுத்தனரே.

அண்டவகைமுற்றும்,

(கு.–பு.)—

இச்சிறு நூல் பூகோளவகையைச் சார்ந்து குறிப்பாக ப் பிருதுவியப்பு தேயு வாயு ஆகாசம், என்ற பஞ்சபூத வண்டங்களுடைய நிலையையும் அவைகளுடைய வித்தாரத்தையும் பிரகிருதி மகதகங்கார தத்துவங்களாலான வண்டங்களையும் அவையிற்றின் வித்தார நிலைகளையும் இன்னும்பல விஷயங்களையும் வசனத்தான் உணர்த்துகின்றது. முற்றியதெனவே தெரிகிறது. எழுத்துப் பிழைகள் மிகவுள. ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள்ளன.

No. 2171. பூகோளப்பிரமாணம் வசனம்

BHŪGŌḶAPPIRAMĀṆAM VACANAM.

Substance, palm-leaf. Size. $15\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 52. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance old,

Incomplete.

Similar to the work described under D. No. 453.

Beginning:

பூகோளப்பிரமாணம்;—

இந்தப்பூமி யென்கிற தாமரைப்பூவுக்கு நடுவே இலட்சம் யோசனை நீளமும் அகலமும் உண்டாய்ச் சம்பூத்வீப மிருக்கும். அந்தத் தீவுக்கு நடுவே மகாமேரு இருக்கும். அது இலட்சம் யோசனை உயரமும் பதினாயிரம் யோசனை புதைமானமும் (௯௰௨௲.) முப்பத்திரண்டாயிரம் யோசனை யகலமும் ....ம் உண்டாயிருக்கும். அந்த மலைக்கு வடக்கே நீல வர்ண பருவதமும் வெள்ளை வர்ண பர்வதமும் இரண்டு மலைகளும் . . . . . கிழக்கு மேற்கு நீண்டு உப்புத்தண்ணீர் சமுத்திரக் கரையை யண்டிக்கொண்டிருக்கும். சுவேதாசலமும் சிருங்காசலமும் என்னும் இவ்விரண்டு மலைகள் அந்தப்பருவதங்களுக்குக் கடைசியிலேயிருக்கும். சுவேதாசலம் என்கிற மலை (௰௲) பதினாயிரம் யோசனை உயரம். சிருங்காசலம் என்கிற மலை (எ௰௲) எழுபதாயிரம் யோசனை யுயரமாயிருக்கும். அம்மலைகளின் நடுவே . . . . இரண்மயமும் கிம்புருஷ வருஷமும் என மூன்று தேயங்கள் இருக்கும். மேருகிரி மகேந்திரகிரிகளுக்கும் நடுவே இளாவிருத வருஷம் என்ற தேசமிருக்கும். அந்த வருஷம் என்கிற தேசங்கள் சமுத்திரத்து மட்டாய் நீலபர்வத முதலான பருவதங்களுடைய பிரமாணம் உண்டாயிருக்கும். அந்த இளாவிருத வருஷத்திற்குத்தெற்கே நிடதாசலமும் ஏமகூடமும் என்றிவ் விரண்டு மலைகளிருக்கும். அ[த]வையிற்றினுடைய பிரமாணம் நீலகிரி சுவேதகிரிப் பிரமாணமாயிருக்கும். அந்த மலைகளுக்குநடுவே . . . .

End:

சுவாயம்புவமனு புத்திரன் பிரியவிருதமகராசா பூகோளப் பிரமாணம் பண்ணினது :—

. . . . இந்த ஒன்பது பேரும் இந்தச் சம்பூத்தீவிலே நவகண்டங்களுக்கும் அதிபதிகள் ஆனார்கள். அவர்களின் பெயரினாலே தானே நவகண்டங்களும் பிரகாசித்தன. அதிலே மூத்த பிள்ளை நாபிமகாராசா வெகு நாள் இராச்சியபாரம் பண்ணினார். விஷ்ணுவின் அனுமதியினாலே நாபி மகாராசாவுக்குப் பிள்ளை (ரிஷபமகாராசா . . .) பிறந்து வெகு காலம் இராச்சியபாரம் பண்ணினார். அந்த ரிஷபமகாராஜாவுக்குப் பரதன் முதலாக நூறு பிள்ளைகள் பிற[ப்பித்து](ந்தார்கள்) அவர்களுக்குள் தான் ஆளுகிற பூமியைப் பரதனுக்குப்பட்டங்கட்டினார். அப்பரதன் ஆண்டபடியினாலே இக்கண்டத்துக்குப் பரதகண்டம் என்று பேராச்சுது. ருஷப மகாராசா இந்தப் பரதகுலத்திலே சில தேசங்களை நிர்ணயம் பண்ணி * * * * * முதலான ஒன்பது பேரை நிறுத்தினான். பதினெட்டு பேர்கள் யோகீசுவரர் ஆனார்கள். மற்ற எழுபத்திரண்டு பேரும் தபசு பண்ணிப்பிராமணர்கள் ஆனார்கள். பரத மகாராசா (அ௰உ) எண்பத்திரண்டு ஹூ ராச்சிய பாரம் பண்ணினார். அவர் பிள்ளை சுமதி மகாராசாவுக்குப் பட்டங்கட்டினார்* * * * * * * * * * * * *

* * * * * * * *

(கு.-பு.)—

இச் சிறுநூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 453 - அவது நம்பர் பிரதி போன்று பூகோள வகையைச் சார்ந்ததாய் அந்தந்த கண்டங்கள் மலைகள் மேருபருவதம் முதலிய இவைகள் இன்னின்ன விடங்களில் அமைந்துள ' வென்றும், அவையிற்றின் உயரம் நிலப்பரப்பு முதலியவை இத்துணையனவென்னும் உணர்த்திப்போருகிறது. இயற்றியவர் இன்னா ரெனத் தெரியவில்லை. இது இத்துணைத்தென்றும் தெரியவில்லை எழுத் துப் பிழை மிகவுள.

No. 2172. புவனகோசம்.

BHUVANAKŌŚAM.

Substance, palm-leaf. Size, 15¼ × 1 inches. Pages, 104. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Seems complete.

A treatise on Cosmology, as explained in the *Śaiva Purāṇas.*

Beginning :

புவனகோசம்.

காப்பு.

*   *   *   *   *   *

*   *   *   *   *   *

ஸ்ரீ ஆதிபரமேசுவரன் ஸ்ரீ கைலாசத்திலேயிருந்து பார்வ [தா] (கூ) தேவிக்கும் நந்தீசுவரர்க்கும் அருளிச் செய்த புவன கோசத்தைக்கேட்டு நந்தீசுவரர் திருமூல தேவருக்கு அருளிச்செய்த புவனகோசம் வரு மாறு:—எப்படியென்னில்; கண் சிமிட்டிக்கொண்டது நொடி. நொடி ௩௱௯௰ கொண்டது நாழிகை ஒன்றுகும். நாழிகை ௭ கொண்டது ஒரு சாமம். சாமம் ௮ கொண்டது ஒருநாள். நாள் முப்பது கொண்டது ஒரு மாசம். மாசம் ௰௨ கொண்டது வருடம். வருடம் அறுபது கொண் டது ஆண்டு. ஆண்டு ௱௬ கொண்டது யுகம். யுகம் பதினெட்டு வகைப் படும், அது எப்படியென்னில்:—அனந்தன் அர்ப்புதன் தமந்தன் தராசன் தாண்டசன் விண்ணசன் விண்ணுயுதன் அயுதன் மையுதன் மணியிரணியன் மணியாதனியன் விபரீதன் விஸரன் அலங்கிருதன் கிருதாயன் திரேதாயன் துவாபரன் கலியுகன் ஆகயுகம் (௰௮). பதினெட் டில் நிற்கும் வருஷம் எத்தனை யென்னில்:—அனந்தன் என்னும் யுகம் ௰௪ கோடி வருடம். அர்புதன் என்னும் யுகம் ௰௩ கோடி.

*   *   *   *   *   *

கிருதயுகம் வருஷம் ௰௭ இலட்சத்து ௨௰௮ ஆயிரம் வருஷம். திரேதாயுகம் வருஷம் ௰௨ இலட்சத்து ௯௰௬ ஆயிரம் வருஷம் : துவா பரயுகம் வருஷம் ௮ இலட்சத்து ௬௰௪ ஆயிரம். கலியுகம் வருஷம் ௪ இலட்சத்து ௩௰௨ ஆயிரம் வருஷம் ஆம். ஆக யுகம் ௰௮ க்கு *

*   *   *   *   *   இவை ௮௰௮. பிரகாரம் குசவன் திகிரிபோலே சுற்றிடில் தேவேந்தரனுக்கு ஒரு நொடி. இந்த நொடி பிரகாரத்திலே

அருஷம் கூய் கொண்டது ஆண்டு. ஆண்டு நூறுயிரங் கொண்டது யுகம். யுகம். ய்அ கொண்டது. சுகம் * * * * * * * * * * * *

End :

வாக் பாணி பாத பாயூ பத்தம் என்கிற கன்னக்காரரும் பட்டுச் சாக்கிரம் சொப்பனம் சுஷுப்தி துரியம் துரியாதீதம் என்கிற தலைகாரிகளும்பட்டு அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்கிற . . . . . களும்பட்டு வாத பித்த சிலேட்டுமம் என்கின்ற காரிக்காரரும் பட்டு சத்தகோடி மகாமந்திரமென்கிற உபயதளமும்பட்டு அஷ்டமதம் என்கிற யானைகளும்பட்டுச் சுத்தாசுத்த மென்கிற தேவி மாரும்பட்டு * * * தோழிமாரும்பட்டு * * * அகத்தி வெட்டவெளியாய் வெளிக்குள் சத்தமே வடிவாய் மின்மினியின் பிரகாசம் போன்றிருக்கும் * * * * காயாபுரி என்னும் பட்டணம் முழுதும் ஞானவாளினாலே வெட்டி ஞானக்கினியாலே சுட்டுப் பள்ள மேடுள்ளதெல்லாம் தொண்ணூற்றாறங்குலங்கொண்ட நிலத்திலே * * * * * *

எருதும்பூட்டி குருவென்னுங் கலப்பை கொண்டுழுது சமானஞ் செய்து மோகமென்னும் எருப்போட்டு முளையில்லாத வித்தைத் தெளித்தும் அறி வென்னும் வாய்க்கால் வெட்டிச் சமாதானமென்னும் மதகுதிறந்து சாந்தமென்னும் நீரைப்பாய்ச்சி மெய்ஞானமென்னும் தானியம் விளைந் தது. இந்தத்தானியத்துக்கு வன்னம் ஒளி ஒளியாயிருக்கும். மினி மினிப் பிரகாசம் போன்றிருக்கும். இனிச்சாந்தமென்கிற . . . . பத்தை விழுங்கும். அப்போது ஆனந்தயோகம் நவ்வென்னும் அக்ஷரம் ஓதி யறிந்தால் ஒரு பதம். சீ என்னும் அக்ஷரமோதி யறிந்தால் கனவானும். இதற்குச்சாட்சி அறிவானந்த திருமந்திரம்.

முப்பதும் முப்பதும் முப்பத்தறுவருஞ்
செப்பு மதனிடைக் கோயிலில் வாழ்பவர்
செப்பிமதனிக் கோயிற் சிதைந்த பின்
ஒப்பாயனைவரு மோடெடுத்தாரே. (க)

உத்தம யோகியர்க்கும் உறுபெருந்தவத்தோருக்கும்
வித்தக மறையோருக்கும் விரும்பியே பூசைசெய்யச்
சுத்தமாம் வெள்விதன்னைச் சொல்லற நடத்தினுர்க்கும்
முத்தியே யடைவாரென்று மொழிந்தனர் முனிவர்தாமே. (உ)

திருச்சிற்றம்பலம். குருவே துணை. தாரணஹு வைகாசிமீ கூஉ
மூலபுவனகோசம் சீயாழி தானப்ப முதலியார் குமாரன்
சாமி எழுதி நிறைந்தது முற்றும்.

(கு.-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக் 453 - ஆம் நம்பரில் வந்துள்ள பூகோளப் பிரமாணம்போன்று பூகோள சாத்திர வகையைச் சார்ந்ததாய் மேகச்சக்கிரம் வரையில் உணர்த்திப் புவனகோசத்தில் அடங்

கிய பல்வேறு தத்துவ விஷயங்களையும் உணர்த்துகிறது. இது, பரம சிவனார் தாம் உமாதேவியாருக்கும் திருநந்தி தேவர்க்கும் உபதேசிக்க, அத்திருநந்திதேவர், திருமூலதேவருக்கு உபதேசித்ததாக வமைந்துள் ளது. இடையிடையே இரண்டொரு செய்யுட்களும் வந்திருக்கின்றன. இதில் சைவசித்தாந்த விடயங்கள் பல உள. முற்றுப்பெற்றதெனத் தோற்றுகிறது. எழுத்துப்பிழை மிகவுள்ளன.

No. 2173. புவனகோசம் வசனம்.

BHUVANAKŌŚAM VACANAM.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{2} \times 1\frac{1}{8}$ inches. Pages, 54. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு.-பு)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் சில பாட பேதங்கள் காணப்படுகின்றன. முற்பிரதியிற்போல இப்பிரதியில் இந்நூலின் வரலாறு காணப்பெறவில்லை. இறுதியிலும் சில பகுதியில்லை. எழுத்துப்பிழை மிகவும் உள. ஏடுகள் மிகவும் சிதலுண்டு கிழிந்திருத்த லோடு பல முறிந்தும் இருக்கின்றன. படித்தற்கு மிக வரிதாகவிருக் கிறது. முதலேட்டில் 'பூமி சக்கிரம்' என்று இதற்குக் குறியீடு குறிக் கப்பட்டிருக்கிறது. ஆதலின், மற்றொரு பெயரானும் இதை வழங்கி வந்தார்கள் போலும்.

AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN INDIA.

NEW BOOK COMPANY, Booksellers, etc., "Kitab Mahal," 188-90, Hornby Road, Bombay.

D. B. TARAPOREVALA SONS & CO., Bombay.

THACKER & CO. (LTD.), Bombay.

N. S. WAGLE, Circulating Agent and Bookseller, No. 6, Tribhuvan Road, Girgaon, Bombay.

THE BOOK COMPANY, Calcutta.

BUTTERWORTH & CO. (LTD.), 6, Hastings Street, Calcutta.

R. CAMBRAY & CO., Calcutta.

THACKER, SPINK & CO., 3, Esplanade East, Calcutta.

K. KRISHNA AYYAR BROTHERS, Booksellers, Publishers, etc., The Round, Trichur (Cochin State).

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA, Post Box No. 501, Park Town, Madras.

CITY BOOK COMPANY, Post Box No. 283, Madras.

C. COOMARASWAMI NAYUDU AND SONS, 27 and 35, Chinnathambi Street, Madras.

HIGGINBOTHAMS (LTD.), Mount Road, Madras.

THE LAW PRINTING HOUSE, 11, Mount Road, Madras.

G. A. NATESAN & CO., Madras.

P. R. RAMA IYER & CO., 368, Esplanade Row, Madras.

P. VARADACHARI & CO., Booksellers, 8, Linga Chetti Street, Madras.

Agent, THE SOUTH INDIA SAIVA-SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, LTD., 6, Coral Merchant Street, Madras.

VENKATRAMA & CO., Educational Publishers and Booksellers, Esplanade, Georgetown, Madras.

THE LITTLE FLOWER CO., Educational Publishers and Booksellers, 44, Lingha Chetti Street, Georgetown, Madras, E.

D. SRI KRISHNAMURTI, Editor of "Grama Paripalana," Ongole (Madras).

E. M. GOPALAKRISHNA KONE, Pudumantapam, Madura (Madras).

NATIONAL WELFARE PUBLICITY, LTD., Mangalore (Madras).

M. SESHACHALAM & CO., Proprietors, The Hindu Press, Masulipatam (Madras).

B. VENKATARAMAN, Correspondent, Permanent Fund Buildings, Neela South Street, Negapatam (Madras).

THE HINDUSTAN PUBLISHING CO., LTD., Rajahmundry (Madras).

THE MODERN STORES, Salem (Madras).

The Proprietor, THE HOUSE OF KNOWLEDGE, Booksellers and Publishers, Palliagraharam P.O., Tanjore (Madras).

S. KRISHNASWAMI & CO., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).

L. VAIDYANATHA AYYAR, Law Bookseller, Teppakulam P.O., Trichinopoly (Madras).

A. VENKATASUBBAN, Law Bookseller, Vellore (Madras).

BHAWNANI & SONS, Booksellers, etc., Connaught Place, New Delhi.

The Manager, THE INTERNATIONAL BOOK SERVICE, Booksellers, Publishers, News Agents and Stationers, Poona 4

P. N. SWAMINATHA SIVAN & CO., Commission Agents, Booksellers, etc., Pudukkottai State. (Branches also at Karaikudi and Devakottai).

The Proprietor, THE PUNJAB SANSKRIT BOOK DEPOT, Saidmitha Street, Lahore (Punjab).

MOHANLAL DOSSABHAI SHAH, Books Agent, etc., Rajkot.

B. S. MATHUR & CO., Chatur Vilas, Paota Civil Lines, Jodhpur (Rajputana).

THE BOOKLOVERS' RESORT, Booksellers and News Agents, Taikad, Trivandrum

---

NOTICE.

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C. 2, or through any bookseller.